D
Y211,31 N84
N84.57.131
136214
சென்னை-600 008.

# உள்ளடக்கம்

18—2—1984

| | | பக்கங்கள் |
|---|---|---|
| | (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | i |
| | (ii) Personel of Government of Tamil Nadu. | ii—iv |
| | (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | v |
| | (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப் பட்ட பெயர்ப் பட்டியல். | vii—xi |
| 1 | வினாக்கள்—விடைகள்— | |
| | உறுக்குறியிட்ட வினாக்கள் .. | 1—35 |
| 2 | தகவல் கோரல்— | |
| | (அ) கார்ங்கேயநல்லூர் ஒன்றியத்தில் மஞ்சள் காமாலை நோய் பரவியிருப்பது. | 36 |
| | (ஆ) சென்னையில் அடை மழையினால் ஏற்பட்டுள்ள சேதம். | 36—39 |
| 3 | ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| | அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட பூசல் காரணமாக கம்பம் நகரில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை. | 39—68 |
| 4 | அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| | (அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1984. | 68 |
| | (ஆ) திரைப் படங்கள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984. | 69—70 |
| | (இ) மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு, 1984. | 71 |
| | (ஈ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984. | 71—72 |
| | (உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984. | 72 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4 | அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி. | |
| | (ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு 1994. | 72—73 |
| | (எ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984. | 73 |
| 5 | ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி— | |
| | திரு. மி. வின்செண்ட் | |
| | திரு. கே. தனுக்கோடித்தேவர் | 78—85 |
| | திரு. டெ. சு. திருவேங்கடம் | 87—90 |
| | திரு. பொ. உத்திராபதி | 90—98 |
| | திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 99—104 |
| | திரு. சி. பழனிமுத்து | 104—111 |
| | திரு. ஆர். தவசி | 112—116 |
| | திரு பொ. விஜயராகவன் | 116—121 |
| | திரு. பெ. திருமாறன் | 121—127 |
| | திரு. ஜி. மூர்த்தி | 128—131 |
| | திரு. ந. சிவஞானம் | 132—135 |
| | திரு. இ. கணேசன் | 136—140 |
| | திரு. ஏ. சாகுல் ஹமீது | 140—147 |
| | திரு. கு. பா. பழனியப்பன் | 147—152 |
| | திரு. எஸ். என். இராமசாமி | 152—156 |
| | திரு. க. பாரமலை | 156—160 |
| | திரு. செ. சிவசாமி | 161—165 |
| 6 | அறிக்கை அளித்தல்— | 166—170 |
| | விதி 106-ன் கீழ் மின் துறை அமைச்சரின் அறிக்கை. | 165 |
| 7 | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 170—171 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)— நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)— பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)— வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைபபடச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள். எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ் சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டுவசதி குடிசை மாற்றுவாரியம் புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு. (தொழில் துறை அமைச்சர்) — பெருந்தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்),—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற் பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்,



20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

THIRU. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Dr. M.G. RAMACHANDRAN (Chief Minister) - Public General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance) - Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) - Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development) - Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) - Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permit.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)- Education, includiug Technical Education, Official Language

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)- Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) - Law, Courts, Prisons, Legislation on Weights and Measures Registration of Companies, Debt Relief including Legislation on, Money Lending and Legislation on Chits, and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) - Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour) Labour, Housing Slum Clearance Board Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) - Health.

13. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)- Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries, Mines and Minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works)- Prohibition excluding grant of liquor permit, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidas Welfare)- Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Boned Labour and Employment and Training.

17. Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritions Meals) - Nutritious Meals.

18. Hon. Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control) - Environmental Polluion Control.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)- Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY Minister for Khadi)- Khadi.

22. Hon. Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)- Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries)- Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries) Fisheries.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ் ஜகத்ரட்சகன்
2. திரு. மா. சின்னராசு
3. திருமதி. ம. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்.
5. திரு. என். வரதராஜன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.

### குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஞானசிராமன், பி.ஏ., பி.எல்

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ.ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்

திரு. ஜே. ரெஜீனால்ட் ஜான், பி.ஏ.

திரு. வ. சா. ஜான், பி.ஏ.

### எஸ்டேட் அலுவலர்.

திரு. சே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்த நாரயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல். எல்.பி.

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 25-10-83 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 14 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. |
| 18 | ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்–2 |
| 19 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 20 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கொ. | செங்கல்பட்டு |
| 21 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 24 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 25 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 26 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 27 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 28 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 29 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| | | |
|---|---|---|
| 30 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32 | இராமச்சந்திரன், திரு. சு. | பண்ருட்டி |
| 33 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 34 | இராமசாமி, திரு. எஸ். எஸ். | சாத்தான்குளம் |
| 35 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 36 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 39 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 40 | இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதாகிருஷ்ண நகர் |
| 41 | இராஜாராம் நாயுடு, திரு. கெ. இரா. | தல்லி |
| 42 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 44 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 45 | உக்கம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 46 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 47 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 48 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 49 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 51 | கணேசன், திரு. இ. | இடைப்பாடி |
| 52 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 56 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 58 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.) |
| 59 | கல்லன், திரு. கே. | [illegible] |
| 60 | கலித்தீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 61 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 62 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63 | காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஜி. | காங்கேயம் |
| 65 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 66 | கிருட்டிணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 67 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 68 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 69 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 70 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 71 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 72 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 73 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 74 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 79 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 81 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 84 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ.வ.) |
| 85 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 86 | சட்டநாத கரையாளர், திரு. சி. | தென்காசி |
| 87 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |

| | | |
|---|---|---|
| 88 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 89 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 90 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 91 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 92 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டனம் |
| 93 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 94 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 95 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 96 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 97 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி. |
| 98 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 99 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 100 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 101 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 102 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 103 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 104 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 105 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 106 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 107 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 108 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 109 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 110 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 111 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 112 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 113 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 114 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 115 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவ |
| 116 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 118 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 119 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 120 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ). |



| | | |
|---|---|---|
| 121 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 122 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 124 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 125 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 126 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 127 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி–2 |
| 128 | சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 | சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 130 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 140 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141 | திருமான், திரு: இரா. | ஏற்காடு (ஆ.வா. |
| 142 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 143 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 144 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 145 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146 | துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 147 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 150 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 151 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 152 | நவநீதகிருஷ்ண பாண்டியன், | ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 153 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 154 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 156 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 157 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 158 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 160 | பம்மல் நல்லதம்பி, திரு. | அம்பத்தூர் |
| 161 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 162 | பலராமன், திரு. இல. | பேரூர் |
| 163 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 167 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 168 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 169 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170 | பாரமலை, திரு. சு. | மானாமதுரை (செ.வ.). |
| 171 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 173 | பாலசுப்பிரமணியன், திரு. கு. | சீர்காழி (செ.வ.) |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. வேடச்சந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 175 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 176 | பானுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 179 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 181 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 182 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 184. | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |



| | | |
|---|---|---|
| 185 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 186 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 187 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 188 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 189 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 191 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.). |
| 192 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 193 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 194 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ). |
| 198 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 199 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 200 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 201 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.). |
| 202 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 203 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 204 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 205 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 206 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர் பேட்டை (செ. வ. |
| 207 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 208 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 210 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 211 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 212 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213 | வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |

| | | |
|---|---|---|
| 214 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |
| 215 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 216 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 218 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 219 | வீராணம்பலம், திரு. க. வே. | மேலூர் |
| 220 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 223 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலமலை |
| 226 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 228 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 230 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 231 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232 | வெற்றிடம். | |
| 233 | வெற்றிடம். | |
| 234 | வெற்றிடம். | |
| 235 | வெற்றிடம். | |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5 மாண்புமிகு திரு. யா சை. மு. யூசுப்—அமைச்சர்
6 மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்
7 திரு. ஆர் கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்,

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1984 பிப்ரவரி 18, சனிக்கிழமை

மாசி 6, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்.''

ஒருவனுடைய கண்ணிற்கு அழகுதரும் அணிகலன் கருணை நிறைந்த நோக்கமாகும். இந்த அணிகலனைப் பெறாத கண்கள் புண் என்றே கொள்ளப்படும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### திருச்சி சட்டக் கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பணியாளர்களை நியமனம் செய்யும் திட்டம்.

61 (*வினா எண் 16545)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சட்டக் கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் (Non-Teaching Staff) நியமனம் செய்யப்படாமல் இருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுகுறித்து அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிக்கு அரசு 1983-84 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேலாளர் பதவியையும் உதவியாளர் பதவியையும் வழங்கியுள்ளது.

திரு. ரா. உமாநாத். மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்டக் கல்லூரி ஐந்தாண்டு கோர்ஸ் புதிதாக உப ஜனாதிபதி ஹிதயதுல்லா அவர்கள் திறந்து வைத்திருக்கக் கூடிய கோர்ஸ். அது நமக்குத் தெரியும். அதனுடைய இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீஸ், மினிமம் அமெனிட்டீஸ் இல்லாத நிலையில், இரண்டு பதவிகளை வழங்கியுள்ளதாக சொல்கிறார்கள். ஆனால் இன்னும் நான்-டீச்சிங் ஸ்டாப் பலர் இல்லாத நிலை; டீச்சிங் ஸ்டாப் இல்லாத நிலை; கட்டிடம் சரியாக இல்லை; மாணவர்களுக்குப் படிப்பதற்குப் போதுமான என்வைரன்மென்ட் சரியாக இல்லாமல் பாதகமான நிலை இருக்கிறது; ஹாஸ்டல்

இல்லை. இருக்கிற பஸ்ஸும் ரிப்பேராகி தகர டப்பா போல் இருக்கிறது. இந்த நிலையில் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கக் கூடிய கோர்சில் மாணவர்கள் எப்படிப் படிக்க முடியும்? இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீஸ் கொடுப்பதற்கு உங்களிடம் என்ன ப்ரப்போசல்ஸ் இருக்கிறது, தகர டப்பா பஸ் உள்பட?

மண்புமிகு பேரவைத் தலைவர். பஸ் பழுது அடைந்திருக்கிறது என்று சொல்லலாம். தகரம் விலை ஜாஸ்தி.

திரு. ரா. உமாநாத். உண்மையிலே அது இருக்கும் நிலையைப் பார்த்தால் இன்னும் மோசமான வார்த்தைகளைக்கூடச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி நான்-டீச்சிங் ஸ்டாஃப் பற்றியது. அதிலே சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள், மேலாளர், உதவியாளர், உதவி நூலகர், பதிவேடு எழுத்தர், கடைநிலை ஊழியர் போன்ற ஆறு பதவிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதில் மேலாளர் பதவியையும், உதவியாளர் பதவியையும் வழங்கியுள்ளது. சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக இவைகளைச் செய்திருக்கிறோம். மேற்கொண்டு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்கின்றபொழுது ஆறு நபர்கள் கேட்கப்பட்டிருப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் இதுபோன்று புதிதாகத் தொடங்குகின்ற இன்ஸ்டிட்யூஷன்களில் அரசாங்கத்தின் உத்தரவு 18 சதவீதம் என்று இருந்தும் அவர்களை ரெக்ரூட்மென்ட் செய்வதும் இல்லை; அரசாங்கத்தின் ஆணை இப்படி இருக்கிறதே என்று கேட்டால், வேகன்சி இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, இதுபோன்ற நிலைமைகள் வராதபடி, புதிதாக அமைக்கின்ற இன்ஸ்டிடியூஷன்களில் 18 பர்சென்ட் என்பதைக் கட்டாயமாக அமல் நடத்த வேண்டுமென்று தாக்கீது கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது இனி மேலாவது கொடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசைப் பொறுத்தவரையில் எல்லா நிறுவனங்களுக்கும் அந்த உத்தரவு தரப்பட்டிருக்கிறது.

+ 2 வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள்.

62 (*வினா எண். 16812)—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) +2 கல்வி முறையில் விருப்பப் பாடங்களை மாணவர்கள் படிக்கும்போது பட்டப்படிப்பில் உரிய இடம் கிடைக்காமல் மாணவர்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். (அ) ஆம்.

(ஆ) + 2 வகுப்பிலிருந்து தேர்ச்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை கல்லூரிகளிலுள்ள இருக்கைகளின் எண்ணிக்கையை விட பல மடங்கு அதிகமாக இருப்பதால் + 2 வகுப்பிலிருந்து தேர்ச்சிபெற்றுவரும் அனைத்து மாணவர்களுக்கும் கல்லூரிகளில் இடம் வழங்குவது என்பது, தற்போதுள்ள இருக்கைகளின் எண்ணிக்கையில் இயலாது. எனவே, அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்கள் மற்றும் சாதிகளின் அடிப்படையில், பரிசீலித்து, கல்லூரிகளில், அனுமதித்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன். தலைவரவர்களே, நான் என்னுடைய கேள்வியிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற பொழுது மதிப்பெண்கள் போன்றவைகளைப் பரிசீலித்து அனுமதிப்பதாகச் சொல்கிறார்கள். என்னுடைய கேள்வியில் நான் அதைப் பற்றிக் கேட்கவில்லை. பிளஸ் 2 படிக்கும் பொழுது டெக்னிக்கல், ரேடியோ மெக்கானிக்கல், நர்சிங் போன்ற பல விருப்பப் பாடங்கள் இருக்கின்றன. அவைகளைப் படிக்கின்ற மாணவர்களுக்கு அதற்குச் சமமான படிப்பைக் கல்லூரிகளில் சென்று படிக்க விரும்பும்போது அந்த சப்ஜெக்டிற்கும் அந்தக் கல்லூரியில் படிக்கும் சப்ஜெக்டிற்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. அப்படி அதற்கும் இதற்கும் தொடர்பே இல்லாமல் ப்ளஸ் 2-விலே படித்த சப்ஜக்டைத் தொடர்ந்து படிக்க வாய்ப்பில்லாமல் சிரமப்படுகிறார்கள். அப்படிப்பட்ட வாய்ப்பில்லாத காரணத்தால் பல நேரங்களில் அவர்கள் விண்ணப்பம் செய்வதற்குக் கூட கஷ்டப்படுகிறார்கள். இவ்வாறு ஒரு சப்ஜக்டை எடுத்து படிக்கின்ற மாணவர்கள் அந்த சப்ஜக்டிலேயே மேற்படிப்பைத் தொடர்ந்து படிக்க முடியாத நிலைமையினைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்கல்வியினைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். அவ்வாறு கற்றுக் கொடுக்கின்ற தொழில்கல்வியினைப் பொறுத்த வரையில் மாணவர்கள் படித்து முடித்தவுடன் வேலைக்குப் போகவேண்டும் என்ற எண்ணத்தோடு கற்றுக்கொடுக்கப்படவில்லை. அவர்களால் ஒருவேளை படிப்பினைத் தொடர்ந்து படிக்கமுடியாத நிலைமை ஏற்படுமேயானால் தாங்கள் கற்ற அந்தத் தொழிலை வைத்துக்கொண்டு வாழ்க்கையிலே ஒரு வேலையினைப் பெற்று வாழ்கின்ற தகுதியினைப் பெறவேண்டும்

என்பதற்காகத்தான் அந்தக் கல்வியினைத் கருகிறோம்.
அவற்றிலே சில நிலைகளைப் பொறுத்த வரையில் அவற்றைத்
தொடர்ந்து படிக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதாவது,
இன்ஜினியரிங் கோர்ஸஸ் போன்றவற்றைத் தொடர்ந்து
படிக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அந்த கோர்ஸ்களில்
அப்படிப்பட்ட மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.
எனவே மாணவர்கள் படிக்கின்ற அத்தனை பாடங்களுக்கும்
பட்டப்படிப்பிலே பாடங்களை அமைக்கின்ற அளவுக்கு நாம்
முன்னேறவில்லை. நர்ஸிங் கோர்ஸைப் பொறுத்தவரையில் கூட
இப்போதுதான் அவர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய ஒரு
நிலையினை ஏற்படுத்தி இருக்கிறோம். இப்படி ஒவ்வொன்றாக
நாம் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே,
உதாரணமாக ஒன்றை நான் இங்கே சொல்கிறேன். நர்ஸிங்
கோர்ஸ் எடுத்துப் படிக்கின்ற மாணவியால் அதிலே ஹையர்
ஸ்டடீஸ் படிக்க முடியவில்லை. ஆகவே இவ்வாறு நர்ஸிங்
கோர்ஸ் எடுத்து படித்த மாணவிகளுக்கு தொடர்ந்து படிக்கின்ற
வாய்ப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் நர்ஸிங் கோர்ஸிக்காக
தேர்வு செய்யப்படுகின்ற நேரத்தில் அந்த மாணவிகளுக்கு
முன்னுரிமை கொடுத்து வாய்ப்புக் கொடுக்கப்படுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் கல்வியினை விரைவிலே ஏற்படுத்தப்
போகிறோம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
சொல்லி இருக்கிறார்கள். அது இந்த ஆண்டு ஏற்படுத்தப்
படுமா? அல்லது எந்த ஆண்டு ஏற்படுத்தப்படும் என்பதை
அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவர் அவர்களே,
நர்ஸிங் படிப்பினைப் பொறுத்தவரையில் முதலிலே நான்
சொன்ன பதிலிலேயே சொல்லி இருக்கிறேன். அவர்களுக்கு
முன்னுரிமை தருகின்ற வாய்ப்பினை நாம் ஏற்படுத்தி இருக்கி
றோம். ஆனல் நர்ஸிங் கோர்ஸைப் பொறுத்தவரையில் ஒரு
சிக்கல் இருக்கின்றது. அதாவது ப்ளஸ் 2-விலே மாணவிகளை
இந்த கோர்ஸிலே சேர்க்கின்றபோது அவர்களுடைய உயரம்.
எடை போன்றவற்றை எல்லாம் பார்ப்பதில்லை; யார், யார்
சேர விரும்புகிறார்களோ அவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்
கிறார்கள். ஆனால் நர்ஸிங் கோர்ஸி-க்குப் பின்னர் பெண்களைத்
தேர்ந்தெடுக்கின்றபோது அவர்களுடைய உயரம், எடை
போன்றவற்றை எல்லாம் பார்த்துத்தான் தேர்வு செய்கிறார்கள்.
ஆகவே அப்படி தேர்வு செய்கின்ற நேரத்திலே, 11, 12—வது
வகுப்பிலே படித்த மாணவிகளில் சிலருக்கு தகுதி இல்லாமல்
இருக்கக்கூடும். எனவே அப்படிப்பட்டவர்களுக்கு அங்கே
இடம் கிடைக்காமல் போகலாம்.





திரு. மி. வின்செண்ட். தலைவர் அவர்களே, ப்ளஸ் 2 கல்வி முறையிலே ஏதேனும் மாற்றத்தைச் செய்யாள அரசிடம் திட்டம் உண்டா? அந்தத் திட்டம் நன்கு தொழில் நுட்பக் கல்வியினை ஊக்கப்படுத்துவதாக அமையுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவர் அவர்களே, 11, 12—வது வகுப்புகளில் தரப்பட்டு வருகின்ற திட்டம் இப்போது கடந்த 3, 4 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. எனவே இதிலே கிடைக்கின்ற அனுபவத்தை வைத்துக்கொண்டு ஏதேனும் நல்ல மாற்றங்கள் செய்யவேண்டும் என்ற தேவை ஏற்பட்டால் நிச்சயமாகச் செய்வோம்.

திரு. தி. கா. நல்லப்பன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ப்ளஸ் 2 படிப்பில் தொடர்ந்து படிக்க முடியாத நிலைமை இருந்து வருகின்றது. தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, அதாவது பின்னர் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு பள்ளிகளில் மாணவர்கள் ப்ளஸ் 2 படிக்க விரும்புகிறார்கள். அப்படி படிக்க விரும்பு கின்ற மாணவர்களுக்கு பள்ளிகளில் ப்ளஸ் 2 வகுப்பிலே சேர்வதற்கு இடம் இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே மாணவர்கள் ப்ளஸ் 2 படிக்கின்ற வகையிலே இன்னும் அதிக மான பள்ளிகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவர் அவர்களே, இன்னும் அதிகமான பள்ளிகளை அமைப்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் இப்போது ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளிலேயே 5 பேர், 6 பேர் என்று படிக்கின்ற நிலைமையில் அங்கே எம். ஏ., எம் எட். போன்ற பட்டங்களைப் பெற்ற ஆசிரியர்களுக்கு கிட்டத்தட்ட 1,000 ரூபாய் அளவுக்கு சம்பளத்தைத் தந்து அவர்களை அங்கே வைத்துக்கொண்டு இருப்பது என்பதைப் பொறுத்தவரையில் நிதித்துறை பரிசீலிக்க வேண்டும். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளில் உள்ள சில பள்ளிகளை மூடலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொண்டால் அவர்கள் கூறியபடி புதிதாக பள்ளிகளைத் திறப்பதற்கும் வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி. தலைவர் அவர்களே, ப்ளஸ் 2 பள்ளி களில் கம்ப்யூட்டர் சிஸ்டத்தைக் கொண்டுவர ஏதாவது உத்தேசம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். கோவை யிலே இரண்டு பள்ளிகளிலே கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதிலே முக்கியமான அம்சத்தைச் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட பாடங்களில் பெற்றோர், ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு செயல்பட்டால் தான் ஆங்காங்கே இருக்கின்ற மாணவர்களுக்கு நல்ல கல்வி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது கோவையிலே இருக்கிற இரண்டு பள்ளிக்கூடங்களைச் சேர்ந்தவர்கள், அவர்களே பாடத்திட்டத்தை வகுத்து, சிலபஸ் அனுப்பியிருப்பதை நாங்கள் அனுமதித்திருக்கிறோம். அங்கே கம்ப்யூட்டர் வசதி இருப்பதைப் பயன்படுத்தி, அவர்கள் இரண்டு பள்ளிக்கூடங்களிலே வந்திருக்கின்றன. வேறு பல இடங்களிலும் கொண்டு வரலாம். இப்பொழுது இருக்கிற தொழில் கல்வியில் கம்ப்யூட்டரைப் பொறுத்தமட்டில் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன.

(முற்பகல் 9-10)

திரு. பெ. சு. திருவேங்கடம். பேரவைத் தலைவர் அவர்களே மேல்நிலைப் பள்ளிகளில் சில பாடங்களில் பார்ட் டைம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு மிகக் குறைவான சம்பளம் தரப்படுகிறது. வேண்டுமானால் இரண்டு மூன்று பள்ளிகளை ஒன்றாகச் சேர்த்து, அந்த ஆசிரியர்களை நியமித்து அதிகப்படியான சம்பளம் தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைப் பரிசீலிக்கலாம்.

முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளிக்கும் திட்டம்.

63 (*வினா எண் 19152)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் பணிமூப்பால் மேல்நிலைப் பள்ளிகளில் உட்படுத்தப்பட்ட பின்னர் அதே பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற அவ்வாசிரியர்களுக்கு, அவர்களின் பட்ட மேற்படிப்பிற்கான ஊக்க ஊதியம் அளிக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கும் ஊக்க ஊதியம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். (அ) மற்றும் (ஆ) முதுகலை ஆசிரியராவதற்கு அடிப்படை கல்வித் தகுதி முதுகலை பட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சி (பி.எட்.) பட்டம், பெற்றிருக்கவேண்டும். உட்படுத்தப்பட்டபின் முதுகலைப் பட்டம் பெற்ற நபர் எந்த பாடத்திற்கு உட்படுத்தப்பட்டாரோ, அதே பாடத்தில் முதுகலை பட்டத் தேர்வு எழுதிய கடைசி நாளுக்கு மறு தினத்திலிருந்து முதுகலைப்பட்ட ஆசிரியருக்கான உயர் ஊதிய விகிதத்தில் (ரூ.675-1,200) ஊதிய நிர்ணயம் செய்யப்படுகிறார்கள். இதனால் ஊக்க ஊதியம் அளிக்கும் பிரச்சனை எழவில்லை.



திரு. செ. செம்மலை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது என்பதால் திருப்தி. ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டு வந்த ஊக்க ஊதிய உயர்வு, அதாவது இன்செண்டிவ் 5-9-1983 அன்றைய அரசு ஆணைப்படி நிறுத்தப் பட்டு விட்டது. ஆசிரியர்களுக்கு அதிகமாகப் பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தாலும், ஆசிரியர்கள் பட்ட மேற்படிப்பு படித்து தங்களுடைய தகுதியை உயர்த்துவதனால், மாணவர்களுடைய கல்வித் தரம் உயரும் என்ற கருத்தினாலும், பேரறிஞர் அண்ணாவினுடைய காலத்திலே இந்த ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. தற்போது அது நிறுத்தப்பட்டது. இதனை மறுபரிசீலனை செய்து மற்ற துறைகளைச் சேர்ந்த அலுவலர்களை இவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்காமல், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இந்த ஊக்க ஊதிய உயர்வு அளிக்க அரசாங்கம் முயற்சிக்குமா? அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்- இது பற்றி ஆசிரியச் சங்கங்கள் நிறைய கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது தரப்பட்டிருக்கிற இந்த நிவாரணம் அல்லது இந்தச் சலுகை அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லையென்று அவர்கள் கருதுகிறார்கள். அதிலும் குறிப்பாக ஊக்க ஊதியம் என்பது எந்தப் பாடத்தை நடத்துகிறார்களோ அந்தப் பாடத்தில் உயர் கல்வி பெறுவதனால், அந்தத் தகுதியைப் பெறுவதனால், மாணவர்களுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் பயன் இருக்கிறது என்ற நிலையிலேதான் இந்த ஊக்க ஊதியத்தைத் தந்து கொண்டு வந்திருக்கிறோம். அது இன்றைக்கும் பொருந்துவதாகத்தானிருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களுடைய சங்கங்களைச் சேர்ந்தவர்கள் தந்திருக்கிற அந்தக் கோரிக்கைகளை வைத்து அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. செம்மலை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள உத்தரவுப்படி அவர்களுக்கு லம்ப்சம், அதாவது ஒட்டுமொத்தத் தொகை கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஒட்டு மொத்தத் தொகை, அவர்கள் தேர்வு எழுதுவதற்கும், புத்தகங்கள் வாங்குவதற்கும், தேர்வுப் பணம் கட்ட செலவழிக்கிற தொகைக்குக் கூட ஈடு காணாது. எனவே, ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் நியாயம் என்பதை அரசு உணர்ந்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும் கலந்து, இதைப் பொறுத்தவரையில் அண்ணா அவர்கள் கொண்டு வந்த ஊக்க ஊதியத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, கொண்டு வர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள சூழ்நிலையில் அது நியாயம்தானா என்பதைப் பரிசீலனைக்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

[1984 பிப்ரவரி 18

திரு. சோ. அழகர்சாமி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முதுகலைப் பட்டம் பெற்றவர் களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை சொன்னதுபோல் இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஆசிரியர்கள் சங்கங்கள் கோர்ட்டுக்குக் கூட போகலாமா என்று யோசிப்பதாகத் தெரிகிறது. கோர்ட்டுக்குப் போயிருக் கிறார்களா என்று தெரியவில்லை. ஆகவே, கொடுத்ததை நிறுத்துவது சரியா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவ தோடு, அதே பாடத்தில் இல்லாமல் எந்தப் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றாலும், அந்தப் படிப்பு அறிவை வளர்த்துக் கொள்வதற்காக, ஊக்க போனஸ் கொடுப்பதுதான் நியாயம். ஆகவே ஊக்க ஊதிய உயர்வை மீண்டும் தொடர்ந்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்குத்தந்துவந்ததை நிறுத்தியது என்பதைச் சொல்லும்போதுசரியாகத்தான் இருக்கிறது. ஆசிரியர் களுக்கு தருவதைப்போல மற்றவர்களுக்கும் தரவேண்டுமென்று கோரிக்கை வந்து அதற்காக ஒரு குழுவைப் போட்டு பரிசீலித்து முடிவை எடுக்கிறபோது, அதிலே எல்லோருக்கும் எப்படி தரலாம் என்று வருகிறபோது லம்ப்—சம்மாக தரலாம் என்று முடிவு வந்து அவர்களுக்கு இருக்கிற அந்த சலுகையை எடுக்க வேண்டி வந்தது. ஆகவே ஆசிரியர்களுக்குத் தந்து வந்ததை எடுக்கிறதாக இல்லாமல் ஆசிரியர்களுக்குத் தருவதைப்போல சலுகை எல்லோருக்கும் தரவேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் முடிவை நாம் யோசித்து எடுத்து ஒரு சலுகையைத் தருகிறபோதுதான் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆனால்பிரத்யேகமான ஏற்பாடாக, சிறப்பாக ஆசிரியர் களுக்கு மட்டும் வித்தியாசமான ஒரு சலுகை தரவேண்டுமென்ற கோரிக்கை தான் இப்போது ஆசிரியர்கள் வைத்திருப்பது.. அது சரிதானா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது ஆரம்பத்திலே எம். ஏ. படித்து பட்டம் பெற்றதற்குப் பிறகு வேலைக்கு வருகிறபோது ஆரம்ப ஸ்கேல் 675 ரூபாய் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே வேலை பார்த்து வந்தபோது 700 ரூபாய்க்கும் மேலே சம்பளம் வாங்கியவர்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புரமோஷன் செய்யப்படுகிறார்கள். அவர்களை அந்த 675 ஸ்கேலுக்கு கொண்டு வருகிற நிலைமை இருக்கிறது; இல்லா விட்டால் அவர்கள் வாங்கிய அதே சம்பளம் பெறுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த நிலையில் அவர்களுக்கு ஒரு விசேஷமான சலுகைக்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தனியான பிரச்னை போல இருக்கிறது. ஆகவே அவர்கள் எழுதித் தருவார்களேயானால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திறமையின் அடிப்படையில் உதவித்தொகை பெறும் மாணவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பு.**

64 (*வினா எண் 21179)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப் பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குத் திறமையின் அடிப்படையில் (Merit Scholarships) வழங்கும் உதவித்தொகைக்கு அந்த மாணவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமான உச்சவரம்பு எவ்வளவு?

(ஆ) இந்த வருமான உச்சவரம்பு எந்த ஆண்டு நிர்ணயிக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ரூ. 6,000.

(ஆ) 1961-62 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட உதவித் தொகைகள் வருகிறபோது அரசுப் பணியிலே இல்லாதவர்கள், வேறு தொழிலிலே இருப்பவர்களும், வியாபாரத்திலே இருக்கிறவர் களும் அவர்களுக்கு வருகிற வருமானத்தை குறைத்துச் சொல்லி இந்த உதவியை பெருமளவில் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1961 ஆம் ஆண்டு இந்த 6,000 ரூபாய் என்று உயர்ந்தபட்ச எல்லை நிர்ணயிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். தற்போது அரசுப் பணியிலே இருக்கிறவர் களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டு இருக்கிற நிலையில் ஏராளமான அரசுப் பணியாளர்கள் இந்தச் சலுகையைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே 1961 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இந்த உச்சவரம்பை உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு, திறமை உள்ளவர்களுக்கு ஒரு திட்டத்தை மத்திய அரசு ஏற்று நடத்திக் கொண்டு வருகிறது. அதேபோல் ஒரு திட்டத்தை நாமும் மேற்கொள்ளலாமா என்று நாம் யோசித்துக் கொண்டு இருக்கிறோம். அதன்படி வருகிறபோது இந்த உச்சவரம்பு இருக்காது.

[1984 பிப்ரவரி 18

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு தலைவர் அவர்களே, மெரிட் உதவித்தொகையை பொறுத்தவரையில் படிக்கிற மாணவனுடைய தகுதியை வைத்துத்தான் கொடுக்கிறோம். அந்த நிலையில் பெற்றோர்கள் வருமானத்தைப் பார்ப்பது சரிதானா? ஆகவே மறுபரிசீலனை செய்து படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உற்சாகம் தருகிற வகையிலே மெரிட் அடிப்படையிலே உதவித் தொகை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும். ஆனால் இப்போது அந்த 6,000 ரூபாய் என்பது என்ன என்பதைப் பற்றி ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். பெற்றோர் களுடைய அடிப்படை ஊதியம், சிறப்பு ஊதியம் மற்றும் போனஸ் ஆகியவற்றின் கூட்டுத் தொகையில் 20 விழுக்காடு நிலையான கழிவு அனுமதிக்கப்படும். அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற படிகள் வருமானத்தைக் கணக்கிட சேர்க்கப்படுவதில்லை. இரண்டாவ தாக, மீதமுள்ள தொகையில் பெற்றோர்களது ஊதியத்திலிருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் பொது வைப்பு நிதிக்கான சந்தாத் தொகை, ஆயுள் காப்பீட்டிற்கான சந்தாத் தொகை, பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு செலுத்தும் சிறு சேமிப்புத் திட்ட சந்தா ஆகியவற்றின் ஓராண்டு கூட்டுத் தொகை அல்லது மேலே 20 விழுக்காடு கழிக்கப் பட்ட பின் எஞ்சிய தொகையில் 30 விழுக்காடு இவற்றிலே எது குறைவோ அது கழிக்கப்படும். இதற்குப் பின்னாலே உள்ள தொகையை ஆண்டு வருமானமாக கணக்கில் கொண்டு அதன் அடிப்படையிலே மாணவர்களுக்கு உதவித் தொகை அவர்கள் பயிற்சி காலம் முடிய வழங்கப்படும். ஆகவே 6,000 ரூபாய் என்று சொல்கிறோமே தவிர உண்மையிலே பார்க்கிறபோது கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும்.

குறிஞ்சிப்பாடியில் பிணங்களைப் 'போஸ்ட் மார்ட்டம்' செய்ய புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

65 (*வினா எண் 18371)—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் பிணங்களைப் 'போஸ்ட் மார்ட்டம்' செய்ய கட்டிட வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அதற்குக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) புதிய கட்டிடம் கட்ட மே நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.



1984 பிப்ரவரி 18]

(முற்பகல் 9-20)

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்கள். ஆனால் குறிஞ்சிப்பாடி பகுதியில் பஸ், லாரி போன்றவற்றின் காரணமாக விபத்தில் பாதிக்கப் பட்டவர்களை ஒவ்வொரு தரமும் கடலூருக்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பிணங்களை எடுத்துச்செல்ல யாரும் முன்வருவது இல்லை. ஆகவே, உடனடியாக புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இன்னும் 3 மாதத்தில் அந்தக் கட்டிடம் அங்கே இருக்கும்.

இராமேஸ்வரம் நகரியத்தை நகராட்சியாக்கும் திட்டம்.

66 (*வினா எண் 19982)—திரு. த. இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராமேஸ்வரம் நகரியத்தை நகராட்சியாக ஆக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே. 'ஆம்' என்றால் எப்போது என்று அறிய விரும்புகிறேன், இராமேஸ்வரம் ஒரு சரித்திர பிரசித்தி பெற்றதும், பில்கிரிம் சென்டரும் ஆக இருப்பதால், விரைவில் அதை அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரியத்தை நகராட்சியாக மாற்ற வேண்டும், அல்லது ஒரு ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றவேண்டும், ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றவேண்டும் என்பது எல்லாம் நிதிநிலைமைகளைக் கணக்கில் கொண்டு தான் செய்கிறோம். ஆகவே, ஆண்டு வருமானம் சுமார் 5 இலட்சம் இருந்தால் தான் நகராட்சியாக மாற்ற முடியும். ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, அது ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம், கோயில் ஸ்தலம், புண்ணிய ஸ்தலம் என்றெல்லாம் சொன்னார்கள். அவற்றையும் கருத்தில்கொண்டு தான் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நகரியத்தை நகராட்சியாக மாற்றவேண்டும் என்று சர்வ கட்சியைச் சேர்ந்த — அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், இந்திரா காங்கிரஸ் உள்பட —

தூது கோஷ்டி ஒன்று வந்து அரசாங்கத்திடம் கோரிக்கையைக் கொடுத்துள்ளது. அப்போது அது குறித்த முடிவு சீக்கிரம் செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதி உடனடியாக நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சீக்கிரம் என்று சொல்லவில்லை. அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று தான் சொன்னேன். குறிப்பாக தமிழகத்தில் பல்வேறு கோயில் ஸ்தலங்கள், புண்ணிய ஸ்தலங்கள் நகரியமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நகராட்சியாக மாற்றவேண்டும் என்பதாலும், அந்த பிரசித்தி பெற்ற புராதன கோயில் ஸ்தலங்களைக் காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதாலும், வடக்கே காசி என்றால், தெற்கே ராமேஸ்வரம் என்று இருப்பதாலும், அந்தக் கோயில் ஸ்தலங்களைக் காப்பாற்றவேண்டிய முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது பராமரிப்புப் பணிக்காக பணம் ஒதுக்கப்படுகிறது. எனவே, இவைகளையெல்லாம் மனதில் கொண்டு அந்த நகராட்சியாக மாற்ற வேண்டிய முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் இருக்கும் கொடைக்கானல் நகரியமாக இருந்து கொண்டு இருக்கிறது. அங்கே லட்சக்கணக்கான யாத்ரிகர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவித வசதியும் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினாக்கள் மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரச்னைகளைக் குறித்து வினா எழுப்பலாம் என்பதற்காக, தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகரியங்களைக் குறித்தும் கேட்க அனுமதிக்க முடியாது.

நகராட்சி நிதி கார்ப்பரேஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தும் திட்டம்.

67 (*வினா எண் 20494)—திரு. சி. கணேசன் மற்றும் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி பற்றாக்குறையாக உள்ள நகராட்சிக்கு நிதி உதவி செய்வதற்காக, ''நகராட்சி நிதி கார்ப்பரேஷன்'' என்ற அமைப்பை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ''நகராட்சி நிதி கார்ப்பரேஷன்'' என்ற அமைப்பை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.





திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 'நகராட்சி நிதி கார்ப்பரேஷனை' அமைக்க ஒப்புதல் அளித்துள்ளதாகச் சொன்னார்கள். அப்படியானால் எந்த எந்த காரியங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது அல்லது எத்தனை நகராட்சிகளுக்கு 1984–85 ஆம் ஆண்டுக்கு எந்த எந்த காரியங்களுக்காக பணம் கோரப்பட்டிருக்கிறது அல்லது அந்த கார்ப்பரேஷன் அளிக்க இருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இரண்டாம் திட்டத்தில் இது சேர்க்கப்பட்டு, ஒப்புதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 106 நகராட்சிகள் இருக்கின்றன. அவற்றில் 70-க்கு மேற்பட்ட நகராட்சிகள் பலவீனமானவையாக, பணம் பற்றாக்குறை உள்ளவையாக இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு தடவையும் நாம் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் மாநில அரசையோ மத்திய அரசையோ தான் நாடவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் தன்னுடைய சொந்தக் காலிலேயே நிற்கவேண்டுமென்ற நோக்கத்தோடு நகராட்சிகளுக்கு என்று தனியாக ஒரு நிதிக் கார்ப்பரேஷனை நிறுவ முடிவு செய்தோம். நமக்கு பக்கத்தில் இருக்கிற கேரள மாநிலத்தில் 'அர்பன் ஃபினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்' என்ற நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வளர்ச்சித் திட்டங்களை தங்கு தடையின்றி வேகமாக, விரைவாக, முழுமையாக, சீராக, செம்மையாகச் செய்வதற்காக அதைப்போன்ற ஒரு கார்ப்பரேஷனை ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்காக ஏறத்தாழ 100 லட்சம் ரூபாய்க்கு 'டிபெஞ்சர் கடன் பத்திரம்' என்ற வகையில் கொண்டு வந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. எந்த எந்த நகராட்சிகளுக்கு பணவசதி இல்லையோ அவைகளுக்குக் கொடுக்க இந்த நிதிக் கார்ப்பரேஷன் முன் வரும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, எந்த எந்த நகராட்சிகள் என்று வேண்டுமானால் அமைச்சரவர்கள் அறிவிக்காமல் இருக்கலாம். ஆனால், எந்த எந்த காரியங்களுக்கு இந்தக் கார்ப்பரேஷனை நகராட்சிகள் அணுகலாம்? கொடுக்கின்ற அந்தக் கடனுக்கு வட்டி வீதம் எவ்வளவு? எத்தனை கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக என்று சொன்னேன். சமுதாய நலனுக்காக வளர்ச்சித் திட்டங்களை தங்குதடையின்றி செய்ய, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த தொழில் நுட்ப மற்றும் இதர அறிவுரைகளை வழங்க, நகராட்சி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த இவை போன்ற காரியங்களுக்கு தேவையான நிதி உதவிகளைச் செய்ய இந்த அமைப்பை ஏற்படுத்துகிறோம். இந்தக் கார்ப்பரேஷனுக்கு மூலதனமாக முதலிலே ஏறத்தாழ 100 இலட்சம் ரூபாய் 'டிபஞ்சர் கடன்

பத்திரம் என்ற முறையிலே திரட்டி, அதற்குப் பின்னால் அதை
தேசிய வங்கியில் செலுத்தி, தேசிய வங்கி மூலம் நகராட்சிகளுக்கு
கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு
பண உதவி செய்வதற்காக ஒரு நிறுவனத்தை உருவாக்குவது
என்பது வரவேற்கத்தக்கது. ஏற்கெனவே நகராட்சிகளுக்குக்
கொடுப்பதற்கு என்று தீர்மானிக்கப்பட்ட பணத்தை அவை
களுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்களே. அதற்கு இந்த நிறுவனம்
பயன்படுமா? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால்
கோவை மாநகராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்து
போனால் அவர்களுடைய ஈமச் செலவுக்கு 50 ரூபாய் கொடுக்க
வேண்டுமென்று இருப்பதை வருஷக்கணக்கில் கொடுக்காமல்
இருக்கிறார்கள். அதுபற்றி நானே அமைச்சரிடம் நேரில்
சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டு 5,000 ரூபாய் ஒதுக்கப்
பட்டிருந்தும், அந்தப் பணம் அங்கே போய்ச் சேரவில்லை என்று
சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிதி குறைபாடுகளை எப்படி
சமாளிப்பது? இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ஏதாவது செய்ய
முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அரசாங்கத்தின்
மூலமாக நடைபெறக் கூடிய திட்டங்களுக்கு ஒவ்வொரு
நகராட்சிக்கும் அல்லது உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் நிதி உதவி
செய்வது. அந்த நிதி வரவில்லை என்றாலும் அந்தந்த
நிறுவனத்தினுடைய 'ஜெனரல் ஃபண்டி'லிருந்து ஆணையாளர்
அல்லது தனி அதிகாரி கொடுக்கலாம். அவர்கள் கொடுக்கவில்லை
என்பதை இப்போது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு
வந்திருக்கிறார்கள். அப்படி இருந்தால் அது கண்டிப்பாக சீர்
செய்யப்படும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த
நகராட்சி நிதிக் கார்ப்பரேஷன் நகராட்சி அந்தஸ்தில் உள்ள
நகரியங்களுக்கும் கடன் கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே,
நகராட்சிகள் என்று சொல்லும்போது அவற்றுக்குப் பக்கத்தில்
இருக்கிற உள்ளாட்சி மன்றங்களுக்கும் இந்த நிதிக் கார்ப்பரேஷன்
உதவுவதாகத்தான் இருக்கும். குறிப்பாக நகராட்சிக்குப்
பக்கத்திலே இருக்கிற அர்பன் பகுதிக்கும் இந்த கடன் உதவி
வழங்கப்படும். ஆகவே, நகரியங்களும் சேர்த்துக்கொள்ளப்
படும்.

**பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துக்கான கப்பல்கள் வாங்குவதற்கான அனுமதி.**

68 (*வினா எண் 19014)—திரு. பெ. சு. திருவேங்கடம்:
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பட்டுள்ளது.





(அ) 1983 மார்ச்சில் மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சரை மாநில மின்துறை அமைச்சர் சந்தித்து தமிழ்நாடு அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மூன்று கப்பல்கள் வாங்கும் விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) மிகவும் சிக்கனமான முறையில் நிலக்கரியை ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் வாங்குவதற்கான ஏற்பாடு செய்தது. இது சம்பந்தமாக மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக அன்றைய போக்குவரத்து அமைச்சரோடு நேரடியாகப் பேசப்பட்டது.

(முற்பகல் 9–30)

69 (*வினா எண் 21371)—திரு. என். பழனிவேல் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கு வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் வாங்க மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஒரு புதிய கப்பல் ஜப்பானிலிருந்து வாங்க, மத்திய அரசு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) இப்போது பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தக் கப்பல் கட்டுவதற்கான ஆர்டர் கப்பல் தளத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேசியதாகச் சொன்னார்கள். ஏற்கனவே பத்திரிகைகளில் ஒரு கப்பல் வாங்குவதற்காக அனுமதி அளித்ததாக செய்திகளை நாங்கள் பார்த்தோம். இப்போது மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது எவ்வளவு கப்பல்கள் வாங்குவதற்காக? எந்த நாட்டிலிருந்து? ஒரு கப்பலின் கிரயம் எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு கப்பலை வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. ஜப்பானிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்திருக்கிறது. விலை (யென் 4991 மில்லியன்) ரூ. 21 கோடி.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த மாநில அரசு மூன்று கப்பல்களை வாங்குவதற்காக அமைச்சர் பேசியதாக இங்கே சொன்னார்கள். ஒரு கப்பல் வாங்க அனுமதித்த பிறகு இன்னும் இரண்டு கப்பல்களின் நிலைமை என்ன? அதற்கு எப்போது அனுமதி கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது? வாங்க அனுமதித்துள்ள ஒரு கப்பலை எப்போது வாங்கப் போகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு கப்பல் வாங்குவதற்குத்தான் மத்தியஅரசு அனுமதி அளித்துள்ளது. இன்னும் இரண்டு கப்பல்கள் பற்றி என்ன நிலைமை என்று இப்போது நான் சொல்ல முடியாது. இந்த ஒரு கப்பல் கூட இப்போது விலை பேசி அதை கொடுக்கவேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 1985-ம் ஆண்டு டிஸம்பருக்குள்ளாக அந்தக் கப்பலை அவர்கள் கட்டி நம்மிடம் ஒப்படைப்பதற்கு ஒப்புதலைத் தந்திருக்கிறார்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, சில நிபந்தனைகளோடு ஜப்பானிலிருந்து அந்தக் கப்பலை வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதித்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவை என்னென்ன நிபந்தனைகள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கப்பலின் தொழில் நுட்ப விவரங்கள் அடங்கிய அறிக்கை, கப்பல் கட்டுவதற்கான ஒப்பந்தம் இவைகளுக்கு டைரக்டர்-ஜெனரல் ஆப் ஷிப்பிங் — இவருடைய அனுமதி பெற வேண்டுமென்றும், 1984 கடைசிக்குள்ளாக இந்தக் கப்பலைப் பெற்றுவிடவேண்டுமென்றும் அதேபோன்று கப்பலின் விலையில் 80% அந்தக் கப்பல் தளமே நமக்குக் கடன் கொடுக்கிற காரணத்தால் வெளிநாட்டினுடைய வங்கிகள் அதற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்பதை ஒத்துக்கொள்ளக்கூடாது, நம் நாட்டு வங்கிகள் தான் உத்தரவாதம் கொடுக்கமுடியும் என்ற கருத்தையும் சொன்னார்கள். இதைப்பற்றியெல்லாம் பேசி சம்பந்தப்பட்ட டைரக்டர்-ஜெனரல் ஆப் ஷிப்பிங்-இடம் பேசி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஆறு நிபந்தனைகளோடு மத்திய அரசு அனுமதித்துள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆறு நிபந்தனைகள் சம்பந்தமாக தற்போது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? அடுத்து, எவ்வளவு கப்பல்கள் வாங்குவதற்கு எந்தெந்த நாடுகளில் டெண்டர் கேட்டிருந்தோம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆறு குறிப்புகளையும் வைத்துக்கொண்டு நாம் பேசினோம். பேசிவிட்டு டைரக்டர்-ஜெனரல் ஆப் ஷிப்பிங்-இடம் சொல்கிற



போது அவர்கள் இந்த தொழில் நுட்பத்தைப் பொறுத்த வரையில் ஒப்புக்கொண்டார்கள். அதேபோன்று 1984-ம் ஆண்டு கடைசிக்குள்ளாக கப்பலை கட்டிக் கொடுக்க முடியாது என்று கப்பல்தளம் சொல்லிய காரணத்தால் 85 வரை அந்தக் காலத்தை நீட்டி வாங்கிக் கொள்ளலாம் என்ற அனுமதி தந்தார்கள். அந்த ஒப்பந்தத்திலும் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. 80 சதவீதத்துக்கு நம்நாட்டு வங்கிகள் உத்தரவாதம் கொடுத்தால் போதும் என்பதை கப்பல் தளம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. விலையைப் பொறுத்தவரையில், நாம் பேசி முடித்துக் கொண்ட விலையை மத்திய அரசாங்கத்தின் டைரக்டர்-ஜெனரல், ஷிப்பிங் ஏற்றுக்கொண்டுள்ளார். ஜப்பானிலிருந்து இதை வாங்க இருக்கிறோம். ஆனால் உலகத்தில் எங்கெங்கே கப்பல்தளங்கள் இருக்கின்றனவோ — எல்லா இடங்களிலும் நாம் டெண்டர் கேட்டிருந்தோம். கடைசியாக மத்திய அரசாங்கத்திடமிருந்து சில டைரக்ஷன்ஸ் கொடுத்து ஜப்பானிலிருந்தும் கொரியாவிலிருந்தும் இதுபற்றி நீங்கள் கேட்கவேண்டுமென்று குறிப்பிட்டு சொன்னார்கள். அவர்களிடம் நாங்கள் விலை என்னவென்று கேட்டு — அத்தனை நாடுகளிலிருந்தும் வாங்கித்தான் — முடிவு எடுத்திருக்கிறோம். ஏற்கனவே ஒருமுறை இதுபற்றி விளக்கமாக நான் இந்த அவையில் சொல்லியிருக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி ; பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்கத்தாவிலேயிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வாடகைக் கப்பலில் நிலக்கரி வந்து கொண்டிருக்கிறது. புதியதாக கப்பல் வாங்குவதினால், அரசுக்கு எவ்வளவு தொகை லாபம் ஏற்படும்? எவ்வளவு டன் நிலக்கரி அதன்மூலம் கொண்டு வரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் 8 வாடகைக் கப்பல்கள் மூலம் நிலக்கரியைக் கொண்டு வருகிறோம். ஏறத்தாழ 24 இலட்சம் டன் நிலக்கரி ஒரு ஆண்டுக்குத் தேவைப்படுகிறது. இப்போது ஒரு டன் நிலக்கரியை கப்பலில் எடுத்து வர செலவு ரூ. 160. நாம் இந்தக் கப்பலை வாங்கிப் பயன்படுத்தினால், டன் ஒன்றுக்கு ரூ. 100 தான் செலவாகும். டன் ஒன்றுக்கு ரூ. 60 மிச்சமாகும் என்று கணக்குப் போட்டால், மொத்தத்தில் ஏறத்தாழ ரூ. 14.40 கோடி ஒரு ஆண்டிற்கு நமக்கு அதன் மூலமாக செலவு மிச்சமாகும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள கப்பல் ஒன்றுதான். 24 இலட்சம் டன்கள் கொண்டு வரவேண்டுமென்றால், 3 கப்பல்கள் இருந்தால்தான் கொண்டு வரமுடியும். அது மட்டுமல்ல. தூத்துக்குடியில் ஒரு மணி நேரத்தில் 2000 டன் நிலக்கரியை இறக்குவதற்கு கன்வேயர் பெல்டை அமைத்திருக்கிறோம். ஆகவே, ஒரு கப்பல் இருந்தால் முழுமையாக நாம் அதைப் பயன்படுத்த முடியாது. எனவே இதிலே எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. இருந்தாலும், நமக்கு ஒரு கணிசமான தொகை

மிச்சமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் இரண்டு கப்பல்கள் அனுமதிக்கப்படுமானால், ஏறத்தாழ 14½ கோடி ரூபாய் ஒரு ஆண்டிற்கு மிச்சமாகும் வாய்ப்பு இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு தேவையான கப்பல்கள் மூன்று. இப்போது மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்துள்ளது ஒரே ஒரு கப்பல்தான். 6 கப்பல்களில் வாடகை கொடுத்துக்கொண்டு, நிலக்கரி எடுத்துக் கொண்டு வருகிறோம். எனவே, குறைந்தது 10 கப்பல்கள் வேண்டுமென்று கேட்டால்தான், மத்திய அரசு நமக்கு 3 அல்லது 5 கப்பல்கள் கொடுப்பார்கள். எனவே, 10 கப்பல்கள் வேண்டுமென்று கேட்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு போராட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் யோசனைப்படி நடந்தால், ஒரு கப்பல்கூட வாங்க அனுமதி கிடைக்காது.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது ஜப்பானிலிருந்து கப்பலை வாங்குவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த கப்பல் வந்தபிறகு, அது சரியாக ஓடுமா, எத்தனை ஆண்டுகள் வரை பழுதில்லாமல் ஓடும் என்பதற்கான கியாரண்டி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? ஏற்கனவே வாங்கப்பட்ட கப்பல் சரியாக ஓடாததினால், அதனை நாம் நஷ்டத்திற்கு விற்றிருக்கிறோம். அந்த கியாரண்டியை வாங்குவதற்கு ஏதேனும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நாம் முதலிலே வாங்கியது பழைய கப்பல் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். இப்போது அரசாங்கம் புதிய க்ப்பலை வாங்கயிருக்கிறது. அப்படி பழைய கப்பலை வாங்கிவிட்ட காரணத்தினால்தான், நஷ்டம் ஏற்பட்டது என்று அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கப்பலை வாங்குகின்றபோது, நிச்சயமாக அதற்கு கியாரண்டி கொடுப்பார்கள். இப்போது எத்தனை ஆண்டுகள் கியாரண்டி என்பதற்கான குறிப்பு என்னிடத்தில் இல்லை. அதற்கான கியாரண்டி நிச்சயமாக உண்டு.

**சென்னை—மதுரை இடையே தூங்கும் வசதிகொண்ட சொகுசுப் பேருந்துப்பணி.**

**(70 * வினா எண். 19347)—திரு ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



தூங்கும் வசதி கொண்ட சொகுசு பஸ்ஸை சென்னையில் இருந்து மதுரைக்கு விட அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இதை விரிவாக்கலாமா என பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலித்த பின்பு மதுரைக்கு விடுவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை என்பது தென் தமிழ்நாட்டில் முக்கியமான ஒரு சுற்றுலா நகரம். அப்படி ஒரு பேருந்தை அங்கே விடுகிறபோது, அதை கன்னியாகுமரிக்கும் நீட்டிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மதுரை மிக முக்கியமான நகரம்தான். அதனால்தான், நான் ஏற்கனவே அது பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். கன்னியாகுமரிக்கு மேலும் நீட்டிக்க வேண்டுமென்று கேட்காமல் இருந்ததற்கு நன்றி. கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வருவதென்று சொன்னால், அதிக நேரமாகும். இரவு 8 மணிக்கு புறப்பட்டு, காலை 5 மணிக்கு வரக்கூடிய அளவுக்கு தூங்குவதற்கான வசதி அதிலே செய்யப்பட்டிருக்கிறது. அதிலே அமர்ந்து கொண்டு வருவது என்று சொன்னால், கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். எனவே, அந்த நேரத்திற்குள் சென்னையிலிருந்து புறப்பட்டால், எந்த இடத்திற்குப் போக முடியுமோ, அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும்.

(முற்பகல் 9-40)

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** தலைவரவர்களே, தூங்கும் வசதி கொண்ட அந்த பஸ்ஸை கன்னியாகுமரிக்கு விடமுடியாத காரணத்தை அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், சொகுசு பஸ்ஸிலே உட்காருவதற்கும், தூங்குவதற்கும், மடிப்புகள் கொண்ட அமைப்பை செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, இப்படிப் பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தால் அங்கே உட்காருவதற்கும் முடியாது, நிம்மதியாகத் தூங்கவும் முடியாது. ஏதாவது ஒன்றைத்தான் செய்ய முடியும். அந்த அளவிற்குத் தான் அங்கே வசதியிருக்கிறது. கன்னியாகுமரிக்கு விடமுடியாது என்று சொல்லவில்லை. அதைப் பார்த்துப் பின்னால் செய்யலாம் என்று நான் சொல்கிறேன். அதையே உத்தரவாதமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**கன்னியாகுமரி நகரில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் சமூகநலக் கூடம் கட்டும் திட்டம்.**

**(71 * வினா எண் 18909)—திரு. எம். இளையபெருமாள் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1984 பிப்ரவரி 18

கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி நகரில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் சமுகநலக் கூடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, முதலில் என்னுடைய கேள்வியே சரியாகஅமையவில்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், 1954 ஆம் ஆண்டு மக்கள் தலைவர்காமராஜ் அவர்களால் அடிக்கல்நாட்டப்பட்ட ஒரு சமுதாய நலக்கூடம் இங்கே இருக்கிறது. அதை 'அன்—ஆத்ரைஸ்டு பர்சன்ஸ்' என்று சொல்லக் கூடியவர்கள், சுற்றிலும் கடைகளை கட்டிக் கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி கலக்டரிடமும், அமைச்சரிடமும், டைரக்டரிடமும், ஆதிதிராவிட நலத்துறை அதிகாரி அவர்களிடமும் சொ. லியிருக் கிறேன். 'எக்சிகியூடிவ் ஆபிசர்' கன்னியாகுமரி அவர்களிடம் சொல்லியும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் அதைப்பற்றி ஏதோ புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்படுமா என்று கேட்டாற்போல ஆமென்று சொல்லியிருக்கிறீர்கள். உண்மை நிலை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். 1954—1984 ஆம் ஆண்டு வரையிலும் என்குரோச்மெண்டு செய்தவர்களை எவிக்ட் பண்ணமுடியவில்லை. அந்த காண்டிராக்டர்மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. காமராஜ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்தக் கட்டிடம் முழுமையாக கட்டப்படாமல் பாதி நிலையிலே இருக்கும்படியான அவல நிலை இருக்கிறது. இதற்கு அரசாங்கம் ஏன் மௌனம் சாதிக்கிறது என்று தெரிய வில்லை. உடனடியாக அந்த சமுதாய நலக் கூடத்தை கட்டி முடிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல 62 ஆம் ஆண்டு அரசு ஆணை இந்த கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில், ஒரு சமுதாய நலக் கூடத்தைக் கட்டவேண்டும் என்று, தமிழகம் முழுவதும் 1962 ஆம் ஆண்டு 20 இடங்களைத் தேர்வு செய்தோம். அந்த 20 இடங்களிலே கன்னியாகுமரியும் ஒன்றாக இருந்தது. ஆனால் அந்த இடத்திலே சமுதாய நலக் கூடத்தைக் கட்டுகின்ற பணிகளை மேற்கொண்டபோது, அங்கே இருக்கக் கூடிய ஸ்வாமி விவேகானந்தர் நூலகத்தலைவர் மாவட்ட நீதி மன்றத்திலே வழக்கு ஒன்றைத் தொடர்ந்திருந்தார். இருந்தாலும் அரசின் சார்பாக தீர்ப்பு நீதிமன்றத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல தனியார் சிலர் அங்கே ஆக்கிரமிப்பு செய்துகொண்டு நீண்ட காலமாக இருந்துவந்த நிலைமை இருந்தது. இதையும் எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்திலே வழக்கைத் தொடர்ந்தபோது, மாவட்ட நீதிமன்றத்திலே அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்த தனியார்களுக்கு ஆதரவாக தீர்ப்பு அளிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரால், திருத்திய மதிப்பீடு செய்யப்பட்டு, அறிக்கை அனுப்பப்பட்டு, இந்த குறிப்பிட்ட சமுதாய நலக் கூடத்திற்காக ரூ. 16,000-ம



1984 பிப்ரவரி 18]

அரசு ஒதுக்கியிருக்கிறது. இதை 'தாட்கோ' மூலமாக திரும்பப் பெறக் கூடிய நிலையை ஏற்பட்டிருக்கிறது இருந்தாலும் தற்போதைய நிலைமையை நான் எடுத்துச் சொல்லவிரும்புவது, கன்னியாகுமரியிலே இருக்கக்கூடிய ஒரு கிறிஸ்தவ பாதிரியார் தானே முன்வந்து இலவசமாக நிலத்தையும், ரூ. 30,000-யும் நன்கொடையாக அளிக்க முன்வந்திருக்கிறார்கள். ஆகவே தனியாக அந்தக் கட்டிடத்தைக் கட்டலாமா என்ற அளவிற்கு நாம் தற்போது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன கருத்தானது ஒரு நல்ல யோசனையாக இருக்கலாமே தவிர, அரசாங்கத்தின் மூலமாக நிலத்தை எடுத்து, எஸ்டிமேட் தயார் செய்து, தனிப்பட்டவருக்கு காண்ட்ராக்ட் கொடுத்து, பணத்தையும் அவர்கள் பெற்றுக் கொண்டு, பாதியிலே கட்டிடம் கட்டப்பட்ட நிலையிலே இருக்கிறது. ஆகவே கோர்ட்டு எடுத்தது என்று சொன்னாலும், மேல் முறையீடு செய்ய நம்முடைய ஆதிதிராவிட நலத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்களா? அல்லது அரசாங்கத் திற்குச் சொந்தமான நிலத்தை அன் ஆதரைஸ்டு பர்சன்ஸ் எடுத்ததற்காக கோர்ட்டு செய்திருந்தாலும் கூட, மேல் முறையீடு செய்யத் தவறியது நம்முடைய ஆதிதிராவிட நலத்துறையினுடைய பாதகமா? அல்லது அரசாங்கம் அங்குள்ள வியாபாரிகளுக்காகவோ இன்னும் பச்சையாகச் சொல்லவேண்டுமானால், ஜாதி இல்லை என்று சொல்லியும், அதற்காக பாடுபட்ட பெரியாரையும் அல்லது காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கின்ற நிலையை விட்டு விட்டு, கன்னியாகுமரி யிலுள்ள—முக்கியமாக ஆதிதிராவிட மக்கள் நடு இடத்திலேயே இருக்கிறவர்களை கிறிஸ்தவ மதத்திலே சேராதபடி.........
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய இளையபெரு மாளுக்கு இந்தப் பிரச்சினை வந்தால் உணர்ச்சி வருவது மிகவும் சகஜம் தான். நான் ஒத்துக்கொள்கிறேன். கேள்வி நேரத்தில் அதைப் பேசி வீண் படுத்தக்கூடாது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, நீங்கள் அனுமதிக்காவிட்டால் நான் பேசமாட்டேன். நான் உணர்ச்சியிலே பேசவில்லை. உண்மையிலேயே சொன்னேன். உண்மையிலேயே அரசாங்கம் ஏன் கேளாக் காதினராக இருக்கின்றது? அதற்குக் காரணம் என்ன? இன்றைக்கு கிறிஸ்தவர்கள் கொடுக்கிறார்கள் என்று நீங்கள் இப்போது சொன்னால், அவர்கள் இயற்கையாக உண்மையிலேயே ஆதிதிராவிடர்கள் சாயபு ஆகிக்கொண்டிருக்கி றார்கள் என்ற நிலையில் நாம் அதையும் ஒத்துக்கொண்டால், அவர்கள் கிறிஸ்தவர்களாகிப் போவார்கள். ஆனால் செக்குலரிசம் என்று சொல்வதை உண்மையிலேயே ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? இந்தத் தவறான காரியத்தைச்

செய்வதற்கு யாருக்காகவோ அஞ்சி அரசாங்கம் கைவிடாத நிலைமையை எடுத்து, உடனடியாக அதே இடத்தில் அதே கட்டிடத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறிஸ்தவப் பாதிரியார் அவர்கள் தாழ்த்தப் பட்ட மக்களுக்காக அந்த சமுதாயக் கூடத்தைக் கட்டுவதற்காகக் கொடுக்கவில்லை. அங்கேயிருக்கக்கூடிய மீனவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும், ஆகிய மூவருக்கும் பயன்படக்கூடிய அளவிற்கு இலவசமாக கொடுக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதைத்நான் நான் ஏற்கனவே பதிலில் சொல்லி இருக்கிறேன். ஆனால் உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப்போல் மேல் முறையீடு இந்தக் குறிப்பிட்ட வழக்கைப் பொறுத்தவரையில் செய்திருக்கிறார்கள் என்ற குறிப்புகள் தற்போது என்னிடம் இல்லை. அப்படிச் செய்து இருந்தால், அதைக் குறித்து நடவடிக்கை அரசின் மூலமாக எந்த அளவிற்கு எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்னதைப் போல அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆதி திராவிடர்களுக்காக பிரத்யேக மாக, தனியாக, நலத்துறையின் மூலமாக சமுதாயக் கூடம் கட்டவேண்டும் என்று இந்த அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது. தற்போது அந்தத் தேவைகளைக் கருத்திலே கொண்டு வேறு ஒரு இடத்தில் சமுதாயக் கூடத்தைக் கட்டு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திருவில்லிப்புத்தூர் தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம்.**

(72 * **வினா எண் 19743**)—திரு. இரா. **தாமரைக்கனி** : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : திருவில்லிப்புத்தூர் தொகுதியில் ஆதிதிராவிடர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் கோ ஹார்பட்டியில் 22 வீடுகளும், சுந்தரபாண்டியத்தில் 35 வீடுகளும் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலே உள்ள கோ ஹார்பட்டியில் வீடு கட்டும் திட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ஆனால் சுந்தரபாண்டியத்தில் வீட்டு மனை இல்லாத காரணத்தால் வீடு கட்டும் வேலை நடைபெறவில்லை. எனவே வீடு கட்டிக்



கொடுக்கவேண்டும் என்பதற்காக வேறு ஒரு ஊரைத், இந்த திட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுமா? அதோடு வீடு கட்டுவதற்காக அரசு எவ்வளவு பணம் கொடுக்கிறது? அதை இன்னும் உயர்த்திக் கொடுக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, சுந்தரபாண்டியத்தில் வீட்டு மனைகள் இல்லாத காரணத்தால் வீடுகள் கட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு பகுதியிலே வேறு ஒரு ஊரை எடுத்துச் சொல்வார்களானால், அங்கே வீட்டு மனைகள் ஏற்கனவே வழங்கப்பட்டு இருந்தால், அதற்கான நடவடிக்கை களை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட நலத்துறையின் மூலமாக 4 ஆயிரம் ரூபாய் கொடுக்கப் பட்டு வந்தது. அது தற்போது 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வீடுகள் கட்டப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் ஆதி திராவிட மக்கள் அதிக அளவில் வாழ்கிறார்கள். அதுவும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அரசு வேறு ஏதேனும் திட்டத்தைக் கொண்டு, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் அங்கே வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் மட்டும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இல்லை. அவர்கள் பல இடங்களில் அந்த நிலையில் இருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரையில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஆதி திராவிடர்களுக்கு 1983–84 ஆம் ஆண்டில் மொத்தம் 10 ஆயிரம் வீடுகளைக் கட்டுகின்ற நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. இதிலே 9 ஆயிரம் வீடுகள் ஆதி திராவிடர்களுக்காகவும், ஆயிரம் வீடுகள் பழங்குடியினருக்காகவும் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவும் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டு இருக்கின்றன. ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியைப் பற்றி தனிப்பட்ட குறிப்புகள் என்னிடம் இல்லை. என்றாலும் கூட மொத்தமாக உங்களுடைய மாவட்டத்திற்காக 750 வீடுகளைக் கட்டுகின்ற அந்தத் திட்டத்தைக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதில் ஸ்ரீவில்லி புத்தூர் தொகுதியும் அடங்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. என் பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்காக 10 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 10 ஆயிரம் வீடுகள் கட்டி முடிப்பதற்கான இடங்கள் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்ட எடுக்கப்பட்டு

உள்ளதா? ஏன் என்றால் பல இடங்களில் எடுக்கப்பட்ட நிலங்களுக்காக, கோர்ட்டிலே வழக்குகள் தாக்கலாகி, பிறகு அது ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த 10 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்காக, அரசுக்குச் சாதகமாக, சிக்கல் இல்லாத வழியைக் கடைப்பிடிப்பதற்கு அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது?

(முற்பகல் 9–50)

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் வீடுகளை ஏற்கெனவே அரசின் மூலமாக, வீட்டு மனைகளைப் பெற்றிருக்கக்கூடிய கிராமங்களிலே அந்த வீடு கட்டும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஏற்கெனவே வீட்டு மனை பெற்றிருக்கக் கூடிய ஆதி திராவிட மக்களுக்கு, இந்தத் திட்டத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசி பழங்குடியினருக்கு ஒரு ஆயிரம் வீடுகள் கட்டுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 10 ஆயிரம் வீடுகள் கட்டுவதாகவும் கூறினார்கள். மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள அத்துணை மாவட்டங் களிலும் இந்த பத்தாயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஆதி திராவிடர்களுக்குத் தனியாக 9 ஆயிரம் வீடுகளும், பழங்குடியினருக்கு ஆயிரம் வீடு களும் தனித் தனியாக மாவட்டங்கள் தோறும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திருச்சி நகரிலுள்ள ஆதிதிராவிட மக்களிடமிருந்து குடிமனைப் பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங்கள்.**

(73 ***வினா எண் 19894**)—**திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் உள்ள ஆதிதிராவிட மக்களிடமிருந்து தாங்கள் வாழும் பகுதியில் குடிமனைப் பட்டா கேட்டு அரசுக்கு ஏதேனும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) திருச்சி நகரத்திற்கு உட்பட்ட கே. அபிசேகபுரம் (திருச்சி கன்டோன்மென்ட் பகுதி), தாராநல்லூர், காஜாப்பேட்டை, தென்னூர் மல்லிகைபுரம் பகுதியில் வாழும் ஆதிதிராவிடர்களிடமிருந்து குடிமனைப் பட்டா கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளன.

(ஆ) அவை அரசின் ஆய்வில் உள்ளன.

**திரு. கே. சௌந்திரராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில பகுதிகளைக் குறிப்பிட்டார்கள். திருச்சியில் ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற அத்தனை இடங்களிலும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப் படாமல், அவர்கள் வீடுகளைக் கட்டுவதற்கோ, வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதற்கோ எந்தவித வாய்ப்பும் இல்லாமல் பல்லாண்டு காலமாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திருச்சி உறையூரிலே, செக்கிலியர் தெரு என்ற ஒன்று இருக்கிறது. அந்தத் தெருவிலே ஏறத்தாழ 50 ஆண்டுக் காலமாக வசிக்கின்ற ஆதி திராவிட மக்கள், வீட்டுமனைப் பட்டா கேட்டு கேட்டு சலித்து, இன்றையதினம் அவர்களெல்லாம் மிகுந்த வருத்தத் தோடும் மிகுந்த கொந்தளிப்போடும் இருக்கிறார்கள். அவர்களி டமிருந்து மனுக்கள் ஏதாவது வந்திருக்கிறதா? அதைப்பற்றி.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமான கேள்வியாகக் கேளுங்கள். அவர்களுடைய வருத்தம், சூழ்நிலை போன்றவை களையெல்லாம் கேள்வி நேரத்தில் விவரித்துச் சொல்ல வேண்டாம்.

**திரு. கே. சௌந்திரராசன் :** அவர்களிடமிருந்து வந்திருக்கிற மனுக்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எதுவும் குறிப்பிடாததிலிருந்து, அதைப்பற்றிய விவரம் அவர் களிடத்திலே இருக்கிறதா இல்லையா என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அப்படி ஏதாவது வந்திருக்கிறதா? அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளின் அடிப்படையில், திருச்சியைப் பொறுத்தவரையில் எந்தெந்தப் பகுதிகளிலேயிருந்து மனுக்கள் வரப்பெற்று இருக் கின்றன என்பதை நான் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தப் பகுதி குறித்து இதிலே இடம் பெறவில்லை என்று சொன்னாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த உணர்வோடு அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்களோ, அந்த உணர்வின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொல்லி, நீண்ட காலமாக இருக்கின்ற அவர்களுடைய கோரிக்கைகளை ஆவன செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1984 பிப்ரவரி 18

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திருச்சியில் ஜாதியின் பெயராலே பல்வேறு
தெருக்கள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக மிகவும் வருந்தப்
படும்படியாகக் குறிக்கப்படுவது என்னவென்றால் பறையர் தெரு
பள்ளியர் தெரு, செக்கிலியர் தெரு போன்ற பெயர்களேயாகும்.
இவைகள் எல்லாம் இன்னும் கூட தொடர்ந்து இருக்கின்றன.
அதை மாற்ற வேண்டும் என்று பலமுறை வேண்டுகோள்
விடுத்தும் இதுவரை நடவடிக்கை இல்லை. இந்த ஆதி திராவிட
நலத்துறையாவது, அதற்கு முயற்சி எடுக்குமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இதற்கு முன்னால் கேட்ட கேள்வியிலே கூட, அந்த
ஜாதிப் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லி, கேள்வியைக் கேட்டிருக்
கிறார்கள். இருந்தாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில்,
புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில்,
ஜாதியின் பெயர்கள் தெருக்களில் இருக்கக்கூடாது என்ற
அளவிலேதான், அரசு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது.
குறிப்பாக திருச்சி பகுதியிலே அத்தகைய நிலைமை தொடர்ந்து
நீடிக்கக்கூடாது என்கிற வகையில், அரசு அந்த அதிகாரி
களிடத்தில் நகராட்சிகளின் மூலமாகத் தகுந்த அறிவுரைகளை
வழங்க விரைவாக நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திருச்சி நகரத்திலே ஆதி திராவிடர்களுக்கு பட்டா
வழங்குவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி
நகரத்தைச் சுற்றி, பொன்மலை நகராட்சி பகுதியும் உள்ளடங்
கியதாகும். அந்தப் பகுதியில் அலிகான் குளம் என்ற ஒரு பகுதி
ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கிற பகுதியாக இருக்கின்றது.
அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் கடந்த 12 ஆண்டுக் காலமாக
பட்டா தேவை என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்
அது டிரான்ஸ்பர் புரொபோசல் என்று சொல்லி அனுப்பப்
பட்டிருப்பதாக, அரசுக்கு வந்துள்ளதாகக் கேள்விப் படுகிறேன்.
அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஆதி திராவிட
மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?
அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, கேட்கப்
பட்டு இருக்கிற கேள்வி திருச்சி நகரத்தைப்பற்றியது. ஆனால்
பொன்மலை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியைக் குறிப்பிட்டுச்
சொல்லி அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அந்த உணர்வை ஏற்றுக்
கொள்கிற முறையில் அவர்கள் அந்தக் கோரிக்கை குறித்து
என்னிடம் தருவார்களானால் அது குறித்து நடவடிக்கை
எடுக்கப்படும்.



1984 பிப்ரவரி 18]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, திருச்சி
புத்தூர் பகுதியில் உத்தியோகத்தில் இருக்கிற அரிசனங்கள்
கல்சரல் அசோசியேஷன் என்று வைத்துக்கொண்டு அதன் மூல
மாக அவர்களுக்கு 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம்
நேரடியாகக் கொடுத்திருக்கிறார்கள். நானும் அந்தப் பகுதி
மக்களோடு அமைச்சரிடம் அதுகுறித்துக் கேட்டுக் கொண்டேன்.
அமைச்சர் அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுக்கவில்லை.
அந்த பைல் என்ன ஆனது? உத்தியோகத்தில் இருக்கும் அந்த
அரிசனங்களுக்கு வீட்டுமனை கொடுக்கப்பட்டதா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; உத்தியோகத்தில் இருக்கக்
கூடியவர்கள் என்று அவர்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
அரசு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு கொடுக்க
வேண்டுமென்ற உணர்வோடுதான் அரசு நடவடிக்கை எடுத்துக்
கொண்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே எனன
சந்தித்து சொல்லி இருந்தாலும் அரசு அதைத் தனியாக பரிசீலனை
செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

ஆற்காட்டில் டோபிகானா கட்டும் திட்டம்

74—

(* வினா எண் 19544—திரு, ஏ. எம். சேதுராமன்; மாண்பு
மிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டில் டோபிகானா கட்டும் செயற்குறிப்பு
அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) செயற்குறிப்பு
அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) உள்ளாட்சி மன்றங்களுக்கு சலவைத் துறை கட்டு
வதற்கு நிதியுதவி அளிக்கும் முறையில் சில மாற்றங்களைச்
செய்து அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. அதன் அடிப்
படையில் 50 ஆயிரம் மதிப்பீட்டில் ஆற்காடு நகராட்சியில்
சலவைத் துறை கட்டி செயல்படுத்த முடியுமா என்று பிற்பட்
டோர் நலத்துறை இயக்குநரிடம் சில விவரங்கள் கோரப்பட்
டுள்ளன. விவரங்கள் கிடைத்தவுடன் ஆணை பிறப்பிக்கப்படும்.

75—

குளித்தலை காட்டுவாரியை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

* வினா எண் 14897—திரு இரா. கருப்பையா ; மாண்புமிகு
நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) குளித்தலை காட்டுவாரி ஆண்டு தோறும்
மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கெடுத்து விவசாயிகளுக்கு
ஏற்படுத்தும் நஷ்டத்தைப் போக்க அதைச் சீர்திருத்தி அபிவிருத்தி
செய்யும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[1984 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) இத்
திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீல
னையிலுள்ளது.

திரு. இரா. கருப்பையா; தலைவர் அவர்களே, குளித்தலை
காட்டுவாரியினால் ஆண்டுதோறும் மழைக் காலங்களில் வெள்ளப்
பெருக்கெடுத்து அந்தப் பகுதியிலே இருக்கிற 20—க்கு மேற்பட்ட
கிராமங்களை அழித்துவிடுவதும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்
நிலங்களில் சாகுபடியை சேதப்படுத்திவிடுவதும் விவசாயிகளின்
விளைபொருள்கள் சேதம் அடைவதுமாக இருக்கிறது. அதோடு
அந்தப் பகுதியிலே உள்ள சாலைகளும் ஒவ்வொரு ஆண்டும்
பழுதடைகின்றன. ஆகவே இவைகளைக் கருத்தில் கொண்டு
இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு
நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே,
வெள்ளத் தடுப்புப் பணிகளில்கரைகளைப் பழுதுபார்க்கும் வேலை
ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. நிரந்தரமாக வெள்ளத்
தடுப்புக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தோராயமாக
6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்
டிருக்கிறது. விவரமான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்
டிருக்கின்றன. ஆய்வுக்குப் பிறகு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

திரு. இரா. கருப்பையா; காட்டுவாரியினால் ஏற்படக்கூடிய
சேதத்தை தவிர்க்கவேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாக
அரசுக்கு முறையீடுகள் அனுப்பப்பட்டு இருக்கிறது. கடந்த
1980ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே
யும் சொல்லி அங்கேயும் இந்தச் சேதத்தைத் தவிர்க்கவேண்டு
மென்று கேட்டு அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டமும்
இதுகுறித்து பரிந்துரை செய்திருக்கிறது. அந்த அடிப்படையில்
விரைவாகச் செய்யாமல் மேலும் கால தாமதப்படுத்துவதன்
மூலமாக சேதத்தை நாம் வரவழைத்துக் கொள்வதாகத்தான்
அர்த்தம். அதைத் தவிர்க்கக்கூடிய முறையில் வரக்கூடிய நிதி
யாண்டில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை
களை அரசு எடுக்குமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன்
கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, எந்த ஒரு திட்டமும் உரிய ஆய்வுக்குப்
பிறகுதான் மேற்கொள்ளப்படும். ஆய்வு நிலையில் இருக்கின்ற
நேரத்தில் இப்பேர்ப்பட்ட உத்தரவாதங்களைத் தரமுடியாத
சூழ்நிலையில் இருக்கின்றேன். என்றாலும் ஆய்வை துரிதப்படுத்து
வதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் 'என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 18]

சென்னிமலை அருகே நொய்யல் ஆற்றில் அணை கட்டும்
திட்டம்.

76—

*வினா எண் 17057—திரு ப செ. சென்னிமலைஎன்கிற கந்தசாமி
மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா —

(அ) நொய்யல் ஆற்றில் சென்னிமலை அருகே அணை
கட்ட ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு யா.சை.மு. யூசுப்; (அ) மற்றும் (ஆ) ஆம் ஓரத்துப்
பாளையம் கிராமம் (சென்னிமலை) நொய்யல் ஆற்றின் குறுக்கே
ஓரத்துப்பாளையம் அணைத்திட்டம் மற்றும் கரூர் வட்டம் ஆத்
துப்பாளையம் பிரதான கால்வாயை 32.75 கி.மீ. முதல் 60.00
கி.மீ. முடிய நீட்டிக்கும் திட்டத்திற்கு ரூ. 877 இலட்சத்திற்
கான மதிப்பீட்டினை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள்
அனுப்பியுள்ளார். இத்திட்டத்தின் மூலம் பெரியார் மாவட்டத்
தில் 5.0 ஏக்கர் நிலமும் திருச்சி மாவட்டத்தில் 9,875 ஏக்கர்
நிலமும் பயனடையும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில்
உள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி; மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் கரூர்
தாலுக்காவில் எவ்வளவு ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கரூர் தாலுக்காவைப் பொறுத்தவரையில்
13 கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயனடையும். இந்தத்
திட்டத்தினால் பயனடையும் கிராமங்களின் பெயர்கள்; குப்பம்,
வெட்டமங்கலம், புன்னம், புஞ்சை புகளூர், திருகாட்டுத்துறை,
புஞ்செய் தோட்ட குறிச்சி அட்டூர், மண்மங்கலம், காடப்பாறை
புன்செய் காடரம்ப குறிச்சி, மின்னம்பள்ளி, குப்பச்சிப்பாளையம்
பஞ்சமாதேவி.

திரு ச பாலகிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அணையின் மூலமாக பெரியார் மாவட்டத்தில்
சில பகுதிகள் பாசன வசதி பெறும் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தெரிவித்தார்கள். பெரியார் மாவட்டத்தில் எந்தெந்த
பகுதிகள் இந்தத் திட்டத்தினால் பாசன வசதி பெறுகிறது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் பெருந்துறை வட்டத்தில் ஓரத்துப்பாளையம், மரவப்
பாளையம் ஆகிய இரண்டு பகுதிகள் பயனடையும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 பிப்ரவரி 18

திருமதி. கா. நல்லப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றில் கரூருக்கு சமீபத்தில் அணையை கட்டி அதிலிருந்து பெரியார் மாவட்டத்தில் பகுதிகளும், திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளும் சில வசதுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பாசன அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் வேறு ஒரு அமைச்சர் பதில் சொல்லும்போது பெருந்துறை தாலுககாவில் நீர் கேள்விக்கு திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகச் பாசனத் இந்த இரண்டும் முரண்பட்டதாக இருக்கிறது. சொன்னார்கள். வாக அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என ஆகவே தெளி கிறேன். அறிய விரும்பு

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக்கேள்விக்கு பதில் வழங்குகின்ற நேரத்தில் பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகளும், திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளும் பயன டயும் என்று சொல்லி யிருந்தேன். பெருந்துறை வட்டம் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டம் என்று நான் கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் வினாவிற்கும, என்னுடைய பதிலுக்கும் எந்த விதமான முரண்பாடும் கிடையாது. சரியான பதிலை நான் ஏற்கனவே வழங்கியிருக்கிறேன்.

திரு ஜி. கே. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கட்டு பகுதியிலிருந்து உபரி நீரை கொண்டுவந்து ஏறத்தாழ 46 ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசனம் செய்வதற்கு அந்த பவானி சாகர் அணைக்கு மேலே உள்ள பகுதியில் பவானிக்குக் குறுக்கே அணையைக் கட்டி கால்வாய் வெட்டி கொடுக்கும்படி அரசுக்கு மனு கொடுக்கப்பட்டு பரி சீலிக்கப்படும் என்ற தகவலும் வந்து இருக்கிறது அந்தக்கால் வாய்க்கு அண்ணா அவர்கள் பெயரை வைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களிட மும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதுபற்றி ஏதாவது தகவல் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா கால்வாய் அமைப்பதற்கான கோரிக்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து வந்திருக் கிறது. அது இப்போது தீவிர ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக்குப் பிறகு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

77—

## பள்ளிப்பட்டு வட்டத்தில் பாசனக் கால்வாய் வெட்டும் திட்டம்

* வினா எண் 18285— திரு பூ. மு. நரசிம்மன் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு மாண்புமிகு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில்



அய்யனேரி, வீராணத்தூர் எஸ். அக்ராவரம் ஆகிய கிராமங்களுக்குப் பாசனத்திற்குக் கால்வாய் வெட்டும் டட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; (அ) ஆம்.

(ஆ) சுமார் ரூ. 17.89 லட்சம்

திரு பூ. நரசிம்மன்: மாண்புமிகு தலைவரவர்களே, நடப் பாண்டில் இப்பணி அரசால் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. யூசுப்; மாண்புமிகு தலைவரவர்களே இப்பொழுது இத் திட்டம் ஆய்வு நிலையில்தான் உள்ளது. ஆகவே, ஆய்வுக்குப் பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர் ஆகியவர்களின் பரிசீலனைக் குப்பிறகுதான் முடிவெடுக்க முடியும்.

## நீலகிரி மாவட்டம், மஞ்சூரில் உள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை

78—

(* வினா எண் 15740) திரு. கு. ரமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—(அ) நீலகிரி மாவட்டம், மஞ்சூரில் உள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை நிர்வாகம் அமைச்சர்களின் வருகைக் காக செலவு செய்த ரூபாய் எவ்வளவு?

(ஆ) அமைச்சர்களின் வருகையின் போது இப்படிப்பட்ட நிறுவனங்கள் என்ன செலவு செய்யலாமென்பதற்கு வரைமுறை கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு இரா: அருணாசலம்: (அ) ரூபாய் 5,912.25

(ஆ) முன்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இதுபோன்ற செலவிடும் தொகைக்கு வரைமுறைகள் நிர்ணயிக்கப்படவில்லை இதற்கான உச்சவரம்பு தற்சமயம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு கு. ரமணி; தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை ஏற்கனவே நஷ்டத்தில் ஓடிக்கொண் டிருக்கிறது என்பதும், நீலகிரியிலுள்ள தொழிற்சாலைகள் பற்றியும் அரசுக்கு நன்கு தெரியும். ஆனால், இம்மாதிரி வர வேற்புச் செலவுகள் என்று சொல்லி ஏராளமான பணத்தைப் பல தொழிற்சாலைகள் செலவு செய்து வருகின்றன. இந்த மஞ்சூர் தொழிற்சாலையிலேயும் அதே மாதிரி செலவு செய்யப் பட்டுள்ளது என்பது பொது மக்களிடத்தில் பெரும் பிரச்சனை யாக உள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு அமைச்சர்களோ அல்லது பெரிய அதிகாரிகளோ செல்லும்போது இன்னமுறையில்தான் அந்த வரவேற்பை அளிக்கலாம், இவ்வளவு பணம்தான் செலவு செய்யலாம் என்ற திட்டத்தை அரசு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்பு எவ்வளவு தொகை செலவு செய்யப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் தற்பொழுது அந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு கு. ரமணி: தலைவரவர்களே, அந்தத் தொகை என்ன என்ன விகிதாச்சாரத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இலாபம் இல்லாமல் நஷ்டத்தில் இருந்தாலும் அந்தத் தொகையை செலவழிக்க வேண்டுமா? அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் நசித்து தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்க முடியாத நிலையில் பிசினசும் நடத்த முடியாத நிலையில், அந்தத் தொழிற்சாலைகள் பணம் கொடுக்க வேண்டாமென்றும், நஷ்டத்தில் ஓடும் தொழிற்சாலைகள் அம்மாதிரி செலவு செய்ய வேண்டாமென்றும் ஆலோசனை கூறப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு இரா அருணாசலம்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இம்மாதிரியான செலவுகளுக்கு இதுவரையில் உச்சவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. தற்சமயம் கீழ்க்கண்டவாறு உச்சவரம்பு நிர்ணயித்து தொழில் வணிக இயக்குநர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆணையிட்டுள்ளார்,

(1) வெள்ளிவிழா, பொன்விழா மற்றும் வைரவிழாக் கொண்டாடல்;

முந்தைய ஆண்டில் ஈட்டப்பட்ட இலாபத்தில் 10 சதவிகிதத்திற்கு மேற்படாமலும், கீழ்க்காணும் உச்சவரம்பிற்குட்பட்டும் செலவிடப்பட வேண்டும்

(அ) பிரதமச் சங்கமாயின் ரூ. 1,000/- வரை;

(ஆ) மத்திய கூட்டுறவுச் சங்கமாயின் ரூ. 2,500 - வரை

(இ) மாநிலக் கூட்டுறவுச் சங்கமாயின் ரூ. 7,500/- வரை

(2) சங்கத்தின் துவக்கவிழா, விற்பனைத்து வக்கவிழா, கட்டிட அடிக்கல் நாட்டு விழா மற்றும் கிடங்கு அலுவலகக் கட்டிடம், குடிவாழ் கலனி திறப்புவிழா.

திட்டத்தின் மதிப்பீடு அல்லது கட்டிட மதிப்பீடு தொகையில் ஒரு சதவிதத்திற்கு மேற்படாமலும், பத்தி 2 (1) இல் கூறிய உச்ச வரம்பிற்குட்பட்டும் இருக்க வேண்டும்.

(3) படத்திறப்பு விழாச் செலவுகள்.

இவ்விதச் செலவுகள பிரதமச் சங்கத்தைப் பொறுத்தமட்டில் ரூ. 250/-க்கு மேற்படாமலும், மத்திய மற்றும் மாநிலச் சங்கத்தைப் பொறுத்த வரையில் ரூ. 500/-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

திரு கே. உச்சி: பேரவைத் தலைவரவர்களே, மஞ்சூர் போன்ற தேயிலைத் தொழிற்சாலைகள் எல்லாமே நஷ்டத்தில் இயங்குவதைப்போல இங்கே சொன்னார்கள். அது தவறான



1984 பிப்ரவரி 18]

தகவல் என்று கருதுகிறேன். மஞ்சூர் போன்ற தேயிலைத் தொழிற்சாலைகள் நல்ல இலாபத்தில் ஓடிக் காண்டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளை அதிகமான அளவிற்கு வெளியூர்களிலிருந்து மக்கள் வந்து பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கும் பொழுது அவர்களெல்லாம் அந்தத் தொழிற்சாலை இரண்டாம் தர, கீழ்த்தர மக்களுக்கு உதவி செய்கின்ற நிலைமையைப் பற்றி அறிய வருகிறார்கள். அவர்களையெல்லாம் வரவேற்பதற்கு இந்தச் செலவுகளையாவது செய்வதற்குச்சற்று நல்ல முறையில் அனுமதித்து, நல்ல அடிப்படையில் நிர்ணயிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—10)

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே, முன்பு அறிவிக்கப்பட்ட அந்த அடிப்படையின் கீழ் அனைத்து சங்கங்களும் செலவிடும் என்பதையும், அதிகச்செலவுஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்; தலைவர் அவர்களே, மஞ்சூர் தொழிற்சாலையினைப் பொறுத்த வரையில் சிறிது இலாபம் இருக்கலாம். ஆனால் நீலகிரி மாவட்டத்திலுள்ள மற்ற அனைத்துத் தேயிலைத் தொழிற்சாலைகளும் நஷ்டத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. எனவே அவற்றிலே விளம்பரச் செலவுகள் போன்றவற்றைக் குறைக்க அரசு முன்வருமா? கொச்சியில் கட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு திறப்பு விழாவிற்கு மஞ்சூர் மற்ற தொழிற்சாலைகளில் செலவு செய்யப்பட்டது என்பது உண்மையா? அப்படியானால் அந்தச் செலவுந் தொகையின் விவரத்தைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கு ஜூன் 1981-ல் அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோது கட்டிடத் திறப்பு விழா ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட செலவு ரூ. 5912.25 பைசா. இவ்வாறு செய்யப்படும் செலவினங்கள் மாதாந்திர நிர்வாகக் குழு கூட்டத்திலே விவாதிக்கப்பட்டு மற்ற செலவினங்களைப் போல் ஒவ்வொரு ஆண்டும் மகாசபையின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகின்றது. இம்முறை பொதுவாக கூட்டுறவுச் சங்கங்களில் நடைமுறையில் உள்ளதாகும். எனவே இதிலே எந்தவிதமான முறைகேடோ அல்லது அவசியம் இல்லாத செலவோ ஏற்பட வாய்ப்பில்லை. எனினும் அதிகத் தொகையினைச் செலவழிக்காமல் இருக்க சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 பிப்ரவரி 18

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறுதொழில் துவங்க
ஆதிதிராவிட மக்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

79—

* வினா எண் 19216—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு ஊரகத்
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா:—

(அ) 1981-82, 1982-83 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்
டத்தில் சிறு தொழில் துவங்க ஆதிதிராவிடர் மக்களிடம்
இருந்து வரப்பெற்ற விண்ணப்ப மனுக்கள் எத்தனை?

(ஆ) அவர்களுள் எத்தனை பேர்களுக்கு உரிமங்கள் வழங்
கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) 1981-82 மற்றும்
1982—83 ஆம் ஆண்டுகளில் திருநெல்வேலி மாவட்டத்தில்
முறையே 6 மற்றும் 7 ஆதி திராவிட மக்களிடமிருந்து சிறு
தொழில் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்கள் வேண்டி விண்ணப்
பங்கள் பெறப்பட்டன.

(ஆ) 1981-82ல் விண்ணப்பித்த அனைவருக்கும் 1982-83ல்
விண்ணப்பித்தவர்களுள் 6 பேர்களுக்கும் நிரந்தர சான்றிதழ்கள்
வழங்கப்பட்டுள்ளன.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, சிறு தொழில்
களுக்கென்று இங்கே உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன
என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எப்படிப்பட்ட தொழில்
களுக்கு அந்த உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற
விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே,
சிறுதொழில் பதிவு பெற்ற ஆறு பேர்களில், திருவாளர்கள் எஸ்.
அய்யாதுரை, ரவீஸ் அகர்பத்தி, செய்துங்கநல்லூர், அவர்களுக்கு
ரூபாய் 3,600-ம் திருவாளர் டி. இராஜாமணி, ஞானசேகரன்
நூத்பவுடர், குப்பம்மாபுரம், அவர்களுக்கு ரூபாய் 2000-ம்
வங்கியிலிருந்து கடன் பெற மாவட்டத் தொழில் மையம்
பரிந்துரை செய்துள்ளது.

திரு. மு. அப்பாதுரை: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி
திராவிட மக்களுக்கு அதிகமாகத் தொழில் செய்வதற்கு
நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று அரசு பல்வேறு விளம்
பரங்கள் செய்கின்றது. ஆனால் இங்கே மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அறிவித்ததின்படி வெறும் பல்பொடி செய்கின்ற சிறு
தொழில்களுக்குத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
மேலும் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த உரி
மங்கள் பெற்றவர்களுக்காக மாவட்டத் தொழில் மையம் சிபாரிசு
செய்திருந்தாலும், சம்பந்தப்பட்ட வங்கிகள் அந்தக் கடனைக்
கொடுத்திருக்கிறார்களா? அந்தத் தொழில்கள் தற்போது நடை
பெற்று வருகின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அறிவிப்பார்களா?



1984 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே,
சிறு தொழில்கள் என்பது பற்றிய பட்டியல் குறிப்பு இங்கே
இல்லை. ஆனால் ஆதி திராவிட மக்கள் விண்ணப்பிக்கின்ற
போது எந்தத் தொழிலை அவர்கள் செய்கிறார்களோ அந்தத்
தொழில்களுக்குரிய பெர்மிட் மற்றும் லைசன்ஸ் போன்றவைகளை
அவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, ஒவ்
வொரு மாவட்டத்திலும் சிறு தொழில்களுக்கென்று தொழில்
பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. ஆகவே அவற்றிலே செட்
அலாட் பண்ணும்போது அதிலே அரிசன மக்களுக்கு முன்னுரிமை
வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே,
ஆதி திராவிட மக்களுடைய அந்த உரிமங்கள் அதற்குரிய
வகைகளில் செய்யப்பட்டுள்ளன.

பூம்புகார் கைவினைப்பொருள் விற்பனையகத்தின் சார்பில்
நடைபெற்ற 'நிர்மல் ஓவியப்பயிற்சி' வகுப்பு

80—

* வினா எண் 19563 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு
ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) பூம்புகார் கைவினைப் பொருள் உற்பத்தி
விற்பனையகத்தின் சார்பில் 'நிர்மல் ஓவியப்பயிற்சி' வகுப்பு
நடைபெற்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனைபேர் பயிற்சி
பெற்றிருக்கிறார்கள்?

(இ) பயிற்சி முடித்தவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்
ளப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) 11-12-1981 முதல்
10-12-82 வரை ஓவியப்பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தற்
சமயம் பயிற்சி நிலையம் மூடப்பட்டுவிட்டது.

(ஆ) 8 நபர்கள்

(இ) 4 நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பயிற்சி
நிலையம் மூடப்பட்டுவிட்டதால் தற்சமயம் அவர்கள் வேலையில்
இல்லை.

திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பூம்புகார் கைவினைப் பொருள் உற்பத்தி விற்பனை
நிலையம் ஒன்று பூம்புகாரில் அமைக்க அரசிடம் திட்டம்
உள்ளதா? இல்லையென்றால், அமைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் எதுவும் இல்லை.

## 2. தகவல் கோரல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### (அ) காங்கேயநல்லூர் ஒன்றியத்தில் மஞ்சள் காமாலை நோய் பரவியிருப்பது.

திரு. என். ஏ. பூங்காவனம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி தொகுதியில் காங்கேய நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்துப் பகுதிகளிலும் பல நூற்றுக் கணக்கான மக்களுக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். அது சம்பந்தமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோட்டீஸ் கொடுத்துவிட்டு கேட்கவேண்டும்.

### (ஆ) சென்னையில் அடைமழையினால் ஏற்பட்டுள்ள சேதம்

டாக்டர் கே.பி.இராமலிங்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக சென்னை மாநகரில் கடுமையான மழை பெய்த காரணத்தால், வெள்ளத்தால் ஏழை குடிசை வாசிகளும் மற்றவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இதுகுறித்து அரசு....

திரு. சோ. அழகர்சாமி; ஏற்கெனவே வெள்ளம் சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது....

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றும் இதுபற்றிக் கேட்டார்கள். நேற்று மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் நேரில் பல இடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். குடிசை வாரியத் தலைவர் அவர்களும் பல இடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். தாழ்வான பகுதிகளிலே சங்கடப்படுபவர்களையெல்லாம் பாதுகாப்பான பகுதிகளிலே வைத்து மாநகராட்சி மூலமாக உணவு வழங்கப்படுகிறது. சென்னை நகரிலே பலத்த மழையினால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் நிரம்பி குடிசைப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. இதனால் வடசென்னைப் பகுதியில் சுமார் 5,000 குடும்பங்களும் தென்சென்னைப் பகுதியில் சுமார் 4,000 குடும்பங்களும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாயின. வடசென்னையில் 23,085 பேர்களுக்கும் தென் சென்னையில் 19,980 பேர்களுக்கும் இலவசமாக உணவு வழங்கப்பட்டது. மழை நின்று விட்டதால் இரவில் பலர் அவர்கள் இருப்பிடங்களுக்குச் சென்று விட்டார்கள். இருந்தபோதிலு அப்படித் திரும்பிச் செல்ல முடியாமலிருந்த 30,000 குடும்பகளுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது ...(குறுக்கீடு)





மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஏற்கனவே இதுபற்றி வெள்ளை அறிக்கை வைப்பது என்றும் அதுபற்றி விவாதிக்கலாம் என்றும் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யப்பட்டுள்ளது..

திரு. எல். இளையபெருமாள்; சென்னையைப் பற்றி மட்டும் சொல்கிறார், சொல்லட்டும்.

திரு. சோ. அழகர்சாமி; பேரவைத் தலைவர் அவர்களே, நான் கிளப்புவது ஒழுங்குப் பிரச்னை. ஏற்கெனவே இது சம்பந்தமாக எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது சென்னை நகரத்திலே வெள்ளத்தினால் மழைக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எந்த எந்த இடத்திலே, எப்படி எப்படி பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதோடு நாங்கள் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நீங்கள் ஏதாவது மதிப்பளித்து எங்களுக்கு ஒரு வாய்ப்பளித்து எங்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கநீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. என். எஸ். வி. சித்தன்: ஏற்கெனவே பல்வேறு சமயங்களிலே இதுபற்றி பேசியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட நாங்கள் அதைக் கேட்டதற்குப் பதிலாக ஒரு வெள்ளை அறிக்கையை வைக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். இதுபற்றி விவாதிப்பதற்கு நாள் நிச்சயித்து விட்டோம். இன்னும் அறிக்கை வைக்கவில்லை. என்றைக்கு கொடுக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் அதன் மூலம் நாங்கள் திருப்தி அடையலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கை தயாராக இருக்கிறது. 22 ஆம் தேதி பேசவேண்டியிருப்பதால் 20 ஆம் தேதி அறிக்கையை வைத்தால் அதை படித்துவிட்டு உறுப்பினர்கள் பேசலாம். அதுமட்டுமல்லாமல் கிடைக்கிற தகவல்களை கடைசிவரைக்கும் சேகரித்துக் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அறிக்கையை 20-ம் தேதி பூரணமாக வைக்கிறேன் என்பதைத் தெரிவித்து இன்றைக்கு சென்னை குறித்து தெரிவிக்கிறேன். சென்னையில் 20 ஆயிரம் பேர்களுக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு பேசுகிறபோது அமைச்சர்கள் சென்றார்களா என்று கேட்டார்கள். சென்றோம். பார்த்தோம். அவர்களுக்கு உணவ வழங்கப்பட்டது. பாதுகாப்பான இடங்களில் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்,

திரு. என். எஸ். வி. சித்தன்: கொடுக்கிறோம் என்று சொன்னால் எப்படி பொருத்தமாக இருக்கும்? இருக்கிற தகவல்களை இப்போது கொடுக்க வேண்டியதுதானே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அமைச்சர் அவர்கள் அறிக்கை வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

[1984 பிப்ரவரி 18

திரு. எஸ். ஆண்டித்தேவர் மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிற காரணத்தாலே சென்னையில் இருக்கிற குடிசைப் பகுதி மக்களுடைய கஷ்டங்களை நேரடியாகப் பார்த்து இப்போது பேசப்படுகிறது. அதனால் தமிழகம் முழுவதும் இருக்கிற கிராமப்புற மக்களுக்குப் பிரதிநிதிகள் இல்லையோ என்ற நிலை வந்து விடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெள்ளை அறிக்கை வைக்கிறபோது விவரங்கள் எல்லாம் வந்து விடும். 22 ஆம் தேதி ஐந்து மணி நேரம் விவாதிக்கப் போகிறோம், அப்போது எல்லாவற்றையும் விவாதிக்கலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை நகரிலே இருக்கிற மக்களுக்கு என்னென்ன உதவி களைச் செய்தோம் என்று சொன்னார்கள். இங்கிருப்பதைவிட அதிகமாக தமிழகத்தினுடைய கிராமப்புற மக்கள் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். வயலிலே இருக்கிற கதிரை அவர்களால் கொண்டுவர முடியவில்லை. விலைச்சலை அவர்கள் கண்ணாலும் பார்க்க முடியவில்லை. அங்கே அவைகள் எல்லாம் முளைத்துப் போய் இருக்கின்றன. அவர்களும் குடிசைகளில் வாழ்ந்து இப்போது குடிசைகளை இழந்து இருக்கிறார்கள். ஆகவே ஒட்டு மொத்தமாக பார்த்து கிராமப்புற மக்கள் நிவாரணம் பெறுவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக் கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை என்று குறிப்பிட்டு கேட்டதால்தான் அமைச்சர்அவர்கள்அதுபற்றிச் சொன்னார்கள். வெள்ளை அறிக்கை வந்தால் நீங்கள் எல்லோரும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்; 20 ஆம் தேதி வரையில் ஏன் காத்திருக்க வேண்டும்? இப்போதே அறிக்கை தயாராக இருக்கிறது. இன்றைக்கு வரைக்கும் அமைச்சர் சொல்லி விடலாமே?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் நேற்றைக்கும் பெரும்மழை பெய்திருக்கிறது. இன்றும் பெய்து கொண்டிருக்கிறது. ஆங்காங்கே அரசின் சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன் ஏற்பாடுகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் விவரமான அறிக்கையில், சென்னை நகரம் மட்டுமல்லால், தமிழகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிற விளைவுகள் அதன் சார்பாகஎடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் ஆகிவற்றை வெள்ளை அறிக்கை மூலமாக 20 ஆம் தேதி வைப்பார்கள். 22 ஆம் தேதி மாலையில் அது சம்பந்தமா விவாதம் வைத்திருக்கிறதாலே அதிலே விடப்பட்டுள்ள பல்வேறு



1984 பிப்ரவரி 18] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் களுக்கு முழு வாய்ப்பு இருக்கிறது. இருக்கிற நிலைமைகளை அமைச்சர் அவர்கள் அப்போது எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். விரிவான அறிக்கை வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே 20 ஆம் தேதி காலை அமைச்சர் அவர்கள் கட்டாயம் அறிக்கை வைப்பார்கள். 22 ஆம் தேதி மாலை அதுபற்றி உறுப்பினர்கள் விரிவாக விவாதிக்கலாம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னபோது, சென்னை நகரத்தைப்பொறுத்தவரையிலேஉணவு கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். நேற்று இரவும், முந்தாநாள் இரவும் தான் உணவு கொடுக்கப்பட்டதே தவிர நேற்று பகல் உணவு கொடுக்கப்படவில்லை. நேற்றுஇரவு கூட சில இடங்களில் கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தொகுதியில்கூட இந்த அவல நிலை இருக்கிறது. இன்னும் சீராக வெள்ளம் வடியவில்லை. இன்னும் 5 நாட்கள் ஆகும். ஆகவே, அவர்கள் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் தங்கவும், அவர்களுக்கு உணவும் இன்னும் 5 நாட்கள் கொடுக்க அரசு முன்வருமா?

திரு. அ. ரகுமான்கான் மாண்புமி மன்றத்தின் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் காலை 6 மணி முதல் 9 மணி வரையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை நான் சென்று பார்வையிட்டு வந்தேன். நிறைய குடிசைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியில் எந்தவிதமான வெள்ள நிவாரண உதவியும் இதுவரையில் செய்யப்படவில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு முழுவதும் மழை பெய்து ஆங்காங்குள்ள பகுதிகள் பாதிக்கப்பட்டு இருப்பதால் 234 சட்டமன்ற உறுப்பினர்களும் இதே கருத்தைச் சொல்லக்கூடும். ஆகவே, அரசு வெள்ளை அறிக்கைஇந்தஅவைமுன் வைத்தபின்பு விவாதிப்பதுதான் இதற்குச் சரியான முடிவாக இருக்கும் என்று கருதுகிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட பூசல் காரணமாக கம்பம் நகரில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் "13-2-1984 அன்று கம்பம் நகரில் உள்ள எனது வீட்டில் போலீசார் இரவு 1 மணிக்கு வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து சோதனையிட்டு உள்ளார்கள். கோஷா முறையைப் பின்பற்றிவரும் வீட்டிலுள்ள பெண்களைத் துன் புறுத்தி இருக்கிறார்கள். எனது சகோதரர் கல்லூரியில் பணி யாற்றுபவரை அடித்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். எனது மூத்த சகோதரரைக் கைது

[பேரவைத் தலைவர்

செய்து கொலை முயற்சி போட்டு சிறையில் அடிக்கப்பட்டுள்ளார். அது மட்டும் அல்லாது கம்பம் நகரில் 200-க்கு மேற்பட்ட தி.மு.கழக, கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் கைது செய்து கொலை முயற்சி செய்ததாக பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதால், மக்களிடையே ஏற்பட்டு இருக்கும் பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்பு கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்து திருவாளர்கள் துரைமுருகன், டி. சுல்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், சோ. அழகர்சாமி, மு. அப்பாதுரை, தி.சா. நல்லப்பன், எம். ஆறுமுகம், என். பழனிவேல், ப. நெடுமாறன், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் பொ. விஜயராகவன், என். எஸ். [illegible] சித்தன், எல். இளையபெருமாள், ஏ. சாகுல் ஹமீது, எஸ். [illegible] இராமசாமி, ரா. உமாநாத் ஆகியோரும் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, 13-2-1984 ஆம் தேதியன்று நம்முடைய அருமை நண்பர் உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுடைய கம்பம் நகர இல்லத்திலே போலீசார் புகுந்து பெரும் கொடுமையைப் புரிந்து இருக்கிறார்கள் என்பது என்னுடைய முதல் வாதம். இரவு 1 மணி அளவிலே ஒரு வீட்டிற்குள் நுழைந்து கைது செய்யவேண்டுமானாலும், சோதனையிட வேண்டுமானாலும் அதற்கு என்று சில நடைமுறைகள், வழிமுறைகள், விதிமுறைகள், சட்டத்திலே இருக்கின்றன, ஆனால் அப்படியில்லாமல் திடீரென்று கொரில்லா யுத்தம் புரிவதுபோல், இரவு 1 மணிக்கு முன்பக்க கதவை உடைத்து உள்ளே நுழைந்து இருக்கிறார்கள், இரண்டாவதாக முஸ்லீம் பெண்கள் வாழ்கிற இடங்களில் போலீசார் சோதனையிடுவதற்கும் சில சட்ட விதிகள் இருக்கின்றன. எப்படிப்பட்ட கிரிமினல் ஆக்ட்டாக இருந்தாலும் கூட, சீக்கியர்களின் பொற்கோயிலுக்குள் போலீசார் நுழைய முடியாத அளவிற்கு சட்டங்கள் இருப்பதைப்போல இஸ்லாமியப் பெருமக்கள் கோஷா முறையைப் பின்பற்றும் வீடுகளில் நுழைந்து சோதனைகள் செய்வதற்கும் சில வழிமுறைகளைக் கையாள வேண்டும். அப்படி எந்தவிதமான வழிமுறைகளையும் கையாளாமல் வீட்டை உடைத்து இரவு 1 மணிக்கு உள்ளே புகுந்து கோஷாப் பெண்களை நான் இந்த மன்றத்தில் சொல்லக்கூடாத வல்கர் வேர்ட்ஸ் சொல்லி -- அடித்து இருக்கிறார்கள், அது மட்டுமல்லாமல் யாரைக் கைது செய்ய வேண்டும் என்பதை முடிவாகக் கூட எடுத்துக் கூறாமல் யார் யார் கண்ணில் தென்பட்டார்களோ அவர்களையெல்லாம் அடித்து இருக்கிறார்கள்.



 (திரு. துரைமுருகன்)

(முற்பகல் 10-30)

பெண்கள் அடிபட்டு, அலறி, முக்காட்டை இழுத்துக் கொண்டு பின்பக்கம் ஓடியிருக்கிறார்கள். போலீசார் அவர்களை விடாமல் பின்னால் துரத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, திரு. ரகுமான்கான் அவர்களுடைய அண்ணன் அம்சத்கான் வீட்டில் இருந்திருக்கிறார். அவர் ஒரு கல்லூரி பேராசிரியர், அவரைப் பிடித்து அடித்திருக்கிறார்கள். அவர் நான் கல்லூரி பேராசிரியர். எனக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை; நான் எந்த அரசியல்கட்சியும் சேர்ந்தவன் அல்ல. என்னை ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார். அவர் தான் ஒரு கல்லூரி பேராசிரியர் என்று சொல்லியும் விடாமல், அவரைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டுபோய், ஸ்டேஷனில் வைத்தும் அடித்திருக்கிறார்கள். அதன் பிறகு கல்லூரி பேராசிரியர் என்றால் அப்படி எழுதிக் கொடுத்துவிட்டுப் போ என்று சொல்லி, அனுப்பியிருக்கிறார்கள்.

கல்லூரிப் பேராசிரியர் என்று சொன்னவுடனேயே வீட்டிலேயே அவரை விட்டிருக்கலாம். வேண்டுமென்றே போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று, அடித்து, பின் விட்டிருக்கிறார்கள்.

அதைப்போன்று, அவருடைய சகோதரர் திரு. மஜீத்கான் என்பவர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். அவரை வீட்டிலிருந்து போலீஸ் ஸ்டேஷன் போகும் வரையில் அடித்திருக்கிறார்கள். அடித்தது மட்டுமல்லால், அவர் பேரிலே 307-வது பிரிவின்கீழ் வழக்குப் போட்டிருக்கிறார்கள். கொலைக் குற்றம் சாட்டுவதற்காக அந்தப் பிரிவிலே வழக்குப் போட்டு கொண்டு வந்து பெரியகுளத்தில் உள்ள மாஜிஸ்ட்ரேட் முன்னால் நிறுத்துகிறார்கள், மாஜிஸ்ட்ரேட் 307-ல் இது 'மேடவுட்' ஆக வில்லையே என்று சொல்லியிருக்கிறார். பின்னர் அவரை உத்தமபாளையத்திற்கு அழைத்துச் சென்று, சில அடிஷனல் பாயின்டுகளைச் சேர்த்து குற்றம் சுமத்தி, மீண்டும் கொண்டு வந்து வழக்கைத் தாக்கல் செய்கிறார்கள், எந்தப் பிரிவில் என்றால் அதே 307-வது பிரிவின்கீழ்தான் வழக்கைத் தாக்கல் செய்து, சிறையில் அடைத்திருக்கிறார்கள்,

கடந்த 13-ந்தேதி ஜனநாயக உணர்வு கொண்ட அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்ற உணர்வு கொண்ட அனைத்துக் கட்சிகளும் ஒரு பாத யாத்திரை நடத்தினார்கள். பாத யாத்திரை என்பது ஜனநாயகத்திற்கு முரணானது அல்ல. அப்படி பாத யாத்திரையாகப் போகிற அவர்கள் ஒரு தெரு வழியாகச் செல்லுகிறபோது, அவர்கள்மீது தாக்குதல் நடைபெற்றிருக்கிறது; கல்லெறிந்திருக்கிறார்கள். பாதயாத்திரை போனவர்களை தாக்கியதோடுமட்டுமல்லாமல், அவர்கள் மீது கல்லெறிந்தது மட்டுமல்லாமல், அவர்கள் போலீஸ் பிறகு அவர்கள் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற ஒரு வழக்கை சோடனை செய்து, அப்படிச் சோடிக்கப்பட்ட வழக்கைக் கொண்டு வந்திருக்கிறார்கள்,

பத்திரிகையிலே சில செய்திகளை நான் பார்த்தேன், திரு. மஜீத்கான் அவர்கள் திரு. கோபால் அவர்களை வெட்டுவதற்காக அரிவாளைத் தூக்கிக்கொண்டு விரட்டினார் என்று அந்த மாவட்ட அமைப்பாளர் அறிக்கை கொடுத்திருக்கிறார், நான் 12-ந் தேதி மதுரையிலிருந்து வருகிறேன். திரு.ரகுமான்கான் அவர்களும் என்னோடு வருகிறார்கள். தேனி ஜெயராமன் அவர்களும் கோபால் அவர்களும் நாங்கள் வந்த அதே இரயிலில் வருகிறார்கள். நாங்கள் எல்லோரும் 13-ந் தேதி காலையில் சென்னை வந்து சேர்கிறோம். திரு. கோபால் 13-ந் தேதி சென்னையில் இருக்கிறார். ஆனால் அங்கே கோபாலை வெட்டுவதற்காக அரிவாளைத் தூக்கிக் கொண்டு துரத்தினார் என்று சொல்லி வழக்குப் போட்டிருக்கிறார்கள். இது எப்படி சாத்தியமாகும் என்பதை அரசு சிந்திக்க வேண்டும்.(குறுக்கீடு.)

அதுமட்டுமல்ல, அங்கே இருக்கிற எம்.எல்.ஏ. வீட்டில் கல்லெறிந்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அருமை நண்பர் கோபால் இங்கே இருக்கிறார். அன்றைக்கு அவர் வீட்டில் இல்லை; சென்னைக்கு வந்து விட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன் பேசுவது கம்பத்தில் ரகுமான்கான் வீட்டார் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சம்பவம் பற்றி. அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள் திரு கோபாலைப் பற்றி அவர் பேசிக் கொள்வார்.

திரு. துரைமுருகன்: எங்கள் மீது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு அங்கேயிருந்துதான் ஆரம்பமாகிறது. திரு. கோபால் வீட்டில் இல்லை. அவருடைய வீட்டுப் பெண்கள் மற்றவர்கள் எல்லாம் ஓடப்பட்டி கிராமத்திற்கு சென்றிருக்கிறார்கள். அங்கே ஆளே இல்லை. அப்படியிருக்கும்போது கோபாலைத் தாக்க மஜீத்கான் அரிவாளைத் தூக்கிக் கொண்டு விரட்டினார் என்பது தேவையில்லாத விவாதம்.

இன்னொரு பத்திரிகையில் பார்த்தேன். நானும் ரகுமான்கானும் கம்பத்தில் இருந்தோம் என்று போட்டிருந்தார்கள். நான் கூடலூரிலும், கம்பத்திலும் பொதுக் கூட்டத்தில் பேசினேன். ரகுமான்கான் அங்கே வரவில்லை. அவர் மதுரையில் ஒரு திருமணத்தில் கலந்துகொண்டு, சென்னைக்குத் திரும்பி விட்டார். ஆனால் தேவையில்லாமல் அங்கே இருக்கிற அனைத்துக் கட்சித் தோழர்கள் மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் திரு. கருப்பசாமி, ஜனதா கட்சி மாவட்டச் செயலாளர் ஆகியோர் மீதும் 307-வது பிரிவின்கீழ் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 200 பேர்களை கைது செய்து அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆட்சியிலே நடைபெறுகிற பாதிப்பு என்னவென்றால் இஸ்லாமிய கோட்பாடுகளைச் சிதைக்கிற, நசுக்குகிற அளவிற்கும், இஸ்லாமிய சமுதாய நெறிமுறைகளைப் புறக்கணிக்கிற அளவிற்கும் புரட்சித் தலைவருடைய அரசும், போலீசும் முடுக்கப்பட்டிருக்கிறது,



எம்.எல்.ஏ. வீட்டு வீதி வழியாக ஊர்வலம் போனார்கள். போலீஸ் அனுமதி பெற்றுத்தான் சென்றார்கள். எப்போது கைது செய்வது? இரவு 1 மணிக்கா கைது செய்வது? காலையிலே போன ஊர்வலத்திற்கு இரவிலா கைது செய்வது. நாங்கள் எந்த நேரத்திலும் சிறைச்சாலைக்கு செல்லத் தயாராக இருக்கிறோம். ஆளும் கட்சிக்காரர்கள் சிறைக்குப் போகாமல் சிம்மாசனத்திலே அமர்ந்திருக்கிறார்கள்—ஒரு சிலர். நாங்கள் சிறைக்குச் செல்வதில் அஞ்சுவதில்லை. சிறைக்கே செல்லாமல் சிம்மாசனததிலே அமர்ந்திருக்கலாம் ஆளும் கட்சிக்காரர்கள்— ஆனால் நாங்கள் இல்லை அப்படி. ஆகையால் நான் எடுத்துச் சொல்வது என்னவென்றால் போலீசுககும் இந்த அரசுக்கும் ரகுமான்கான் என்றாலே சிம்ம சொப்பனம். ஏனென்றால் அவர் முன்னணி வீரராக இருக்கிறார்.

கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்டு கட்சி மாவட்டச் செயலாளர் கருப்புசாமி, ஜனதா கட்சி மாவட்டச் செயலாளர் தர்மராஜன் ஆகியவர்களை எல்லாம் செக்ஷன் 307—கொலைக் குற்றத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். ரகுமான்கான் 'வாய்மை' குறைத்து விடலாம் என்ற கெட்ட நோக்கத்தோடு அவருடைய சகோதரர் மீது 307-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஜோடிக்கப்பட்டிருக்கிறது. ஆக எதற்கெடுத்தாலும செக்ஷன் 307-ஆக ரகுமான்கான் வீட்டிலே இரவு கதவுகளை உடைத்து, பெண்களை அவமானப் படுத்தியிருக்கிறார்கள்.

25-1-1984 அன்று ஆளும கட்சியைச் சார்ந்த ஒரு அம்மையார் செல்லுமபோது இப்ராஹிம் என்ற லாரி டிரைவர் ஹார்ன் அடிக்கப்பட்டும் வழி கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக அவரை அடித்து, போலீஸ் ஸ்டேஷனுக்கும் கொண்டு போய் அவர் மீது 307—ஐப் போட்டிருக்கிறார்கள். அதே லாரி டிரைவர் இப்ராஹிம் கம்பத்திற்கு வந்ததற்குப் பிறகு ஆளும் கட்சித் தலைவரால் அடிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் இப்ராஹிம் அவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலே கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக் கிறார்கள். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஹார்ன் அடித்தும் வழி விடவில்லை என்பதற்காகவா செக்ஷன் 307-ஐப் போடுவது? எனவே இது குறித்து (குறுக்கீடு).. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. ரகுமான்கான் விஷயத்தோடு நின்றுவிட்டால் நல்லது. 307-ஐ எதற்குப் போட்டார்கள் என்று அவருக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. (குறுக்கீடு.) உலகத்திலே எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். திரு. ரகுமான்கானுக்காக நீங்கள் வாதாடுங்கள். நீங்கள் ஒரு ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு அம்மையார் போகும்போது என்று சொல்வதும், இதற்கும் என்ன சம்பந்தம்? அதை மட்டும் நீக்கி மற்றவற்றைச் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: திரு. இப்ராஹிம் அவர்கள் மதுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்கள் கருத்தை
ஏற்றுக் கொள்கிறேன். இந்த மாதிரி சம்பவங்கள் இருக்கலாம்.
இதற்கும் அதற்கும் தொடர்பு ஏற்படுத்த வேண்டாம்.
திரு. ரகுமான்கானுக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? இந்த
ஒத்திவைப்புத் தீர்மானத்தில் திரு. இப்ராஹிம் வேண்டாம்.

(முற்பகல் 10-40)

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, எனவே, உறுப்பினர்
ரகுமான்கான் அவர்கள் வீடு தாக்கப்பட்டு இருப்பது குறித்து
விரிவாகப் பேசவும், சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீது
உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காகவும் மேலும் இது
போன்ற சம்பவங்களை விரிவாகப் பேசவும், இன்னும் பல
விஷயங்களை எடுத்துச் சொல்வதற்காகவும், இந்த அவையின்
இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பிரச்சினை மிகவும் சீரியசான பிரச்சினை
என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. நான் அந்த
ஸ்பாட்டிலே இல்லை. இருந்தாலும் எங்களுடைய தாலுக்கா
காரியதரிசி ராஜப்பா அவர்கள் அங்கு நடந்த நிகழ்ச்சிகளை
எல்லாம், அவர்கள் கண்ணால் பார்த்து அந்த விஷயங்களைத்தான்
அதன் அடிப்படையில்தான் .இந்தப் பிரச்சினையில் நான் சில
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே பிரைமாபேசி
இருக்கிறதா என்பதைப் பற்றி நான் குறிப்பிட விரும்பு
கிறேன். இதிலே டி.எம்.கே., ஏ.டி.எம்.கே. என்று பார்க்காமல்,
பிரச்சினையின் தன்மையைப் பார்க்க வேண்டும். கல்கத்தாவில்
எதிர்க் ட்சிகளின் மாநாடு கூடி, காங்கிரஸ் அல்லாத 5 முதல்
அமைச்சர்கள், நாட்டில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள்
எல்லாம் கூடி எடுத்து இருக்கக்கூடிய முடிவுகளை நடைமுறைப்
படுத்துவதற்காகத்தான் இந்த நடைப்பயணம் 13 ஆம் தேதி
நடைபெற்றது. அதையொட்டி இந்தத் தகராறு வந்தது.
அரசியல் கட்சிகளுக்கு இடையில் இருக்கக்கூடிய பொலிட்டிக்கல்
காழ்ப்புணர்ச்சியை பயன்படுத்திக் கொண்டு போலீஸ்காரர்கள்
இப்படிச் செய்கிறார்கள். ஜனநாயக முறையிலே நடைபெற்ற
பயணம் அது. அந்த நடைப் பயணத்திற்கு ஐ விட்னசாக
அதிலே கலந்து கொண்ட கட்சித் தலைவர்கள் அத்தனைபேரும்
இதிலே இருந்திருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்
ஊர்வலத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். சி.பி.எம்-கட்சியைச்
சேர்ந்த கருப்பசாமி அவர்கள் இருந்திருக்கிறார்கள். டி.எம்.கே.
டவுன் செக்கரட்டரி பவுன்ராஜ் இருந்திருக்கிறார்கள்.
ஜனதாவைச் சேர்ந்த தம்பிராஜ் அவர்கள், சி.பி.ஐ-ச் சேர்ந்த
ஆனந்தன் போன்றவர்கள் எல்லாம் அமைதியாக,
தலைவர்கள் எல்லாம் ஊர்வலம் போயிருக்கிறார்கள். அந்தத்
ஊர்வலத்தில் 200 போலீஸ்காரர்கள் போயிருக்கிறார்கள். அந்த
எனக்கு ராஜப்பா அவர்கள் கொடுத்த தகவல். இது
வழக்கமாக போகும் ரூட்டிலேதான் போயிருக்கிறது ஊர்வலம்
எனக்கு கிடைத்த தகவல். போலீசுக்கு எழுத்து மூலமாக, என்பது இந்த



கிறார்கள். அப்படி ஊர்வலம் போகும்போது எம்.எல்.ஏ.
வீட்டு மெத்தையில் அ.தி.மு.க. செயலாளர், பெரிய கருட்பன்
அவர்களும், மேலும் 20 பேர்களும் இருந்திருக்கிறார்கள்.
ஆரம்பத்தில் ஊர்வலம் போகும்போது, கிண்டல் மொழி
பேசியும், அருவருப்பான வார்த்தைகளைச் சொல்லியும் விவரிக்க
முடியாத வார்த்தைகளை எல்லாம் சொல்லி அந்த ஊர்வலத்தை
'புரவோக்' பண்ணியிருக்கிறார்கள். அங்கே பெரிய பெரிய
லீடர்ஸ் எல்லாம் இருந்ததால் அவர்கள் கண்ட்ரோலாக
போயிருக்கிறார்கள். அந்த ஊர்வலத்தின் டெயில் என்ட்
வருகிறபோது கற்களாலும், சோடா பாட்டில்களாலும், அந்த
மாடியிலேயிருந்து எறிந்து இருக்கிறார்கள். அதிலே இருந்துதான்
தகராறு ஆரம்பித்து இருக்கிறது. இதிலே இதுதான் நடந்தது
என்பதைப் பற்றி எனக்கு ஒரு புரூப் கிடைத்தது என்ன
வென்றால் எங்களுடைய பார்ட்டி செகரட்டரி மூலம் கிடைத்தது
சோடா பாட்டிலைக் கொடுத்த கடைக்காரர் அவர்களுக்கு
பணமும் கொடுக்கவில்லை. திரும்பி பாட்டிலையும் கொடுக்க
வில்லை. இப்படி / செய்ததைப் பற்றி அந்தக் கடைக்காரர்
எங்களுடைய செகரட்டரி ராஜப்பா அவர்களிடம் முறையிட்டு
இருக்கிறார்கள். ஆகவே அமைதியாக நடந்த அந்த ஊர்வலத்திலே
தகராறை இவர்கள்தான் எழுப்பியிருக்கிறார்கள். பிறகு
எல்லோரும் போய் போலீஸ் ஸ்டேசனிலே கம்ப்ளெய்ண்ட்
கொடுத்திருக்கிறார்கள். இதிலே முக்கியமான விஷயம், டி.எஸ்.பி.
பிரசன்சிலே, சர்க்கில் இன்ஸ்பெக்டர் அவர்கள் ஒத்துக்
கொண்டார்கள். இப்படியெல்லாம் நடந்தது உண்மை என்று.
டி.எஸ்.பி. அவர்களும் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி
யிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அதற்கு நேர்மாறாக,
மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொன்னது மாதிரி ஆளும்
கட்சியினர் சொல்லும் நபர்களை எல்லாம் கைது செய்து
இருக்கிறார்கள், இன்வெஸ்டிகேசன் இல்லாமல் அதற்கு ஒரு
உதாரணமாகத்தான் திரு. ரகுமான்கான் பிரதரை கைது செய்
திருக்கிறார்கள். ஒரு கம்ப்ளெயிண்ட் கொடுத்தால் அதை
இன்வெஸ்டிகேசன் பண்ண வேண்டாமா? அப்படி எல்லாம்
செய்யாமல், ஆளும் கட்சிக்காரர்கள் சொல்லும்
அத்தனை பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால்
நாங்கள் சொல்லும்போது மட்டும் இன்வெஸ்டிகேசன் செய்து
தான் கைது செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். இதை
யொட்டித்தான் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்
வீட்டிலேயும் போய் தாக்குதல் நடந்திருக்கிறது. இந்தப்
பிரச்சினையை நன்கு ஆராய்ந்தால் இதிலே பிரைமா பேசி
இல்லை என்பது தெரியும். ஏன் என்றால் இன்வெஸ்டிகேசன்
இல்லாமல் கைது செய்தால் விடவேண்டியதுதானே.

அப்பொழுது அவரை முதலிலே எப்படி கைது செய்தார்கள்
என்று நான் கேட்கிறேன்? இன்வெஸ்டிகேசன் இல்லாமல் கைது
செய்து பிறகு அவரை விட வேண்டிய நிலைமை போலீசுக்கு
ஏற்பட்டதிலிருந்து என்ன தெரிகிறது? ஆளும் கட்சிக்காரர்கள்
சொல்கிறவர்களையெல்லாம் கைது செயதிருக்கிறது என்பது
தான் பொருள். 15 பேர்கள் பலமாக அடிபட்டிருக்கிறார்கள்.

அவர்களை நன்றாக அடித்துப் போட்டிருக்கிறார்கள். மாஜிஸ்டிரேட் அதைப் பார்த்துப் பிறகு ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

வீடு புகுந்து அட்டகாசம் நடத்தியிருக்கிறார்கள் போலீசார். ரகுமான்கான் வீடு, மற்றவர்கள் வீடு என்று மட்டும் இல்லாமல், பலருடைய வீடுகளுக்குள்ளும் புகுந்து அடித்திருக்கிறார்கள் உண்மையிலேயே என்ன நடந்திருக்கிறது என்று தெரிகிறது என்று சொன்னால், ஆளும் கட்சியினருக்கு இருக்கக்கூடிய அரசியல் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் Police have exercised their powers. They did not see from the legal point of view

சட்ட ஆங்ள்ளிலேயிருந்து பார்க்காமல், வேறு ஆங்கிளிலேயிருந்து போலீசின் தலையீடு நடந்திருக்கிறது என்று தெரிகிறது. அப்படி என்ன அவசரம்? யாராக இருந்தாலும் வீடுகளுக்குள் புகுந்து அடிக்கவேண்டிய அவசியம் என்ன?

Why should they break the door?

அவ்வளவு சர்வ சாதாரணமாக நுழைந்து அடித்திருக்கிறார்கள். வீடுகளுக்குள்ளே பெண்கள் இருக்கிறார்கள்; பயப்படுவார்கள், பிள்ளைகள் இருக்கிறார்கள்; பயப்படுவார்கள் என்று யோசிக்க வேண்டாமா? லா அண்ட் ஆர்டரை காப்பாற்றும் வகையில் இவைகளையெல்லாம் முதலில் அவர்கள் தானே யோசிக்க வேண்டும். ஏன் அந்த யோசனை வரவில்லை, அவசரம் வந்தது? இது வேண்டுமென்றே செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அதனால்தான் எங்களுடைய தாலுக்கா செகரட்டரி ராஜப்பா அவர்கள் பப்ளிக் ஸ்டேட்மெண்ட்—ஒரு ப்ரெஸ் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஸ்டேட்மெண்டிலே எல்லா விவரங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அதிலே போலீஸ் உடைய ஆக்ஷனைக் கண்டனம் பண்ணியிருக்கிறார்கள் ஆகவே, உடனடியாக கைது செய்தவர்களையெல்லாம் ரிலீஸ் பண்ணவேண்டும். தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். போலீஸ் இந்த முறையில் நடந்து கொண்டதற்காக போலீஸ் மீதும் கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் இன்னும் விரிவாகப் பேச, விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கம்பம் சம்பவம் சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் நடந்த விவரங்களை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு அன்றைக்கே அங்கேயிருந்து தந்தி வந்தது. அங்கேயுள்ள அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து மக்களுடைய பிரச்சினைகளுக்காக, மாநில, மைய அரசுகள் செய்ய வேண்டிய சில காரியங்களை வற்புறுத்தி ஒரு பாத யாத்திரையாக 13 ஆம் தேதி அனைத்து ஜனநாயக கட்சிகளும் சேர்ந்து நடத்தக்கூடிய அந்த இயக்கத்தில், கம்பம் என்னும் நகரத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டன



நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கொரு தரம் சொல்லிக் கொண்டு வரக்கூடிய முறையிலே ஏதாவது எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்துகிறது என்று சொன்னால் மக்களே பார்த்துக் கொள்வார்கள் என்று அவர்கள் அடிக்கொரு தரம் சொல்வார்கள் மக்கள் என்று சொன்னால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களாகவே அதைப் பார்த்து எதிர்த்துக் கலகம் தகராறுகளைச் செய்து லா அண்டு ஆர்டரையே குளோஸ் பண்ணக்கூடிய முறையில் நடத்த வேண்டும் என்பது தான் அந்த வார்த்தையினுடைய அர்த்தம் என்று நான் புரிந்து கொள்கிறேன்.

இந்தச் சம்பவத்தைப் பற்றிய விவரங்கள் பூராவையும் தோழர் திரு. உமாநாத் அவர்கள் தெரிவித்தார்கள். இதில் நான் சொல்ல விரும்புவது, ஜனநாயக நாட்டிலே மக்களுடைய கோரிக்கைகளை வெளிப்படுத்தும் வகையில், எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, தங்களுடைய எண்ணங்களை ஊர்வலம் நடத்தி, பொதுக் கூட்டம் போட்டு, தர்ணா நடத்தி அதன் மூலமாக வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பும் வசதியும் கட்டாயமாக அளித்தாக வேண்டும். அதற்குப் பிறகு, மறுநாள் வேண்டுமானால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கோரிக்கைகளுக்கு எதிராக, அது தவறு என்று தெரிவித்து ஊர்வலம் நடத்தியோ, பொதுக்கூட்டம் போட்டோ தெரிவிக்கட்டுமே. ஆனால் இப்பொழுதெல்லாம் என்ன நடக்கிறது என்று சொன்னால், மக்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக, ஏதாவது நியாயம் கேட்டு போராட்டம் நடத்தினால், அப்பொழுதே உடனடியாகவே எதிர்த்து போராட்டம் நடைபெறுகிறது.

அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் போலீசினுடைய கடமை என்ன? அரசினுடைய கடமை என்ன? லா அண்டு ஆர்டரை பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் சட்டம் ஒழுங்குக்கு பங்கம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடைய, போலீசினுடைய பொறுப்பு. போலீஸ் அதிகாரிகள் இதில் எப்படி செயல்பட்டிருக்கிறார்கள் என்று எனக்கு வந்த தந்தியில் என்ன விவரம் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், போலீசின் முன்னாலேயே, கைது செய்யப்பட்ட, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஜனதா கட்சியை சேர்ந்தவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். யாரால்? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களால். போலீஸ் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால். போலீசைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு அவர்களை ஆளும் கட்சியினர் தாக்கியிருக்கிறார்கள் என்று பொருள். ஆளும் கட்சியின் அரசியல் கோபங்கள் இப்படி காட்டப்படுகின்றன.

ஆகையினால் இதிலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மக்கள், அரசின் கொள்கையை எதிர்த்து ஏதாவது ஒரு காரணத்திற்காக, நியாயவிலைக் கடையில் அரிசி சரியாகக்

கிடைக்கவில்லை, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, அல்லது வேறு ஏதோ அத்தியாவசியப் பொருள் விலை குறைய வேண்டும் என்று இப்படி கிளர்ச்சியில் ஈடுபட்டால், நீங்கள் என்ன செய்ய வேண்டும். மறுநாள் ஒரு கூட்டத்தைக் கூட்டி, உங்கள் தரப்பு விவரங்களைச் சொல்லுங்கள். நாங்கள் அரிசியை ஒழுங்காகத் தான் கொடுக்கிறோம். 20 கிலோ அரிசி தருகிறோம். விவசாயிகள் மீது கடன் பாக்கிக்காக எந்தவித ஜப்தியும் செய்வதில்லை என்று சொல்லுங்கள்.

ஆனால் அதைவிட்டு, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும், ரகுமான்கான் அவர்களும் சொன்னது போல் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஏன்? நாளைக்கு நீங்களும் எதிர்க்கட்சியாக வந்து விட்டால், இதே நிலைமை நீடித்தால் என்ன ஆகும்? நினைத்துப் பாருங்கள். ஆளும் கட்சி எதிர்க்கட்சியாகலாம், எதிர்க்கட்சி ஆளும் கட்சியாகலாம். ஜனநாயக மரபில் அது மாறிக் கொண்டு தான் இருக்கும். ஆனால், யாராக இருந்தாலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை என்ற ஒன்று இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதை விட்டு, இரவில் வீடுகளுக்குள்ளே 1 மணிக்கு புகுந்து தாக்குவானேன்? அதுவும், முஸ்லீம் பெண்கள் இருக்கிற இடத்திற்குப் போய் தாக்குவானேன்? பகலில் கைது செய்யக்கூடாதா? வாரண்ட் இல்லாமல் சென்றிருக்கிறார்கள். கேஸ் போட்டு 3 வருடம் கூட தண்டனை கொடுங்கள், சட்டப்படி எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், இரவில் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் ஆளுங் கட்சியினரை முன்வைத்து அடிப்பதா? ஜனநாயக முறையிலே எந்த முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் விவாதித்து முடிவெடுப்பதற்கு இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. பொ. விஜயராகவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-2-84 அன்று எதிர்க்கட்சியால் நடத்தப்பட்ட மக்கள் இயக்கத்திற்கு ஆதரவாக இந்த நாடு முழுவதும் பலவிதமான இயக்கங்கள் நடத்தப்பட்டன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து பாத யாத்திரையாக சென்று மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளைப்பற்றி மக்கள் மத்தியில் சொல்லுகின்ற வகையில் இந்த மாதிரியாக ஈடுபடுகிற போது இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காதபோது தமிழ்நாட்டிலேதான் நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்பம் நகரத்திலே ஊர்வலம் நடத்துகிறவர்கள்மீது தவறான கருத்துக்களைச் சொல்கிற முறையில் கேலியும் கிண்டலும் செய்தது மாத்திரமல்ல, ஊர்வலத்தைக் கலைக்க முயற்சித்து, அதைப்பற்றி எதிர்க்கட்சியினர் புகார் செய்ததையும் நிராகரித்து விட்டு சட்டமன்ற உறுப்பினரின் வீட்டிற்குப் போய் இரவு நேரத்திலே எந்தவிதமான சட்டப் பூர்வமான வாரண்டும் இல்லாமல் கதவை உடைத்து நொறுக்கி



விட்டு அங்கே இருந்தவர்களைத் தாக்குவது என்ற நிலைமை வந்திருக்குமானால் இந்த அரசை நடத்துகின்ற ஆளுங்கட்சிக் காரர்கள் எந்த அளவுக்கு ஜனநாயகத்தை மதிக்கிறார்கள் என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சி செங்குன்றம் பகுதியிலே எதிர்க்கட்சிக் காரர்கள், ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டிலே வைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக அகில இந்திய அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள்—எதிர்க்கட்சிக் காரர்களின் போராட்டத்தைக் கண்டு பொறுக்கமுடியாமல் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிற நிலைமைகள் ஏற்படுகின்றன. ஒரு சட்டமன்ற உறுப்பினர் வீட்டில் அத்துமீறி நுழைந்து உள்ளே இருப்பவர்களை அடித்திருக்கிறார்கள் என்றால் அரசியலிலே இருக்கிறவர்களை, எதிர்க்கட்சிக்காரர்களை இப்படியெல்லாம் தாக்குகிற நிலைமை தொடர்ந்து வருமானால் இதைவிட ஒரு அராஜகப் போக்கு என்ன இருக்கமுடியும்? எத்தனையோ குற்றவாளிகள், கடுமையான குற்றம் செய்தவர்கள் விஷயத்தில் எல்லாம் தீவிரம் காட்டாத காவல் துறையினர் ஆளுங்கட்சிக்கு அனுசரணையாக நடந்து கொள்ளக்கூடிய அளவுக்கு ஆளுங்கட்சியின் கைபொம்மைகளாக நடந்து கொள்ளக் கூடிய அளவுக்கு இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினால் அது மிகையாகாது. இதுபோன்ற செயல்கள் தடுத்துநிறுத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இதுகுறித்து இந்த மாமன்றத்திலே விவாதித்து ஒரு முடிவு காணவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதன் காரணமாக அவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதி கம்பத்திலே நடந்த இந்த சம்பவம் உண்மையில் வருந்தக்கூடிய ஒன்று, வேதனை தரக்கூடிய சம்பவம் ஆகும். ஒரு ஜனநாயக நாட்டில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உரிமைகளையும் கொள்கைகளையும் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது தடுக்கப்படுகிற முறையிலே ஊர்வலம் சென்றபோது ஏதாவது தவறு நடந்திருந்திருந்தாலுங்கூட அடுத்த நாள் பகல் நேரத்திலே சென்று யார் தவறு செய்திருந்தாலும் அவர்களை அழைத்து நடவடிக்கை எடுப்பதுதான் போலீசார் கடமை. இன்றைக்குத் தமிழகத்திலே பார்க்கிறபோது எங்கே பார்த்தாலும் பட்டப் பகலில் பெண்களைக் கொலைசெய்துவிட்டு சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடுகிறார்கள். அதை எல்லாம் பிடிக்காத போலீஸ் சட்டமன்ற உறுப்பினர் வீட்டிலே சென்று இரவு நேரத்திலே கதவை உடைத்து, வீட்டில் உள்ளவர்களை அடித்திருக்கிறார்கள் என்றால் அது மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி. இந்த மாதிரி நாட்டிலே நடக்கக்கூடாது என்பதற்காக இப்பிரச்னைபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு [illegible]

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-2-1984 அன்று கம்பத்தில் இந்த அவையில் உறுப்பினராக இருக்கின்ற சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் வீட்டில் போலீசார் அத்து மீறிய செயல் நடந்து இருக்கிறது என்பது மிக வருந்தக்கூடிய ஒன்றாகும். சட்டமன்ற உறுப்பினர் வீட்டுக்கே இந்த கதி என்றால் நாட்டிலுள்ள நிரபராதி மக்களுடைய நிலைமை எப்படி இருக்கும் என்று நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். போலீசார் கடமையைச் செய்கிறார்கள் என்று சொல்வது பெருமை தான். ஆனால் போலீசார் அத்து மீறிப் போய் பொய் வழக்கு போடுவதும், சட்டத்தை மீறி வாரண்டு பெறாமல் அர்த்த ராத்திரியில் ஒரு வீட்டுக்குள் அத்து மீறி செல்வதும் சட்ட ரீதியான செயலாக இருக்கமுடியாது. சபாநாயகர் அவர்களே தாங்கள் பல போராட்டங்களைக் கண்டு இருக்கிறீர்கள், எதிர்க் கட்சியிலும் இருந்து இருக்கிறீர்கள், எதிர்க் கட்சியில் இருந்தபோது இப்படிப் பட்ட நிலைமை வருகின்றபோது தாங்கள் நிச்சயமாக இதற்கு நியாயமான தீர்ப்பு எண்ணி இருப்பீர்கள். அந்த முறையில் தாங்கள் இன்றைக்கு நடந்து இருக்கின்ற அத்து மீறிய செயல்களைக் கண்டிப்பதற்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்து இருக்கிறோம். இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதத்திற்கு தாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கோருகிறேன். குறிப்பாக 307-வது செக்ஷன் என்றால் வக்கீலாக இருக்கின்ற உங்களுக்கு என்னைவிட நன்றாகத் தெரியும். Attempt to murder என்று சொல்கிறபோது அதைச் செய்துவிட்டார்கள் என்று சொல்வதற்கு இடம் இல்லை. செய்யத் தூண்டினார்கள் என்று சொன்னாலும் காலையில் நடந்த ஊர்வலத்தில் சென்றவர்கள், அதிலும் அந்த ஊர்வலத்தில் முன்னே சென்றவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் போலீசாரும் சென்று இருக்கிறார்கள். பின்னால் வந்தவர்களுக்கு இந்த ஒரு இக்கட்டான சம்பவம் நடந்து இருக்கிறது என்று பேப்பர் மூலமாக அறிகிறோம். எங்களுடைய தலைவருக்கு வந்த தந்தியிலும் அர்த்த ராத்திரியில் ஒரு மணிக்கு மேல் வீட்டை உடைத்தும், பெண்களை துரத்தியும் இப்படிப்பட்ட அவல நிலைக்கு அவ்வளவு அவசரம் என்ன? மறுநாள் காலையில் உண்மையிலேயே குற்றம் நடந்து இருந்தால் அது ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி எதிர்க் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, பெண்களுக்கு ஒரு பயமும், அவமானமும் சட்ட ரீதியான பாதுகாப்பற்ற நிலைமையும் உருவாகக்கூடிய அத்து மீறிய செயல்களை ஏன் இந்த போலீசார் செய்தார்கள், செய்ய வேண்டிய அவசியம் என்ன? மேஜிஸ்ட்டிரேட்டை சந்தித்தார்களா, பதட்ட நிலை இருந்ததா? அல்லது பெண்கள் கத்தி எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்களா? என்ன நிலைமை என்பதைப் பார்க்கவேண்டும். பெண்கள் கோஷாஸ்த்திரிகள் என்றாலே நிச்சயமாக அதிக சலுகை இந்த இந்திய நாட்டில் கொடுத்து இருக்கிறோம். முஸ்லீம் சகோதரர்கள் மத்தியிலும், சிறுபான்மையினர் [redacted]





சமுதாயப் பெண்களாக இருந்தாலும், இஸ்லாமிய சமுதாயப் பெண்களாக இருந்தாலும், கிருத்துவ சமுதாயப் பெண்களாக இருந்தாலும் பெண்களுக்கு ஒரு மரியாதை கொடுக்கிறது இந்திய நாடு. அதிலும் குறிப்பாக தமிழ்நாடு அதற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கின்ற நாடு. அப்படிப்பட்ட இடத்தில் போலீசார்களின் அர்த்த ராத்திரியில் அத்து மீறிய செயல்களைக் கண்டிப்பது மட்டும் அல்லாமல் வருந்துகின்ற, வெட்கப் படுகின்ற நிலையில் நாம் இருக்கிறோம். இதைக் கட்சி ரீதியாக எடுக்காமல், எதிர்க் கட்சிகாரர்கள் என்ற காரணத்தைப் பார்க்காமல் நாம் உண்மையைச் சொல்லுகின்ற நிலையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எதிர்க்கட்சியில் இருக்கிற எல்லோருக்கும் இனிமேல் பயம் வரும். நாம், எதிர் கட்சியாக இருக்கிறோமே, நம் வீட்டையும் தாக்குவார்களோ என்ற அச்சத்தை இது உருவாக்கும். ஏன், சில சமயங்களில் ஆளும் கட்சிக்கே இந்த அவல நிலைமை நடந்து இருக்கிறது என்று பலபேரிடம் நாம் கேட்டு இருக்கிறோம். ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் போலீசார் தங்களைத் தாங்களே தயார் செய்துகொள்ளுகிற ஒரு கேவலமான நிலைமை நாட்டில் இருக்குமானால் ஆளும்கட்சியினருக்கும் ஆபத்து, எதிர்கட்சியினருக்கும் ஆபத்து. இதை எடுத்துச் சொல்லுகின்ற நிலைமை ஏற்படுவதுதான் நல்லது. எனவே, சபாநாயகர் அவர்களே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைத் தீர்க்கமாக விவாதிக்கவேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-00)

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை** அது மட்டும் அல்ல, கடந்த காலங்களில் எத்தனையோ ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த அவையில் வந்து அவைகளை விவாதித்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **சமுதாய பிரச்சினையாக ஆக்காமல் பேசுங்கள். அது எங்காவது கொண்டு போய்விடும். பாதிக்கப்பட்டவர்கள் என்பதுதானே தவிர வேறல்ல** பாதிக்கப் பட்டவர் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம்: **என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ஏ. சாகுல் ஹமீது: இந்த நாட்டிலே பொதுமக்களை இந்தக் காவல்துறை கொடுமைப் படுத்துகிறது, பொதுமக்களை அலட்சியப்படுத்தியிருக்கிறது என்பது பற்றி இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட நேரங்களிலேயெல்லாம் அரசின் பதில் என்னவாக இருக்குமென்றால், காவல்துறை நியாயமான முறையில்தான் நடவடிக்கைகளை எடுக்கிறது என்ற முறையில் தான் இருந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் காவல்துறை கட்டவிழ்த்து விடப்பட்ட முறையில் நடந்து வருகிறது. கட்ட விழ்த்து விடப்பட்ட துறை என்று இந்த ஆட்சியிலே இருக்குமே யானால் அது நிச்சயமாக இந்தக் காவல்துறையாகத்தான் இருக்க முடியும்.

ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பு இல்லை. அவர் வீட்டிலேகூட வாழ உரிமையில்லையா என்று கேட்கிறேன். அதுமட்டுமல்லாமல் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களா னாலும் அவர்கள் வீட்டை இரவு ஒன்றரை மணிக்குக் கதவைத் தட்டி, தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கக் கூடாது என்பது ஒரு மரபு. போக்கிரிகள் சொல்ல நினைக்காத வார்த்தைகளை இந்தக் காவல்துறையினர் சொல்கிறார்கள் அது நியாயமான காவல்துறையா என்று கேட்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இஸ்லாமிய மரபுப்படி, இஸ்லாமிய கலாச்சாரப்படி இருக்கிற கோஷா பெண்கள் வாழ்கின்ற வீட்டின் கதவை இரவு ஒன்றரை மணிக்குத் தட்டி தகாத வார்த்தைகளைச் சொல்கிறார்கள் என்றால் என்ன பொருள் அந்தச் சமுதாயம் நாதியற்ற சமுதாயம் என்று கருதுகிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத சம்பந்தமாகப் பேசி, இது இனக் கலவரமாக மாறிவிடக் கூடாது என்பதை நினைவில் கொண்டு பேச வேண்டும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: இந்த நாட்டிலே சட்டமன்ற உறுப் பினராக இருக்கக்கூடியவர் தன்னுடைய இல்லத்திலே வாழ் வதற்கு உரிமையில்லை என்றால் இந்த நாட்டின் சாதாரண மக்கள் எந்த அளவிற்கு உரிமையற்றிருப்பார்கள், பாதிக்கப் படுவார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, இன்றைக்கு ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது இப்படிச் சட்டமன்ற உறுப்பினரே பாதுகாப்பாக இருக்கமுடியவில்லை யென்றால் இந்த நாட்டிலே வேறு யாருக்குத்தான் பாதுகாப்பு இருக்க முடியும்?**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: ஆகவே, காவல் துறையின் இப்படிப் பட்ட கொடுமைகளைப் பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க [redacted]



திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 13-2-1984 ஆம் தேதியன்று கம்பத்திலே கட்சிகளின் சார்பாக நடைப்பயணம் வைத்திருந்தபொழுது அருமை நண்பர் உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இல்லத் திற்கு இரவு ஒரு மணி அளவில் காவல்துறையினர் சென்றிருக் கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினரின் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்ற அவசியம் ஏற்படும்பொழுது முன்னறிவிப்பு ஒன்றைக் கொடுத்துவிட்டுக் காவல்துறையினர் அங்கே சென்றிருக்க வேண்டும். அதுவும், கோஷா அணியக்கூடிய பெண்கள் இருக்கின்ற வீட்டிலே, சட்டமன்ற உறுப்பினர் சென்னையிலே இருக்கின்றபொழுது இந்தக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அங்கே சென்று மோசடியான செயல்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் அங்கே பேசப்பட்ட வார்த்தைகளைப் பற்றியெல்லாம் மாமன்ற உறுப்பினர்கள் காவல்துறையைப் பற்றி மிகவும் கண்டிக்கின்ற முறையிலே எடுத்துச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் காவல் துறையில் சில அதிகாரிகளைத் தவிர நிறையபேர் ஆளுங்கட்சி சார்பாக நின்று, சின்னப் பிரச்னை களைக்கூட பெரிய பிரச்னைகளாக ஆக்கிக்கொண்டிருக் கிறார்கள்.

மேலும் இதுபோன்ற செயல்கள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் காவல்துறையினை மிகவும் கண்டிப்போடும், கவனத்தோடும் நடத்தவேண்டும் என்று சொல்லி இது குறித்து நன்கு விவாதிக்க வேண்டி இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதேபோல் கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.டி. கோபாலன் அவர் களுடைய வீடு தாக்கப்பட்டது குறித்து 54-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவிப்புக்கள் கொடுத் துள்ளனர்........

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், 54-வது விதி என்றால் அஜன்டாவிலே வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி நேற்றையதினமே சொல்லப்பட்டு அவையிலே ஒத்துக்கொள்ளப்பட்டிருக் கின்றது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். பேரவையின் விதிகளின்படி ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுகின்ற போது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள்

அதற்கு விளக்கம் அளிப்பார்கள். அதேபோன்று இப்போது 54-வது விதியின்கீழ் கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருவதாக இருந்தால் அதுபற்றி அவை நிகழ்ச்சி நிரலிலே குறிப்பிட்டு முன்பே எங்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். பேரவை வி களின்படிதான் ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், கவனஈர்ப்புத் தீர்மானத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, இவ்வாறு எடுத்துக் கொண்டால் அது ஒரு தவறான முன் மாதிரியாக ஆகிவிடும். அதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மாதிரியான முறைகள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன. நேற்று இரண்டு பக்கத்தி லேயும் இவைபற்றி விவாதிக்கப்பட்டு, இரண்டையுமே எடுத்துக் கொள்வது, இரண்டுக்கும் சேர்த்து அமைச்சர் பதில் சொல்வது என்கிற முடிவை அவை ஏற்றுக்கொண்டது.

54-வது விதியின்கீழ் திருவாளர்கள் இரா. முத்தையா, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், ஆர்.டி. கோபாலன், ஏ. சி. சண்முகம், ஆர். மணிமாறன், திரு. மி. வின்செண்ட் ஆகியவர்கள் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்; என்றாலும் இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கோபாலன் அவர்கள் வீடு தாக்கப்பட்டது என்று முன் அறிவிப்பு கொடுக் கப்பட்டுள்ளதால் அவரை மட்டும் இது குறித்து விளக்கம் அளிக்க அனுமதிக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: கவனஈர்ப்புத் தீர்மானம் என்றால் அமைச்சர் ஸ்டேட்மெண்ட் வைக்கவேண்டும். உறுப்பினர் பேச முடியாது. முதலிலே மினிஸ்டர் ஸ்டேட்மென்ட் வைக்க வேண்டும். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் எந்த ஒரு உறுப்பினர் பேசுகின்றபோதும் இன்னொரு உறுப்பினர்மீது குற்றச்சாட்டோ அல்லது அவரைப் பற்றிய குறிப்புகளோ தரப்படுமேயானால் அதுகுறித்து விளக்கம் அளிக்க அந்த உறுப்பினருக்கு சாதாரணமாகவே உரிமை உண்டு. எனவே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர்.டி. கோபாலன் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இந்த அவையின் உரிமைப்படி வாய்ப்பளிக்க வேண்டும் என்பது குறித்து விதிகளிலே இடம் உண்டு. மரபுகளும் அதைத்தான் எடுத்துக் கூறுகின்றன. ஆகவே தாங்கள் அளித்த தீர்ப்பு மேலும் ஒரு வகையிலே வாய்ப்பு ஏற்படுத்துவதாக இருக்கின்றது. ஏனென்றால் அவரைப் பற்றி வந்த செய்திகளுக்கு அவர் மட்டும் விளக்கம் அளிக்கின்ற வாய்ப்பைத் தாங்கள் தருவது என்பது இந்த அவையின் மரபுக்கு ஏற்றதுதான் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (கூச்சல் குழப்பம்);



திரு. துரைமுருகன்: He is entitled to give personal explanation. தன்னிலை விளக்கம் அளிக்கலாம். ஆனால் ரூல் 54-ல் இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: மினிஸ்டர் சொன்னபிறகு அவர் சொல்லட்டும்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தன்னிலை விளக்கம் சொன்ன பிறகுதான் அமைச்சர் பதில்சொல்ல வேண்டும். அவர் தொகுதி. இவர் வீடு.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்களுக்கு முழுக்க முழுக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியது அவசியம். உங்கள் டிஸ்கிரஷன்படி கொடுங்கள். கொடுக்க வேண்டியது அவசியம், ஆனால் கால் அட்டென்ஷனில் கொடுத்தால் பியூச்சரில் குழப்பம் உண்டாகும். அந்தப் ப்ரவிஷன்படி என்றால் 'He must call the attention of the Minister' அமைச்சர் அவர்கள் அறிக்கை வைக்க வேண்டும். ஆகவே நான் என்ன சொல்கிறேன் என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால் அட்டென்ஷன் இத்தனை பேர்கள் கொடுத்திருக்கிறார்கள், ஆனால் கோபாலை மட்டும் தன்னிலை விளக்கம் அளிக்கச் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னேன். அவ்வளவுதான். இதிலே ஒன்றும் பிரச்னை இல்லை. வேறுபட்ட கருத்து கிடையாது.

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11-2-1984 ஆம் தேதி அன்று எங்கள் கட்சியைச் சேர்ந்த, முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த அக்பர் என்பவருடைய கடையை திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் பவுன்ராஜ் தலைமையில் 15 அடியாட்கள் நொறுக்கியது மட்டுமல்லாமல் அவரைக் கத்தியால் குத்தி, இன்று அவர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இங்கே பேசும்பொழுது முஸ்லிம் சமுதாயம் என்று கூறினார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த அக்பர் கடையைச் சூறையாடிவிட்டு அவரைக் கத்தியால் குத்தி கொலை செய்யும் நோக்கத்துடன் செய்திருக்கிறார்கள். அதைப் பற்றிய புகார் காவல்துறையிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தப் பகுதியைப் பொறுத்த அளவில், இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதிகமான வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டிருக்கிற காரணத் தினால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வன்முறைச் செயல் களிலே கடந்த ஒரு மாத காலமாக ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

தூண்டிவிட்டு முன்னே சென்றுவிட்டார்கள்; பின்னால் சென்ற 50 திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 4,5 கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், கிட்டத்தட்ட 3 பெட்டி அளவிலே சோடா பாட்டில்களையும் கற்களையும் சைக்கிள் செயினையும் கொண்டுவந்து என்னுடைய வீட்டைக் கடுமையாகத் தாக்கிச் சேதப்படுத்தினார்கள். அந்த நேரத்தில் என்னுடைய மனைவி, மக்கள் அனைவருமே பயந்து, பீதிஅடைந்து, மேலே ஓடியிருக்கிறார்கள். யாருமே காப்பாற்றக்கூடிய சூழ்நிலை இல்லை. அந்த நேரத்தில் நான் வீட்டிலே இருந்திருந்தால், நிச்சயமாக என்னை நீங்கள் இங்கே பார்த்திருக்க முடியாது. நிச்சயமாக என்னைக் கொலை செய்திருப்பார்கள் என்று மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்; மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் பேசுவது கூட எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் அழகர்சாமி அவர்களும் இளையபெருமாள் அவர்களும் உண்மைக்குப் புறம்பாக பேசிவிட்டார்கள், என்பதை மிக வேதனையுடன் கூறிக் கொள்கிறேன்.

மேலும் உமாநாத் அவர்கள் கம்பம் நகருக்கு வரட்டும். நானே அவர் கட்சியைச் சேர்ந்த 10,15 நபர்களை அழைத்து நிற்க வைக்கிறேன். அவர்களே அவர்களுடைய நெஞ்சைத் தொட்டுச் சொல்லட்டும், யார் குற்றவாளி என்று. அப்படி நான் குற்றவாளி என்றால், நீங்கள் கொடுக்கும் எந்தத் தண்டனையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். 11 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுடைய அண்ணன் மஜீத்கான் என்ற தங்கப்பன் இரண்டு அடி நீளமுள்ள பெரிய அரிவாளை எடுத்துக்கொண்டு இந்த எம்.எல்.ஏ. கோபாலை கொலை செய்யக்கூடிய அரிவாள் இது தான் என்று கூக்குரல் இட்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இது தெள்ளத் தெளிவாகத் தெரியும். என்பதை தெரிவித்துக் கொள்வதோடு 13 ஆம் தேதி என்னுடைய வீட்டைச் சேதப்படுத்தும்போது அதே கத்தியைக் காட்டி கோபாலை இழுத்துவாங்கடா. இந்தக் கத்தியாலே அவனை வெட்டிக் கொல்லுகிறேன் என்று கூக்குரலிடுகிறார். அப்படிப்பட்டவரை போலிஸ் கைது செய்யாமல் விட்டுவிட்டால் மேலும் என்னுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நேற்றுகூட இந்தச் சம்பவம் தொடர்பாக நமது நாடாளுமன்ற உறுப்பினர் ஜக்கையன் அவர்கள் ஊரிலே எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு தொண்டரை மாலை 5-30 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கத்தியால் குத்தி இருக்கிறார்கள் என்பதையும் நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டு இந்தச் சூழ்நிலையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருமே ரகுமான்கான் அண்ணனைக் கைது செய்ததற்காக இவ்வளவு பரிந்து பேசியவர்கள், என்னுடைய உயிருக்கும் என்னுடைய [illegible]



சூழ்நிலை நடந்திருக்கிறது. அதைப்பற்றி தயவுசெய்து அவர்கள் சிந்தித்து நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு நீங்களும் எனக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். மேலும் என்னுடைய வீட்டை தாக்கியதற்கான போட்டோ நகல்களை உங்களுடைய அனுமதியோடு சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, என்னை ஒரு விளக்கம் அளிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் என் பெயரைச் சொல்லி இருக்கிறார். (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரகுமான்கான் அவர்களைத்தான் பேசும்படியாக முதலில் அழைத்தேன்.

**திரு. துரைமுருகன்:** ஒருவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னால் அவருக்கு விளக்கம் அளிக்க அனுமதியளிக்க வேண்டுமென்பது மரபு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நாங்களும் நியாயம் என்று ஒப்புக்கொண்டோம். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள்கூட திரு. ரகுமான்கான் அவர்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவரைப்பற்றி சொல்லியிருந்தால் அவருக்கு தன்னிலை விளக்கம் கொடுப்பதற்கு நியாயம் இருக்கிறது. மேலும் இந்தக் கட்சியைப் பொறுத்த வரையில் திரு. துரைமுருகன் அவர்கள் விளக்கமாகப் பேசி விட்டார்கள். திரு ரகுமான்கான் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் எல்லா உறுப்பினர்களும் விரிவாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அதற்கும் நான் பதிலுரை அளிக்க இருக்கிறேன். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய தன்னிலை விளக்கம் தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**திரு அ. ரகுமான்கான்:** என்னுடைய குடும்பம் என்று சொல்லி இருக்கிறார். அதனால்தான் நான் எனக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, திரு. கோபால் அவர்களின் வீட்டைப் பற்றி வந்தது, தெருவைப்பற்றி வந்தது என்பதால் அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துரைமுருகன் உணர்ச்சி வசப்படாதீர்கள். அமைதியாக இருங்கள். நான் முதலில் திரு. ரகுமான்கான் அவர்களைத்தான் கூப்பிட்டேன். ஆனால் அவர்களுக்குப் பதிலாக திரு. துரைமுருகன் பேசிவிட்டார். அதனால் பிறகு விளக்கம் வந்தால் போதும் என்று நினைத்தேன் இது சூடான விவாதமாக மாறிவிடக்கூடாது. (கூச்சல்.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அந்த ஒரு விஷயத்தைப் பற்றி தன்னிலை விளக்கம் சொல்ல விரும்புவதால் அதை அனுமதிக்கலாம், அதற்குப் பிறகு முழு விவரத்தையும் நான் பதில் உரையாக கொடுக்க இருக்கிறேன். அரசின் சார்பாக நான் உண்மை நிலைமைகளைச் சொல்ல இருக்கிறேன். அதை நாடும் இந்த அவையும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறது. ஆகவே அதைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அந்த விஷயத்தைப் பற்றி மட்டும் அவர் தன்னிலை விளக்கம் சொல்ல அனுமதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், (குறுக்கீடுகள்.)

(முற்பகல் 11-20)

**திரு. ஆர். டி. கோபாலன்:** தலைவர் அவர்களே, நான் என்னுடைய பேச்சை இன்னும் முடிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ''நான் காணாமல் போய் இருப்பேன்'' என்ற அளவிற்குச் சொல்லியதற்கும் மேலே, வேறு தகவல்களைத் தெரிவிக்க என்ன இருக்கிறது?

**திரு. ஆர். டி. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொலைவெறித் தாக்குதல் சம்பவம்

** ** **

தூண்டுதலால் நடைபெற்று இருக்கிறது. ஆகவே, எனக்கும் என் குடும்பத்தாருக்கும் தாங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தற்போது கூறிய குற்றச்சாட்டு அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த குடும்பம் எங்கள் குடும்பம், எங்கள் குடும்பத்திலே இருப்பவர்கள் ஜனநாயகத்திற்கு விரோதமான அராஜகத்திலோ அல்லது வன்முறைச் செயல்களிலோ, கொலை வெறியிலோ இதுவரையில் நம்பிக்கை உடையவர்கள் அல்ல. குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்களும் அல்ல. தனிப்பட்ட முறையில் திரு. கோபாலன் மீது..........(குறுக்கீடுகள்.)

**திரு. ஆர், மணிமாறன்:** குற்ற பரம்பரையினர் என்று அவர் எப்படிச் சொல்லலாம்? (கூச்சல் குழப்பம்.)

**திரு துரைமுருகன்:** திரு. கோபாலன் பேசும்போது நாங்கள் அமைதியாக இருந்தோம், அதைப்போலவே திரு. ரகுமான்கான் பேசுகிறபோது அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். (குறுக்கீடுகள்.)

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் அமைதியாக உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டபோது ஒருசில பிரிவினரைக் குறிப்பிட்டு அவர்களைக் குற்ற பரம்பரையினர் என்று சொல்லி தனிச்சட்டம் வைத்திருந் தார்கள். அந்தக் குற்ற பரம்பரையினர் சட்டம் இப்போது நீக்கப்பட்டு பல ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. இந்தச் சமுதாயத் தில் இன்றைக்கு யாருமே குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அல்ல. எல்லோரும் சமமான அளவிற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறார்களே தவிர, குற்ற பரம்பரையினர் என்று யாரையும் குறிப்பிடவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

***திரு. அன்பில் தர்மலிங்கம்:** இப்போதும் குற்ற பரம்பரை இருக்கிறது. 'டி நோட்டிஃபைடு ட்ரைப்ஸ்' என்று இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் எங்களிலே பலர் 'டி நோட்டி ஃபைடு' தான்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பல்லாண்டுகாலமாக ஒதுக்கப்பட்டு, சமுதாயத்தில் புறக்கணிக்கப் பட்டிருந்த ஒரு சமுதாயத்திற்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கையை மேம்பாடடையச் செய்ய வேண்டும் என்பதற்காக ''குற்ற பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள்'' என்று சொல்லி வசதிகளை வாய்ப்புகளைச் செய்து கொடுக்கிறோமே தவிர அவர்கள் குற்ற பரம்பரை பட்டியலில் இருக்கிறார்கள் என்று கொடுக்கப்படவில்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு தலைவரவர்களே, கொலை, கொள்ளை போன்ற காரியங்களில் ஈடுபடும் குடும்பம் அல்ல, என்னுடைய குடும்பம். என்னுடைய குடும்பம் அரசியல் ரீதியாக இருக்கிற ஒரு குடும்பம். யார் மீதும் அரசியல் காரியங்களுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ ஜனநாயக விரோதமான செயல்கள், பலாத்காரமான நட வடிக்கைகள் போன்றவைகளில் ஈடுபடுகின்ற எண்ணம் எனக்கோ என்னுடைய குடும்பத்திநருக்கோ கிடையாது. இந்தச் சம்பவ பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜக்கயன் அவர்க பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அ அறிக்கையிலே திரு. கோபால் தாக்கப்பட்டார் என்று சொ வில்லை. அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்க வழிநடைப் பயணத்தை ......(குறுக்கீடுகள்).

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்:** கனம் சபாநாய அவர்களே, திரு. கோபால் அவர்கள் தன்னிலை விளக்க கொடுக்கும்போது மற்ற உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பா தி.மு.க. உறுப்பினர்கள் அமைதியாக இருந்தார்கள், அதே மாதிரி திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போதும் மற்றவர் கள் அமைதியாக இருக்க வேண்டும். அவர் சட்டத்திற்கு

விரோதமாக, உண்மைக்குப் புறம்பாகப் பேசவில்லை என்று
சொல்கிறார். அவர் பேசியபிறகு மாண்புமிகு அவை முன்னவர்
அவர்கள் பேச இருக்கிறார்கள். ஆகவே ஆளுங்கட்சி உறுப்
பினர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் பேசும்போது
திரு. ரகுமான்கான் அவர்களுடைய குடும்பத்தைக் குறிப்பிட்டுக்
கூறியது சம்பந்தமாக திரு. ரகுமான்கான் அவர்கள் தன்னிலை
விளக்கம் சொல்வதுதான் சரியாக இருக்குமே தவிர, வெளியே
சொன்னது, பத்திரிகையில் வந்த அறிக்கை பற்றி எல்லாம்
கூறுவதாக இருந்தால் குழப்பமான சூழ்நிலை ஏற்படவழிவகுக்கும்.
ஆகவே, திரு. கோபால் அவர்கள் குறிப்பிட்டதற்கு மட்டும்
அவர்களுடைய தன்னிலை விளக்கத்தைச் சுருக்கிக்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, என்னுடைய
சகோதரர் கொலை செய்ய முயற்சித்தார். அரிவாளைத் தூக்கிக்
கொண்டு வந்தார் என்ற புகாரே ஆரம்பத்தில் இல்லை.
பின்னாலே அப்படிச் சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு குற்றச்
சாட்டைச் சொல்லும்போது அந்தக் குற்றச்சாட்டு நீதிமன்றத்
திலே நிரூபிக்கப்படும் வரையில் அவர் நிரபராதி என்பதுதான்
சட்டம். அது ஒருபுறமிருக்க, போலீஸ் அத்துமீறி வீட்டிலே
நுழைந்து பெண்களை அடித்து அவமானப்படுத்தியிருக்கிறார்
கள். என்னுடைய சகோதரரை போலீஸ் ஸ்டேஷனில் வைத்து
அடித்திருக்கிறார்கள். என்னுடைய ஒரு சகோதரர் ஒரு
கல்லூரி பேராசிரியர், அவரை அடித்திருக்கிறார்கள். தவறு
செய்தார்கள் என்றால் தண்டனை வழங்கும் அதிகாரம் நீதி
மன்றத்திற்கே அன்றி போலீசாருக்குத் தண்டனை வழங்கும்
அதிகாரம் இல்லை. குற்றச்சாட்டு உண்மையா இல்லையா
என்பதை நீதிமன்றம் முடிவு செய்யட்டும். நாங்கள் அங்கே
சந்திக்கிறோம்.

என்மீது கூட 307–வது பிரிவின்கீழ் இந்திராகாந்தி
அம்மையாரைக் கொலை செய்ய முயன்றதாக வழக்கு இருக்கிறது.
இப்போது என்னுடைய சகோதரர் மீது 307–வது பிரிவில்
வழக்குப் போட்டிருக்கிறார்கள். நாங்கள் அதை அரசியல்
ரீதியாகச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்; கருணை மனு
போடவில்லை.

இன்றைக்குக் கூட திரு. கோபால் அவர்கள் பேசும்போது
ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அங்கே இருக்கிற
நிலவரம் என்னவென்றால் ஏராளமானவர்களைக் கைது செய்திருக்
கிறார்கள்; நூற்றுக்கு மேற்பட்டவர்கள்மீது 307–வது பிரிவில்
வழக்கு போடப்பட்டிருக்கிறது. என்னுடைய சகோதரர்
மஜீத்கான் அரிவாளைத் தூக்கிக்கொண்டு வந்தார் என்று அவர்
மீது 307 போட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர், ஜனதா கட்சி





மாவட்டச் செயலாளர் ஆகியோர் மீது 307 போட்டிருக்கிறார்
கள். ஆனால் நானோ என் குடும்பமோ இந்தமாதிரி காரியங்
களில் ஈடுபடவில்லை, இது பொய் வழக்கு. இந்த வழக்குகளை
நாங்கள் சந்திக்கத் தயார். இந்தச் சர்க்கார் எங்களுக்கு
எவ்வளவு தொல்லைகள் கொடுத்தாலும். இந்தக் குற்றச்சாட்டு
களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை நான் தெரி
வித்துக்கொள்கிறேன். * * * நன்றி (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் பற்றிய வார்த்தை
கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** ஐ ஆம் சாரி, அல்ரெடி இட் இஸ் ஆன்
ரெக்கார்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும் அதற்கும் சம்பந்தம்
இல்லை. எல்லாவற்றையும் தொடர்புபடுத்தக் கூடாது.
அப்படி தொடர்பு படுத்தினால் அதற்கு எல்லையே கிடையாது.
ஆகவே அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள்
கம்பம் நிகழ்ச்சியைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு
வந்து அதற்காக பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் இங்கே உணர்ச்சி
வசப்படக்கூடிய அவசியமில்லை என்று நான் கூறவிரும்புகிறேன்.
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குக் கிடைத்த
தகவலின் அடிப்படையில்.........

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு ஒரு பிரச்னைக்காக
கீழே இருக்கும்பொழுது மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுடைய
பேச்சைக் கேட்டேன். அது பற்றிய விளக்கம் சொல்ல
வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. * * ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைகள்
நீக்கப்பட்டுவிட்டன.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** ஆனாலும்
என்னுடைய வேண்டுகோளாக நண்பர்களிடத்திலே சொல்
கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சட்டம் படித்தவர்கள்.
உறுப்பினர்கள் இதுபோன்ற பிரச்சிகளைச் சொல்லும்பொழுது
எனக்கு வேறு வேலை இருக்கிறது, நிர்ப்பந்தத்தின் காரணமாக.
நான் இங்கே இருக்கும் பொழுது சொன்னால் சரியான பதில்
கிடைக்கும். ஏதோ ஆள் இல்லாதபோது சொல்லிவிட்டு, அதைக்
குறிப்பிலிருந்து எடுக்காமல் இருக்குமானால், நான் மிகப்பெரிய

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றன.

குற்றம் செய்தவனாக ஆக்கப்படுவேன், மக்களிடத்திலே. அதுமாதிரி எனக்குப் பிரச்சினை உண்டாக்காமல், நான் இருக்கும் பொழுது பழியை சுமத்தினால் நான் பதில் சொல் கிறேன். நான் தெரிவித்துக் கொள்வது, சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் சத்தம் போடுவது என்பது அவர்களுடைய உரிமை. சட்டமன்றத்திலே அவர்களுடைய என்று சொல்லும் போது எல்லா உறுப்பினர்களையும் குறிக்கும், ஆனால் சட்ட மன்றத்தினுடைய மரபுக்குக் களங்கம் உண்டாக்காமல், மற்ற வர்களும், வெளியில் உள்ளவர்களும் குறை கூறாமல் இருப்பதற்கு, மன்ற உறுப்பினர்கள் பேரவை மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இங்கே என் பக்கத்திலே உள்ள மைக்கை உடைத்துவிட்டார்கள். (குறுக்கீடு)

திரு. து. புருஷோத்தமன்: எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். பேசுவதற்குக்கூட மைக் இல்லாமல் உடைத்து விட்டார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், எல்லோருக்கும் பாதுகாப்பு உண்டு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏன் கொண்டுவரவேண்டும் என்பதற்கான காரண-காரிய விளக்கங்களை எடுத்துச் சொல்கின்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைய ஆட்சியைப் பொறுத்தவரையில், எந்த ஒரு நபருடைய உண்மையும் பாதுகாக்கப்பட வேண்டும். அவருடைய வாழ்வுக்கு, வசதிக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையிலே, அதுவும் குறிப்பாக சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்களுடைய உரிமைகள், உடைமைகள், மற்றவைகள் சட்டப்படி பாதுகாக்கப்படவேண்டு மென்பதிலே இந்த அரசு கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே ஒரு உறுப் பினர் பாரபட்சம் காட்டுகின்ற வகையிலே சட்டத்தின்கீழ் எப்படியும் அவர்களை அடக்கவும், ஒடுக்கவும் இந்த அரசு முற் படுகிறது என்று சொன்னார்கள். அந்த எண்ணம் இந்த அரசிற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே ஜனநாயகக் குரலை முறித்துவிடவோ அல்லது அடக்கிவிடவோ வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. ஆகவே நடைப் பயணத்தின் மூலமாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பலர் ஒன்றாக இணைந்து நின்று அவர்கள் குறிப் பிட்ட கோரிக்கைகளை நாட்டில் எடுத்துச் சொல்வதற்கான முறைகளை எடுத்தபோது, இந்த அரசு அதற்குக் குறுக்கே





இல்லை. ஜனநாயக முறைப்படி அவர்கள் எடுத்துச் சொல்வதற்கு முழு உரிமையும் அளித்தது. நாடெங்கும் எல்லாப் பெரு நகரங் களிலும் சிறு நகரங்களிலும் பல்வேறு பகுதிகளிலே எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் இந்த நடைப் பயணத்தில் ஈடுபாடு கொண்டு அவர்களுடைய குறிக்கோள்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆகவே நடைப் பயணத்தைத் தடுக்கின்ற எண்ணமோ, கூடாது என்ற எண்ணமோ இந்த அரசுக்கு இல்லை. அந்த மாதிரி கருத்துக்களை ஜனநாயக முறையிலே எடுத்து வைக்கின்ற அளவிற்கு எல்லாக் கட்சியின ருக்கும் உரிமை உண்டு. ஆகவே மக்களுடைய நம்பிக்கையும், அன்பும், நன்மதிப்பும், அரவணைப்பும் எங்களுக்கு இருக் கிறது என்று நாங்கள் எண்ணிக்கொண்டு இருப்பதுபோல் மற்ற வர்களும் எண்ணிக்கொள்வதிலே தவறு இல்லை. ஆகவே அவரவர்கள் கருத்துக்களை சட்டம் ஒழுங்கு முறைக்கு உட்பட்டு கோரிக்கைகளை எடுத்து வைப்பதிலே குறுக்கே நிற்க இந்த அரசு விரும்பவில்லை. தீர்ப்பு அளிக்கவேண்டியவர்கள் பொதுமக்களாகத் தான் இருப்பார்கள். அந்தத் தீர்ப்பாக இருப்பது தேர்தலாகத் தான் அமையும். ஆனாலும்கூட நாடெங்கும் இருக்கிற, எல்லா பெரு நகரங்களிலும், ஊர்களிலும் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் இந்த நடைப் பயணத்தைக் கூட்டி, கூட்டங்கள் கூட்டி, விளக்கங்கள் தந்து நடத்தியிருக்கிறார்கள். வேறு எந்த இடத்திலும் இந்த மாதிரி அசம்பாவிதங்கள் நடைபெறவில்லை என்பதிலேயிருந்து அதை அடக்கி ஒடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் எண்ணம் இல்லை என்பதும், நாட்டிலே இருக்கிற நூற்றுக் கணக்கான பெரு நகரங்களிலும், சிறு நகரங்களிலும், இந்த நடைப் பயணம் வெற்றிகரமாக நடைபெற்றது என்பது மட்டுமல்லாமல், அமைதியாக நடைபெற்றது என்பது மட்டுமல்லாமல், அமைதி யாக நடைபெற்றது என்பதை சென்னை போன்ற இடங்களில், இருக்கிற காவல்துறை அதிகாரிகள்கூட எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். கம்பத்திலே மட்டும் ஏற்பட்டு இருக்கிற இந்த நிகழ்ச்சியை, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை நாடெங்கும் ஏற்பட்ட தாக ஜெனரலைஸ் பண்ணி, பொதுவாக ஆக்கி, அதுதான் நடை பெற்றது என்று சொல்வது தவறு. கம்பத்திலே ஏற்பட்டு இருக்கிற சூழ்நிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அவரவர்களுக்குக் கிடைத்த தகவலை வைத்துச் சொல்லி யிருக்ககிறார்கள், ஆனால் நான் அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவலை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே இரு சாரருடைய கருத்தையும் கேட்டு தீர்ப்பு அளிக்க வேண்டிய தன்மைகள் இருந்தாலும், இன்றைக்கு வழக்கின் விசாரணைகள் நடந்து அதன் மூலமாக வெளிப்படுகின்ற தீர்ப்பின் மூலமாகத்தான் உண்மை நிலைகள் வெளிவரும். ஆனால் அங்கே என்ன நடந்தது என்பதை மட்டும் நான், அரசுக்குக் கிடைத்து இருக்கிற தகவல்களின் அடிப்படையிலே கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கம்பம் நகரில் தி.மு.க. அ.இ.அ.தி.மு.க. அரசியல் கட்சி களிடையே பூசல் வளர்ந்து கொண்டு இருந்ததால் 9-2-1984 முதல்

அவர்களால் பிரிவு 30(2) இந்திய காவல் சட்டம் அமுல் படுத்தி உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. கம்பம் தி.மு.க. உதவி பொருளாளர் திரு. செல்வராஜ் 13-2-1984-ஆம் தேதி கம்பம் காவல் நிலையத்தில் மனு கொடுத்து, கல்கத்தா மாநாட்டின் தீர்மானத்தை விளக்குவதற்கு கம்பம் நகரில் வழிநடைப் பயணப் பிரச்சாரம் செய்வதற்கு அனுமதி கேட்டு இருந்தார். அதன்படி குறிப்பிட்ட தெருக்களின் வழியாகச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது, 13-2-1984-ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கருப்பசாமி ஊர்வலத்தைத் துவக்கி வைக்க கம்பம் தி.மு.க. கட்சியைச் சேர்ந்த திரு. ராமகிருஷ்ணன் தலைமை தாங்கி ஊர்வலத்தை கம்பம் வ.உ.சி. திடலிலிருந்து நடத்திச் சென்றார்.

கம்பம் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.டி. கோபால் அவர்களின் வீடு இருக்கும் ஆலமரத்துத் தெரு வழியாக ஊர்வலம் செல்வதற்குக் காவல் துறையினரால் அனுமதி வழங்கப்படவில்லை. அனுமதி வழங்கப்படாத ஆலமரத்துத் தெருவழியாகச்செல்லவேண்டாம். அனுமதிவழங்கப்பட்ட நாட்டுக்கல்தெரு வழியாகச் செல்லும்படி கேட்டு காவல் துறையினர் எச்சரிக்கை செய்தும் உள்ளனர். ஊர்வலத்தினர் மீறி காவல்துறையினரை எதிர்த்து கோஷமிட்டு அனுமதி கொடுக்கப்படாத கம்பம் திரு. கோபால் அவர்களின் வீடு இருக்கும் ஆலமரத்துத் தெரு வழியாகச் சென்றனர். ஊர்வலத்தில் சுமார் 400 நபர்கள் சென்றதால் காவல் துறையினர் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாக இருக்க வேண்டாம் என்று கருதி ஊர்வலத்திற்குப் பாதுகாப்பாகச் சென்றனர். ஊர்வலத்தினர், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் வீட்டின் வழியாக நடந்து சென்றபோது ஊர்வலத்தின் கடைசியில் சென்றவர்கள் திடீரென்று கம்பம் சட்டமன்ற உறுப்பினர் வீட்டிற்குள்ளே அத்துமீறி நுழைய ஆரம்பித்தனர். பாதுகாப்புப் பணியிலிருந்த ஆயுதப் படையினர் அவர்களை அனுமதிக்கவில்லை. கூட்டத்தில் இருந்தவர்கள் கற்களையும், சோடா பாட்டில்களையும் சட்டமன்ற உறுப்பினர் வீட்டின் முன்னே எறிந்து கதவுகளிலிருந்த கண்ணாடிகளை உடைத்தனர். உயிர் மற்றும் உடைமைகளுக்கு பெரும் சேதம் ஏற்படும் அபாய நிலை உருவாகியது. காவல் துறையினர் மேலும் அசம்பாவிதம் நடக்காமல் தலையிட்டு கூட்டத்தைக் கலைத்தனர். கம்பம் சட்டமன்ற உறுப்பினர் வீட்டினருகில் பாதுகாவலில் இருந்த ஆயுதப் படை த.கா. 1275 ராமசாமி, காவலர்கள் 1499 காசிமாயன், 823 நயினார் இவர்களுக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

(முற்பகல் 11-40)

இது சம்பந்தமாக கம்பம் நகர் காவல் நிலையத்தில் குற்ற எண். 40/84 குற்றப் பிரிவு 147, 148, 188, 336, 332, 353, 427 இ.பி.கோ.படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.



கம்பம் ஆய்வாளர், இது சம்பந்தமாக விசாரணை செய்து கம்பம் ஒன்றிய தி.மு.க. செயலாளர் திரு. கே. ஆர். கணேசன் மற்றும் 34 நபர்களை 14-2-84 ஆம் தேதி காலை 6 மணிக்கு கம்பம் பேருந்து நிலையத்தின் அருகில் கைது செய்து உத்தமபாளையம் 2 ஆம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். விசாரணைக்குப் பின் காவல் அறிக்கையுடன் 120 (பி), 307 இ.பி.கோ. பிரிவுகளிலும் சேர்க்கப் பட்டுள்ளது.

திரு. ரகுமான்கானுக்கு திரு. மஜீத்கான் என்ற மூத்த சகோதரர் ஒருவரும், திரு. அம்ஜத் இப்ராகிம் கான் என்ற இளைய சகோதரர் ஒருவரும் கம்பத்தில் இருக்கிறார்கள். திரு. அம்ஜத் இப்ராகிம்கான், உத்தமபாளையம் எச். ஆர். கே. கல்லூரியில் நூல் நிலையப் பொறுப்பாளராக இருக்கிறார். திரு. அம்ஜத் இப்ராகிம்கான் என்பவரைக் காவல் துறையினர் காவல் நிலையத்திற்கு அழைத்து வரவுமில்லை; அவரை அடித்துத் துன்புறுத்தவும் இல்லை. திரு. மஜீத்கான், கம்பம் மாவீர் பள்ளிவ சல் தெருவில் குடியிருக்கிறார். திரு. மஜீத்கான், திரு. கம்பம் கோபால் வீட்டில் தாக்குதல் நடத்தியது சம்பந்தமாக கம்பம் குற்ற எண். 40/84ல் சம்பந்தப்பட்ட எதிரியானபடியால், 14-2-1984 காலை 6 மணிக்கு கம்பம் பேருந்து நிலையத்தில் கைது செய்து உத்தம பாளையம் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தில ஆஜர் செய்து காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் வீட்டிற்குக் காவல் துறையினர் செல்லவுமில்லை; பெண்களைத் துன்புறுத்தவு மில்லை. திரு. மஜீத்கான் மீது போடப்பட்டுள்ள வழக்கு சட்ட முறைப்படி போடப்பட்டுள்ள வழக்காகும். 200 தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையில்லை. மொத்தம் 35 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கம்பம் நகரில் தற்போது சுமூகமான நிலை இருந்து வருகிறது.

இதிலே முக்கியமாக எடுத்துச் சொல்லப்படுகிற வகையிலே, இந்த நிகழ்ச்சி சட்டமன்ற உறுப்பினர் வீட்டுக்கு முன்னால் நடைபெற்றது பற்றி, இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு வழக்கு 13-2-1984 அன்று மாலை 6 மணிக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் செய்யப் பட்டு, பதிவு செய்யப்பட்டது. அது 40/84 குற்ற எண்ணில் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு, திரு. கே. ஆர். கணேசன் கம்பம் தி.மு.க. ஒன்றியச் செயலாளர், தி.மு.க. ஊர்வலம், கம்பம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. வீட்டின் முன்னால் போகும் பொழுது, திரு. பெரிய கருப்பன் அண்ணா தி.மு.க. நகரச் செயலாளர், கம்பம் நகரத் துணைச் செயலாளர் ஆகியோர் ஊர்வலத்தினர் மீது கல் எறிந்ததாக புகார் செய்துள்ளனர். இது கம்பம் கு.எண். 41/84 பிரிவு 336 ஐ.பி.சி. படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இரகுமான்கான், எம்.எல்.ஏ. அவர்கள் வீட்டை 13-ஆம் தேதி இரவு தாக்கியதாக எந்தவித புகாரும் இல்லை. கல் எறிந் தார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். வீட்டைத் தாக்கிய தாக இவர்கள் சொல்கிறார்கள். இரண்டும் பதிவு செய்யப்பட்

டிருக்கின்றன. திரு. ரகுமான்கான் அவர்கள் வீட்டை இரவில் 13
ஆம் தேதி தாக்கியதாக எந்த புகாரும் இல்லை. (குறுக்கீடு)
அப்படி இரவு ஒரு மணிக்கு புகுந்து வீட்டை தாக்கியிருந்தால்,
கதவை உடைத்திருந்தால், பெண்களை அவமரியாதையாக
நடத்திருந்தால், உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களே, இதிலே தலையிட்டிருப்பார்கள். இதை எதற்காகச்
சொல்கிறேன் என்றால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்
எடுத்துச் சொல்லியிருக்கிற விவரங்கள் எல்லாமே தகவல்களின்
அடிப்படையில்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால்
உண்மை நிலையை சொல்ல வேண்டும் என்பதற்காகச்
சொல்கிறேன். வீடு தாக்கப்பட்டதாக புகார் இல்லை........
(குறுக்கீடு)

சாதாரணமாக வீட்டிற்கு முன்னால் நடைபெற்ற
கலவரத்திற்கே புகார் பதிவு செய்பவர்கள், வீட்டிற்குள் இரவு
ஒரு மணிக்கு புகுந்து கதவை உடைத்து, பெண்களை அவமானப்
படுத்தினால், சும்மா இருப்பார்களா? நிச்சயமாக புகார் செய்
திருப்பார்கள். அப்படி புகார் செய்யப்பட்டதாக தகவல் இல்லை
......(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: 13 ஆம் தேதி நடந்த சம்பவம்.
14-ஆம் தேதி புகார் செய்திருக்கிறேன். ரசீது இருக்கிறது....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தயவு செய்து
என்னை பேச அனுமதியுங்கள். 13-ஆம் தேதி இரவில் காவல்
துறையினர் ரகுமான்கான் வீட்டை உடைத்து, நுழைந்து கலவரம்
செய்திருந்தால், மறுநாள் மாலைக்குள்ளாவது, அந்த ஊரில்
இல்லாவிட்டாலும், மேலதிகாரிகளிடத்திலாவது புகார் செய்திருப்
பார்கள். ஆனால் அது குறித்து எந்த இடத்திலும் எந்தப்
புகாரும் வரவில்லை. இது எப்படிப்பட்ட முக்கியமான
பிரச்னை? மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வீட்டிலே
இரவிலே புகுந்து போலீசார் தாக்கினர் என்கிற செய்தி காட்டுத்
தீ போல் பரவுகின்ற ஒன்று. ஆனால் அப்படிப்பட்ட எந்தச்
செய்தியும் கம்பம் பகுதியில் பரவவில்லை. எந்தச் செய்தித்
தாளிலும் வரவில்லை. 13-ஆம் தேதி போய், 14-ஆம் தேதி
போய், 15-ஆம் தேதி அன்று மாண்புமிகு உறுப்பினர்
ரகுமான்கான் அவர்கள் சட்ட சபையில் ஆளுநர் உரைமீது
பேசும்போது அதைத் தெரிவிக்கவில்லை. 13-ஆம் தேதி அவரது
வீடு தாக்கப்பட்டு, வீட்டிலே இருக்கிற பெண்கள் அவமானப்
படுத்தப்பட்டிருந்தால், திரு. ரகுமான்கான் அவர்கள் 15-ஆம்
தேதி பேசும்போது அதைத் தெரிவித்திருப்பார்கள். திரு. ரகுமான்
கான் அவர்களுடைய இயல்பு நமக்கு நன்றாகத் தெரியும்.
மிகக் காரசாரமாகக்கூட இங்கே எடுத்து வைத்திருப்பார்கள்
15 ஆம் தேதி குறிப்பிடவில்லை. 16-ஆம் தேதி எந்தப் பத்திரிகை
யிலும் வரவில்லை. 17-ஆம் தேதிதான் அதுபற்றி வந்திருக்
கிறது. ஆகவே பொய் சொல்கிறார்கள், உண்மைக்குப் புறம்
பாகச் சொல்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. கொடுக்
கப்பட்ட செய்தி தவறானது என்பதற்காகச் சொல்கிறேன்.
ரகுமான்கான் வீட்டை 13-ஆம் தேதி தாக்கியதாக எந்தவிதமான





புகாரும் வரவில்லை. அப்படி எந்த நிகழ்ச்சியும் நடைபெற
வில்லை. அவருடைய தம்பி அழைத்துச் செல்லப்படவில்லை.
அடிக்கப்பட்டார் என்பதும் இல்லை. அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போலீஸோடு
சேர்ந்து கொண்டார்கள் என்று ஒரு உறுப்பினர் பேசினார்
அப்படிப்பட்ட நிலைமையும் ஏற்படவில்லை, ஊர்வலத்திலே
கைது செய்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பது
சாதாரணமாக எல்லோருக்கும் தெரியும். 14-ஆம் தேதி 6
மணிக்கு கைது செய்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்
களின் எண்ணிக்கை 200 அல்ல, 35 பேர்கள்தான் கைது
செய்யப்பட்டு இருக்கிறார்கள். செக்ஷன் போட்டது சரியா,
தவறா என்பதைப்பற்றி விசாரணையின்போது, வழக்காடுகிற
பாது, உண்மைகள் வெளிவரும்.

திரு. ரா. உமாநாத்: ஊர்வலம் தாக்கப்பட்டது சம்பந்தமாக
ம்ப்ளெயின்ட் வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது வந்திருக்கிறது.
11/84-இல் அது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஊர்வலத்தினர்
மீது கல் எறிந்தார்கள் என்று கொடுக்கப்பட்ட புகார் பதிவு
செய்யப்பட்டிருக்கிறது. சட்டப்படி வழக்கு மன்றத்திலே வாதிக்
கப்படுகிறபோது வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை செய்யும்
போது உண்மைகள் வெளிவர இருக்கின்றன.

நான் அவையினருக்கு இயல்பான தன்மைகளை யோசிக்க
வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இவ்வளவு முக்கியமான
பிரச்சினை நடந்திருந்தால் உடனே தெரிவிக்கப்பட்டு நமக்
கெல்லாம் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்
கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. மற்றொன்று திரு.
ரகுமான்கான் அவர்களுடைய அண்ணன் கைது செய்யப்பட்
டிருப்பது—எல்லோருக்கும் போடப்பட்ட செக்ஷன் அடிப்படையில்
தான் அவருக்கும் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்
பினர் திரு. கோபால் சொல்வதைப்போன்று கத்தியைக் காட்டி
னார்கள், மிரட்டினார்கள் என்றும் புகார் செய்யப்படவில்லை.
35 பேர்கள் எந்த வகையில் கைது செய்யப்பட்டார்களோ அந்த
வகையில் அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே அவர்
களுக்குக் கிடைத்த தகவல்களை அவர்கள் சொல்கிறார்கள், நான்
எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். இது தவறு என்று
அவர்களும் சொல்லலாம், அது தவறு என்று நானும்
சொல்லலாம். இங்கே அதைப்பற்றி நாம் விவாதித்து ஒரு முடிவு
சொல்வது அல்ல, வழக்கு மன்றத்திலேதான் உண்மை வெளி
வரும். அவரவர்கள் நிலைமைகளை அவர்கள் தெரிவித்திருக்
கிறார்கள். அரசின் சார்பிலே நிலைமைகளை நான் தெரிவித்தேன்.
வழக்கு மன்றத்திலே தீர்ப்பு வருகிறபோது உண்மைகள் வெளி
வரும். இதற்குமேல் அவையின் அலுவல்களை ஒத்திவைத்து
இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 பிப்ரவரி 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

(முற்பகல் 11-50)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

THIRU J. Hemachandran I object to the introduction of the Bill, sir.

MR. SPEAKER Thiru Hemachandran's objection is recorded.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியே போனால் புரசீஜர் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழியை வளர்க்க வேண்டும் என்பதை பற்றியும், தமிழ் கலையையும், கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் அரசு எடுக்க வேண்டும் என்பதிலேயும் எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. அதை வளர்ப்பதற்கு எல்லா நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்றும் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதிலே நாங்கள் ஆதரிக்



1984 பிப்ரவரி 18] [திரு. ஜே ஹேமச்சந்திரன்]

கிறோம். அதற்கு நியாயமாக என்ன என்ன ஒத்துழைப்பு
கொடுக்க வேண்டுமோ அந்த ஒத்துழைப்புகளை நாங்கள்
கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் இந்தச் சட்டம்
சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டி
யிருக்கிறது. ஏன் என்றால் இதனுடைய எக்ஸ்பிளனேட்டரி
மெமோரண்டத்திலே ஏற்கனவே சென்னை உயர்நீதி மன்றம் ஒரு
வழக்கு சம்பந்தமாக கொடுக்கப்பட்ட தீர்ப்பை சரிக்கட்டு
வதற்காக கொண்டு வந்து இருக்கக்கூடிய சட்டம் என்று குறிப்
பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய தாழ்மையான கருத்து என்ன
வென்றால் இந்தச் சட்டத்தைக்கூட உச்ச நீதி மன்றத்திற்கு
யாராவது எடுத்துச் செல்வார்களானால் அரசியல் சட்டத்
தினுடைய அடிப்படையான அம்சங்களில் அதிலும் fundamental
right for exprission of என்ற கருத்து சமீப கால சட்டத்தில் அடி
பட்டு போய்விடுகின்ற ஆபத்து இருக்கிறது என்று சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். இந்த நேரத்தில் இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டு
இருக்கக்கூடிய சில பிரச்சினை சம்பந்தமாகவும், ஒரு சில
கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், ஏன் என்றால்
ஒரு ஆண்டில் 9 மாத காலம் தமிழ் திரைப்படங்களை திரையிட
வேண்டும், என்ற ஒரு சட்டத்தை இயற்றுவது சரியாக இருக்காது
என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வரும்போது திரைப்
படத்தைப் பற்றி முழுமையாகப் பேசலாம். நல்லது அல்ல என்று
சொல்கிறீர்கள், அதற்கான காரணங்களை இட்போதே சொல்லி
விட்டால் அப்புறம் சொல்வதற்கு கஷ்டமாக இருக்கும்.

THIRU J. HEMACHANDRAN: Please allow me to speak on the subject.

Mr. SPEAKER: I am not going to allow you to speak on the subject. If you have got and point, you can say one, two or three. There ends the matter. I am not allowing any discussion on this.

THIRU J.HEMACHANDRAN: Fundamental right is affected. I want to say how this bill will affec our fundamental rights
ஆகவே, ஏன் சொல்கிறேன் என்றால் தமிழ்ப் படங்கள் இன்று
கேரளாவிலும், கர்நாடகாவிலும், பம்பாயிலும் மற்றும் இது
போன்ற இடங்களிலும் காட்டப்படுகின்றன. பல ஆயிரக்
கணக்கான மக்கள் அந்தத் தமிழ் படங்களை விரும்பி ரசித்து
கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை
இயற்றுவதன் காரணமாக இந்தியாவில் தேசிய ஒருமைப்பாடு
இன்றைக்கு ஒரு பிரச்சினையாக வளர்ந்து இருக்கிறது என்பது
எல்லோருக்கும் தெரியும். இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு
நிலையை ஏற்படுத்தி அந்த மாநிலங்களில் வேறு மாதிரியாக ஒரு
சட்டம் இயற்றினால் தமிழ் சினிமா உலகத்திற்கு அந்தப்
படங்களை காட்டுவதிலும், படங்களை எடுப்பதிலும் இடைஞ்சல்
ஏற்படும், அதை வளர்க்கவேண்டுமா? அதனால் ஒரு சில பிரச்
சினைகள் ஏற்படுவதற்கு அது காரணமாக இருக்கும். ஆகவே
நான் சொல்கிறேன் தமிழ் சினிமா காட்டுவதற்கு, கலையை

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1984 பிப்ரவரி 18

கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை மற்ற முறைகளில் இப்படிப்பட்ட சட்டத்தைப் போடாமல், அரசு எடுக்க முடியுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட உச்சநீதி மன்றத்திற்குச் சென்று ஒரு கேள்விக் குறியாக நிற்கக்கூடிய ஒரு சட்டத்தை இயற்றுவது சரியாக இருக்குமா? this is not good.

ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்பதுதான் அரசுக்கு விவேகமாக இருக்கும் என்பதைக் தாழ்மையோடு தெரிவித்து, இதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1984-ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ச) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

THIRU P. PONNURANGAM: I object to the introduction of this Bill.



1984 பிப்ரவரி 18]

Mr. SPEAKER Mr. P, Ponnurangam's objection is recorded. The objections of all the opposition parties who have objected to the introduction have been recorded.

திரு. ப. பொன்னுரங்கம்: இதற்கு முந்தைய மசோதாவில், அவருக்கு ஒரு நியாயம் வழங்கப்பட்டது: இதில் எனக்கு வேறொரு நியாயம் என்பது சரியல்ல. அந்த மசோதாவின் மீது பேசுவதற்கு அனுமதித்து இருக்கிறீர்கள்; இதற்கு ஏன் மறுக்கிறீர்கள்? அதைவிட முக்கியமானது இது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் பெயரைச் சொல்லி, record செய்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சரவர்கள் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சிகள் சம்பந்தமாக அமென்மெண்ட் கொண்டு வருகிறார்கள். ஸ்பெஷல் ஆபீசர்களுக்கு மூன்று மாதங்கள் எக்ஸ்டென்ஷன் வேண்டுமென்று. மார்ச் 31-ஆம் தேதி வரைக்கும் ஸ்பெஷல் ஆபீசர்களுக்குப் பதவிக் காலம் இருக்கிறது. ஆனால் கவர்னர் உரையிலேயே ஏப்ரல் மாதம் தேர்தல்களை முடிக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். கவர்னரை மீறி இன்னும் இரண்டு மாதங்கள் நீங்கள் கேட்கிறீர்கள்—மொத்தம் மூன்று மாதங்கள் வேண்டும் என்று கேட்கிறீர்கள்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். ஆனாலும் கூட இதிலே அதிக நேரத்தை நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கால நீட்டிப்பினைப் பொறுத்தவரையில் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்திருந்தாலும், அதிலே ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ குறைத்துக் கொள்கின்ற அளவுக்கும் அதிலே சட்ட விதிகளைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இப்போது நேரம் இல்லை. 22-ஆம் தேதி பில்லைப் பற்றித்தான் பேசப்போகிறீர்கள். ஆகவே அப்போது பேசிக் கொள்ளலாம். இப்போது 12 மணி ஆகிவிட்டது. உங்கள் கட்சி உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள்தான் பேச வேண்டியிருக்கின்றது. நேரம் இல்லை. அமருங்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ''தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட-முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.'' (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நேரம் இல்லாத காரணத்தால் பெயர்களை பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன். திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. பொன்னுரங்கம், என் எஸ். வி. சித்தன், இரா. கருப்பையா, துரைமுருகன். ஆகியோர் இதனை எதிர்த்துள்ளார்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி; ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் இல்லாத காரணத்தால் இதனை எதிர்ப்பவர்களை மட்டும் பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன்.

இந்திய தேசிய காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இதனை எதிர்த்துள்ளார்கள்.







பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு. 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.'' (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் இல்லாத காரணத்தால் பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன்:

இந்திய தேசிய காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இதனை எதிர்த்துள்ளார்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளின் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கின்றது.

128-270—10

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''1983-84 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கடுமையான வறட்சியும், பிறகு பெய்த அதிக மழையினாலும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு பாசன கிணறு இடிந்தும், வீடு சுவர் இடிந்தும், மகசூல் குறைந்தும், கிடைத்த மகசூலுக்கும் நியாய விலையில்லாமையாலும், பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்துள்ள விவசாயிகளின் நிலவரி, வீட்டுவரி, கூட்டுறவு கடன்கள் அனைத்தையும் ஜப்தி செய்வதை நிறுத்தியும் தள்ளுபடி செய்தும், நிவாரண பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

(1) தற்பொழுது விவசாயிகளுக்கு அலவன்சாக தமிழக அரசு வழங்கும் ரூ.35/-ஐ எல்லா மாவட்ட விவசாயிகளுக்கும் கிடைக்கவும், இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தவும், தேவைப்படின் மேலும் தொகை உயர்த்தப்படுமெனவும்:

(2) உணவு ரேஷன் அளவு உயர்த்தப்படுமெனவும்;

(3) அம்பாசமுத்திரம் தொகுதியில் மேல்தாம்பரபரணி நீர் மின் திட்டத்தை உடனே வேலை துவங்கப்படுமெனவும்;

(4) அம்பாசமுத்திரம் தொகுதியில் மேல்மணிமுத்தாறு நீர்மின் திட்டம் உடனடியாக வேலை துவங்கப்படுமெனவும்;

(5) அம்பாசமுத்திரம் தொகுதியில், பாபநாசம் பக்கமுள்ள கோரையாற்றில் ஒரு அணை கட்டப்படுமெனவும்:

(6) அம்பாசமுத்திரம் தொகுதியில் கடையம் பக்கமுள்ள இலுப்பையாற்றில் ஒரு அணை கட்டப்படுமெனவும்;

(7) ஆவடியூர், சிவந்திபுரம், அடையக் கருங்குளம் கிராமங்களையும் சேர்த்து விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியை முனிசிபல் நகரமாக்கப்படுமெனவும்;

(8) கூட்டுறவுகளுக்கான தேர்தல் மே மாதத்திற்குள் நடத்தி முடிக்கப்படுமெனவும்;

(9) தூத்துக்குடி, திண்டுக்கல், கரூர் அகல ரயில்பாதை வேலை கிடப்பில் போடப்பட்டுள்ளதை எடுத்து துரிதமாக வேலை நடத்தி முடிக்குமாறு மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்துமெனவும்;

(10) அம்பாசமுத்திரம் தொகுதி—அப்பர் டாமிலிருந்து கேரளா செல்லும் மலைப்பாதை உடனடியாக வேலை நடத்தப் படுமெனவும்;





(11) தாம்பிரபரணி அபிவிருத்தித்திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படுமெனவும்;

(12) வடக்கு கோடைமேலழகியன் கால்வாய் பூராவும் லைனிங் செய்யப்படுமெனவும்;

(13) தெற்கு கோடைமேலழகியன் கால்வாய் பூராவும் லைனிங் செய்யப்படுமெனவும்;

(14) நதியுண்ணி கால்வாய் பூராவும் லைனிங் செய்யப் படுமெனவும்;

(15) ஆழ்வார்குறிச்சியையும் பாப்பான் குளத்தையும் இணைக்கும் முறையில் கடனாநதியில் ஒரு பாலம் கட்டப் படுமெனவும்;

(16) பிரமதேசத்தையும்- அடச்சாணியையும் இணைக்கும் முறையில் கடனாநதி மீது ஒரு பாலம் உடனடியாக கட்டப் படுமெனவும்;

(17) மதுரா கோட்ஸ் மில்லுக்குப் போகும் கெட்டுப்போன இரும்பு பாலத்திற்குப் பதிலாக புதிதாக ஒரு பாலம் கட்டப்படு மெனவும்;

(18) 75—25 வாரச்சட்டம் அமுலாகாத பகுதிகளுக்கு அமுல்படுத்த அரசு விசேட நடவடிக்கை எடுக்குமெனவும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ. அழகர் சாமி, இரா. கருப்பையா, தி.கா. நல்லப்பன், பொ. உத்திராபதி எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, மு. அப்பாதுரை ஆகியோர் திருத்தங்களுக்கான அறிவிப்பு கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் திருத்தத்தை மொழிவார்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

(1) வெள்ளப் பெருக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்களைக் களைய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும்;

(2) விவசாய தொழிலாளர்களது வாழ்க்கையைப் புனர் அமைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும்;

(3) தொழிலாளர் பிரச்னைகளைத் தீர்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது பற்றியும்;

(4) பொது மக்களுக்குக் குடும்பத்திற்கு மாதத்திற்கு 20 கிலோ அரிசி நியாய விலையில் வினியோகம் செய்யவேண்டியது பற்றியும்:

(5) வறட்சி நிவாரணம், தன்னிறைவுத் திட்டம், மதிய உணவு, வெள்ள நிவாரணம் ஆகியவற்றில் உள்ள முறை கேடுகளைக் களைய உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது பற்றியும்:

(6) காவல் துறையின் அடக்குமுறை ஆளுங்கட்சியின் தலையீடு தடுத்து நிறுத்துவது பற்றியும்;

(7) மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு எதிராக காவல் துறையின் அடக்குமுறை நடவடிக்கைகளையும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் குறித்தும்: ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

(1) சென்னையில் அண்மையில் பெய்த பெரும் மழையின் காரணமாக குடிசை பகுதிகள் ஏராளமாக பாதிக்கப்பட்டு, அவர்களுக்குப் போதுமான நிவாரணம் அளிக்காதது பற்றியும்;

(2) சிம்சன், பி & சி. ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தம் பற்றி எந்தவிதமான நடவடிக்கை எடுத்து சுமுகம் ஏற்படுத்தாதது பற்றியும்;

(3) சென்னை புற நகரங்களில் தொடர்ந்து நடைபெற்று வரும் முகமூடி கொள்ளையை தடுக்க காவல்துறை நடவடிக்கை எடுக்காதது பற்றியும்;

(4) சென்னையில் பெரும் மழையின் காரணமாக தெருக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு தெரு விளக்குகள் சரியான முறையில் எரியாமல் இருள் சூழ்ந்திருப்பதைப் போக்க மாநகராட்சிக்கு நிதி உதவி செய்ய முன்வராதது பற்றியும்; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். சங்கரய்யா, ரா. உமாநாத், என். வரதராஜன், கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், கே. ஆர். சுந்தரம். எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். பழனி வேல், டி. மணி ஆகியோர் திருத்தங்களுக்கான அறிவிப்பு கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் திருத்தத்தை மொழிவார்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

(1) மத்திய மாநில உறவுகளில் மேலும் அதிக அதிகாரங் களும் அதிக நிதி ஆதாரங்களும் மாநிலங்களுக்குக் கிடைப்பதற் கான எந்த நடவடிக்கையை குறித்தும்;

(2) மக்களின் உரிமைகளை மதிக்காத காவல் துறையின் கொள்கைகளின் விளைவாக 3-2-1984 தேதியன்று மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையின் கொடுமையான தடியடி தாக்குதல் நடத்தினது போன்ற பல் வேறு அடக்குமுறைகளைப் பற்றியும்;

(3) அரசியல் கட்சிகளின் தொண்டர் அணிகளை வைத்துக் கொள்வதையும், சுவர்களில் அரசியல் கோஷங்கள் எழுதுவதையும் அரசு நிர்வாகத்தில் நடைபெறும் முறைகேடுகளைப் பத்திரிகைகள் அம்பலப்படுத்துவதைத் தண்டிக்கும் வகையில் சட்ட நடவடிக்கை களை அரசு மேற்கொண்டு வருவதைப் பற்றியும்;

(4) தங்களது அத்தியாவசியமான நலன்களைப் பாதுகாப் பதற்காக, சிம்சன், பின்னி, நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை, கரூர் மில்ஸ், குமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தும், அரசு அதில் தலையிட்டு, அவர்களின் பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதற்குப் பதிலாக, அவர்களின் வேலை நிறுத்தங்களை உடைக்க கடுமையான காவல் துறையின் அடக்குமுறையும் மற்றும் கையாண்டு வரும் நடவடிக்கைகளைப் பற்றியும்;

(5) அரசின் அடக்குமுறையை எதிர்த்து 14-2-1984 அன்று சென்னை-செங்கை மாவட்ட அனைத்துத் தொழிலாளர்களும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதைப் பற்றியும்;

(6) வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் பல பகுதியினருக்கு வெள்ள நிவாரண உதவி இன்னும் கிடைக்க வில்லை என்ற நிலை இருக்கும்போது, முன்பு வறட்சியினாலும். இப்போது வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயி களிடம் கடன் பாக்கிக்காக மோசமான அபராத வட்டியை விதித்தும், சொத்துக்களை ஜப்தி செய்வோம் என்றும் அரசு நடவடிக்கை எடுப்பதைக் கை விடுவது பற்றியும்;

(7) நியாய விலைக் கடைகளில் குறைந்தபட்ச அளவில் கூட அரிசியும் மற்ற அத்யாவசிய உணவு பண்டங்களும் கிடைக்க வில்லை என்பதுடன், குடும்ப கார்டுகளை வழங்குவதில் பல முறைகேடுகள் நடைபெற்று வருகிறது என்பதைப் பற்றியும்;

(8) அரசு நிர்வாகத்தில் எல்லா மாவட்டங்களிலும் மேலும் மேலும் அதிகரித்து வரும் முறைகேடுகளினால் ஏழை மக்களுக்கு எவ்வித நியாயமும் கிடைக்காது என்ற மோசமான நிலைமை வளர்ந்து வருகின்றது என்பதைப் பற்றியும்;

(9) தமிழகத்திற்குக் குறைந்தபட்சமாக தேவைப்படும்
அளவு அரிசியை கூட கொடுப்பதற்கு மத்திய அரசு மறுத்து
வருகிறதும், நிலக்கரி விலையை உயர்த்தியதன் மூலம் மாநில மின்
வாரியத்தின் நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதும், நியாய
விலைக் கடைகளில் இம்மாதம் 1 ஆம் தேதி முதல் சர்க்கரை
விலை கிலோ 1-க்கு 25 காசுகள் கூடுதலாக மத்திய அரசு
உயர்த்தி உள்ளதும், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும்
அவசியமான கரூர்-தூத்துக்குடி அகல இரயில் பாதை திட்டத்தை
மத்திய அரசு கிடப்பில் போட்டு விட்டது பற்றியும்;

(10) மத்திய அரசின் தவறான பொருளாதார சமூகக்
கொள்கைகளுக்கும், விஷம் போல் ஏறிவரும் விலைவாசி
உயர்வுக்குப் பிரதான காரணமாக இருக்கும் கொள்கைகளுக்கு
எதிராகவும் முற்போக்கான மாற்று பொருளாதாரக் கொள்கை
களை உருவாக்கவும், நம் நாட்டில் உள்ள 18 எதிர்க்கட்சிகள்
13-2-1984 அன்று நடத்திய கோரிக்கை தின இயக்கத்திற்கு
காங்கிரஸ் அல்லாத மற்ற மாநில அரசுகள் அனைத்தும்
ஆதரவு கொடுத்த நேரத்தில் தமிழக அரசு மட்டும் மத்திய
அரசின் தவறான கொள்கைகளை விமர்சிப்பதற்குக் கூட
அஞ்சுவது பற்றியும்;

(11) தமிழகத்தின் கோரிக்கைகளை மத்திய அரசிடம்
வற்புறுத்துவதற்கு மக்களைத் திரட்டுவதற்கு, தமிழக அரசு
தயாராக இல்லை என்பது பற்றியும் ஆளுநர் உரையில்
குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நிறைய பேர்
பேசவேண்டியிருக்கிறது. மணி 12.07 ஆகிறது. ஆகவே,
ஒவ்வொருவரும் 10, 10 நிமிடங்கள் பேசி, வேண்டுமானால்,
அவையை 2 அல்லது 2.30 மணி வரை நடத்தி முடித்து
விடலாம். உடல்நலம் இல்லாதவர்கள் சிலபேர்கள் இருக்
கிறார்கள். அவர்களுக்குச் சீக்கிரம் வாய்ப்புக் கொடுக்கலாம்.
ஆகவே, ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்குள் கருத்துக்களைச்
சொல்லி முடித்துக் கொள்ளுங்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

*திரு. மி. வின்செண்ட்: பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, ஆளுநர் உரை மற்ற மாநிலங்கள் பின்பற்ற
வேண்டிய திட்டங்களைக் கொண்டு வழிகாட்டியாக, கலங்கரை
விளக்கமாக அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். அரசுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு
பெறும்போது ரூ. 10,000 என்ற அறிவிப்பு என்.ஜி.ஓக்களுக்கு
அவர்களது வாழ்வில் கிடைத்த ஒரு வரப் பிரசாதமாகும்,

'Federation of the State Government' Employees' Union, பல
ஆண்டுக்காலமாக, பல மாநிலங்களிடம் எடுத்து வைத்த
கோரிக்கைகளை, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்கள் இன்றையதினம் அமுல் நடத்தி இருக்கிறார், ஆகவே



அவர்கள் அதைப் பாராட்ட முன்வருவார்கள் என்று நான்
நம்புகிறேன். ஏனென்றால், தொழிலாளர்களின் பெயரையே
சொல்லி வாழ்கின்ற, ஆட்சி செய்கின்ற, மேற்கு வங்க அரசும்,
இல்லையென்றால், அதற்கு முன்னால் கேரளத்தில் ஆண்ட
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் அந்தத் திட்டத்தை
நிறைவேற்றவில்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும்
ஆயிரம் பொன் என்பார்கள். அதைப் போல என்.ஜி.ஓ.க்கள்
இருந்தாலும் ரூ. 10,000; இறந்தாலும் ரூ. 10,000 என்று
தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் உருவாக்கிக் காட்டியிருக்
கிறார் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.
என்.ஜி.ஓக்களுடைய வேலை ஒரு ஹஸார்டுவஸ் வேலை அல்ல.
ஆதலால் என்.ஜி.ஓக்கள் இறந்தால் ரூ. 10,000 கிடைக்கும்
என்று அறிவித்திருப்பதை விட, என்.ஜி.ஓக்களே நீங்கள்
வாழுங்கள், நான் ரூ. 10,000 தருகிறேன் என்று புரட்சித்
தலைவர் அறிவித்திருப்பது பன்மடங்கு பாராட்டுதற்குரியது
என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இதைக் கண்டு
கர்ணனைப் போன்ற கொடை வள்ளல் எம்,ஜி.ஆர். என்றும்,
கருணையின் கொடை என்றும் நாம் என்றும் பெருமைப்
படுவோம் என்றும் என்.ஜி.ஓக்கள் சங்கத் தலைவர்கள் இன்றைய
தினம் புரட்சித் தலைவருக்கு புகழ் பாடிக் கொண்டிருக்
கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

கட்டிடத் தொழிலாளர்கள் பணியிலிருந்து இறக்கும்போது
ரூ. 10,000 முதல்வர் நிதியிலிருந்து அவர்கள் குடும்பத்திற்கு
அளிக்கப்படும். இதுவரையிலும் கட்டிடத் தொழிலாளர்கள்
அபாயகரமான வேலைகள் பட்டியலில் இடம் பெறவில்லை.
மைனிங், பவர், அட்டாமிக் எனர்ஜி, கெமிக்கல் இன்டஸ்ட்ரி
போன்ற அபாயகரமான வேலைகளில் கட்டிடத் தொழிலாளர்
களை இணைக்காமல் இருந்த காரணத்தால்தான் அவர்களுக்கு
இதுவரையிலும் வாழ்வு கிடைக்காமல் இருந்தது.
ஆனால் இன்றையதினம் அவர்களை அபாயகரமான வேலை
பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு உதவிட முன் வந்த தமிழக
முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைத் தொழிற்சங்கத்
தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தாங்களாக முன்
வந்து வாழ்த்திட வேண்டுமென்று வேண்டுகோளை இந்த
நேரத்திலே பணிவோடு வைக்கிறேன். சத்துணவுத் திட்டத்தை
இன்றைய தினம் உலகமே பாராட்டிக் கொண்டிருக்கிறது.
உலகத்திற்கே வழிகாட்டியாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.
ஆகவேதான் யுனஸ்கோ, யூனிசிப் நிறுவனங்கள் இன்றையதினம்
தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிக்
கொண்டிருக்கின்றன. Any sensible and productive system of
education must include the incentive in it, viz., the nutritious meals
atleast once a day என்று இன்றையதினம் யூனிசிப் நிறுவனம்
பாராட்டிக் கொண்டிருக்கிறது. அதேபோலத்தான் இந்திய
நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும்
பாராட்டி இருக்கிறார். மாண்புமிகு அண்ணன் பன்ருட்டியார்
அவர்கள் யு.என்.ஓ. சென்ற நேரத்தில் வெளிநாட்டுத்
தலைவர்கள் எல்லாம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர்

அவர்களைப் பாராட்டினார்கள் என்பது உண்மை. வெளிநாட்டவர்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிற நேரத்திலே மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் பாராட்டுகிறார்களா இல்லையா என்பதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. நேற்றையதினம் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சத்துணவுத் திட்டத்தால் பொருளாதார வளர்ச்சி ஏற்படாது என்று குறிப்பிட்டார், உலக வங்கி நிர்வாக இயக்குநர் திரு. கொன்சாலஸ் இந்தத் திட்டத்தைப் பற்றி வெகுவாகப் பாராட்டி, எங்கள் தலைவரை ஈர நெஞ்சம் படைத்த தலைவர் என்று பாராட்டி இருக்கிறார். இந்தத் திட்டம் வெற்றி பெற்று இன்றையதினம் உலக வங்கி நிர்வாக இயக்குநர் அவர்களால் பாராட்டப் பெறுகிறது என்றால் அது தமிழிற்குப் பெருமை அல்லவா, தமிழனுக்கு பெருமை அல்லவா? ஏன் தமிழ் நாட்டிற்கே பெருமை அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு தமிழன் இன்று உலக நாடுகளால் பாராட்டப்படுகிறான் என்பதை நினைத்து இந்த நேரத்திலே ஒவ்வொருவரும் பூரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்திலே இத்தகைய திட்டத்தை நிறைவேற்றவில்லையே என்று பொறாமைப் படாதீர்கள். இந்தத் திட்டம் ஏழைகளை எண்ணிப் பார்க்கிற ஈரநெஞ்சம் படைத்த புரட்சித் தலைவருக்குத் தான் வரும். வேறு யாருடைய உள்ளத்திலும் வராது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிலோன் பிரச்னை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்னையில் வெற்றி கண்டிருக்கிறார் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். வட்ட மேஜை மாநாடு நடக்கக் கூடாது என்றார்கள்; வட்ட மேஜை மாநாடு நடக்காது என்றார்கள். இன்றைய தினம் மத்திய மாநில அரசுகளின் தலையீட்டால் வட்ட மேஜை மாநாடு நடந்து கொண்டிருக்கிறது. நான் கேட்கிறேன், ஒரு பிரச்னை வந்திருக்கிறது, பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்; பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் இங்கே இருக்கிற அரசியல் தலைவர் ஒருவருக்கு இருந்திருந்தால் இந்த வட்ட மேஜை மாநாட்டில் இலங்கை தமிழர் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படாது என்ற சாபத்தை வழங்கி இருப்பார்களா? வட்ட மேஜை மாநாட்டில் பிரச்னைக்கு தீர்வு ஏற்படாது என்ற சாபத்தை இட்டால் உண்மையில் இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு காண விரும்புகிறார்களா? அல்லது இலங்கைத் தமிழர்களைத் தீர்த்துக்கட்ட விரும்புகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார், இந்த அரசு தமிழுக்காக, தமிழனுக்காக எதையும் செய்யும், எதையும் தாங்கும், எதையும் செய்கிறோம் என்று. இந்த எண்ணம், இந்த உறுதி, இந்த ஊக்கம், இந்த திடகாத்திரம் இதற்கு முன்னாலே ஆட்சியிலே இருந்தவர்களுக்கு இருந்திருந்தால் நான் கேட்கிறேன், குட்டிமணி இன்றைக்குச் செத்திருப்பாரா என்று கேட்க ஆசைப்படுகிறேன். தி.மு.க. செய்த பாவத்திற்கு இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் பரிகாரம் கண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



தேர்தலைப் பற்றி அறிவிக்கப்பட்டது. பஞ்சாயத்துத் தேர்தல் ஏப்ரல் 19ஆம் தேதி நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் தேர்தல் நடக்காது என்று இங்கே உறுதியாக சொல்கிறேன் என்று பூங்காவனம் என்ற ஒரு உறுப்பினர் குறிப்பிடுகிறார், இன்னொரு உறுப்பினர் நேரத்தைச் சொல்லுங்கள் என்று குறிப்பிடுகிறார். நான் கூறுகிறேன் தேர்தல் நடக்கும் வரையில்தான் நீங்கள் பதவியில் இருப்பீர்கள். நடந்தால் புரட்சித் தலைவர் வேட்பாளர்கள்தான் வெற்றி பெறுவார்கள் என்று உறுதியாக குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்றத் தேர்தல் நடந்தால் பூங்காவனம் எல்லாம் பாலை வனமாக மாறுவார் என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

விலைவாசியைப் பற்றி பார்த்தால் இந்தியாவிலேயே தமிழ் நாட்டின் நியாயவிலைக் கடைகளில்தான் அரிசி விலை குறைவு. ஆனால் விலைவாசி உயர்ந்து விட்டது என்று குறிப்பிடுவதற்குத் திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களுக்கு உரிமை உண்டா என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன் சென்ற ஆண்டு 28 லட்சம் டன் அரிசிதான் விளைந்தது என்பதை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் 28 லட்சம் டன் விளைந்த நேரத்தில் கூட அரிசி விலை ஏறாமல் ஒரு கிலோ அரிசி ரூ. 4 ரூ. 4.50 அளவிற்கு மேல் தாண்டாமல் பார்த்துக்கொண்டது புரட்சித் தலைவரின் நிர்வாகத் திறமை என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால், 1974 ஆம் ஆண்டில் 54 லட்சம் டன் விளைந்து இருந்தபோதிலும், பல்லாயிரக்கணக்கான அரிசி மூட்டைகளை வெளி மாநிலங்களுக்கு கடத்திச்செல்ல அனுமதித்ததின் காரணமாக அரிசி விலை அன்றையதினம் ரூ. 10 வரை உயர்ந்து இருந்தது. ஆகவே, நீங்கள் இன்றைக்கு விலைவாசி உயர்ந்து விட்டது என்று குறிப்பிடுவது நியாயம்தானா, அதை மக்கள் மன்றம் ஏற்றுக்கொள்ளுமா, அது சரிதானா என்பதை உங்களின் உள்ளத்தைத் தொட்டுச் சொல்லுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: * * * **
* * * * **

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. மி. வின்சென்ட்:
* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தக் குறுக்கீடுகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன. அவையில் இல்லாதவர்களைப் பற்றிச் சொல்லக் கூடாது. குறுக்கீடுகள் வராத அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு மி. வின்சென்ட்: நான் இருக்கின்ற நிலைமைகளைப்
பற்றித்தான் பேசிக்கொண்டு இருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு
எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என் பேச்சில் குறுக்கிடாமல் இருக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விலைவாசிப் போராட்டம் நடத்துகிறார்கள்.
ஆனால், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து
கல்கத்தாவில் தீர்மானம் போட்டார்கள், விலைவாசி ஏற்றத்
திற்கு மத்திய அரசுதான் காரணம் என்று. ஏன் இந்த நிலைமை?
தமிழகத்திற்கு ஒரு நீதி, கல்கத்தாவுக்கு ஒரு நீதியா என்பதை
நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-20)

வறட்சி நிவாரணப் பணியும் வெள்ள நிவாரணப் பணியும்
சரியாக நடக்கவில்லை என்று இதுவரையில் மத்திய அரசிட
மிருந்து எங்களை யாரும் கேட்கவில்லை இதற்கு முன்னால்
இருந்தவர்களை கணக்குக் கேட்டதைப் போல. அங்கே
இருந்து வந்த சென்ட்ரல் டீம் எங்களைப் பாராட்டியிருக்கிறது
எப்படி என்றால், Expeditiously and usefully, money has been
spent என்று பாராட்டியிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு
உடனடியாகவும், உபயோகமாகவும் நல்லமுறையில் பணியாற்றி
யிருக்கிறோம் என்று எங்களைப் பாராட்டியிருக்கிறார்கள்,
ஆகையால் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களை மத்தியிலுள்ளவர்கள் பாராட்டிக்கொண்டிருக்
கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு 8 புதிய மாவட்டங்
களை உருவாக்கியிருக்கிறார்கள். அதனால் எட்டு புதிய
நகரங்கள் உருவாகும். அதனால் ஏழை எளிய மக்கள்
அதிகாரிகளை எளிதாக சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

அது மட்டுமல்ல. தொழில் வளர்ச்சி பற்றி ஆராய்ச்சி
அறிக்கை கொடுக்க 19'9 ஆம் ஆண்டு சிவராமன் கமிட்டியை
மத்திய அரசு நியமித்தது. அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திலும்
எப்படி தொழிலை வளர்ப்பது என்று முயற்சி செய்தபோது,
மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பி் தங்கிய மாவட்
டங்களில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க முடிவு செய்தார்கள்.
அந்த அடிப்படையில் தொழிலே இல்லாத மாவட்டம்—நோ
இன்டஸ்ட்ரீஸ் டிஸ்டிரிக்ட்—எது எது என்று கணக்கிட்டுப்
பார்த்து, 87 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்தப்
பட்டியலிலே தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு மாவட்டம் கூட இடம்
பெறவில்லை. சிறிய, சிறிய மாவட்டங்களைக் கொண்ட
உத்தரப்பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம்
போன்ற மாநிலங்களிலுள்ள மாவட்டங்களே இடம் பெற்றன.
உத்தரப் பிரதேசத்தில் 23 மாவட்டங்கள், பீகாரில் 13 மாவட்





டங்கள், இராஜஸ்தானில் 14 மாவட்டங்கள், மத்தியப் பிரதேசத்
தில் 6 மாவட்டங்கள் என்று இப்படி வடநாட்டு மாநிலங்களிலே
உள்ள மாவட்டங்களே தேர்வு செய்யப்பட்டன. பெரிய
மாவட்டங்களாக இருந்ததால் அந்த 87 மாவட்டங்களில்
நம்முடைய மாநிலத்தில் ஒரு மாவட்டம் கூட இடம்பெறவில்லை.
அதை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு மாண்புமிகு
புரட்சித் தலைவர் அரசு மாவட்டங்களைப் பிரித்திருப்பதனால்
தொழில் வளர்ச்சி இங்கே பெருகும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்டமிட்ட வளர்ச்சிக்கு மாவட்டம்தான் அடிப்படை என்ற
கருத்தை அடிப்படையாகக் கொண்டு, பின்தங்கிய மாவட்டம்
எது என்று பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு
ஏற்றவகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
செய்திருக்கின்ற ஏற்பாட்டிற்காக மன்ற உறுப்பினர்கள்
அனைவரும் பாராட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சிம்சன் பிரச்சனை பற்றி குறிப்பிட வேண்டுமென்றால்
இன்றையதினம் எங்களுடைய இதயதெய்வம் புரட்சித்தலைவர்
அவர்கள் அங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள்; நேற்றையதினமும்
பேசினார்கள். 22-ந்தேதி அவர்கள் அரசுக்கு ஸ்டிரைக்
நோட்டிஸ் கொடுத்த நேரத்தில், அன்றைக்கே அரசு இணைச்
செயலாளர் அவர்களை பேச அழைத்தார்கள். ஆனால்
இன்றைக்குப் பேச முன் வந்தவர்கள் அன்றைக்குப் பேச முன்வர
வில்லை. பேச முன்வந்திருந்தால் அன்றைக்கே இந்தப் பிரச்சனை
முடிந்திருக்கும். 12(3) செட்டில்மென்டை அரசாங்கமும்
நிர்வாகமும் சேர்ந்து போடவேண்டியதில்லை; 18(1) செட்டில்
மென்டை யூனியனும் நிர்வாகமும் சேர்ந்து போட்டுக்கொள்
கிறோம் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அதற்கு என்ன
காரணம்? ஆகையால் இன்றையதினம் வரையில் சிம்சன்
பிரச்சனை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அந்தத் தொழிற்சங்கத்
தலைவர்கள்தான் காரணம் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

அது மட்டுமல்ல. மார்ச் மாதம் வேலை நீக்கம் செய்யப்
பட்டவர்கள் நவம்பர் மாதத்தில் இந்தக் கோரிக்கையை வைத்து
இன்றையதினம் போராட்டம் நடத்துகிறார்கள். அப்படி
யானால் கழிந்த 8 மாதங்களாக என்ன செய்து கொண்டிருந்
தார்கள்? குசேலர் என்ன கும்பகர்ணன் வேலை
செய்தாரா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இன்றைய
தினம் அரசே பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று
சொல்கிறவர்கள் அன்றையதினம் என்ன செய்தார்கள்?
தாஜ் கோரமண்டல் ஓட்டலில் ரூம் நம்பர் 300-ல் நவம்பர் 21,
22, 23, 24 ஆகிய தேதிகளில் தொழிற்சங்கத் தலைவர்கள்
பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். ஏனென்றால்
ஏழைத் தொழிலாளர்கள் பிரச்சனை தாஜ் கோரமண்டல்
ஓட்டலில் பேசினால்தானே தீரும். அதற்காகத்தான்

அரசாங்கம் பேச வேண்டாம், நாங்களே பேசுகிறோம் என்று சொன்னார்கள். இன்னும் இந்தப் பிரச்சனை பற்றி தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். சிம்சன் பிரச்சனை இதுவரை நீண்டதற்கும் தீர்க்கப்படாமல் இருந்ததற்கும் காரணம் அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள்தான் என்று குறிப்பிடுவதோடு இன்றையதினம் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இதற்கு விரைவான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பே இந்த அரசை அணுகியிருந்தால் இதற்கு முன்னாலே கூட இந்தப் பிரச்சனை முடிந்திருக்கும் என்பதையும் தரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான் பி. அன்ட் சி. மில் பிரச்சனையும் இருக்கிறது. அது மத்திய அரசு சம்பந்தப்பட்ட பிரச்சனை; மாநில அரசு சம்பந்தப்பட்டதல்ல. சில பிரச்சனைகள் அங்கே வந்தன. ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 42 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. 1982-83 ஆம் ஆண்டிலும் 42 கோடி ரூபாய் நஷ்டம். அப்போது புதிதாக வந்த அந்தோணிப்பிள்ளை அவர்களால் அந்தப் பிரச்சனையைத் தீர்க்கமுடியவில்லை என்று சொன்னார்கள். கமலரத்தினம் ஒப்பந்தம் மாநில அரசு சம்பந்தப்பட்டதல்ல. An agreement was signed by the union, Management and the Central Government. சென்ட்ரல் கவர்ன்மென்ட் அக்ரிமென்டை இம்பிளிமென்ட் செய்யவில்லை என்றால் எப்படி நாங்கள் பேசித் தீர்க்க முடியும்? எங்களால் ரெக்கமென்ட் தான் செய்யமுடியும்; பரிந்துரைதான் மத்திய அரசுக்கு செய்ய முடியும், அதனால் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறார்கள். ஆகவே, எங்கள்மீது குறை சொல்ல வேண்டாம். (மணியடிக்கப்பட்டது)

அடுத்துஎன்னுடைய தொகுதியைப்பற்றி சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். குமரி மாவட்டம் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழ்நாட்டில் அதிகம் கற்றவர்கள் இருக்கின்ற நகரம் நாகர்கோவில். அங்கே இதுவரையிலும், ஒரு புரொபெஷனல் கல்லூரியும் ஏற்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் புதியதாக 5 என்ஜினியரிங் கல்லூரிகளைத் துவங்க இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதிலே நாகர்கோவிலையும் சேர்த்து, அங்கே இன்ஜீனியரிங் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லா காலேஜ் புதியதாக துவங்கப்படுவதாக அறிகிறேன். ஒரு லா காலேஜையும் நாகர்கோவிலில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருநெல்வேலியில் லா காலேஜை துவங்க இருக்கிறார்கள்.





**திரு. மி. வின்சென்ட் :** கன்னியாகுமரி இன்னும் வறட்சியாக இருக்கிறது. கிணறுகளில் தண்ணீர் இல்லை. வறட்சி நிவாரண உதவிகளை இன்னும் தொடர்ந்து செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல மேற்கு நோக்கிப் பாயும் நீரைத் தமிழகத்திற்குப் திருப்பி விடவேண்டும். நம் மாநிலத்திலுள்ள தண்ணீரை வீணாக்காமல் பாசனத்திற்காகப் பயன்படுத்தவேண்டுமென்ற கொள்கை இருப்பதனால், தற்போது வீணாகக் கடலில் கலந்து கொண்டிருக்கும், சுமார் 200 மில்லியன் கன அடி நீரைத் தேக்கியுள்ள மாம்பழத்துறை திட்டத்தை—அமைச்சர் அவர்கள் கூட பார்வையிட்டார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் உடனடியாக மாம்பழத்துறை அணையை நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

அதே போல தாய்த் தமிழகத்தோடு குமரி மாவட்டத்தை இணைப்பதற்கு, தியாகம் புரிந்த, விடுதலை தியாகிகளுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கீகாரம் அளித்திருப்பதாக நம்புகிறேன். ஆனால், அதற்கான ரூல்ஸ்களை ப்ரேம் பண்ணுவதில் தாமதம் இருப்பதாக தகவல். அதை உடனடியாக செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை மாமன்றத்தில் வைக்கிறேன்.

மத்திய அரசு உதவியால், தமிழகத்தில் 6 தொலைக் காட்சி நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நிலையம் நிறுவப்படவேண்டும். ஆனால் அந்த நிலையத்தை திருவனந்தபுரத்துடன் இணைத்துவிடக் கூடாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு தலைவன் எத்தனை ஆண்டுக் காலம் ஆண்டான் என்பதல்ல முக்கியம், ஆனால் எத்தனை சாதனைகள் புரிந்தான் என்பதுதான் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும். நமது மாநிலத்தில் புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தால் உலகம் போற்றும் உத்தமரானார், நமது புரட்சித் தலைவர் அவர்கள். தண்ணிறைவுத் திட்டத்தால் தென்னாட்டு காந்தி ஆத்மா சாந்தி அடையச் செய்தார். கட்டிடத் தொழிலாளர்கள் இறந்தால் 10,000 கொடுக்கும் திட்டத்தையும், அதே போன்று நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டத்தையும் அதே போன்று என்.ஜி.ஓக்கள் ரிடையர் ஆனால் ரூ. 10,000 அளிக்கும் திட்டத்தையும் கொண்டுவந்து இந்தியாவிற்கே வழி காட்டியவரானார், என்று இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் தமிழக மக்கள். அமெரிக்கன் ப்ரொபசர்,*** யார் யார் எப்படி தமிழகத்திற்கு புகழ் சேர்த்திருக்கிறார்கள் என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே பாயிண்ட் ஆப் ஆர்டர். * * *

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையிலே 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். வெளியிலே 4 கோடி மக்கள் இருக்கிறார்கள். (குறுக்கீடு) அதைப் படித்துப் பார்த்து விட்டு, சார்ஜ் இருந்தால் அது நீக்கப்படும். (குறுக்கீடு) அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையிலே கருத்துக் களைக் கூறுகின்றபோது, தங்களுடைய கருத்துக்களுக்கு ஆதர வாக, அதற்கு வலிவு தேடுகின்ற வகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். ஆனால் அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிச் குற்றச்சாட்டு சொல்வதன் மூலம், அவர்களுக்குப் பதில் சொல்லுகின்ற வாய்ப்பு இல்லை என்பதால் அவர்களைப் பற்றிச் செல்லக்கூடாது என்பது மரபு. அது இந்த அவையில் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. ஒருவரைப் பற்றிக் குற்றம் சாட்டலாம்; பாராட்டலாம். அந்த வகையில், கூடுமான வரையில் குற்றம் சாட்டும்போது அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி, அவர்கள் பதில் சொல்ல முடியாத அளவிற்கு ஒருவரை ஆளாக்குவது என்பது நல்லதல்ல. ஆனால் தங்களுடைய சொந்தக் கருத்தாகச் சொல்லலாம். தங்களுடைய சொந்த நிலைமைகளைச் சொல்லலாம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது குற்றச்சாட்டாக இருந்தால் நீக்கப்படும். (குறுக்கீடு) ** (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் எடுத்துச்சொல்லிய அந்த மேற்கோளில் மாண்புமிகு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி குற்றம் சாட்டும் வகையில் இருந்தால் அந்தப் பகுதியை எடுத்துவிடலாம். வேறு சாதகமான கருத்துக்கள் இருந்தால் இருக்கலாம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே' இந்த மரபு கடைபிடிக்கப்படுமானால், முன்னாள் ஆட்சியில் நடைபெற்ற குற்றங்களைப் பற்றி இந்தச் சபையில் எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பு தவிர்க்கப்படுகின்றது. முன்னாள் ஆட்சியில் நடைபெற்ற குற்றங்களைப் பற்றிச் சொல்லவும் வாய்ப்பு கொடுக்கவேண்டும். அந்த முன்னாள் அமைச்சருடைய கட்சிக்காரர்களே, பேசுகின்றபோது, பல்வேறு நேரங்களில்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



அவருடைய பெயரைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பெயரை எடுக்கவேண்டுமா என்பதைத் தாங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் ஆட்சியினர் அதைச் செய்தார்கள், இதைச் செய்தார்கள் என்று சொல்லலாம். ஆனால் ஒருவர் பெயரைச் சொல்லி குற்றம் சாட்டக்கூடாது, அதுவும், அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிச் சொல்லக் கூடாது. பதில் சொல்லக்கூடிய அளவிலே இன்னொருவரை வைக்கக்கூடாது.

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட், ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப நான் அனுமதி கொடுத்தால் தான் நீங்கள் பேச முடியும்.

திரு. கே. குப்புசாமி : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. குப்புசாமிஅவர்கள் என் அனுமதியின்றி பேசியது நீக்கப்படுகிறது.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆளுநர் உரை தேசிய நோக்கோடும், தெய்வீக நோக் கோடும், தேசிய வகையில் கொண்டுவரப்பட்டு, அதில் தேசிய பெருந்தகை, எங்களுடைய உத்தமத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரில் மாவட்டம் ஒன்றை ஏற்படுத்து வதற்கு முன் வந்தமைக்கு தமிழக முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் இந்த ஆட்சியில் இருக்கிற அமைச்சர் பெருமக்களுக்கும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போன ஆண்டு ஏற்பட்ட வறட்சியின் போது, அரசு நல்ல பணிகளை மேற்கொண்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்து நல்ல முறையில் பணியாற்றியிருப்பதை நான் பாராட்டுகிறேன். போன ஆண்டு வறட்சி முடிந்து, இந்த ஆண்டு ஓரளவு காலதாமதம் ஏற்பட்டாலும், மழை ஓரளவு பெய்து, விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் உழவு செய்து பயிரிட்டு வெள்ளாமை கண்டு அதை அறுவடை செய்து தங்களுடைய இல்லத்திற்குக் கொண்டு செல்ல எண்ணுகிற நேரத்தில், மிகப் பெரிய பாதிப்பிற்கு அவர்கள் உள்ளாகிற சூழ்நிலை ஏற்பட்டது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

போன ஆண்டு ஏற்பட்ட வறட்சியைக் காட்டிலும், இந்த ஆண்டு பெய்த கடும் மழையினால், இயற்கையின் சோதனையால் அவர்கள் மிகக் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அதிலும் என்னுடைய முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மிகக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக, என்னுடைய தொகுதியும், அதற்கு மிக அருகில் உள்ள கடலாடி தொகுதியும் பெரும் அளவில் சேதம் அடைந்து, விளை பயிர்கள் யாவும் அழிந்து விட்டன என்று தொலைபேசி மூலம் எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

ஒரு வார காலத்திற்கு முன்பு, அந்தப் பகுதிகளை நான் சுற்றிப் பார்த்து விட்டு வந்தபிறகு, இயற்கையின் கோளாறால் தாக்கப்பட்டு, அவர்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்று எனக்குத் தொலைபேசி மூலம் தகவல் வந்திருக்கிறது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, மிக சோதனையான கட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதை அரசு உணர்ந்து, அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு ஏதாவது ஒரு நல்ல வகையில் நன்மையைச் செய்வதற்கு அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையினைப் பொறுத்த மட்டில், தமிழக அரசு ஒரு முடிவு எடுத்து, எல்லாக் கட்சிகளும் அதில் ஒருமித்த கருத்தோடு இணைந்து, நம்முடைய குரலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, நாம் அனைவரும் அவரவர்களுடைய கட்சியின் சார்பாக ஒன்று சேர்ந்து எந்தவிதப் பேதமுமின்றி குரல் கொடுத்தால்தான் ஓரளவு நம்முடைய குரலுக்கு செவி சாய்ப்பார்கள். தற்போது இதில் மத்திய சர்க்காருடைய தலையீட்டின் காரணமாக வட்ட மேஜை மகாநாடு இலங்கை அரசால் நடத்தப்பட்டு, அங்குள்ள தமிழர்களுக்கு ஓரளவு பாதுகாப்பு கிடைக்கக்கூடிய தன்மை வந்திருக்கிறது. ஆகவே, இதில் இன்னும் அக்கறை செலுத்தி, நம்முடைய அரசு, மத்திய அரசை வற்புறுத்தி, அங்குள்ள தமிழ் மக்களுக்கு இன்னும் போதிய பாதுகாப்பு கிடைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த முயற்சியில் நம்முடைய அரசு முழுமையாக ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி கூற வேண்டும் என்றால், தமிழகம் முழுவதிலும் உள்ள கருத்துக்களைச் சொல்லாவிட்டாலும், என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சத்துணவுத் திட்டத்தை நல்லதொரு திட்டம் என்று மக்கள் பாராட்டுவதோடு, நானும் சேர்ந்து இந்த அரசைப் பாராட்ட விரும்புகிறேன். ஆனாலும், இந்தச் சத்துணவு மையங்களில் சில இடங்களில் தவறுகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை அரசு கண்காணிக்க வேண்டும். அந்த சத்துணவு மையங்களில், அல்லது குழந்தைகள் நல மையங்களில்





பணி புரிகின்ற பெண்களுக்குத் தக்கவாறு அரசு அறிவுரை வழங்க
வேண்டும். அந்தந்தப் பகுதி மக்களின் குழந்தைகளுக்கு நல்ல
முறையில் சத்துணவு கிடைப்பதற்கு தக்க நடவடிக்கையை
அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும், அதில் இருக்கும் சீர்
கேடுகளை ஒழிக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல மூன்றாவது நல்ல திட்டம் தன்னிறைவுத்
திட்டம், இந்தத் திட்டத்தின் மூலம் பல நல்ல காரியங்கள் நடந்
திருக்கின்றன. இதுபோன்ற தேசிய வேலை வாய்ப்புத்
திட்டத்தின் கீழும் பல பணிகள் எடுக்கப்படுகின்றன, எங்களுடைய
மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சாலை வசதிகள் குறைவாக
இருக்கிற காரணத்தல், தேசிய வேலை வாய்ப்பு திட்டத்தின்
மூலமாகவோ அல்லது இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின்
மூலமாகவோ எங்கள் பகுதிக்கு சாலை வசதிகளைச் செய்து
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

அடுத்தாற்போல விவசாயப் பெருங்குடி மக்களை எடுத்துக்
கொண்டால், அந்த மக்களுக்குத் தற்போது எந்தவித ஊதிய
பாதுகாப்பும் இல்லை; அவர்களுடைய விவசாயத் தொழிலுக்கும்
பாதுகாப்பு இல்லை; இந்த நிலையை மாற்ற, இப்போது மற்ற
தொழில்களுக்கெல்லாம் இன்ஷ்யூரன்ஸ் செய்கிறார்களே அதே
போன்று, இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், மானாவாரி
நிலத்தில் பயிரிடுகிறவர்களாக இருந்தாலும் சரி, மற்ற நிலங்
களில் பயிரிடுபவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் பயிரிடு
கின்ற பயிருக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் இன்ஷ்யூரன்ஸ்
செய்வதற்கு, அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே நேரத்திலே 2 மாதங்களுக்கு முன்பு நான் பத்திரிகை
வாயிலாகப் படித்ததை இந்த அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன் உழுகிறவனுக்கு நிலம் சொந்தம் என்ற அறிவிப்பைப்
பார்த்தேன், அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே,
உழுவடை செய்கின்ற பூமியை உழுகிறவனே எடுத்துக்கொள்கிற
அதே நேரத்திலே நகரத்திலே இருக்கின்றபெரும் செல்வந்தர்கள்
பெரும் முதலாளி வர்க்கம் எத்தனை மனைகளை, வீடுகளைக்
கட்டிக்கொண்டு வாடகைக்கு விட்டு வாழ்ந்து கொண்டிருக்
கிறார்கள், அங்கு அவர்களுக்கு உச்சவரம்பு என்று கொண்டுவந்த
பிறகு உழவர்களுக்கு கொண்டுவந்தால் சாலச் சிறந்ததாக
இருக்கும் என்பதைத் தரிவித்துக்கொள்கிறேன். நில உச்ச
வரம்புச்சட்டங்களின் மூலமாக அந்தத் திட்டம் அமலுக்கு வராத
தன் காரணமாக நகரப்புறங்களிலே உள்ள பெரும் செல்வந்தர்கள்
எல்லாம் இந்தத் திட்டத்திலே வராத காரணத்தினாலே
கிராமப்புறங்களிலே வாழுகின்ற விவசாயப் பெருங்குடி மக்கள்
நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்ட காரணத்தினால் அவர்கள்
தங்களுடைய குடும்ப வருவாய்க்காக நிலத்தை விற்க வேண்டு

128-270—12

மென்றால்கூட அதை வாங்குவதற்கு நாதியற்ற நிலைமைதான் இருக்கிறது, அது மட்டுமல்ல, நிலத்தை விற்கவேண்டிய சூழ்நிலை இருக்கிற போது, பொருள் வைத்திருக்கிறவர்கள் நிலம் வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. உழவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்லி அதைப் பரிசீலிக்கிறபோது, நகரப்புறங்களிலே உள்ள பெரும் செல்வந்தர்களின் நிலைமைகளையும் கவனிக்கக் கூடிய நிலைமைகளை உருவாக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே வெள்ளம் பெரும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று எனக்குத் தொலைபேசி மூலமாக 2 நாட்களாக செய்தி வந்துகொண்டிருக்கிறது. எந்த அளவுக்குச் சேதம் என்பது நான் நேரிலே சென்று பார்த்தால்தான் தெரியும். சிறிய நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியில் மலட்டாறு கங்கரத் தேவன் கால்வாய், சக்கிலியன் ஓடை என்ற மூன்று திட்டங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டங்களை இந்த ஆண்டு எடுத்துக் கொண்டால் சாலச் சிறந்ததாக இருக்கும். நீண்ட நெடுங்காலமாக இந்தப் பிரச்சினை இருப்பதால் அதை எடுத்துக்கொண்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய அளவுக்கு ஒரு தொழிற்சாலையை அமைத்திருக்கிறார்கள், அதற்காக நான் தொகுதி வாழ் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்திலே முதுகுளத்தூர் யூனியனிலே ஒரு நூற்பாலையை கொடுப்பதாக எனக்குத் தகவல் அனுப்பினார்கள். அதையும் பரிசீலனை செய்து அங்கே நூற்பாலையையும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றி தெரிவிப்பதற்கு முன்பு தேசிய நோக்கத்தோடும், தெய்வீக நோக்கத்தோடும், இந்த அறிக்கையை வெளியிட்ட நிலைமையைப் பார்க்கிறபோது உண்மையிலேயே தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள் தேசிய உணர்வோடு தேசியத் தலைவர்களின் பெயர்களை மாவட்டங்களுக்கு வைத்திருப்பதைப் பார்க்கிறபோது இந்த நாட்டு மக்கள் நல்ல முறையில் வாழவேண்டுமென்ற நல்லுணர்வோடு செய்து இருக்கிறார்கள் என்பதற்காகப் பாராட்டுக்களைத் தெரிவித்து என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி வணக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே நான் சொல்ல விழைகிறேன். ஆளுநர் தன்னுடைய உரையைத் துவக்குகின்ற நேரத்தில் நம் மாநிலத்தின் பொருளாதாரம் எல்லா வகையிலும் மேலும் வளம் பெறும்



என்று உளமார நம்புகிறேன் என்று அவருடைய உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். தமிழ் மாநிலம் பெரும்பாலும் விவசாயிகள் நிறைந்த மாநிலம். ஆனால் ஏற்கனவே 3 ஆண்டு காலம் கடும் வறட்சியை சந்தித்த விவசாயிகள் இந்த ஆண்டு பெரும் மழையினால் பெரு நட்டத்திற்கு ஆளாகி இருக்கின்ற இந்தக் கால கட்டத்தில் அவர்களுடைய பொருளாதாரம் எப்படி வளம் பெறும். பிறகு அவருடைய உரையைப் படித்துப் பார்க்கின்ற போது அதிலே எந்த விதமான விளக்கமும் தரப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு நிலையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் கடுமையான வறட்சியை சந்தித்த விவசாயிகள் பிறகு இந்த ஆண்டு தென் மேற்கு பருவமழை பொழிந்து அந்த மழையை நம்பி விவசாயம் செய்த விவசாயிகள் இடையிலே வடகிழக்கு பருவமழை காலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் ஏரி, குளங்கள் நிரம்பியும் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டது. குறுவை பாசனத்திற்கு மின்சாரத்தை நம்பி அதன் மூலம் அதை காப்பாற்றிவருகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இடையில் ஏற்பட்ட மின்சார பற்றாக்குறை இவ்வளவையும் சமாளித்து கதிர் முற்றுகின்ற நேரத்தில் எதிர்பாராமல் காலம் கடந்த வடகிழக்குப் பருவ மழை பொழிந்து விவசாயிகளுடைய பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு அனைத்தும் பாதிக்கப்பட்டன. கதிர் முற்றுகின்ற அந்தப் பயிர்களும் பாதிக்கப்பட்டு, அதாவது கிடைக்கவேண்டிய மகசூலும் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு இந்தஆண்டு 40 விழுக்காடுதான் வருவாய் கிடைத்து இருக்கிறது, என்பதை நான் இந்த நோத்தில் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் பொழிந்த மழையின் காரணமாக எங்களுடைய மாவட்டத்தில் 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை பொன்னி நெல்லின் விலை 80 ரூபாய் 90 ரூபாய்க்கு பல நாட்களாக விலை குறைவாக விற்றன. அதிலே பாதிக்கப்பட்டவர்கள் யார்? சிறிய விவசாயிகள்தான். அதைப் பயன்படுத்திக்கொண்டவர்கள் யார்? ஆனால் அரிசியின் விலை குறைந்ததா? அரிசி வாங்கி சாப்பிடுகின்ற மக்கள் பலன் பெற்றார்களா என்றால் இல்லை. அரிசி விலை குறையவில்லை. ஆனால் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகள்தான். அவர்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளானார்கள். உடனே நம்முடைய அரசு என்ன செய்தது? பத்திரிகையில் கூட எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் வட ஆற்காடு மாவட்டத்தில் அமோக விளைச்சல் என்ற செய்தியைப் போட்டார்கள். விளைச்சல்தான் அமோகமே தவிர விழுக்காடு 40 தான். நிர்ணயிக்கப்பட்ட விலையை அந்த மாவட்டத்திலே அமுல்படுத்தவில்லை. தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டது போன்று— அரசு நிர்ணயித்து இருக்கின்ற விலை—அந்த 35 ரூபாயை வட ஆற்காடு மாவட்டத்திற்கும் நீடிக்கப்படுத்திக் கொடுத்து இருப்பார்

களானால் லட்சக்கணக்கான சிறு விவசாயிகள் லாபம் அடைந்து
இருப்பார்கள். அதையு இந்த அரசு செய்யத் தவறி விட்டன.
இந்த ஆண்டு ஏராளமான விவசாயக் கிணறுகள் இடிந்துவிட்டன.
இந்த மழையினால் விவசாயிகள் குடியிருந்த வீடுகள் இடிந்து
விட்டன. இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் நம்முடைய அரசு
விவசாயிகளுக்குக் கொடுத்த பரிசு என்ன தெரியுமா? விவசாயி
களைக் காப்பாற்றவேண்டிய அரசு நஷ்டப்பட்ட விவசாயிகளுக்கு
நஷ்ட ஈடு தரவேண்டிய அரசு, உடனடியாக கூட்டுறவு கடன்
களுக்காகவும், நிலவரி வசூலுக்காகவும் வட ஆற்காடு
மாவட்டத்தில் எல்லா வட்டங்களிலும் குறிப்பாக என் கண்
கூடாக நான் பார்த்தவரையில் திருவண்ணாமலை, தண்டராம்
பட்டு, கலசபாக்கம், போளூர், செங்கம், திருப்பத்தூர்,
போன்ற அந்தப் பகுதிகளில் விவசாயிகளுடைய வீட்டு கதவுகளை
ஜப்தி செய்து இருக்கிறார்கள். வேண்டுமானால் அரசு விசாரிக்கு
மானால் நான் அதை நிருபித்துக் காட்ட கடமைப்பட்டு இருக்
கிறேன். அதேபோன்று வீட்டிலுள்ள பண்டம் பாத்திரங்களையும்
ஜப்தி செய்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அநியாயத்தைத்
தான் இந்த ஆண்டு நம்முடைய விவசாயிகளுக்கு அதாவது
புத்தாண்டு பரிசாக இந்த அரசு தந்து இருக்கிறது என்பதை
நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளுவதை என்னுடைய
கடமையாக நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 12—50)

அதேபோன்று இன்னும் ஒன்றை கொள்கை குறிப்பில்
சொல்லியிருக்கிறார்கள். அதாவது பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம்.
ஏற்கனவே நெல் பயிருக்கு மட்டும் இருந்தது. ஆனால் அது
இப்போது மற்ற பயிர்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்ற ஒரு
பெரிய திட்டமாக அதை விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள்.
பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் இந்த
அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு
மோசடி என்பது என்னுடைய ஆழமான எண்ணம். இதில் பலன்
பெற்ற விவசாயிகள் கிடையாது. அதில் சொல்லியிருப்பது,
ஏதோ விக்கிரமாதித்தன் கதையை போல, ஒரு தாலூக்கா
பூராவும் மூன்று கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் மூன்று
விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அதில் சராசரி மகசூலைப்
பார்த்து, சாரசரி விழுக்காட்டிற்குக் கீழே யாருக்குக் குறைந்
திருக்கிறதோ அந்த விவசாயிகளுக்குத்தான் நஷ்டயீடு தருவோம்
என்று சொல்வது மோசடித் திட்டம்; விவசாயிகளை ஏமாற்றும்
திட்டம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விளம்புகிறேன். இந்த விவசாய இன்ஷூயூரன்ஸ்
திட்டத்தில் ஈடுபடும் அந்த விவசாயிகள் நஷ்டம் அடைந்
திருந்தால் அவர்களுக்கு நஷ்டயீடு தரவேண்டுமே தவிர, கீழ்
மட்டத்திலே இருக்கின்றவர்களுக்கு உதவாத உதவாக்கரைத்
திட்டமாக இருக்கின்ற இந்த இன்ஷூயூரன்ஸ் திட்டத்தை
அரசாங்கம் ஏதோ பெரிதுபடுத்திக் காட்டியிருக்கிறது என்பதை
நான் சொல்ல விரும்புகிறேன்.





அதேநேரத்தில் ஒன்றை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக்
கொண்டு வர விரும்புகிறேன். சென்ற தேர்தலின்பொழுது,
விவசாயிகளின் அனைத்துக் கடன்களையும் மத்திய அரசு
ஒத்துக்கொண்டாலும் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் ரிசர்வ் வங்கி
ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளா விட்டாலும் நான் ரத்து
செய்வேன் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
தேர்தல் நேரத்திலே தமிழகத்து விவசாயிகளுக்குப் பெரிய
வாக்குறுதியைக் கொடுத்தார்கள். பிறகு நம்முடைய நிதி
யமைச்சரவர்கள் இந்தப் பேரவையிலே சொன்னார்கள், நாங்கள்
சொன்ன வாக்குறுதி தேர்தலுக்காக, இந்தக் கடன்களைத்
தள்ள இயலாது, அது தேர்தலுக்காக சொன்ன வாக்குறுதி என்று.
ஆனால் அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் இங்கேயும், பொதுக்கூட்டத்திலேயும், எங்களுக்கு
அளிக்கப்பட்டிருக்கின்ற ஐந்தாண்டுக் காலத்தில் நான் சொன்ன
வாக்குறுதியின்படி, விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வேன்
என்று லயிடங்களில் பேசியதாகப் பொறுப்பான பத்திரிகை
களிலே செய்திகள் வந்திருக்கின்றன. நான் நினைவுபடுத்த
விரும்புகிறேன், இந்த அரசாங்கம் கடைசியாக வைக்கின்ற
பட்ஜெட்டாக இது இருக்கலாம், ஏற்கனவே தேர்தல் காலத்தில்
வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள், ஆகவே வருகின்ற பட்ஜெட்டில்
விவசாயிகளின் அனைத்துக் கடன்களையும் நீங்கள் உள்ளுபடி
செய்ய வேண்டுமென்று நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்
கிறேன். அரசாங்கம் அதை நிச்சயமாக நிறைவேற்றும் என்று
நம்புகிறேன். அப்படிச் செய்யத் தவறினால் நீங்கள் சொல்லிய
வாக்குறுதியைச் செய்யவில்லை என்ற அவப் பெயர் வந்துவிடும்.
அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்
களின் பெயருக்கே களங்கம் விவசாயிகள் மத்தியில் ஏற்படும்
என்பதை அரசாங்கத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அநேக வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன.
அனைத்து ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குவோம்
என்று கொடுக்கப்பட்ட வாக்குறுதியை ஆசிரியர்கள் நம்பி
னார்கள். தனியார் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள்,
உடனடியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு
வந்தால் அனைத்து ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கி
விடுவார்கள் என்று நம்பினார்கள். ஆனால் என்ன செய்தீர்கள்?
ஆசிரியர்களை ஏமாற்றினீர்கள். பலன் என்ன? நகராட்சிகளும்,
மாநகராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் ஏறக்குறைய
அரசாங்கத்தைப் போன்றவைதான். உடனடியாக ஊராட்சி
ஒன்றியங்களிலே உள்ள ஆசிரியர்களை மட்டும் அரசாங்க
ஊழியர்களாக அறிவித்தீர்கள். இது குறித்துக் கேட்டால்
ஆசிரியர்களுக்குச் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றி
விட்டோம் என்று சொன்னீர்கள். ஆனால் அதன் நிலைமை
என்ன? மாநகராட்சிகள் பள்ளிக்கூடங்களை நடத்துகின்ற
பொழுது ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக் கூடங்களை நடத்த
முடியாதா? அந்தத் தகுதி ஊராட்சி ஒன்றியங்களுக்கு
இல்லையா?

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1984 பிப்ரவரி 18

ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்களைப் பற்றி ஆளுநர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதுவரையில் அமைச்சர்கள் சொல்லி வந்தார்கள். முதலில் அந்தத் துறையை நிர்வகித்து வந்த மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்கள் பலமுறை சொன்னார்கள் தேர்தல் வரும் என்று; வரவேயில்லை. அதற்குப் பிறகு இப்பொழுது அந்தத் துறையின் பொறுப்பை நிர்வகிக் கின்ற அமைச்சர் மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் என்னுடைய தொகுதியிலேயே பல நிகழ்ச்சிகளிலே பொது மக்களிடத்திலே பிப்ரவரி மாதத்தில் ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்துவிடும் என்று அரசாங்க விழாக்களிலேயே சொன்னார்கள். அதுவும் போய் விட்டது. பிறகு முதலமைச்சர வர்கள் சொன்னார்கள். நாங்கள்கூட அதை நம்பினோம். முதலமைச்சரவர்கள் சொல்லிய பிறகும்கூட தேர்தல் நடை பெறாமல் போகும் என்று நாங்கள் நிச்சயமாக நினைக்கவில்லை. ஆனால் முதலமைச்சரவர்களின் வாக்குறுதியும் காற்றிலே பறந்து போய்விட்டது. இன்றைக்கு என்ன நிலைமை? இப்பொழுது ஆளுநர் அவர்களின் வாயிலாகத் தேர்தலுக்குத் தேதி நிர்ணயித் திருக்கிறீர்கள். ஆனால் நடைபெறப் போகிறதா? இல்லை. அமைச்சர்கள் சொல்லிய வாக்குறுதிகள் காற்றிலே பறந்தன; முதலமைச்சர் சொன்ன வாக்குறுதியும் காற்றிலே பறந்தது; இப்பொழுது ஆளுநர் அவர்களின் வாயால் சொல்லப்பட்ட—அது அரசாங்கத்தின் கொள்கைக் குறிப்பாக இருந்தாலும் ஆளுநரால் கொடுக்கப்பட்ட—அந்த வாக்குறுதியும் காற்றிலே போகிற நிலை இன்றைக்கு இருக்கிறது.

1958-ம் ஆண்டு இந்தத் தமிழ் மாநிலத்தில் அன்றயதினம் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், இந்த மாநிலத்திலே இந்தியாவிலேயே இல்லாத அளவுக்கு ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் ஒரு பக்கத்திலே அரசாங்க ஊழியர்கள், அதாவது ஆணையாளர்கள், இன்னொரு பக்கத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர் கள் ஆகிய இந்த இரு பிரிவினரும் இணைந்து எப்படி இந்த ஊராட்சி ஒன்றிய வண்டியை நல்ல முறையில் இழுத்துச் சென்று, அந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக எல்லாவிதமான திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்ற வகையில் ஒரு பெரிய திட்டத்தினை வகுத்து தமிழகத்திற்குத் தந்தார்கள்.

ஆனால் இப்போதுள்ள நிலைமை என்ன? ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள ஆசிரியர்கள் பிரிவு, கல்வி இலாக்கா விற்குப் போனது. ஊராட்சி ஒன்றியத்தின் வேளாண்மைத் துறைப் பிரிவு வேளாண்மைத் துறைக்குப் போனது. மருத்துவ அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மருத்துவத்துறை, மருத்துவத்துறைக்குப் போய்விட்டது. இப்படிச் செய்யப் பட்டதன் காரணத்தால் 1958 ஆம் ஆண்டு செய்யப்பட்ட அனைத்து முன்னேற்றங்களும் இப்போது சிதறடிக்கப்பட்டு விட்டன. அதாவது குரங்கு கையிலே அகப்பட்ட பூமாலைபோல் ஆகிவிட்டது என்று எங்கள் ஊர்களிலே சொல்வது போன்று



[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1994 பிப்ரவரி 18

இன்று அந்தப் பூமாலை சிதறடிக்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு மோசமான சூழ்நிலை கிராமங்களிலே நடைபெறுகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தேர்தல் வராவிட்டால் கூட பரவாயில்லை. ஆனால் அதற்காக எத்தனை முறை அதிகாரிகள் நியமனம், எத்தனை முறை வாக்காளர்கள் பட்டியல் தயார் செய்வது எல்லாம் நடந்தது. இப்படி தேர்தலுக்கான வேலைகளை எல்லாம் எத்தனை முறை செய்வது? இப்படி வோட்டர்கள் லிஸ்ட் எல்லாம் சேகரிக்கப்பட்டுவிட்டதற்குப் பிறகும் தேர்தல் வராமல் அப்படியே நிற்கின்றது. பொதுத் தேர்தல் வருவது என்பது மத்திய அரசின் கையிலே இருக்கின்றது. ஆனால் நீங்கள் பதவிக்கு வந்து 7 ஆண்டுக் காலம் ஆகின்றது. எந்தத் தேர்தலையும் நீங்கள் நடத்தவில்லை. ஜனநாயகத்திலே எந்தக் கட்சியும் வெற்றி பெறலாம். ஆகவே அதைப்பற்றி பிரச்சினை இல்லை. ஆனால் நீங்கள் ஊராட்சி ஒன்றியத் தேர்தல், நகராட்சி மன்றத் தேர்தல், மாநகராட்சி மன்றத் தேர்தல், கூட்டுறவுத் தேர்தல், ஒழுங்கு முறை விற்பனைக் கூடத் தேர்தல் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையாவது நடத்தியிருக்கிறீர்களா என்றால் இல்லை. இப்படி எந்தத் தேர்தலையும் நீங்கள் நடத்தவில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன். எனவே உடனடியாக ஊராட்சி ஒன்றியத் தேர்தலை நடத்துங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒன்றைக் கேட்கலாம், அதாவது நாங்கள் தேர்தல் வாக்குறுதி ஒன்றைக் கூடச் செய்ய வில்லையா என்று. ஒன்றிரண்டைச் செய்திருக்கிறீர்கள். நாங்கள் மறுக்கவில்லை. அதுமட்டுமல்ல. சொல்லாததையும் செய்திருக் கிறீர்கள். அதாவது சொல்லாத ஒன்றாகிய மதிய உணவுத் திட்டத்தை விரிவாக்கும் பணியைச் செய்தீர்கள். மதிய உணவுத் திட்டத்தைப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்தார்கள். இன்றையதினம் அதை நீங்கள் விரிவாக்கியிருக் கிறீர்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக அதிகமான தொகையை ஒதுக்கி அதற்கென்று தனியாக அமைப்பாளர்களை அமைத்து, குழந்தைகள் காப்பகம் என்ற பெயரால் ஏற்கெனவே இருந்து வந்ததை பெரிதாக்கி அதன்படி இன்றையதினம் கிராமங்களில் மதிய உணவுத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது அதைப்பற்றி நாங்கள் குறைவாகச் சொல்லவில்லை.

அதேமாதிரி நீங்கள் சொல்லாத ஒன்றாகிய சாராயக்கடை யினைத் திறக்கின்ற வேலையையும் செய்தீர்கள். சொல்லாததாகிய கள்ளுக்கடையினைத் திறந்தீர்கள். அதை எல்லாம் நாங்கள் மறுக்கவில்லை. ஏனென்றால் அதை எல்லாம் செய்வதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது. அதனால் நீங்கள் செய் திருக்கிறீர்கள்.

அடுத்து, இன்னொரு புதுமையினையும் நீங்கள் செய்தீர்கள். அதாவது பாட்டிலிங் என்றீர்கள். அதைப்பற்றி எங்களுக்கே ஒன்றும் புரியவில்லை இது என்னவென்று. இன்றையதினம் உள்ள நிலைமை என்ன? கடையிலே சோடா பாட்டிலை வாங்குவதைப் போன்று சாராயப்பாட்டிலை வாங்குகின்ற நிலைமை இருக்கின்றது. அவ்வாறு வாங்குவதற்கு அரசாங்க அனுமதி தேவையில்லை என்ற நிலைமை தான் இருக்கின்றது இப்படி நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவேண்டும் என்பதில்லை. நீங்கள் தமிழகத்திலே உள்ள கடைகளில் பரவலாக சோதனை செய்தால் இப்படிப்பட்ட காரியங்கள் தான் நடக்கின்றன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளமுடியும்.

(பிற்பகல் 1-00)

அடுத்து மாவட்டங்களைப் பிரிப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். எங்களுடைய திருவண்ணாமலையைக்கூடத் தனி மாவட்டமாக ஆக்கி அங்கே இருந்த குறுநில மன்னராகிய சம்புவராயரின் பெயரை வைத்திருக்கிறீர்கள். அதைக் குறைவாகச் சொல்லவில்லை. திருவண்ணாமலையைத் தனி மாவட்டமாகப் பிரிக்கவேண்டும் என்பது நாங்கள் பலமுறை சொல்லி வந்ததுதான். ஆனால் எங்களுக்கு ஒரு சந்தேகம் வருகின்றது. அதாவது நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு விழாவிலே நாவலரைப் பார்த்து, அதாவது நிதி அமைச்சர் அவர்களைப் பார்த்து, சொன்னதாகப் பத்திரிகையிலே படித்த செய்தியினைச் சொல்கிறேன். அது தவறாக இருந்தால் திருத்துங்கள். 'நிதியமைச்சர் அவர்ககள் மிகவும் கஞ்சத்தனம் உடையவர்கள்' என்று சொன்னார்கள். அவர் கஞ்சத்தனம் உடையவராக இருக்கலாம். ஆனால் என்ன காரணம்? அரசாங்கத்தின் கஜானா காலி. பல துவக்கப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் இல்லை. பல மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லை. பல மருத்துவ மனைகளிலே மருந்துகள் இல்லை. மேல் நிலைப் பள்ளிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் போதுமான அளவுக்கு இல்லை. அதே போன்று பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற துறைகளில் எடுக்கப்பட்ட வேலைகளுக்கு இன்றையதினம் பில்களுக்குத் தொகைகள் வழங்கப்படவில்லை. அதிகாரிகளைக் காரணம், கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தோம். நீங்கள் கூட பார்த்திருப்பீர்கள். ஒரு வார காலத்தில் தமிழ்நாட்டு அரசாங்கம் ரிசர்வ் வங்கியிலே வாங்கியிருக்கும் ஓ.டி.யைக் கட்ட வேண்டுமென்கிற நிலைமையிருக்கிறது. இங்கே நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கூட பலமுறை சொன்னார்கள். நீங்கள் சொல்கின்ற எல்லா மாவட்டங்களையும் பிரிக்க வேண்டியதுதான். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கலைஞர் அவர்கள் ஒன்மான் கமிஷன் நியமித்து, எந்த எந்த மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற நிலைமையை அரசாங்கம் எடுத்தது. ஆனால், பணப் பிரச்னை வந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தர்மபுரி மாவட்டம் வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் புதுக்கோட்டை



மாவட்டம் வந்தது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பெரியார் மாவட்டம் ஏற்படுத்தினார்கள், மறுக்கவில்லை. ஆனால் 8 மாவட்டங்களை ஒரே நேரத்திலே பிரிப்போம். அதிகாரிகளை நியமிப்போம். பிறகு அவர்கள் பரிசீலிப்பார்கள். பிறகு படிப்படியாக நாங்கள் அவற்றை நிறைவேற்றுவோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, என்ன நோக்கத்திற்காக இதை அறிவித்தீர்கள்? நீங்கள் தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு இந்த மாவட்டங்களை எல்லாம் பிரிக்கப் போவதாகவும் சொல்லி அதற்கெல்லாம் பெயர் சூட்டிவிட்டு, கட்சியினுடைய தேர்தல் பிரகடனம் போல், ஆளுநர் உரையைத் தேர்தல் பிரச்சாரமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளீர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்படாததைப் போல இருக்கிறீர்கள். இன்றையதினம் பல்வேறு சாலைகள், தார் சாலைகள், எங்களுடைய மாவட்டத்திலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் பகுதியிலே போளூர்—டு—வீராளம் மேல சோழியகுப்பன் சாலை, சித்தூர் டு கடலூர் செல்லும் சாலை, கலசப்பாக்கம் வழியாக, போளூர் டு வேலவாடு செல்லும் சாலை, போளூர்—டு—லாடவரம் செல்லும் சாலை, போளூரிலிருந்து சினக்கவாடி, படலூர் வழியாகச் செல்லும் சாலை, அதே போன்று தேசிய நெடுஞ்சாலைகள். ஆரணி நகரத்திலே கூட மோசமான நிலையில் சாலைகள் இருக்கின்றன. தார் போடுவது நிறுத்தப்பட்டுவிட்டன. சாலைகள் மேய்ன்டெய்ன் செய்வதே இல்லை. எந்த அளவில் அந்தச் சாலைகள் இருக்கின்றன என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

நேரத்தைக் கருத்திலே எடுத்துக்கொண்டு, என்னுடைய மாவட்டப் பிரச்னையை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்துவேன் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 4 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இங்கே அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் அந்தச் சட்டக் கல்லூரி அறிவிக்கப்படவே இல்லை. அதேபோன்று இப்பொழுது கூட நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைக் கல்லூரி தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று அறிவித்து இருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே வட ஆற்காடு மாவட்ட மக்களின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். தமிழகத்திலே இறைவைப் பாசனத்தையே செய்து, நெல் உற்பத்தியிலே தஞ்சையை மிஞ்சியிருக்கிறோம் என்பது, நான் சொல்வதல்ல, அரசாங்கம் கொடுத்த கணக்கு. அப்படி முதன்மையாக இருக்கிற வட ஆற்காடு மாவட்டத்திலே வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்த அரசாங்கம் முயல வேண்டும். அதே போன்று நீண்ட நெடு நாட்களாக போளூர் பகுதியிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையைக் கேட்டிருக்கிறோம். அதை ஏற்படுத்த வேண்டும். அதைப் போல், ஏலகிரி,

ஜவ்வாது மலைகளை ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்க வேண்டுமென்று 5 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறோம். தனி வட்டாட்சியர் அலுவலகமும் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே நினைவுறுத்துகிறேன். இந்த அரசாங்கம் ஏற்கெனவே எடுத்துச் சொன்ன பல காரியங்கள் நடைபெறவில்லை. விவசாயி மீது அரசு விரோத நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம், செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன. நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தல் நடத்தாமல் இருப்பதால் தமிழகத்திலே இருக்கிற பெரும்பாலான கிராமங்களிலே தெரு விளக்குகள் எரிவதில்லை. இதில் அக்கறை செலுத்தாமல் இருப்பதோடு, கடைசியாக, விஷம்போல் ஏறி உள்ள விலைகளைப்பற்றி கண்டு கொள்ளாமல் இருப்பது என்று இப்படி இருப்பீர்களானால் விவசாயிகளுடைய நன்மதிப்பையும் இழந்து, எப்படி ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் விவசாயிகளுக்கு விரோதமான அரசு அகற்றப்பட்டதோ, அப்படி நீங்கள் மாற்றப் படுவீர்கள் என்று விவசாயிகளின் சார்பில் நான் எச்சரிக்கை செய்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் 6—வது ஐந்தாண்டுத் திட்டம் 1980—85-ல் அந்த நூலில் முன்னுரை எழுதி இருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை நமது மாநிலத்திலே தான் அதிகம் என்பதை நாம் வருத்தத்தோடு ஒப்புக்கொள்ள வேண்டு மென்று எழுதியிருக்கிறார்கள். இது 1982 ஆம் ஆண்டு நமது முதலமைச்சர் எழுதி கையெழுத்துப் போட்ட நூல் இருக்கிற முன்னுரை. இந்த ஆளுநர் உரையில் 'வறுமையை ஒழிக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் வருங்காலத்திலே அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளேன்', என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே வறுமையை ஒழிக்கவில்லை. இது ஒவ்வொரு ஆண்டும் எழுதிவைத்து படிக்கக் கூடிய உரையாகத்தான் இருக்கிறதே தவிர வேறல்ல.

அடுத்து, இந்த ஆண்டு தமிழகத்திலே ஏற்பட்ட கடுமையான மழை,வெள்ளம்—நேற்று பெய்த மழை வரையில்—காரணமாக பல கோடி ரூபாய்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக நெல், கடலை, மிளகாய், பருத்தி, கரும்பு போன்ற பயிர்கள் அத்தனையும் இயற்கையின் சீற்றத்தால் அழிந்துவிடுகின்றன. இவ்வளவையும் பார்த்துவிட்டு மத்திய அரசு 5 கோடி ரூபாய் நிவாரணம் அறிவித்து இருக்கிறார்கள். நமது மாநில அரசு கேட்டிருப்பது இந்த உரையிலே 128 கோடி ரூபாய். ஆகவே தமிழகத்தின்பொருளாதாரமே ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு மேல் அழிந்து இருக்கிறபோது எதிர்காலத்தில் தமிழகம் என்ன நிலைக்கு



ஆளாகும் என்று மக்களிடத்தில் பெரும் கவலை உருவாகியுள்ளது. இந்நிலையில் நமது மாநில அரசு மத்திய அரசை தட்டிக் கேட்பதிலும், வலியுறுத்திக் கேட்பதிலும் இந்த உரையில் தேக்க நிலையை ஏற்பட்டிருப்பதைக் கண்டு நாம் வருத்தமடைய வேண்டியிருக்கிறது. இது தேர்தல் அறிக்கையே தவிர வேறல்ல.

வெள்ளப் பாதிப்பால் பாசன வாய்க்கால்கள் 3,183 பழுதடைந்திருக்கின்றன. 4,211 சாலைகள் முழுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வளவையும் சீர் செய்ய வேண்டு மென்றால் பல நூறு கோடி ரூபாய் தேவைப்படும் என்பதை மாநில அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு பெய்த மழை காரணமாக 19—12—83 முதல் 22-12-83 வரையில் தஞ்சை மாவட்டமே வெள்ளக் காடாக காட்சியளித்தது. தஞ்சை மாவட்டத்திலே பாமணி ஆறு, கோரை ஆறு, அரிச்சந்திரா நதி, அடப்பாறு, வழவனாறு, மரைக்க கோரையாறு, வெண்ணாறு போன்ற ஆறுகளில் வெள்ளம் பெருகி உடைப்புகள் ஏற்பட்டன. திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்கள் இந்த வெள்ளத்தால் மிகவும் பாதிப்பிற்குள்ளாயின. அமைச்சர்கள் சென்று பார்த்து இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் எலிகாப்டரில் சென்று பார்த்து இருக்கிறார்கள். இந்த பாதிப்பின் போது பொதுப் பணித் துறை அதிகாரிகளிடம் சாக்கு தாருங்கள், சவுக்கு கட்டைத் தாருங்கள் என்று கேட்டோம். திருத்துறைப்பூண்டியில் இருக்கிற பொதுப்பணித்துறை அதிகாரிகள் அதற்கு எஸ்.சி. பர்மிஷன் வேண்டும், டி.இ. பர்மிஷன் வேண்டுமென்று சால்சாப்பு சொன்னார்களே தவிர, அந்த உடைப்புகளை அடைப்பதற்கு அவர்கள் முன் வரவில்லை. இதனால் 23-ம் தேதி முதல் 31-ம் தேதி வரையிலும் திருத்துறைப்பூண்டி—பட்டுக்கோட்டை போக்குவரத்தும், மன்னார்குடி—முத்துப்பேட்டை போக்கு வரத்தும் பாதிக்கப்பட்டது. இதனால் மக்களை சந்திப்பதற்கு கூட 10 தினங்கள் முடியவில்லை. அமைச்சர்கள் கூட அந்தப் பகுதிக்கு போக முடியாத அவல நிலை ஏற்பட்டது. இந்த அலட்சியப் போக்கு காட்டிய அந்த அதிகாரிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 12½ இலட்சம் ஏக்கர் பயிர் செய்த சம்பா மகசூல் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அவை அத்தனையும் அறுவடைக்கு தயாராக இருந்தது. 50 ஆயிரம் ஏக்கர் தாளடி பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது. உளுந்து பயிரும் மூன்று முறை தெளிக்கப்பட்டு அடியோடு பாதிக்கப்பட்டது. வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 90 கோடி ரூபாய் அளவில் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். ஆனால் நான் சொல்வது பல நூறு கோடி ரூபாய் பாதிக்கப்பட்டிருக்கிறது. பருவ மழை ஒத்துவந்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் முன்னுக்கு வருவதற்கு இன்னும் குறைந்தது 15 ஆண்டுகள் ஆகும். பயிர் பாதுகாப்புத் திட்டம் என்று சொல்கிறார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளை பாதுகாக்க முடியும் என்று நம்ப முடியவில்லை. ஆகவே பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ஒரு ஏக்கருக்கு நஷ்டஈடாக 2 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தான் ஓரளவிற்கு அவர்களைப் பாதுகாக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல 1974-ம் ஆண்டு காவேரி நதி ஒப்பந்தம் ரத்து ஆனது. ஒன்பது வருட காலமாக மத்திய அரசு, மாநில அரசுகளும் சரியான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக தஞ்சை மாவட்ட விவசாயிகள் காலத்தோடு தண்ணீர் வராமல் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கிறார்கள். இப்பேது இந்த பாதிப்பை கவனத்தில் எடுத்துக்கொண்டு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி, காவேரி பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விவசாய நிலங்கள் உடைப்பினால் பாதிக்கப் பட்டு மண் மேடாகி இருக்கின்றன. அந்த மண்ணை அரசாங்க செலவிலே அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் ஆடு, மாடு, கோழி முதலியவை 20 ஆயிரத்திற்கு மேலே இன்று வெள்ளத்தால் இறந்திருக்கின்றன. ஆகவே அதற்குரிய நடவடிக்கையை எடுத்து நஷ்டயீடு வழங்க வேண்டும். இன்றைக்கு கடலை சுமார் 8 இலட்சம் ஏக்கரில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மிளகாய் பொறுத்த வரையில் கோடிக் கணக்கான ரூபாய் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் ஒட்டுமொத்தமாக தமிழகத்தை பாதித்திருக்கிறது. இதற்கெல்லாம் சர்க்கார் நஷ்டயீடு கொடுப்பதற்கு முன் வர வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் 317 கோடி ரூபாய் அரசு கடன் பெற்றிருக்கிறார்கள். ஆகவே 1977-லிருந்து 1984 ஆம் ஆண்டு வரையில் வெள்ளம், புயல், வறட்சி, இவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அனைத்து கடன்களையும் ரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு நெல்லிற்கு கொடுக்கக்கூடிய விலை போதுமானதாக இல்லை. ஆகவே மத்திய அரசை வற்புறுத்தி ஒரு குவிண்டாலுக்கு 20 ரூபாய் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல வருங்காலத்தில் விவசாயம் செய்வதற்கு விவசாயி களுக்கு இப்போதிலிருந்தே கடன் கொடுப்பதற்கும். அவர்களுக்கு விதைகளைக் கொடுப்பதற்கும் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 1-10)

அதேபோல் குத்தகை விவசாயிகள் 1977-ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையில்—இன்றைய தேதி வரையில்— தொடர்ச்சியாக புயல், வறட்சி, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, குத்தகை விவசாயிகளின் குத்தகை அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டு





கொள்கிறேன். 14-1-1984 முதல் குத்தகையை ஒத்திவைக்கும் சட்டம் ரத்தாகியிருக்கிறது. ஆகவே, இந்த குத்தகை அனைத்தையும் ரத்து செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ள நிவாரணம் பற்றி கவர்னர் உரையில் சொல்லப்பட்டு இருக்கிறது. 7,10,000 குடிசைகள் சேதம் ஆகிவிட்டன' என்று சொல்கிறார்கள். ஆனால், இந்த 7,10,000 குடிசைகளுக்கும் நிவாரணம் வழங்கிவிட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. நிவாரணம் கேட்டு மனுக்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன. அவைகள் பரிசீலிக்கப்படவில்லை. 24 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் ஹெலிகாப்டர் மூலம் நேரில் அதைப் பார்வையிட்ட பிறகு முதலமைச்சர் அவர்கள் கணக்கிட முடியாத அளவிற்கு சேதம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு அளிக்கப்படுகிற ரூ. 200 நிவாரணத் தொகை போதாது. அதை ரூ. 500 என்ற அளவிற்கு உயர்த்த வேண்டும். ஏற்கனவே கொடுக்கப்பட்டவர்களுக்கு பாக்கி தொகையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். திருத்துறைப்பூண்டி தொகுதியில், இடுங்காவனம் பகுதி, ஓவரூர் பகுதி, பாண்டிப்பகுதி, முத்துப்பேட்டை பகுதி ஆகிய வற்றில் பெரும்பாலான குடிசைகள், கோட்டூர் யூனியன் பகுதியிலும் திருத்துறைப்பூண்டி பகுதியிலும் அடியோடு கடலில் அடித்துச் சென்றுவிட்டன. அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணத் தொகையைக் கொண்டு பொங்கல் செலவு செய்து விட்டார்கள். அரிசி வாங்கிச் சாப்பிட்டு விட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீடு கட்டிக்கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட பகுதியில் வீடுகளைச் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேயாதிரி விவசாயத் தொழிலாளர்களுக்கு, குடிசைகள் இல்லாதவர்களுக்கு மேட்டுப் பகுதிகளிலே வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று பாதிக்கப்பட்டவைகளில் குடிசைகள், ஓட்டு வீடுகள் என்று பார்க்காமல்—ஓட்டு வீடு என்றால் மாடி வீடு என்று கருதி விடக்கூடாது—நிவாரணம் கேட்டால், கேட்ட அத்தனை பேர்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும்; கடன் வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

இறந்தவர்கள் எண்ணிக்கை 200-க்கு மேலாகிவிட்டது. இறந்தவர் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். முதலமைச்சர் 5,000 ரூபாய் என்று அறிவித்தார்கள். அது போதாது. 10,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று விவசாயத் தொழிலாளர்களுக்கு 44 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் என்னென்ன வழிகளில் செலவிடப் போகிறீர்கள் என்று தெளிவாகச் சொல்லவில்லை. அவர்களுக்கு எப்படி பாதுகாப்பு அளிக்கப்போகிறீர்கள் என்பதற்கு எந்தவிதமான குறிப்பும் இல்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் எந்த வேலையும் இல்லை. அறுவடை கிடையாது. மற்றத் தொழில்களும் அங்கே கிடையாது. அதனால் இன்றைக்கு விவசாயிகள் அங்கே பிச்சை எடுக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, நிவாரணமாக அங்கே செய்யப்படுகின்ற வேலைகளை் கான்ட்ராக்ட் விடாமல் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு சட்டப்படியான கூலி, 10 ரூபாய், 8 ரூபாய் என்று இருக்கிறது. ஆனால் மதுராந்தகத்தில் இந்த சட்டப்படியான கூலி கொடுக்காமல் விவசாயத் தொழிலாளர்களை கஷ்டப் படுத்துகிறார்கள். ஒரு அரிசனத் தெருவுக்குச் செல்ல பாதை வசதி இல்லை. அதிகாரிகளிடம் முறையிட்டால் அவர்கள் எதுவும் செய்வதில்லை. சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய காவல்துறை அதிகாரிகளும் வருவாய்த் துறை அதிகாரிகளும் அரிசனங்களுடைய முறையீட்டை கவனிக்காமல் நிலப் பிரபுக்களுக்கே சாதகமாக இருக்கிறார்கள். சட்டப்படி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் 16,000-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளில் பணியாற்றக் கூடியவர்களுக்கு மாதம் 150 ரூபாய்தான் சம்பளம். அவர்களுக்கு விடுப்பு என்பதே கிடையாது. அவர்கள் கொடுக்கக்கூடிய பொருளில் எடை குறைவாக இருந்தது என்று சொன்னால் உடனே நடவடிக்கை எடுக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்தில்





இன்றைக்கு அந்த ஊழியர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் 7-ந் தேதி ஒரு நாள் நெல் கொள்முதல் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் கோரிக்கையை வைத்து விடுப்பு எடுத்திருந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடும் மாவட்ட உணவு வழங்கும் தலைமை அதிகாரியோடும் பேசியபின் திரும்ப வேலைக்கு போனார்கள். நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் ஊழியர்கள் எல்லாம் 150 ரூபாய் போதாது, கூடுதல் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். விடுப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள். இவை போன்ற சில கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, உண்ணாவிரதத்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக குத்தகை பதிவு பற்றி சொல்ல வேண்டுமென்றால், வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்புகளைக் கருத்திற் கொண்டு குத்தகை தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இலட்சக்கணக்கான விவசாயிகள் குத்தகை பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் பகுதியில் ரங்கசாமி மூப்பனார் பினாமி நிலத்தில் ரங்கராஜன் விவசாயம் செய்கிறார். அவர் நியாயமான குத்தகைப் பதிவுக்கு நிலப் பதிவேடு அதிகாரியிடம் மனுபோட்டு இருக்கிறார். காவல் துறையினரும் வருவாய்த் துறையினரும் அவர் விவசாயி இல்லை என்று சொல்லி, அவர்மீது பொய் வழக்குப் போட்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி குத்தகை பதிவு செய்யவேண்டுமென்று போராட்டம் நடத்தி வருகிறோம். பொய் வழக்கை வாபஸ் பெற்று, அவர் பெயரில் உள்ள நிலத்தை குத்தகை பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

வேதாரண்யம் விம்கோ உப்பளத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை வைத்து, வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி உள்ளிட்ட எங்கள் மாவட்டத்தில் ஐந்து அமைச்சர்கள் வந்து இரவும் பகலும் கிராமம் கிராமமாகப் போய் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்கள். அமைச்சர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் அமைச்சர்களைப் பயன்படுத்தி ஆளும்கட்சி நண்பர்கள் நிவாரணப் பணிகளில் ஊழல் நடத்தியிருக்கிறார்கள். அதிகாரிகளை மிரட்டி ஊழல் செய்திருக்கிறார்கள். ஒரு பட்டியலை நான் வைத்திருக்கிறேன்.

(திரு. பொ. உத்திராபதி) [1984 பிப்ரவரி 18

(பிற்பகல் 1–20)

ஆக இப்படிப்பட்ட ஊழல்கள் வெள்ள நிவாரணத்தில் ரூபாய் 210 கொடுத்து கட்சிக்கு ஆள் பிடித்தார்கள். இதனால் கிராமத்தில் ஒற்றுமை சீர்குலைக்க விட்டார்கள். அரசாங்கம் இதை விசாரணை செய்து யார் தவறு செய்தாலும் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்திற்காக மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்தி தயவு தாட்சண்யமின்றி, மேலும் பணம் வாங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு மேதகு ஆளுநர் உரையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதன் முதலாக மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரத்திலே உள்ள மதுரை சர்க்கரை ஆலை என்ற ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்த சர்க்கரை ஆலை நிர்வாகத்தை அரசாங்கமே எடுத்துக் கொண்டு அந்த விவசாய மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்ததற்காக உண்மையிலேயே அந்தக் கரும்பு விவசாயிகளின் சார்பிலே, நானும் கரும்பு விவசாயி என்ற முறையிலே, இந்த அரசுக்கும், குறிப்பாக முதல்வர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், நான் என்னுடைய நன்றியறிதலை இந்த அவையின் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். இன்னும் அங்கே 55,000 சர்க்கரை மூட்டைகள் இருக்கின்றன என்று. முதன் முதலாக தொழிலாளர் களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும், கரும்பு விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதற்கும், அந்த சர்க்கரையை விற்பனை செய்வ தற்கான ஏற்பாடுகளைச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கு மென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மதுரை மாவட்டம் கொடைக்கானலில் பெண் களுக்கென என்று ஒரு மகளிர் பல்கலைக் கழகம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பெண்களுக்கென ஏற்படுத்திய அந்த பல்கலைக் கழகத்தை ஏன் கொடைகானலில், மலையில் வைக்க வேண்டுமா? அங்கே எத்தனை பெண்கள் தங்கமுடியும்? மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு ஒரு அந்தஸ்து இருக்கிறது. அதைப்போல சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல இந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்திற்கு அந்த அந்தஸ்து கொடுக்கப்படவில்லை. ஏதோ ரிசர்ச் செய்கின்ற அடிப்படையில் அந்த பெண்கள் பல்கலை கழகத்தை அமைத்தால் அது சரியாக அமையாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பல்கலைக் கழகத்தை மதுரையிலோ, பெரிய பெரிய நகரங்களிலோ அமைக்கக் கூடாதா? மதுரையிலே—சென்னையிலே—கொடைக்கானல் மலைக்கு மேலே இல்லாமல் கீழே இருந்தால் சாலச் சிறந்ததாக இருக்குமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 18] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அதற்கு அடுத்தபடியாக 1980 ஆம் ஆண்டு சட்ட மன்றத்திலே நான் சொன்னேன். அதாவது ஓயவு பெறக் கூடிய என்.ஜி.ஓக் களுக்கு ரூ. 10,000 கொடுத்தால், வாலண்டரி ரிடையர்மெண்டு வாங்கிக் கொள்வார்கள் என்று அதையும் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இருந்தாலும் உண்மையிலேயே இது பாராட்டக் கூடிய ஒன்றல்ல. மாதம் ரூ. 20 வீதம் 20 வருஷமும், 10 மாதங் களுக்கும் கொடுக்கவேண்டும், அப்படிக் கொடுத்தால் நாளைக்கே ரிடையர் ஆகிப் போகிறவர்களுக்குப் பணம் சேராது. எப்படி இறந்தவர்களுக்கு ரூ. 10,000 கொடுக்கப்பட்டிருக்கிறது? என்.ஜி.ஓ சம்பளத்திலிருந்து மாதம் ரூ. 1 பிடிக்கப்பட்டு, அவர்கள் பணி யிலேயே இறக்க நேரிட்டால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ. 10,000 கொடுக்கப்படுகின்றது. அது போலவே என்.ஜி.ஓக்கள் சம்பளத்திலிருந்து மாதம் ரூ. 1 பிடித்தால்— கிட்டதட்ட 10 இலட்சத்திற்கும் மேலாக என்.ஜி,ஓக்கள் இருக்கிறார்கள். ஆக மாதம் ரூ. 1 பிடித்தால் கூட 10 இலட்சம் பேரிடமிருந்து வருஷத்திற்கு ரூ. 1,20,00,000 கிடைக்கும். இவ்வாறு நம்முடைய அரசாங்கம் அவர்களுக்கு ரூ. 10,000-ஐ அவர்கள் ஓய்வு பெற்ற வுடன் கொடுப்பதற்கு முன்வருவார்களேயானால், பல பேர்கள் வாலண்டரி ரிடையர்மெண்டு வாங்கிக் கொள்வார்கள். அதன் மூலம் காலியாகும் இடத்தில் வேறு நபர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். இதை நம்முடைய அவை முன்னவர் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டு மென்று ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக பெண்களுக்குப் பல்கலைக் கழகம் ஆரம் பித்தோம். இன்றைக்கு படித்த பல பெண்கள், ஆயிரக்கணக்கான பெண்கள், பி.ஏ., எம்.ஏ., படித்துவிட்டு, வேலை இல்லாமல், பிழைப்பதற்கு வழி இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக் கின்றார்கள். டெவலப்மெண்டு கார்ப்பொரேஷன் ஃபார் விமன் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பின் மூலம் யார் யார் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுவதோடு, தொழில் நடத்துவதற்கு உதவி செய்ய முன் வந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். உதாரணமாக மாவு அரைக்கும் கிரைண்டர் போன்றவைகள் வாங்குவதற்கு பாதி மான்யம் பாதி கடனாகக் கொடுத்து நாம் உதவி செய்வோமே யானால், சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நர்சரி பள்ளிகளை கிராமப்புறங்களில் நடத்து வதற்கும் வசதி செய்து கொடுக்க முன் வந்தால் படித்த பல பட்டதாரி பெண்களுக்கு பிழைப்பிற்கு வழி ஏற்படும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த மன்றத்திலே பலமுறை நான் சொல்லி யிருக்கிறேன். பெண்களுக்கு என்று பாலிடெக்னிக்குகள் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பணம் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு பிரைவேட்டாக, தனி நபர்களுக்கு பாலிடெக்னிக்கு

களைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலைகளை அரசு ஏற்படுத்தியிருக்
கிறது. இன்று குறிப்பாக ஏழைப் பெண்களோ,
ஆண்களோ, அந்த பாலிடெக்னிக்குகளில் சேர முடியாத
நிலைமைகள் இருக்கின்றன. இதற்காக நீங்கள் ஷிப்டு முறையைக்
கூட கொண்டு வரலாம். ஒவ்வொரு ஷிப்டுக்கும் 200 பேர்கள்
என்று போட்டு, காலையில் 8 மணி முதல் மாலை 1 மணி
வரை என்றும், பிறகு இன்னொரு ஷிப்டு என்று போட்டு
நடத்தலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை நீங்கள் ஏற்படுத்திக்
கொடுத்தால் பெண்கள் படிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய முதல் அமைச்சர்
அவர்கள், பெண்களுக்காக பல காரியங்களைச் செய்து கொண்டு
வந்தாலும் கூட, உத்தியோகங்கள் கொடுப்பதிலே—இன்றைக்கு
பி.டி.ஓக்கள் போடுகிறார்கள்—அதிலே பெண்களுக்கு வாய்ப்புக்
கொடுக்கக்கூடாதா? பெண்களுக்குத் தகுதியில்லையா? ஆண்கள்
செய்கிற வேலையைவிட பெண்கள் அதிகமாக நல்ல
முறையிலே திறமையான முறையில் சிறப்பான முறையிலே
செய்வார்கள். ஆனால் இப்போது பெண்கள், ஒரு முக்கிய
சேவிகாவாகச் சேர்ந்தால் அவர்கள், முக்கிய சேவிகாவாகத்தான்
ரிட்டையராக வேண்டியிருக்கிறது, ஏன் இந்த பார்சியாலிட்டி
காட்டவேண்டும். அந்த பார்சியாலிட்டி காட்டாமல், பெண்
களுக்கும் சம வாய்ப்பு கொடுத்தால் அது இதர மாநிலத்திற்குக்
கூட ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில்
நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து, இந்த கிராப் இன்ஸூரன்ஸ் திட்டம். நான்
பலமுறை இந்த மன்றத்திலே இதைப் பற்றிச் சொல்லியிருக்
கிறேன். அதை ஓரளவிற்கு அமுல்படுத்தினாலும்கூட, இன்றைக்கு
நெல்லுக்கு மட்டும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த
நெல்லுக்குக் கொண்டு வந்ததைப் போல் மற்ற கிராப்ஸ்களுக்கும்
கொண்டு வரவேண்டும். குறிப்பாக, இன்றைக்கு வாழைக்கு
முடிகொத்து நோய் வந்து அவைகள் முழுவதுமாக பாதிக்கப்படக்
கூடிய நிலைமையிருக்கிறது. நம்முடைய தற்காலிக சபாநாயகர்
அவர்களுக்கு இது தெரியும். ஏன் என்றால், அவர்கள் வாழைத்
தோப்பு வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி திராட்சைக்கும்
கொண்டு வரவேண்டும். திராட்சையை இன்று 30 சென்ட் 40
சென்ட் என்றுதான் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்
சிறிய, சிறிய விவசாயிகள். ஒரு மழை பெய்து விட்டால் அந்த
திராட்சையெல்லாம் வீழ்ந்துவிடுகிறது. அவர்களால் ஒன்றுமே
செய்யமுடியவில்லை. கடலை போன்ற கமரிசியல் கிராப்ஸ்க்கும்
இந்த திட்டத்தைக் கொண்டு வந்து அமுல்படுத்தினால்,
ஏராளமாக உள்ள சிறிய விவசாயிகள் இதனால் மிகவும் பயன்
அடைவார்கள் என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.



அதோடு மாத்திரம் அல்லாமல், இன்றைக்கு வறட்சி ஏற்பட்டு
இருக்கிறது. பிறகு தற்போது வெள்ளப் பாதிப்பும் ஏற்பட்டு
இருக்கிறது. குறிப்பாக வறட்சியை எடுத்துக்கொண்டால், நல்ல
முறையிலே வேலை நடந்தது. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு குழாய்
கிணறு என்று நாம் போட்டோம். அப்படிப் போட்டாலும்
கூட இன்றைக்கு ஒவ்வொரு குழாய்க்கும்—உதாரணத்திற்கு
வாடிப்பட்டியை எடுத்துக் கொண்டால் அங்கே 100 குழாய்கள்
போடப்பட்டிருக்கின்றன,— அப்படி 100 அடிக் குழாய்கள்
போடுவதைக் காட்டிலும், ஒரு காம்ப்ரெஹென்சிவ்வாக—
ஒவ்வொரு அடிக் குழாய்க்கும் 20 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம்
ரூபாய் வரையில் செலவு செய்யப்படுகிறது. மியர் நேஷனல்
வேஸ்ட் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கிறது.
இப்பேர்ப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாற்றி, 10
கிராமங்கள், 15 கிராமங்கள் என்று இணைத்து, காம்ப்ரெ
ஹென்சிப் ஸ்கீமாகப் போட்டு, நாம் செய்தால், இதனால்
பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். இன்றைக்கு
தஞ்சாவூர் ஜில்லாவை மட்டும் எடுத்துக்கொண்டால் அங்கே
கிட்டத்தட்ட 10 லட்சம் ஏக்கர்களிலே நெல் விவசாயம் செய்யப்
படுகிறது. 2 நாளைக்கு முன்பு நான் ஆங்கிலப் பத்திரிகையிலே
பார்த்தேன். 3 லட்சம் ஏக்கர் முழுமையாக பாதிக்கப்பட்டு
இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 3 லட்சம் ஏக்கர்கள்
என்பது, 4 லட்சம் ஏக்கர்கள் என்று கூட இருக்கலாம். 1 ஏக்கர்
நெல் விவசாயம் செய்யவேண்டும் என்றால், ஒரு விவசாயி,
ஆயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த
ஆயிரம் ரூபாய் செலவு செய்தால் அவர்களுக்கு வரக்கூடிய
வருமானம் 2,500 ரூபாய்தான் வருகின்றது. எனவே இப்படி
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டம்மட்டுமல்லாமல்
நம்முடைய தமிழ்நாட்டில் எங்கங்கே விவசாயிகள் பாதிக்கப்பட்டு
இருக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் ஒரு ஏக்கருக்கு
ஆயிரம் ரூபாய் என்று கொடுத்தால், அவர்கள் செலவழித்த
பணமாவது கிடைக்கும். எனவேதான் இந்த கிராப் இன்ஸூ
ரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இன்றைக்குப், பல கிராமங்களில்,
50 சதவீதத்திற்கு மேல் உள்ள நிலங்கள் வறட்சியாக,
அதாவது பாசன வசதியற்றதாக இருக்கும் நிலைமையிருக்கிறது.
இதைப் பற்றி ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். நான்
இந்த மன்றத்திலே பலமுறைகள் சொல்லியிருக்கிறேன். அப்படி
பல இடங்களில் மேட்டுப்பாங்கான இடங்களில் பாசன வசதி
யற்ற இடங்களில் ராட்சச கிணறுகளை வெட்டி, 1 லட்சம், 2
லட்சம் செலவு செய்து அவைகளை வெட்டி, ஓரே சமயத்தில்
50 ஏக்கர்களுக்கு பாசனம் அளிக்கக்கூடிய வகையில் செய்ய
வேண்டும். நாம் இதற்கெல்லாம் விவசாயிகளைக் கேட்க
வேண்டிய அவசியமில்லை. அரசாங்கம் எப்படி மின்சார போஸ்ட்
மரங்களைப் போட்டு, நிலத்தை எடுத்துக் கொள்கிறதோ, அது
போல் பெரியபெரிய கிணறுகளையும் போட்டு, பம்புசெட்டுகளை

வைத்து அவர்களுக்கு பாசன வசதி செய்து கொடுத்தால் நல்லது. அதற்காக அவர்களிடமிருந்து வாட்டர் செஸ் என்ற அடிப் படையிலே நாம் பணத்தை வசூல் செய்து கொள்ளலாம். அரசாங்கம் சும்மா பணத்தைச் செலவு செய்யவேண்டாம். மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையிலே அதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு சில ஏரியாக்களை டார்க் ஏரியாக்கள் என்று எடுத்து இருக்கிறார்கள். அப்படி டார்க் ஏரியாக்களாக இருக்கிற அந்த நிலங்களை எல்லாம் பார்த்து, அந்தந்த ஊர் களிலே ஒரு தனி கவனம் செலுத்தி, எப்படி நோய்வாய்ப்பட்ட குழந்தையை தாய் மிக கவனத்தோடு பார்த்துக் கொள்வாளோ அதைப்போல, இந்த விஷயத்திலும் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 1-30)

அடுத்தது வேலை வாய்ப்பு. இந்த வேலை வாய்ப்பு திட்டத்தில் உண்மையிலேயே எவ்வளவு பணம் செலவழிக்கப் படுகிறது. பாம்பு கடி சிகிக்சைப் பணியில் இருக்கும் ஊழியர் களுக்கு 100 ரூபாய் சம்பளம். இது நியாயம் தானா. இது நல்லதே இல்லை.. (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்): பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் —விவாதம்.

(தொடர்ச்சி)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: (தொடர்ச்சி) மாண்புமிகு பேரவைத்தலைவர்அவர்களே, காலையில் பாம்புக்கடி வைத்தியர் களைப்பற்றிச் சொன்னேன். ஒரு இன்டர்வ்யூ நடத்தினார்கள். அவர்களுக்கு ரூ. 100 சம்பளம் கொடுக்கிறார்கள். இந்த ரூ. 100 சம்பளத்தை வாங்கிக் கொண்டு அந்த நபர் சாப்பிடுவாரா அல்லது அவர் குடும்பத்திற்குக் கொடுப்பாரா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்து அவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரூ. 1,777 கோடி அளவிற்கான பட்ஜட்டை சென்ற முறை சமர்ப்பித்துள்ளார்கள். நமது பாரதத் தலைவர், உலகம் போற்றக்கூடிய உத்தமத் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் இருக்கும்போது அதிகப்படியான மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் அப்போதிருந்த ஜில்லா போர்ட்களைக் கலைத்து விட்டு பஞ்சா யத்து ராஜ்யம் ஏற்படுத்தி, பஞ்சாயத்துயூனியன்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு யூனியனிலும் இருந்து 100-200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம். ஆகவே ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நிரிந்தரமான வேலை வாய்ப்பினை அமைத்துக் கொடுப்போமானால் யூனியன் ஒன்றுக்கு 500 முதல் ஆயிரம் பேர்கள் வரைக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்படும். அப்போது தொகுதி ஒன்றுக்கு ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கமுடியும். ஆகவே அப்படி ஏழை எளிய மக்களுக்கு நிரந்தரமான வேலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில், வெள்ளத்தினால் 7,10.000 குடிசைகள் அழிக்கப்பட்டு விட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். எட்டு இலட்சம் குடிசைகளுக்கு மேல் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 1970-ல் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நிரந்தர வீட்டு வசதி அமைத்துக் கொடுக்க முடியாத நிலை. ஆகவே நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு எப்படியும் நிரந்தரமாகயிருக்கக்கூடிய அளவிற்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். தாட்கோ மூலமாகவோ அல்லது ஹட்கோமூலமாகவோ அல்லது உலக வங்கி உதவியைப் பெற்றோ—திருப்பிக் கட்டக் கூடிய முறையில்—நல்லமுறையில் இடிந்து போகாத அளவிற்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பது சாலச்சிறந்ததாக இருக்கும்.

அது மட்டுமல்ல. இன்று ஹரிஜன் பிரச்னையை எடுத்துக் கொண்டால், ரூ. 4,000 க்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது, இடைக்காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் உயிர் கொடுத்து ரூ. 4000 என்பதை ரூ. 6000 என்ற அளவில் உயர்த்தி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று காலையில் கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 10,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். அந்த பத்தாயிரம் வீடுகளை 1984-ம் ஆண்டு முடிவதற்குள்ளாக கட்டிக்கொடுத்தோம் என்ற பெருமையை நீங்கள் தேடிக்கொள்ள வேண்டும்.

ஸ்டேட் ஹரிஜன் வெல்பேர் கமிட்டி என்றிருக்கிறது. நான்கு ஆண்டுகள் முடியப்போகின்றன. சட்டசபைக்கு நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் முடியப்போகின்றன. அப்படி நான்காண்டுகள் முடியப்போகிற இந்த நேரத்தில்கூட, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் அந்தக் கமிட்டி இன்னும் அங்கீகாரம் செய்யப்பட்டு வெளியிடவில்லை என்றால் வெளியே இருக்கக்கூடிய ஹரிஜனங்கள் என்ன நினைப்பார்கள்? நாங்கள் சட்டசபையில் பேசிவிட்டுப் போகலாம். பிற்பட்டோர் நலக் குழுவை அங்கீகாரம் செய்து அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று, வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஹரிஜன் வெல்பேர் கமிட்டியை அமைக்காது இருக்கக் காரணம் என்ன என்று வெளியே இருக்கிறவர்கள் கேட்கிறார்கள். அதை இந்தச் சட்டமன்றத் தொடர் முடிவதற்குள்ளாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவு கொடுக்கிறோம். அதற்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் அது நன்றாக இருந்தாலும்கூட, இன்று, எதை மனதில் நினைத்து அரசு செய்ததோ, முதல் அமைச்சர் அவர்கள் எந்தப் பிள்ளைகளுக்குப் பயன்படவேண்டும் என்று செய்தார்களோ, அதில் பல தப்புத் தவறுகள் நடக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாம் முதியோருக்கு பென்ஷன் கொடுக்கிறோம். முதியோர்களில் ஒரு ஆயிரம் பேர் மனு போட்டால் பத்து பேர்களுக்குத்தான் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு அதாவது பாக்கிப் பேர்களுக்கு கிடைக்கவில்லை. ஆகவே இதை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஜூன் மாதமே சொன்னேன். சுகாதாரத்தை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு மூளைக் காய்ச்சல் நோய், லெப்ரசி, இன்னும் காசநோய் போன்ற நோய்கள் கிராமப் பகுதிகளில் அதிகமாக உள்ளது. ஓரளவிற்கு கட்டுப்படுத்தியிருந்தாலும், அவைகள் கிராமப்புறங்களில் இருக்கத் தான் செய்கின்றன. சென்ற ஜூலை மாதமே 7, 8 டிஸ்பென்சரிகளுக்கு அரசாங்கம் சாங்ஷன் செய்து அறிவிப்பு செய்தது. அப்படி அறிவிப்பு செய்து அதற்காக ரூ. 10,000 பணம் கட்டி, 2 ஏக்கர் நிலமும் கொடுத்து, கட்டிடத்தையும் இலவசமாகக் கொடுத்தும்கூட, இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படவில்லை. இது நியாயமா, தர்மமா என்பதை





நிதியமைச்சர் அவர்களும், இங்குள்ள மற்ற அமைச்சர்களும் நினைத்துப் பார்க்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. டேனிடா என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை விரிவுபடுத்திக் கொண்டு வருகிறோம். அதற்காக தென் ஆற்காடு ஜில்லா, சேலம் ஜில்லா ஆகியவைகளை எடுத்து, அந்தத் திட்டத்தை நல்லமுறையிலே பரப்புவதற்காக ஏற்பாடு செய்து வருகின்றபோது, இந்தத் திட்டத்தையாவது எல்லா ஜில்லாக்களுக்கும் விரிவுபடுத்தி, ஆங்காங்கே மருத்துவமனைகளை ஆரம்பித்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

கடைசியாக இரண்டொரு வார்த்தைகள் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நமமுடைய முதல்வர் அவர்கள் இடத்திலே சில திட்டங்கள், அதுவும் நீர்ப்பாசனம் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. இரண்டாண்டு காலமாக கையெழுத்து ஆகவில்லை, அதை செயலுக்கு கொண்டு வர முடியவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக என்னுடைய தொகுதியிலே தெப்பத்துப்பட்டி என்ற ஊர் அருகில் அருகவலலி ஓடை திட்டத்திற்கு 15 இலட்சம் ரூபாய் எஸ்டிமேட் போட்டு எல்லாம் சாங்ஷன் வரக்கூடிய நேரத்தில், அது முதல்வர் அவர்கள் கையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதேபோன்று என்னுடைய பழைய தொகுதியாகிய சோளவந்தான் தொகுதியில் மஞ்சமலை அருவி ஓடைத் திட்டம், அதுவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையில் இருக்கிறது. இவைகளை எல்லாம் சீக்கிரமாக சாங்ஷன் செய்தால், தண்ணீர் உள்ள காலத்தில் தேக்கிவைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாக என்று எத்தனை தடவை சொல்வீர்கள். கடைசி என்றால் ஒரு தடவைதான் வரவேண்டும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். ரோடு, பாலம் போன்றவைகள் மழைக் காலங்களில் மிகவும் பழுதடைந்து இருக்கிறது. அவைகளையெல்லாம் உடனடியாக சரி செய்வதில்லை. என்னுடைய நிலக்கோட்டை தொகுதியில், வெங்கடாசரி கோட்டைக்கும், மல்லன்னபட்டிக்கும் இடையில் ஒரு பாலம் மிகவும்பழுதடைந்த நிலையில் இருக்கிறது. மிகவும் 'டிலாபிடேட் கன்டிஷனில், இருக்கிறது. பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது தெரியும். அது அப்படியே ஆடுகின்றது. அதனால் எத்தனையோ உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். அதேமாதிரி, வத்தலகுண்டுக்கு அருகில் மஞ்சளாறு அணையில் இரு பாலம் இருக்கிறது. அதுவும் ஆடுகின்றது. அதையும் சரி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டு, ஆளுநர் அவர்களின் உரையை வரவேற்று அமர்கிறேன்.

[1984 பிப்ரவரி 18

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை கூற
விரும்புகிறேன். புதிதாக இந்த அறிக்கையில் குறிப்பாக 8
மாவட்டங்களைப் பிரித்து புதிய மாவட்டங்களை உருவாக்கி
இருக்கிறீர்கள். இப்படி மாவட்டங்களைப் பிரிப்பதினால்,
மக்களுடைய நலனுக்கும், நீதி நிர்வாகம் நல்லமுறையில்,
செயல்படவும் அவைகள் பயன்படும். ஆகவே, அந்த முறையில்
இந்த மாவட்டங்களைப் பிரித்தமைக்கு முதலிலே நான் அதை
வரவேற்கிறேன்.

மேலும், நம்முடைய அரசுப் பணியாளர்களுக்கு ரூ. 10,000
அவர்கள் ஓய்வு பெறும்போது கொடுப்பதாக அறிக்கையில்
கூறியுள்ளார்கள். அது மிகப் பெரும்பான்மையான அரசு ஊழியர்
களுக்கு திருப்தி அளிக்கவில்லை. காரணம், மாதம் ஒன்றுக்கு
ரூ. 20 வீதம் 250 மாதங்களுக்கு கொடுத்தால்தான், ரூ. 5,000
சேர்ந்து ரூ. 10,000 கிடைக்கும். அந்த அளவிற்கு கிட்டத்தட்ட
250 மாதங்கள் கொடுத்த பிறகுதான் அதுவும் அரசாங்கம்
மேலும் ரூ. 5,000 போட்ட பிறகுதான் அதை செயல்படுத்த
முடியும். ஆகவே, அரசு இதனை பரிசீலனை செய்து, இந்த
ரூ. 5,000 அதிகமாக கிடைப்பதற்கு வேறு வழிமுறைகளைச்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு வழங்கும்
ரூ. 10,000-ஐவிட அதிகமாக பணம் வருவதாகச் சொல்வதால்,
நடைமுறை பொருளாதாரத்தை வைத்து. முழு தொகையை
அளிக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு அரசு
அதிகாரிகள் மூலமாக வசூல் செய்வதைஅறவே நிறுத்தவேண்டும்.
திட்டத்தின் மூலமாக அதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். காரணம் யாதெனில் நிதிவசூல் செய்கிற
போது அரசு தன்னுடைய நிலையில் இருந்து ஒரு உதவி அவர்
களுக்கு செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். திரு. இராசாசி
அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மதுவிலக்கை அமல்
படுத்தியபோது, விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார்கள்.
அது போல்,ஏதாவது புதியவரித்திட்டங்கள் மூலமாக ஏற்பாடு
செய்து தமிழகத்திலே இந்த சத்துணவுத் திட்டத்தை அமல்
படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு வரையில் வரலாறு காணாத வறட்சி இருந்த
காரணத்தினாலே மத்திய அரசு 68 கோடி ரூபாய் கொடுத்
திருக்கிறது. அதோடு மாநில அரசும் சேர்ந்து மொத்தம் 115
கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்திய அரசின்
தலைமை அமைச்சர் பாரதப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி
அவர்கள் அறிவித்து மாநில அரசு துயர் துடைப்புப் பணிகளைச்
செய்துள்ளது.

கடந்த 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெய்த
அடைமழை காரணமாக தென் ஆற்காடு மாவட்டம், தஞ்சை
மாவட்டம், திருச்சி மாவட்டம்,புதுக்கோட்டை மாவட்டங்களில்



எல்லாம் உயிர் சேதமும் பெருத்த அளவில் பொருட்சேதமும்—
விளைந்த விளைச்சல்கள்–தானிய வகைகள், நெல், கரும்பு
கடலை போன்றவை சொல்லமுடியாத அளவிற்கு நாசமடைந்
திருக்கின்றன. மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்
தார்கள். வெள்ள தினால் பாதிக்கப்பட்ட மக்களை மாண்புமிகு
தமிழக முதல்வர் எம். ஜி.ஆர். அவர்கள் உடனடியாகச் சென்று,
நே டியாகப் பார்வையிட்டு நிவாரண நடவடிக்கைகளை
மேற்பார்வையிட்டது பாராட்டத்தக்கது. அதே நேரத்தில்
காங்கிரஸ் கட்சியின் சார்பில் அன்புத் தலைவர் திரு.எம்.பி.எஸ்.
எம்.எல்.சி.. அவர்களும் நடிகர் திலகம் சிவாஜி, எம்.பி. அவர்
களும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்றபேரவை, மேலவை
நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் முதன்முதலில் பாரதப்
பிரதமருக்கு தந்தி கொடுத்து பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து
தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டினோம்.
அவரும் ரூபாய் 5 கோடி நிதி உதவி செய்து இந்தியப் பாதுகாப்பு
அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். வி. அவர்களையும் உடனடியாக
தமிழகத்திற்கு அனுப்பி, பாதிக்கப்பட்ட பகுதிகளை எல்லாம்
பார்வையிடச் செய்தார். மத்திய குழுவும் அண்மையில் பார்வை
யிட்டு மதிப்பிட்டுச் சென்றிருக்கிறது. ஆகவே தமிழகத்திற்கு
அதிக நிதி உதவ நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். வறட்சி போன்ற இயற்கை உற்பாதங்கள் வந்த
போதெல்லாம் மத்திய அரசு அதிக நிதியுதவி அளித்து வருகிறது.
உரிய தருணத்தில் அளித்த சேவைக்காகவும்முப்படையினருக்கும்
மாநில அரசு பாராட்டுத் தெரிவித்து உள்ளது. இந்தச்
சந்தர்ப்பத்தில் எனது பாராட்டுதலையும் அவர்களுக்கும் இந்திய
அரசுக்கும் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
தமிழகத்திலே உள்ள விவசாயிகளின் விளைபொருள்கள், பயிர்கள்
சேதமடைந்துள்ளது. ஆகவே சிறிய விவசாயிகளுக்கு நிலச்
சொந்தக்காரர்களுக்கு அரசு ஏதாவது உதவி அளிக்க முன்வர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல்லும் வைக்கோலும்
பாதிக்கப்பட்டுள்ளது. ஏதாவது அவர்களுக்கு சலுகை செய்தால்
அதன் மூலமாக அவர்கள் நன்மைகள், அனுகூலங்கள் பெற
முடியும். கிட்டத்தட்ட 7 லட்சத்து 10 ஆயிரம் பேர்கள்
நிவாரணம் பெற்றிருக்கிறார்கள். மேலும் நிலமற்ற ஏழை எளிய
விவசாயிகளுக்கு வேறுஇடங்களில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கும்
உடனடியாக நடவடிக்கை எடுத்து செயல்பட வேண்டுகிறேன்.

கடந்த 5, 6 நாட்களாக மீண்டும் அடை மழை தொடங்கி
கடலோர மாவட்டங்கள் முழுவதிலும் சகல பயிர்களையும்
இன்றைக்கு அழித்துவிட்டு இருக்கிறது. சில மாவட்டங்களில்
புஞ்சை பயிர்களை வெகுவாகப் பாதித்து உள்ளது. குறிப்பாக
கொத்தமல்லி, கடலை, பருத்தி ஆகிய பயிர்கள் முழுவதும்
சேதமடைந்துவிட்டன. சேலம் மாவட்டத்திலே என்னுடைய
ஆத்தூர்தாலுகாவில் மிக உயர்ந்த ஸ்வின் பருத்திஉற்பத்தியாவது
வழக்கம். இந்த ஆண்டு அடைமழையின் காரணமாக ஸ்வின்
பருத்தி பயிர் செய்துள்ள விவசாயிகள் மிகுந்த இழப்புக்கு
ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மழையினால் ஏற்பட்டிருக்கிற
விளைச்சல் சேதங்களை, பகுதிவாரியாகக் கணக்கிட்டு, சிறிய
நடுத்தர விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மத்திய
அரசு நிதி உதவி அளித்து உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ்
செய்யப்படுகிற வேலைகளின் தரம் மிகவும் மோசமாக உள்ளது.
உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் ஒவ்வொரு
ஊராட்சி ஒன்றியத்திற்கும் 25 அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக்
கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளிலே தேசிய கிராமப்புற
வேலைவாய்ப்பு திட்டம் என்ற பெயர் பொறிக்கப்பட்டு உள்ளது.
இதுபோன்று வேலைகளைச் செய்கிறபோது மிகுந்த அக்கறை
யோடு இருக்கவேண்டும். தேசிய வேலைவாய்ப்பு திட்ட நிதியைக்
கொண்டு செய்யப்படுகிற வேலைகள் தரமுள்ளவையாக நல்ல
முறையில் செய்யப்படக்கூடிய முறையிலே இருக்கவேண்டும்.
தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலமாக
சாலைகள் முதலியவை ஊராட்சிகளில், பேரூராட்சிகளில்
கட்டப்படுகின்றன. தன்னிறைவுத் திட்டத்தின்மூலமாக பாலங்கள்
கட்டப்படுகின்றன.

அதேபோல் பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும், இந்த
தேசிய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலமாக கழிப்பிடங்களை
கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கு
பார்த்தாலும் ஊராட்சிகளிலும்பேரூராட்சிகளிலும் கழிப்பிடங்கள்
கட்டமுடியாமல் இருக்கிறது. காரணம் இப்போது 15 ஆயிரம்
ரெவின்யூ கிராமங்களில் கழிப்பிடங்கள் கட்டிக்கொண்டு
இருக்கிறார்கள். இருந்தாலும் அந்த கழிப்பிடங்களுக்கு போதுமான
தண்ணீர் இல்லை. அதனால் அவைகள் மிகவும் மோசமாக
உள்ளது. ஆகவே எந்த ஊரில் பார்த்தாலும் கழிப்பிடங்கள்
சுத்தமாக இல்லாமல் இருக்கின்றன. ஆகவே இதை போக்கு
வதற்கு தேசிய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் ஒவ்வொரு
ஊராட்சி ஒன்றியத்திலும், ஒவ்வொரு பேரூராட்சியிலும்
சுத்தமான கழிப்பிடங்கள் கட்டித் தருவதற்கு நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை செய்யக்
கூடிய தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள சட்டக்கூலி
ஆண்டு முழுவதும் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக சேலத்திலிருந்து ஆத்தூர்
வரை மேட்டூரிலிருந்து குடிநீர் வழங்குவதற்கு இந்த ஆண்டு 47
கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த வேலையை 1-4-84
முதல்துவங்க இருக்கிறார்கள். ஆகவே அந்த குடிநீர் திட்டத்தை
செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் போன்ற இடங்களில்
மேல்நிலை தண்ணீர் தொட்டிகளை கட்டித் தருவதற்கு இடம்
கிடைக்காமல் அதிகாரிகள் ஒவ்வொரு பகுதியிலும் பார்த்துக்
கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதற்கு அரசு ஒரு நிலையான
இடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். என்னுடைய பகுதியில் மேட்டூரில் ஏத்தாப்பூர்,
குலத்தநாயக்கன் பாளையம், நரசிங்கபுரம், ஆத்தூர், தலைவாசல்
வரை மேற்கொண்டுள்ள குடிநீர் திட்டத்தை விரைவுபடுத்தி
செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆத்தூரில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சி,
பெரம்பலூர் ஆகிய பின்தங்கிய பகுதியில் உள்ள மக்கள் அதை
பயன்படுத்திக்கொள்வார்கள்.

ஆத்தூர் தாலுக்காவில் மரவள்ளிக் கிழங்கை கொண்டு
கூட்டுறவு துறையில் ஒரு குளுகோஸ் தொழிற்சாலையை நிறுவ
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 2, 3 ஆண்டு
களுக்கு முன்பாக தொழில் அமைச்சர் அவர்கள் இதுபோன்ற
குளுகோஸ் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு அரசின்
பரிசீலனையில் இருப்பதாக சொன்னார்கள். அந்த தொழிற்
சாலையை நிறுவுவதற்கு திட்டங்கள் தயாரித்து இருக்கிறோம்
என்று சொன்னார்கள். இந்தியாவிலேயே அதிகமாக மரவள்ளிக்
கிழங்கு பயிராகின்ற இடம் சேலம், அதிலும் குறிப்பாக சேவை
செய்கின்ற கூட்டுறவு சங்கங்கள் சேலத்தில் இருப்பதன்
காரணமாக இந்த குளுகோஸ் தொழிற்சாலையை அங்கு
ஆரம்பித்தால் அங்கு மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்யும் தொழி
லாளர்கள் மிகவும் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுக்காவில் ஒரு சர்க்கரை
தொழிற்சாலையை ஆரம்பித்து தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். ஆத்தூரில் உள்ள அரசினர் கலைக்கல்லூரிக்கு
பிற்பட்ட, ஆதிதிராவிட மாணவர்களுக்கு மாணவர் விடுதி ஒன்றை
கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்
ஆத்தூரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் 3ஆயிரம் மாணவர்களும்,
120 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். ஆகவே அந்தபள்ளி ஒழுங்காக
நடைபெறமுடியவில்லை. ஆகவே அந்த மேல்நிலை, உயர்நிலைப்
பள்ளியை இரண்டாக பிரித்து வேறு ஒரு இடத்தில் அமைக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

தனியார் நடுநிலைப்பள்ளி ஒன்றை உயர்நிலைப்பள்ளியாக
உயர்த்துவதற்கும் விண்ணப்பித்து இருக்கிறார்கள். ஆகவே அதை
ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஒரு உயர்நிலைப்பள்ளி துவங்கு
வதற்கு அரசிடம் அனுமதி கேட்டு இருக்கிறார்கள். அதை
அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து உயர்நிலைப்பள்ளி
கோரி வரும், ஆரியபாளையம், கல்பகனூர், ஆகிய ஊர்களுக்கு
உயர்நிலைப்பள்ளி அமைத்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

ஊராட்சிகள், பேரூராட்சிகள் தேர்தல் நடைபெறும் என்று
ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.
இப்போது ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் எந்தவிதமான
வேலைகளும் நடைபெறவில்லை. சாலைகள் அமைக்கவேண்டும்
தெருக்களுக்கு விளக்குகள் எரியு வைக்கவேண்டும்
என்றாலும்,

என்றாலும் அதிகாரிகளை பார்க்க வேண்டும் என்றால் பார்க்க முடிவது இல்லை. எந்த நிலையிலும் எந்தவிதமான வேலை களையும் செய்ய முடியவில்லை. ஆகவே அந்த அளவுக்கு இந்த ஊராட்சிகள், பேரூராட்சிகள் இருக்கின்றன. ஆகவே எந்த கட்சி வந்தாலும் பரவாயில்லை, தேர்தல் நடத்தினால் மக்கள் அவர் களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். உதாரணமாக சொல்லவேண்டும் என்றால் ஒரு ஊரில் கடந்த 6 மாத காலமாக தண்ணீர் இறைப்பதற்கு ரோலர் போடவேண்டும் என்று சொன்னால் அவர்கள் ரோலர் வில்லை. எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் அவர்களுக்கு போட அதிகாரிகளுக்கு ஏதாவது லாபம் கிடைக்கக்கூடிய பயக்கக்கூடிய வகையில் வருமானம் வரக்கூடிய நன்மை தான் பார்க்கிறார்கள். அந்த அளவுக்கு வேலைகளைத் பேரூராட்சிகளும் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சிகளும், பேரூராட்சிகளில் இருக்கின்ற அந்த வேலைகளை எடுத்து ஊராட்சிகள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமும், தேசீய வேலை அரசு திட்டத்தின் மூலமும் செய்யவேண்டும் என்று வாய்ப்புத் கொள்கிறேன். என்னுடைய பகுதியில் ஆத்தூரிலிருந்து வைத்தூர் கேட்டுக் செல்லுகின்ற சாலை வேலை 3 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த சாலையை கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின்மூலம் எடுத்துக்கொண்டாலும் 3 ஆண்டுகள் ஆகியும் அந்த வேலை செய்து முடிக்கப்படவில்லை.

ஆகவே அந்த மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பைத்தூர், தாள்குளம், கல்லுக்கட்டு ஆகிய பகுதிகளில் 1980-லேயே தேசீய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் வேலை துவக்கப்பட்டு அந்த வேலைகள் முடிவடையாமல் இருக்கின்றன. அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

சாலையோரங்களில் புளியங் கன்றுகளை வைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இதனால் எந்தவிதமான நன்மையும் இல்லை. தேசீய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்து 400 கன்றுகளை வைத்தார்கள்; அதில் ஒரு புளியங் கன்று கூட பிழைக்கவில்லை. ஆகவே தேசீய வேலைவாய்ப்புத் திட்டத்தில் செயல்படும் அதிகாரிகள் நல்ல முறையில் செயல்படுவதற்கு அரசு அவர்களைக் கண்காணிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளும் நல்லமுறையில் செயல்படும் விதத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. ஆர். தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆளுநர் உரையிலே எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக் காக என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். 13-2-1984ஆம் தேதியன்று வாசித்தளித்த ஆளுநர் உரையை நான் ஆராய்ந்து பார்க்கும்பொழுது. தமிழகத்திற்கு



வேண்டிய சரியான திட்டங்களையும், பொருத்தமான அம்சங் களையும் கொண்ட ஆளுநர் உரையாக இருக்கிறது. ஆகவே, தமிழக மக்கள் ஆளுநர் அவர்களுக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது. ஆகவே அவர்களுக்கு நானும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இந்த நாடு சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகள் ஆகிய போதிலும் கிராம நிர்வாகப் பரம்பரை பாத்தியத்தைத் தொடர்ந்து வைத்துக் கொண்டு ஏழை எளிய மக்களை வாட்டி, வதைத்து, கசக்கிப் பிழிந்து, அந்த மக்கள் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, கண்ணீர் சிந்துகின்ற நிலையை ஊர் அறியும், நாடு அறியும், உலகம் அறியும். அந்த ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்கும் முறையில் அந்தக் கிராம நிர்வாகப் பரம்பரை பாத்தியதையை ரத்து செய்து விட்டு, எழுத்தறிவு பெற்ற இளஞ்சிங்கங்களைத் தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்வு செய்து தமிழகம் முழுவதும், யார், எங்கு வேண்டு மானாலும் கிராம நிர்வாகப் பணியாளர்களாகப் பணியாற்ற வேண்டுமென்ற புதிய சுதந்திரத்தைத் தந்த புரட்சித் தலைவ ரவர்களைத் தமிழக மக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, நானும புரட்சித் தலைவரவர்களையும், தமிழக அரசையும் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை எளிய விவசாயிகளுக்கு 208 கோடி ரூபாய் கடன் நிவாரணத் திட்டமாகக் கொடுத்தும், நிலமற்ற ஏழைகளுக்கு நிலப் பட்டா வழங்கும் திட்டத்தைத் தந்தும், வீடற்ற ஏழை களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்தைத் தந்தும், குடி யிருப்பவர்களுக்கு வீட்டை சொந்தமாக்கும்திட்டத்தைத் தந்தும், மலிவு விலையில் மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கும் திட்டத்தைத் தந்தும், சிறுதொழிலுக்கு அபிவிருத்தித் திட்டத்தைத் தந்தும், படித்த பட்டதாரிகளுக்குப் பண உதவித் திட்டத்தைத் தந்தும், ஏழை எளிய விவசாயத் தொழிலாளர் களுக்கு ஜனதா உடை வழங்கும் திட்டத்தைத் தந்தும், ஆதி திராவிட மக்களுக்கு இட ஒதுக்கீடு அனைத்து இடங்களிலேயும் தரும் திட்டத்தைத் தந்தும், அனைத்து இடங்களிலேயும் வேலை வாய்ப்பு அதே ஆதிதிராவிட மக்களுக்குத் தந்தும், வீட்டிற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு திட்டத்தைத் தந்தும், தமிழகம் முழுவதும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தும், 1,01,956 ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு தந்தும், 67 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவுத் தந்தும் நன்மை செய்து வருகின்ற சரித்திர நாயகர் புரட்சித் தலைவர் அவர்களைத் தமிழகமக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, நானும் தமிழக அரசையும், புரட்சித் தலைவரவர்களையும் பாராட்டி, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தும், தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டுவந்தும், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டுவந்தும், ரோடில்லா ஊரெல்லாம் ரோடுகளைப் போட்டும், பேருந்து செல்லா சாலைகளிலே எல்லாம் பேருந்துகளை விட்டும், குடிநீர் இல்லா ஊர்களிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர்க் குழாய்த் தண்ணீரைப் பாயவிட்டும், பள்ளியில்லா ஊரெல்லாம் பள்ளி களையும், பால்வாடிகளையும், சுகாதார நிலையங்களையும், உயர்நிலைப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் தமிழகம் முழுவதும் தேவைக்குத் தக்கவாறு திட்டங்களைக் கொண்டு வந்தும், வறட்சி வந்தபோதிலும் வறட்சியை சமாளித்து, தமிழகத்தின் வளர்ச்சி மேலோங்கும்படி செய்து, தாழ்ந்து கிடந்த தமிழகத்தைத் தலைதூக்கி நிற்கும் படியான திட்டங்களைத் தந்தும் பணியாற்றுகின்ற புரட்சித் தலைவரவர்களைத் தமிழக மக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. நானும் புரட்சித் தலைவரவர்களையும், தமிழக அரசையும் பாராட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசைப் பார்த்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், திருரகுமான்கான்அவர்களும், திரு. இராசமாணிக்கம் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வரதராஜன் திரு. உத்திராபதி போன்ற எதிர்கட்சி உறுப்பினர்களும் குறை சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது விலைவாசி உயர்வைப்பற்றிப் பேசினார்கள். நான் சொல்கிறேன். தமிழகத்திலே இன்று இருக்கின்ற விலை நியாயமான விலைதான். அதாவது நியாயமான வகையில்தான் விலை உயர்ந் திருக்கின்றது என்பதுதான் எங்களுடைய கருத்து. திடீரென்று குறுக்கு வழியில் கொள்ளை அடிக்கும் வகையில், அதாவது தவறான வகையில் இந்த விலை உயரவில்லை. காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிவதற்கு முன்பு, இந்த நாட்டிலே வெள்ளைக்காரன் ஆட்சி புரிந்த காலத்திலே ஒரு படி பருப்பு 8 அணா. அப்படி ஒரு படி பருப்பு 50 பைசாவிற்கு விற்றபோது நான்கு முழ வேட்டியும் மூன்று முழத் துண்டும் கட்டி தலையில் எண்ணெய் கூட இல்லாமல் இருந்தோம். இப்போதும் அந்த நிலைமைதான் வேண்டும் என்று சொன்னால் எனக்கு ஆட்சேபனை இல்லை. இப்போது நாளடைவில் நாம் முன்னேறி இருக்கிறோம். வளர்ச்சி அடைந்திருக்கிறோம். நல்ல உடைகளை அடைந் திருக்கிறோம். கடிகாரங்களை அடைந்திருக்கிறோம். கண்ணாடியினை அடைந்திருக்கிறோம். கார்களை அடைந் திருக்கிறோம். எத்தனையோ விதமான வண்டிகளை அடைந்திருக்கிறோம். இந்த வளர்ச்சி நாளடைவில் ஏற்பட்ட தாகும். திடீரென்று ஏற்பட்டதல்ல. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 25 சதவீதம் முன்னேறி இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் 50 சதவீதம் முன்னேறி இருக்கிறோம். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் 90 சதவீதம் முன்னேறி இருக்கிறோம். இப்படிப் படிப்படியாக உயர்ந்திருக்கின்றோம்.



உழைப்பவர்கள், அரசு ஊழியர்கள், ஆலைத் தொழிலாளர்கள் ஆகியோர் சம்பள உயர்வு என்று போராடும்போது எதிர்க் கட்சியினர் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறீர்கள். அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. பட்டினி கிடப்பவர்களுக்காக நீங்கள் பாடுபடுவது வழக்கம். ஆளும் கட்சியினர் அவர்களுக்கு சோறு போடுவது வழக்கம். எனவே அதைத் தவறு என்று சொல்ல வில்லை. அப்படிப் போராடும்போது ஊதியஉயர்வு பெறுகிறார்கள். அவர்கள் 8 மணி நேரம் அலுவலகத்தில் வேலை செய்கிறார்கள். ஒரு மணி நேரம் அவர்கள் அசோசியேஷனிலே வேலை செய்கிறார்கள் ஆக மொத்தம் 9 மணி நேரம் வேலை செய் கிறார்கள். அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கின்றது. அந்த உழைப்பைப் பொறுத்து ஊதியம் கூடக் கிடைக்கின்றது. பெரிய அதிகாரிகளின் பொறுப்புக்கேற்ற தகுந்த சம்பளத்தை அவர்கள் பெறுகிறார்கள். அதேபோன்று பொருளுக்கேற்ற நியாயமான விலை கிடைக்கின்றது. எந்தப் பொருளையும் உற்பத்தி செய்கின்றபோது அதற்கு எந்த அளவுக்கு அடக்க விலை ஆகின்றதோ, அந்த அளவுக்கு நியாயமான விலையாக அமைந் திருக்கின்றது. திடீரென்று தவறான முறையில் தமிழகத்தில் விலை கூடவில்லை. அது ஒரே ஒரு ஆண்டுதான். இந்த நாடு சுதந்திரம் அடைந்த 37 ஆண்டு காலத்திலே ஒரே ஒரு ஆண்டுதான் குறுக்கு வழியிலே, வியாபாரிகள் கொள்ளை அடிக்கும் நிலையிலே விலைவாசி உயர்ந்திருந்தது. அந்த உயர்வினைப் பற்றி நான் சொல்லும்போது நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, ஆனால் அரசுக் குறிப்புக்களிலும், வியாபாரிகளின் குறிப்புக் களிலும் அது இருக்கின்றது. இந்த 37 ஆண்டுகளிலும் உள்ள அந்த அரசு குறிப்பேடுகளையும், வியாபாரிகளின் குறிப்பேடுகளையும் நீங்கள் சோதனை செய்து பார்த்தால் தவறான முறையிலே அல்லது, கொள்ளை அடிக்கும் வகையிலே விலைவாசிகூடியிருப்பது, ஒரே ஒரு வருஷந்தான். அதற்கு என்ன காரணம் என்பதைத் கண்டுபிடிக்க வேண்டும். அவ்வாறு விலைவாசி கூடியிருப்பது, தமிழகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட வருஷங் களிலே ஒரு வருஷமாகும். தமிழகத்திலே வறட்சி வந்த வருஷமாகும். தாய்லாந்து நாட்டிலே இருந்து இந்தியாவிற்கு அரிசி வந்த வருஷமும் அதுதான். ஆனால் வந்த அரிசி எங்கே போனதோ தெரியவில்லை. அப்போது 8 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கிடைக்க வில்லை. அதற்குக் காரணம் என்ன என்பதும் தெரியவில்லை. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட வருஷங்களில் ஒரு வருஷமாகும்.

மதிப்பிற்குரிய அவர்-பெயர்களைச் சொல்லக்கூடாது என்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள், அதனால் சொல்லவில்லை. அதாவது மதிப்பிற்குரிய முன்னாள் முதல்வர் அவர்கள் ஆண்ட வருஷங்களிலே அதுவும் ஒரு வருஷமாகும். அதுதான் 1974 ஆம் வருஷம் 1974 ஆம் வருஷத்திலே தான் அவ்வாறு இருந்தது. நேற்றையதினம் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் திரு. வரதராஜன் அவர்கள் இன்றைக்கு விவசாயிகளுக்கு இரண்டரை ரூபாய் சம்பளம் கிடைக்கின்றது; அதை வாங்கிக் கொண்டு அவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டார்கள்.

[பிற்பகல் 4-30]

அவர்கள் சொன்னது உண்மை—ரூ. 2½. ஆனால் வருஷத்தை மட்டும் மறந்துவிட்டார். 1974-லே ரூ. 2½. இன்றைக்கு 1984. அன்றைக்கு, 1974-லே 2½ ரூ. கூலி எடுக்க வாங்கிய ஆள், இன்றைக்கு ரூ. 5, ரூ. 6 வாங்குகிறான். ஏர் உழுபவர்களுக்கு 1974-லே ரூ. 5. இன்றைக்கு 1984-லே ரூ. 10. கொத்தனாருக்கு 1974-லே ரூ. 10, இன்றைக்கு ரூ. 20, ரூ. 25, ரூ. 30. அந்த அளவுக்குப் படிப்படியாகச் சம்பளம் உயரும்போது அதற்குத் தகுந்தவாறு பொருள் உற்பத்திச் செலவும் கூடுகிறது. அப்படி யானால் அந்தப் பொருள்களுக்கு இன்றைக்கு இருக்கக் கூடிய விலை நியாயமான விலை என்பதுதான் எங்களுடைய கருத்து. 1974-வது வருஷம் என்ன விலைக்குப் பொருள்கள் விற்றிருக் கின்றன என்று முதலிலே சொன்னேன். அரசிடத்திலே பட்டியல் இருக்கிறது, வியாபாரிகளிடத்திலும் பட்டியல் இருக்கிறது, நீங்கள் சரிபார்த்துக் கொள்ளலாம். அரிசி விலை ஒரு கிலோ ரூ. 8/-, 1974-லே. இன்றைக்கு 1984-லே ரூ. 4/- மிளகாய் வத்தல் ஒரு மூடை, 20 கிலோ கொண்டது, ரூ. 320 1974-லே. அப்படி யானால் ஒரு கிலோ வத்தல் ரூ. 16. இன்றைக்கு ஒரு கிலோ வத்தல் ரூ. 6. இன்றைக்கு 20 கிலோ கொண்ட மூடை ரூ. 120. ரூ. 6 கூடவா, ரூ. 16 கூடவா என்று நீங்கள் கணக்குப் பார்க்கலாம். 1974-லே 40 கிலோ கொண்ட மல்லி மூடை ரூ. 800 ஒரு கிலோ ரூ. 20. இன்றைக்கு 40 கிலோ கொண்ட ஒரு மூடை மல்லி ரூ. 200. ஒரு கிலோ மல்லி ரூ. 5. ரூ. 20 கூடவா, ரூ. 5 கூடவா? நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தவறுதலான முறையிலே என்றைக்கு விலைவாசி கூடியிருக்கிறது என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கத்திரிக்காய் அன்றைக்கு ரூ. 6; இன்றைக்கு ரூ. 4. தக்காளி அன்றைக்கு ரூ. 8; இன்றைக்கு ரூ. 4. தயவுசெய்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகவே, எங்களுடைய கருத்திலே இதெல்லாம் நியாயமான விலை. நியாயமான விலையிலே இருப்பதைத் தவிர, தவறுதலான விலையிலே இல்லை. இன்றைக்கு எந்தப் பொருளை எடுத்தாலும் நியாயமான விலையிலே கிடைக்கிறது. சம்பள உயர்வுக்கு ஏற்றாற்போல இது அமைந்திருக்கிறது. ஆகவே, எங்களுடைய அபிப்பிராயம் எல்லாம், எங்களுடைய மனப்பூர்வமான எண்ணம் எல்லாம் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நியாயமான விலை இருக்கிறது என்பதுதான்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசும்பொழுது முதலிலே விலை உயர்ந்திருக்கிறது என்று சொன்னார். பிறகு நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்டார். நான் முதலில் விலைவாசி உயர்ந்திருக்கிறது, ஆகவே, நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்கிறாரே, எதன் விலை உயர்ந்திருக்கிறது என்று கேட்டேன். அவர் அதற்குப் பதில் சொல்லாமலே சிரித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். ஆகவே, அவருக்கு நன்றியை சொல்லிக்கொள்கிறேன்.



என் தொகுதியிலே, யமனேஸ்வரம் பரமக்குடியிலே சுப்பிரமணிய சாமி கோவில் இருக்கிறது. அங்கே வைகை ஆற்றின் குறுக்கே தமிழக அரசு ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி டு எஸ். கொடிகுளம் சத்திரக்குடி வழியாக பேருந்து விட வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். பரமக்குடி டு மீசல் வரை பேருந்து விட வேண்டு மென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி டு சாலை கிராம் நயினார் கோவில் வழியாக பேருந்து விட வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி டு பாண்டியாறு நயினார் கோவில் வழியாக பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பரமக்குடி டு மானாமதுரைக்குப் பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மானாமதுரை டு திருபுவனம் வரை பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பரமக்குடி டு பார்த்திபனூர் லட்சுமிபுரம் வழியாகப் பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பரமக்குடி டு பார்த்திபனூர் புதுக்குடி வழியாகப் பேருந்து விட வேண்டு மென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்

திரு. உத்திராபதி அவர்கள் காலையில் பேசுகிறபோது சமீபத் தில் பெய்த மழையினால் தஞ்சை மாவட்டத்தில், நெல், கரும்பு, பருத்தி, வாழை போன்ற பயிர்கள் எல்லாம் தண்ணீரில் அழிந்து போனது என்று சொன்னார்கள். இந்த பாதிப்பினால் விலை வாசிகள் எல்லாம் மிகவும் உயர்ந்து விடும் என்று பெரிய பயமுறுத்தலாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியான பரமக்குடியிலும் நெல், மிளகாய், கரும்பு, கடலை போன்ற பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. இந்த மழை பெரிய சேதத்தை அந்தப் பகுதியில் ஏற்படுத்தியிருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் இந்த பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆந்திரா போன்ற பக்கத்து மாநிலங்களிலிருந்து நெல், மிளகாய், மல்லி போன்ற வற்றை தேவையான அளவிற்கு கொள்முதல் செய்து தமிழகத் தில் விலைவாசி உயராமல் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கை யோடு மக்கள் இருக்கிறார்கள். அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

என்னுடைய தொகுதியான பரமக்குடியில் வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக்கொடுத்தல், ரோடுகளையும், கண்மாய்கள், குளங்கள்போன்றவற்றையும்சீரமைத்தல்போன்றவற்றைச்செய்து கொடுக்கும்படி இந்த அரசை நான் தாழ்மையோடு கேட்டு என் னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நான் சார்ந்திருக் கிற ஜனதா கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை நான் இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன். இன்றைக்கு ஆளுநர் அவர்கள் அரசினுடைய கொள்கைகளை அறிவித்து இருக்கிறார்.

அரசினுடைய இந்த அறிக்கையின் மீது எங்களுக்கு ஏற்பட்ட ஒரே எண்ணம் வரப்போகிற தேர்தலுக்குக் கூறுகிற வாக்குறுதி களாக, தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையாகத் தெரிகிறது. அல்லாமல் தமிழ்நாட்டினுடைய உண்மை நிலைமையைப்பிரதிபலிப்பதாக இதைச் சொல்ல முடி யாது. கள்ள கணக்கு எழுதுகிறவர்கள் இரண்டு கணக்கு வைத் திருப்பார்கள். ஒரு கணக்கு இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்டிற் கும், மற்றொன்று தங்களுக்குமாக வைத்திருப்பார்கள். அதே போலஇந்தநாட்டு மக்களுக்குக்கூறுகிறசெய்தியாகஒரு கணக்கைக் காட்டிவிட்டு மற்றொன்றை காட்டாமல் இந்தச் சர்க்கார் இருக் கிறதென்றால் இன்றைக்கு இந்தச்சர்க்கார்திவாலாகிற அளவிற்கு நிதி நிலைமை மோசமான சூழ்நிலையில் இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. கடந்த சில நாட்களுக்கு முன்னால் ஒருசெய்தியைப்பார்த்தோம். 113 கோடி ரூபாய் மத்திய ரிசர்வ் வங்கியிலிருந்து ஓவர்– டிராப்ட்டாக பெற்றிருக்கிறார்கள். 'இட் இஸ் ஆல் டைம் ரெக்கார்டு' என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிற்கு ஓவர்– டிராப்டை மத்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றிருந்தார்கள். ஆனால் உடனடியாக திருப்பிக் கட்டவில்லை என்றால் மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு வழங்குகிற பணத்திலேயிருந்து கழித்துக் கொள்ளும் என்ற அளவிற்கு மாநிலத்திற்கு நெருக்கடி உருவாக்கப்பட்டது. நிதி நிலைமை அந்த அளவிற்கு போய்க் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்றைக்கு மாநிலத்திலே இருக்கிற அரசு ஊழியர்கள் வீட்டு வசதிக்காக கடந்த வருடம் ஒரு கோடி ரூபாய் மாநில சர்க்காரால் கடன் உதவி வழங்கப்பட்டது. இந்த வருடம் 50 இலட்சம் ரூபாயிலே நிறுத்தி இருக்கிறார்கள். மேலும் கொடுப்பதற்கு சர்க்காரிடத்திலே பணம் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் இந்த மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் கிடையாது. பள்ளிக்கூடங் களில் ஆசிரியர்கள் கிடையாது. 1979-ம் வருடத்திற்கு பின்னாலே இந்த மாநிலத்தில் காவல் துறையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்வு கிடையாது. 1981-ம் ஆண்டிற்கு பின்னாலே இந்த மாநிலத்தில் காவல் துறையில் காவலர்கள் தேர்வு கிடையாது. எடுத்தவர்களும் திரிசங்கு சொர்க்கத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு திரும்பவும் வேலை கொடுக்கப்படவில்லை. அவர்கள் கோர்ட்டிற்கு போவதும், அதற்கு பிறகு அரசு அவர்களை எடுப் பதும் என்று இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். தமிழக முதலமைச்சர் அவர்கள் காவல் துறையில் சப்–இன்ஸ்பெக்டர் தேர்வு நடக்கிறபோது இந்த மாநிலத்திலே இருக்கிற மிகப்பெரிய காவல்துறை அதிகாரிகளை குற்றம் சாட்டி பேசினார்கள். இந்த அதிகாரிகள் செய்த தேர்வு செல்லாது. ஆகவே இராணுவத் துறையிலே இருக்கிற அதிகாரிகளை வைத்து இந்த மாநிலத்தில் சப்-இன்ஸ்பெக்டர்களை தேர்வு செய்யப் போகிறேன் என்று சொன்னார்கள். இராணுவத்திலே உள்ள திறமை வாய்ந்த, நம்பிக்கைக்கு உகந்த பெரிய அதிகாரிகளை வைத்து சப்–இன்ஸ்பெக்டர்களை தேர்வு செய்வதில் இன்னும் கால தாமதம் ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.



இன்றைக்கு முதலமைச்சர் ஒரு கணக்கைக் காட்டி இருக் கிறார்கள். எட்டாவது நிதி கமிஷனால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஒரு சில கணக்கைக்காட்டி இருக்கிறார்கள். அந்தக் கணக்கு எப்படி என்று பார்த்தால், இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியின் படி,

Indian Express, dated 22-9-1983.— 'Unemployment in Tamil Nadu is the highest in the country. The percentage of poor below the augmented poverty line is 61 per cent. Malnutrition and under-nutrition is endemic. During 1961 81, the population of Tamil Nadu grew only by 43.4 per cent as against the growth of 55 per cent at all India level. It was the lowest among 15 major States.'

(பிற்பகல் 4-40)

ஆகவே இன்றைக்கு தமிழ்நாட்டில் மக்கள் தொகை மற்ற மாநிலங்களைப் போன்று போட்டிப்போட்டுக் கொண்டு உயரா மல் இருந்திருக்கிறது. இப்படி குறைவாக இருந்த போதிலும் கூட இந்த மாநிலத்தில்தான் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக் கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 61 சதவீதம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருந்து கொண்டிருக்கிறார்கள். இது என்ன கணக்கு? உண்மை நிலவரம் இப்படி இருக்க, பத்திரிகைகளிலே விளம்பரம் போடுகிறார்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு எல்லா வகையிலும் உயர்ந்திருக்கிறது என்று. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால் கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள் இரண்டு கணக்கு வைத்திருப்பதைப் போல இருக்கிறது. மக்கள் கவனத்தை ஈர்ப்பதற்கு என்று ஒரு கணக்கு, உள்ளபடியே இந்த மாநிலத் தன்மையைப் பற்றி வேறு ஒரு கணக்கு என்று இரண்டு கணக்கைக் காட்டுகிறார்கள்.

இந்தச்சர்க்கார் 1977-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இந்தச்சர்க்காரின் வருமானம் 650 கோடி ரூபாய். 1978-79ஆம் ஆண்டில் இந்த ஆண்டு வருமானம் 730 கோடி ரூபாயாக உயர்ந்தது. ஏழாவது நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைக்குப் பின்னால், அன்றைக்கு மத்தியில் ஆட்சியில் இருந்த ஜனதா சர்க்கார் எக்சைஸ்வரியில் மாநிலங்களுக்கு 20சதவீதம் பங்கென்று இருந்ததை 40 சதவீதமாக உயர்த்தியது; அப்படி 100 சதவீதம் உயர்த்திய பின்னால் 1979-80–ல் 920 கோடி ரூபாய் என்ற அளவுக்கு இந்த மாநிலத்தின் வருமானம் உயர்ந்தது. 1980-81ல் அது 990 கோடியை எட்டியது. 1981-82–ல் அந்த வருவாய் 1,400 கோடியாக உயர்ந்தது. 1982-83 ஆம் ஆண்டில் ஆண்டு வருவாய் 1,600 கோடி. 1983–84 ஆம் ஆண்டு வருமானம் 1,800 கோடி.

[திரு. பொ. விஜயராகவன்] ||1984 பிப்ரவரி 18

இந்த அளவுக்கு இந்தச்சர்க்கார் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த
பின்னால் சர்க்காரின் வருமானம் கிட்டத்தட்ட 200 மடங்காக
இந்த 7 ஆண்டுகளில் உயர்ந்திருக்கிறது. வருமானம் 200
மடங்காக உயர்ந்த போதிலும் வேறு எந்த மாநிலத்திலும்
இல்லாத அளவுக்கு இங்கே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி
யிருக்கிறதே தவிர குறையவில்லை; வறுமைக்கோட்டிற்கு கீழே
உள்ள மக்கள் தொகை உயர்ந்திருக்கிறதே தவிரகுறையவில்லை.
இந்த சர்க்காரால் குறைக்க முடியவில்லை. அப்படியானால்
அவற்றைக் குறைக்கின்ற பொறுப்பு இந்த சர்க்காருக்கு இருக்
கிறதா இல்லையா என்பதே தெரியவில்லை.

எதை எடுத்தாலும் மத்திய அரசு என்று சொல்கிறார்கள்.
எதைச் சொன்னாலும் எங்களுக்கு இதிலே பங்கு இல்லை என்
பதைப்போல சொல்கிறார்கள். இவ்வளவு வருமானம் வந்த
போதிலும் தங்களால் குறைக்க முடியாத காரியங்களுக்கு
இந்திரா சர்க்கார், மத்திய சர்க்காரென்று தட்டிக்கழிக்கிறார்கள்.
''வரப்பிலே ஒரு கால், வள்ளத்திலே ஒரு கால்'' என்று சொல்
வார்களே அதைப்போலத்தான் இது இருக்கிறது. இப்படிச்
சொல்லியே இந்த நாட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்
கிறார்கள்.

இன்றைக்கு அரிசி கிடைக்கவில்லைஎன்றுசொல்லாமல் தாராள
மாக அரிசி கொடுக்கிறோம் என்று இந்த மன்றத்திலே சொல்
கிறார்கள். குறைந்த விலையில் ரேஷன் கடைகளில் இந்தியா
விலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அரிசி
கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். எவ்வளவு கொடுக்
கிறார்கள் என்று பார்த்தால் ஒரு குடும்ப அட்டைக்கு 8½ கிலோ
அரிசி ஒரு மாதத்திற்கு கொடுக்கிறார்கள் என்பதை இங்கே
நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்ற மாநிலங்களிலே குடும்ப அட்டைக்கு 20 கிலோ முதல்
30 கிலோ வரையில் அரிசி கொடுக்கிறார்கள். ஆனால் இந்த
மாநிலத்தில் 8½ கிலோதான் கொடுக்கப்படுகிறது. அது கூட
சரியாக கிடைக்கவில்லை. சில இடங்களில் 2 கிலோ, 5 கிலோ,
6 கிலோ என்று குறைத்துக் கொடுக்கிறார்கள். எங்கள்
மாவட்டத்தில் எல்லா அரசியல் இயக்கங்களும் சேர்ந்து இந்த
சர்க்காரைப் பார்த்து 35 கிலோ அரிசி கொடுங்கள்; ரேஷன்
கடைகளை நம்பியே இந்த மாவட்ட மக்கள் இருக்கிறார்கள்
என்று சொல்லி போராட்டம் நடத்திய பிறகும் அங்கே இருக்
கிறவர்கள் முன்னாள் கொடுத்துக் கொண்டிருந்ததையே இப்
போதும் கொடுத்து வருகிறார்கள். மழை இல்லை, அரிசியில்லை
விடுதல் கொடுங்கள் என்று கேட்ட பிறகும் கொடுக்க முன்வர
வில்லை இந்த சர்க்கார். நாங்கள் கேட்பது எல்லாம் இந்த
சர்க்காருக்கு செவிடன் காதில் ஊதிய சங்காகதான் இருக்கிறது



1984 பிப்ரவரி 18] ||திரு. பொ. விஜயராகவன்||

எங்கள் மாவட்ட மக்கள் புழுங்கல் அரிசியை மட்டுமே
சாப்பிடுகிறவர்கள். இந்தப் புழுங்கல் அரிசியைக்கூட ஒழுங்காக
கொடுக்காமல். இன்றைக்குப் பச்சரிசியை அதுவும் மோச
மான அரிசியை, குறைந்த அளவில் வழங்கிக்கொண்டிருக்
கிறார்கள். அரிசி மட்டுமல்ல, எதைக் கேட்டாலும்இன்றைக்கு
சத்துணவுத் திட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.
நான் அதை குறைசொல்லவில்லை. இந்த நாட்டினுடைய
பொருளாதாரத் திட்டம் என்ன என்று கேட்டால் சத்துணவுத்
திட்டத்தைக் காட்டுகிறார்கள். சட்டம் ஒழுங்கைப் பற்றிக்
கேட்டால் கூட சத்துணவுத் திட்டத்தைச் சொல்கிறார்கள்.
இப்படி எதற்கெடுத்தாலும் சத்துணவுத் திட்டம்தான் ஒரே ஒரு
மருந்தாக இந்த சர்க்காருக்கு இருந்துக் கொண்டிருக்கிறது.
சத்துணவைக் காட்டியே இந்த சர்க்கார் வாழ்ந்துவிடலாம் என்று
நினைக்கிறதா என்பது தெரியவில்லை.

இந்தச் சத்துணவு எதுவரையில் போடுகிறார்கள் என்று
பார்த்தால் 2 வயது முதல் 10 வயது வரையில். அதன் பிறகு
அவர்கள் நிலை என்ன? அவர்களுடைய வாழ்க்கையை எப்படி
அமைத்துக்கொள்வது? அவர்களுடைய வாழ்க்கையைத் தேடும்
போதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் எப்படி இருக்கிறது
என்பதை அவர்கள் உணரமுடியும். அவர்கள் வாழ்வதற்கு
ஏதாவது திட்டம் இருந்தால்தானே வாழ்க்கையை செம்மையாக
அமைத்துக்கொள்ள முடியும். ஆகவே இந்த சத்துணவுத்திட்டம்
எப்படி இருக்கிறது என்றால் கோவிலுக்கு ஆடு வளர்ப்பார்கள்.
கோவில் விழாவில் வெட்டி பலி செய்வதற்காக ஆட்டுக்கடாவுக்கு
நன்றாக தீனிபோட்டு, கொழுக்க வைத்து, விழாவில் வெட்டி
விடுவார்கள். அதைப்போல்தான் இந்த சத்துணவுத் திட்டம்
இருக்கிறது. 10 வயதுவரையில் சத்துணவு என்று போட்டுவிட்டு
அதன் பிறகு அவர்கள் வாழ வழியின்றி தவிக்கும் ஒரு நிலையைத்
தான் இந்த சர்க்கார் உருவாக்கி வருகிறது என்பதை இங்கே
குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு)

அடுத்து பத்திரிகைக்குபோட்டிருக்கக்கூடிய அந்த விலங்கை
எடுக்க வேண்டுமென்று பலமுறை சொல்லியும், பத்திரிகைகள்
மீது போட்டிருக்கக்கூடிய அந்த சட்டத்தை எடுக்கத் தயாராக
இல்லை, இந்த அரசு.

அன்றைக்குக் காவல் துறையினருக்கு மாதம் ஒன்றுக்கு 38
கிலோ அரிசி வழங்கினார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களுக்கு
8½ கிலோ அரிசிதான் வழங்கப்படுகிறது. அன்றைக்கு மாதம்
ஒன்றுக்கு அவர்களுக்கு 4 கிலோ பாம் ஆயில் வழங்கப்பட்டது.
இன்றைக்கு 2 மாதத்திற்கு ஒரு முறை ஒரு கிலோதான் கொடுக்
கப்படுகிறது இப்படி நிலைமை போய்க் கொண்டிருக்கிறது.

நம்முடைய போக்குவரத்துத் துறை மிகச் சிறப்பாகப் பணி
செய்கின்றது என்று ஆளுநர் உரையிலே சொன்னார்கள்.
திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்துகளில் மழைக் காலங்
களில் சாதாரணமாகப் பயணம் செய்ய வேண்டுமானால்
ஒவ்வொரு பயணியும் ஒரு குடையோடுதான் போக வேண்டும்.
அப்படி பஸ் வெள்ளக்காட்டில் இருப்பதை என்னால் சொல்
லாமல் இருக்கமுடியாது.

அடுத்ததாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முன்பு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் டிக்கெட்டிலே மோசடி நடந்ததை இந்த நாடு அறியும். என்னுடைய நண்பர் ஒருவர் திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்தில் பயணம் செய்த போது, கொடுக்கப்பட்ட டிக்கெட்டிற்கு இரண்டுவிதமான சீரியல் நம்பர் இருந்தது. 80 என்று உள்ளபடியே பார்த்தால் 79—ஆக இருக்கிறது. இதன் அர்த்தம் என்ன என்று எனக்கும் புரியவில்லை. இதைதயவுசெய்து உடனடியாக விசாரித்து.... ஊழல் நடந்திருக்கிறதா என்ற ஐயம் வருகிறது. ஆகையால்அதை உடனடியாக விசாரித்து...... தக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி எந்த இடத்தைப் பார்த்தாலும் ஆளும் கட்சியினர் தலையீடு நிர்வாகத்திலே அதிக மாக இருக்கிறது என்பதை என்னால் எடுத்துச் சொல்லாமல் இருக்கமுடியாது.

அடுத்து பல்லவபுரத்தைப் பற்றி ஒன்றைச் சொல்லக் கடமை பட்டிருக்கிறேன். ஒரு புறம்போக்கு நிலத்தை, அதற்குச் சொந் தமான எஸ்த்தரம்மா என்பவரிடமிருந்து அப்புறப்படுத்தி கோர்ட்டிலே போட்டு, அவர்களை வெக்கேட் செய்தார்கள். ஆனால் பல்லாவரத்திலே நகரச் செயலாளரான ** என்பவர் அதை ஆக்கிரமித்து பெரிய கட்டிடங்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி எந்த மாவட்ட நிர்வாகத்தி லேயும் ஆளும் கட்சியினர் தலையீடு அதிகமாக இருந்துகொண் டிருக்கிறது,

**திரு. ஆர். மணிமாறன்:** பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாத ஒருவர் மீது குற்றச்சாட்டை உறுப்பினர் அறிவித்திருக்கிறார். அவர் பொறுப்பிலே இருக்கக் கூடியவர், நகராட்சியின் செயலாளராக இருக்கக் கூடியவர். இப்படிப்பட்ட ஒருவர் மீது ஒரு பழியைப் போட்டு குற்றச் சாட்டைச் சொல்லக் கூடியது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்):** அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிச் சொல்வது மரபல்ல. ஆகவே அந்தக் குறிப்பிட்ட பெயரை மட்டும் குறிப் பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

**திரு. பொ. விஜயராகவன்:** அந்தப் பெயரை வேண்டுமானால் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். ஆக பல்லாவரத்தில் ஏற்பட்ட இந்த ஆக்கிரமிப்பை இந்தச் சர்க்கார் விசாரிக்க வேண்டுமென் பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே பல்லாவரத்து முனிசிபாலிட்டியைச் சேர்ந்த எஸ்த்தரம்மாவை விலக்கிவிட்டு, அதை ஆளும் கட்சியைச் சார்ந்தவர் அங்கீகரித்து ஆக்கிரமித்ததை நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கல்வி அறிவு பெற்றவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டத்திலே, ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதியதாக தொடங்கப்பட இருக்கிற 5 பொறி யியல் கல்லூரிகளில் ஒன்றை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற் படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ 710 ஏக்கர் நிலத்திற்கு பாசன உறுதியளிக்கும், விளாத்துறைத் திட்டத்தை உடனடியாகத் தொடங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

அடுத்து 1978-ல் கீழ்குளம். ஏலாவில் ஏற்பட்ட வெள்ளத் தால் உடைப்பு ஏற்பட்டு அது இன்று வரையில் சரி செய்யப் படாமல் இருக்கிறது. அந்த இடம் மோசமான நிலையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதையும் உடனடியாக சரிசெய்து அந்த உடைப்பை சரிசெய்து கொடுத்து நிவாரணம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குழித்துறை ஆற்றில் கணபதியான்கூலில் பாலம், தீக்குறிச்சிப் பாலம் ஆகிய வற்றை கட்டவேண்டும் என்று பல்லாண்டுக்காலமாக கோரிக் கைகள் விடப்பட்டிருக்கிறது. அதையும் இந்த அரசு உடனடி யாக கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிநீருக்காக நாம் பல கோடி ரூபாய்களை செலவழிக்கிறோம் என்று சொன்னாலும்கூட, எங்களுடைய மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்கள் பல நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அவைகள் ஆய்விலே இருப்பதாகச் சொல்லு கிறார்கள். உதாரணமாக, கருங்கல், கப்பிப்பாறை ஆகிய பேரு ராட்சிகளுக்கும், பைங்குளம், மாங்காடு, வாவறை ஆகிய ஊராட்சிகளுக்கும் நிரந்தரமான குடிநீர்த் திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று வீட்டிற்கு ஒருவருக்கு வேலைத் திட்டம் என்று கடந்த ஆண்டே இந்த சர்க்காரால் அறிவிக்கப் பட்டது. ஆனாலும் ஓர் ஆண்டுக்காலம் முடிவடைந்தும் அவைகள் நிறைவேற முடியாத நிலைமையிருக்கிறது. தமிழகத் தில் போடப்பட்ட பல்வேறு புதிய திட்டங்கள் இன்று வரையில் செயல் படுத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தால், இந்தச் சர்க்கார் அவைகளைச் செய்யுமா செய்யாதா என்று ஐயப்பாடு எல்லோர்மனதிலும் இருக்கிறது. அடுத்து நகராட்சிகளுக்குத் தேர் தல்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகிய நகராட்சிகளுக்குத் தேர்தல் எப்போது என்று இந்த ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப் படவில்லை. ஒருவேளை அவைகளுக்கும்தேர்தல்உண்டா இல்லையா என்பதைக் கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் பேரில் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன். ஆளுநர் உரையானது ஏழை எளியவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும், கட்டிடத் தொழிலாளர்களுக்கும் மற்றும் ஏழை வர்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே ஆளுநர் உரைக்கு நான் என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன். இரண்டு நாளைக்கு முன்பாக ஆளுநர் உரையின்மீது பேசிய அருமை சட்டமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்த்த சட்டமன்ற உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக உணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வாத நோய் போய்விடும், கண்ணொளி வந்துவிடும் என்று பேசுகிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடம் காண்பித்த குழந்தை, அந்தச் சத்துணவு சாப்பிட்டதால் முன்பு சரியாக நடக்காமல் இருந்த குழந்தை இப்போது நடப்பதாகச் சொல்லி என்னிடம் அந்தக் குழந்தையைக் காண்பித்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் குழந்தை என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில், என்னுடைய தொகுதியிலே உள்ள மரவன்பட்டி என்ற ஊரிலுள்ள மாணவன், வீரய்யன் என்று பெயர், 3 வயது பையன், அந்த மாணவனைத்தான் மாவட்ட ஆட்சித்தலைவரவர்கள் மாண்புமிகு முதலமைச்சரிடம் காண்பித்தார்கள். அந்தப் பையன் இன்றைக்கு சத்தணவு சாப்பிட்டு, முன்பு நடக்கமுடியாது சப்பாணியாக இருந்தவன், நடக்க முடியாமல் இருந்த பையன், இப்போது நடக்கிறான். அப்படி நடக்கிற அந்த அதிசயத்தைத்தான் அந்த நிகழ்ச்சியைத்தான் நாங்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துச்சொன்னோம். அவர்கள் அதை முதல் அமைச்சரிடம் தெரிவித்தார்கள். அந்தப் பையனை காண்பித்தார்கள். ஆனால் அதைக் கிண்டலாகவும், கேலியாகவும் நமது ரகுமான்கான் அவர்கள் பேசும்போது சொன்னது மிகவும் வேதனையாக இருக்கிறது.

உண்மையிலே சொல்லப் போனால், சத்துணவுத் திட்டம், தமிழகத்திலே, ஏன் உலகத்திலே அது புதுமையான திட்டம். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு வறட்சி ஏற்பட்டபோதும் ஏறக்குறைய 67 லட்சம் குழந்தைகள் இந்தச் சத்துணவுவைச் சாப்பிடுகிறது என்று சொன்னால், வறட்சியினால் வாடுகின்றபோதும், அந்த குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறது என்று சொன்னால், உண்மையிலே இது புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த புதுமையான திட்டம்தான் என்பதை மறுக்க முடியாது. நான் ஒரு கிராமத்திற்குச் சென்று நேரிலே பார்க்கும்போது, அந்த சத்துணவு மையத்திலே சாதத்தை வடித்து, அந்தக் குழந்தைகளுக்கு பருப்பு நெய்யோடு, உணவைப் போடும்போது (குறுக்கீடு) நெய்யில்லை, உண்மையில் அந்தக் குழந்தைகள் அந்தச் சத்துணவை சாப்பிடும்போது மிகவும் பூரிப்பு



உயர்ந்த திட்டமாகும். அது போலவேதான் தன்னிறைவுத் திட்டமும், இப்படி எத்தனையோ திட்டங்களை, புதுமையான திட்டங்களை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. இதற்கு முன்பெல்லாம் நகர பகுதிகளிலே ஒரு திட்டத்தை போடுவார்கள். கிராமங்களுக்கு வருகிறபோது அந்தத் திட்டம் செயல்படாது போய்விடும். ஆனால் இப்போது கிராமங்களிலேதான் திட்டமே ஆரம்பிக்கப்படுகிறது. நான் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவனாக இருந்தபோது, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஆண்டுக்கு 1 லட்சம், 2 லட்சம் என்றுதான் வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி கொடுப்பார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தமிழகத்திலே இருக்கிற எல்லா ஒன்றியங்களுக்கும் 40 லட்சம், 50 லட்சம் என்று கொடுத்து, எல்லா இடங்களிலும் திட்டம் நிறைவேறக் கூடிய அளவுக்கு, திட்டத்தின் செயல் முறைகளைக் கொண்டு வந்தார்கள். ஒரு திட்டம் போட்டால் அது எல்லா ஒன்றியங்களிலும் பயன்படக் கூடிய அளவிற்குத்தான் இப்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றன. எந்த திட்டத்தை நிறைவேற்றினாலும், அது எந்தத் தொகுதியைச் சார்ந்தது. ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினருடையதா? எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுடையதா என்று பார்ப்பது இல்லை. அங்கேயெல்லாம் இருக்கிற பொது மக்களை நினைத்துதான் அத்தனை திட்டங்களையும் வகுக்கிறார்கள், செயல்படுத்துகிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு 3 ஒன்றியம் இருக்கும் அல்லது 2½ ஒன்றியம் இருக்கும். ஆனால் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஏறத்தாழ 1 கோடிக்கு மேல் நிதி..யக் கொடுத்து ஒரு ஆண்டிலே இந்தத் தன்னிறைவுத் திட்டங்களை செய்து முடிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். தன்னிறைவுத் திட்டமானது தமிழகத்திலுள்ள அத்துணை பகுதிகளிலும் ரோடு வசதி, குடிநீர் வசதி, விளக்கு வசதி, பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் வசதி போன்ற கிராமத்திற்கு தேவையான எல்லாப் பணிகளையும் நிறைவேற்றக் கூடிய அளவுக்கு இந்த திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை யாருமே பாராட்டாமல் இருக்க முடியாது. புரட்சித் தலைவரவர்கள் எப்போதுமே கிராமங்களை நோக்கித்தான் திட்டங்களைப் போடுகிறார்கள். நகரத்தை நோக்கிப் போடுவதில்லை. கிராமங்கள் வளர்ந்தால் தானே நகரம் வளரும் என்ற அடிப்படையில் கிராமங்களின் வளர்ச்சிக்காக அவர்கள் திட்டம் போடுகிறார்கள்.

புரட்சித் தலைவரவர்களுடைய அரசு சென்ற ஆண்டு வறட்சியின்போது, அந்த வறட்சியைப் போக்க என்னென்ன வகையில் எல்லாம் முயற்சிகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அடுத்த மாநிலங்களிலிருந்து அதிகமான விலை கொடுத்து அரிசியை வாங்கி,

இங்கே குறைந்த விலைக்கு வழங்கினார்கள். அதேபோல 200
கோடி ரூபாய்க்கு மேல் நிலுவையாக இருந்த விவசாயிகளின்
கடன்களை விவசாய கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கியவர்
களின் கடன்களை தள்ளுபடி செய்தார்கள்.

அது மட்டுமல்ல, கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு
வந்தார்கள். வறட்சியினால் ஏழை விவசாயிகள் பெரிதும்
பாதிக்கப்பட்டிருக்கிற நிலையை உபயோகித்துக் கொண்டு,
பணக்கார வர்க்கம் நோட்டுகளை எழுதி வாங்கிக்கொண்டு
கொடுத்த கடன்களையெல்லாம் சிறு விவசாயிகளும், குறைந்த
வருமானம் உள்ளவர்களும் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை
என்று கடன் நிவாரணச் சட்டம் ஒன்றை புரட்சித் தலைவர்
அவர்கள் கொண்டு வந்தார்கள். எல்லோருக்கும் தெரிந்த
இவைகளையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் தொழிலாளர்
களுக்கும், விவசாயிகளுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும்
நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்கிறார்களே,
கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள், அவர்களுக்குச் சொல்கிறேன்.
இவைகளையெல்லாம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு
செய்தது என்று, இதற்கு முன்னால் இருந்த எந்த அரசாவது
ஏதாவது நிதியை கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து தள்ளுபடி செய்
திருக்கிறார்களா? கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு
வந்தார்களா? ஆனால் அத்துணை திட்டங்களையும் புரட்சித்
தலைவர் அவர்களுடைய அரசுதான் கொண்டுவந்தது.

சென்ற வறட்சின்போது அதனைப் போக்க அரசு எவ்வளவோ
பாடுபட்டது. எத்தனையோ பைப்புகளையும் போர் வெல்
களையும் போட்டு குடிதண்ணீர் தட்டுப்பாடு பிரச்சினையில் தீர்வு
கண்டது. அது மட்டுமல்ல, டிசம்பர் மாதம் பெய்த மழை
யினால் பாதிக்கப்பட்ட தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி,
இராமநாதபுரம் பகுதிகளுக்கு புரட்சித் தலைவர் அவர்களே,
எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாகிய உமாநாத் போன்ற
வர்களையெல்லாம் தம் கூட அழைத்துச் சென்று பார்வை
யிட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்களுக்கு எதிர்க்கட்சி
சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் ஆளுங்கட்சி
சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் எல்லோரும் ஒன்றுதான்.
மக்களுடைய நலன்தான் அவருடைய எண்ணம். அதைக்கருதித்
தான் அவர் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களையும் தம்முடன்
அழைத்துச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களை சுற்றிப்
பார்த்தார்கள்.

ஹெலிகாப்டரில் மட்டும் அல்ல காரிலும் போய் பார்வை
யிட்டு பாதிக்கப்பட்ட அத்துணை பகுதி மக்களுக்கும் தேவை
யான நிவாரணப் பணிகளை உடனடியாகச் செய்யக் கூடிய
அளவுக்கு அங்கே இருக்கின்ற அதிகாரிகளை முடுக்கிவிட்டு
திரும்பியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு எவ்வளவு கடுமையான
மழை பெய்திருக்கிறது. ஆனால் வறட்சியைப் போக்க
எவ்வளவோ துணிச்சலாக செயல்பட்ட புரட்சித் தலைவரவர்
ளுக்கு, இந்த வெள்ள நிவாரணப் பணிகளையும் செம்மையாக
டத்துவதற்கு அக்கறையோடு துணிச்சலோடு திட்டம் வைத்து
ருப்பார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.





எனது தொகுதியிலேயும் தஞ்சைப் பகுதியிலுள்ள ஆலங்குடி
கரம்பக்குடி, அறந்தாங்கி, மணல்மேல்குடி போன்ற பகுதிகள்
எல்லாம் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.
அவைகளை பார்வையிட்டும், நிவாரணப் பணிகளை மேற்
கொண்டும்கூட இப்போது சமீபத்தில் பெய்திருக்கக்கூடிய மழை
யின் காரணமாக அங்கே அறுவடை பாதிக்கப்பட்டிருக்கிறது.
கடலை, எள் போன்ற பயிர்கள் எல்லாம் நாசமாகி அறுவடை
செய்ய முடியாமல் கெட்டுப் போய்விட்டது. ஆகவே எந்த வகை
யிலாவது இந்த அரசு முழு முயற்சி எடுத்துக்கொண்டு,
அந்த விவசாயிகளுக்கு ஏதாவது சலுகைகளைத் தருவதற்கு
ஏற்பாடு செய்ய வேண்டும். (குறுக்கீடு) கிட்டத்தட்ட 2,000
ஏக்கருக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறது. எந்த வகையில்
அவர்களுக்கு நன்மை செய்து பாதுகாக்க முடியுமோ, அந்த
வகையில் ஏதாவது செய்து அவர்களை காப்பாற்ற வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவரவர்களுடைய
எண்ணம் எல்லாம் மக்கள் எந்த வகையில் கஷ்டப்படுகிறார்கள்,
அவர்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்து, அவைகளை
களையலாம் என்ற நினைப்பிலேதான் செயல்பட்டு வருகிறது.

(பிற்பகல் 5–00)

அதேபோல் கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை இந்த அரசு
கொண்டு வந்தது. இன்னொரு திட்டத்தையும் புரட்சித்தலைவர்
அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

படிக்கும் போதே தொழிற் கல்வியைப் பயில வேண்டும்.
இதற்கு முன்பு பேசியவர்கள் 8 வயது வரைக்கும் சத்துணவுக்
கொடுப்பதாகச் சொன்னார்கள். அதேபோல் குழந்தைகளாக
இருக்கும்போதே தொழிற்கல்வி பயில வேண்டும். அப்போது
தான் ஒரு மாணவன் படித்து முடித்தவுடன் பள்ளியைவிட்டு
போகும்போது ஒரு தொழிலை செய்யவேண்டும் என்ற நோக்கத்
தோடு புரட்சித் தலைவரவர்கள் இந்த புரட்சிகரமான
திட்டத்தை எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டத்தைக்
இங்கே கொண்டு வந்தது. நாட்டு மக்கள்பால் அவர் கொண்டுள்ள
அக்கறையைக் காட்டுகிறது. அந்த வகையில் இந்த அரசு பல
திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறது. குறிப்
பாக எனக்கு முன்பு பேசியவர்கள் உலக நாடுகளைப் பார்க்கிற
போது அங்கே 8 மணி நேரம் தொழிலாளி வேலை செய்துவிட்டு
ஒரு 2 மணி நேரம் அதிகமாக வேலை செய்து, லாபத்தை அதிக
மாக்கி தங்கள் கோரிக்கையை பெறுகிறார்கள் என்று சொன்
னார்கள். ஆனால் இங்கே அரசியல் பேசிக்கொண்டு
தொழிலாளர்களைத் தூண்டி விடுகிறார்கள். அதனால் அவர்கள்
வேலை இழப்பதோடு, அந்த முதலாளிகளும் பாதிக்கப்படு
கிறார்கள். இந்த நிலையில் நாடு போய்க்கொண்டு இருக்கிறது
என்பதைக் கூறிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி
வணக்கம்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக, தமிழகம் கடுமையான வறட்சியைச் சமாளித்து, அந்த வறட்சிப் பணியிலிருந்து மீளுகின்ற இந்த நேரத்தில், வெள்ளத்தால், பெய்த மழையினால் ஏற்பட்ட சேதத்தில் இன்றையதினம் தமிழகம் சிக்கிக் கொண்டிருக்கிறது இந்த வறட்சிப் பணிகள், துயர் துடைப்புப் பணிகள் ஆகியவைகளில் தமிழகத்திலே எடுத்த நடவடிக்கைகளினால், விவசாயிகள் எந்த அளவிற்கு பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை இன்றைய நாள் வரையில் தமிழக சர்க்கார் அறிக்கை தரவில்லை. அந்த அறிக்கையை தமிழக சர்க்கார் தந்து, அதனால் மக்களுக்கு என்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகள்மீது இன்றையதினம் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், பாதிக்கப்படாமல் இருந்தாலும் ஒன்றாக எல்லாப் பகுதிகளுக்கும் சேர்ந்து இந்தக் கடன் வசூலை தள்ளி வைக்கவேண்டும். சிறு விவசாயிகள், குறிப்பாக, பம்பு செட்டு கெட்டு போய், கிணறு இடிந்து நாசமாகியிருந்தால், அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு கடன் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அந்த மக்களுக்கு நிரந்தரமான பாசன வசதி கிடைத்திடவும், பயிர் சாகுபடி செய்ய நீரைப் பயன்படுத்திடவும், அணை கட்டும் திட்டங்கள், பல்வேறு மாவட்டங்களில் நிறைவேற்றப்படாமல் இருப்பதை, ஒரு கொள்கையாகக் கொண்டு, இந்த அரசு அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய பேரணாம்பட்டில் பத்திரபள்ளி அணைக்கட்டு திட்டத்தை நீண்ட நெடுங்காலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், அது இன்னும் செயல்படுத்தாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த பத்திரபள்ளி அணைக்கட்டை நேரடியாக வந்து பார்வையிட்டு, அந்த அணையைக் கட்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆந்திர மாநிலத்திலே இருந்து வரக்கூடிய தண்ணீரைக் கட்டுப்படுத்தவும், அந்த ஆந்திர மாநிலத்தின் பாசன அமைச்சரோடு தொடர்புகொண்டு, நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் விரைவிலே முடிக்கப்பட்டு விடும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பேரணாம்பட்டுத் தொகுதியைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தினால் இரண்டு தாலுகாக்களிலுள்ள விவசாயிகளுக்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு கிடைக்கு என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்து



கொள்கிறேன். இந்த திட்டத்தை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இதே போன்று, கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை செய்துகொடுக்க வேண்டும். நம்முடைய அரசு எல்லாக் கிராமங்களிலும் இந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். 5,000 பேர்கள் இருக்கக்கூடிய கிராமங்களிலே தனியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை செய்துகொடுத்து, அதன்மூலம் அந்தக் கிராம மக்களுக்கு குடிநீர் பிரச்னையை தீர்த்து வருவதாகவும் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் கேட்டுக் கொள்வது, அந்த கிராமத்திலே இருக்கின்ற எல்லாப் பகுதி மக்களுக்கும் குழாயின் மூலமாக தண்ணீரை விநியோகம் செய்வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். ஒரு இடத்திலே மாத்திரம் மேல் நிலைத் தொட்டியைக் கட்டி, இன்னொரு பகுதியிலுள்ள மக்களை அங்கே வந்து எடுத்துச் செல்லவேண்டும் என்று சொல்லுகின்ற நிலை இருக்கக்கூடாது. ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலம் எல்லாப் பகுதி மக்களும் பயனடைகின்ற வகையிலே இதை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்புத் திட்டம்பற்றி இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிட இது ஒரு மிகப் பெரிய கொள்கையாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த அரசின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணிவிட்டு, பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி. படித்தவர்களை மாத்திரம் கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் அவர்களைப் பின்னாடி வைத்து 5-வது, 6-வது 7-வது 8-வது படித்த மாணவர்கள், ஏழை எளிய மக்கள், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட குடியிலே இருக்கிறவர்கள் இவர்களையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்கிற முறையிலே—காரணம் இவர்கள் உயர்ந்த படிப்பு படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டவர்கள் என்பதால்—அவர்கள் எல்லாம் ஏறத்தாழ 10, 15 ஆண்டுக்காலமாக குடும்பத்திலே பாரமாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதாலே இந்த வேலைவாய்ப்புத் திட்டத்திலே அப்படி எந்தவிதமான தகுதியும் இல்லாமல் ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த மக்களை கருத்திலே கொண்டு, இந்தத் திட்டம் அமைய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிரதமர் அவர்களுடைய திட்டத்தின்படி எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணியவர்களுக்கு 15, 20 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்து வியாபாரம் செய்தோ அல்லது சிறிய தொழில்கள் செய்தோ அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலே உதவி செய்யப்படுகிறது. அதிலே குறைந்த பட்சம்

50 சதவீதத்தையாவது ஏழை எளிய மக்களை கணக்கிலே எடுத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அளித்து அதிகமான கடன் உதவிகளை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற வீட்டு வசதி வாரியத்தின் கீழ் 15 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்று ஆளுநர் அவர்கள் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெரும்பான்மையாக கட்டித் தரப்பட்டிருப்பதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டில் புதிதாக கட்டித் தரப்படுகிற வீடுகளுக்கு நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம். அந்த நிலைமையை மாற்றி எல்லா கிராமங்களிலும் வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து, நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற வீடுகளை முடிக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, கடலோரப் பகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மீனவர்களுக்கும் 8 ஆயிரம் வீடுகள் இலவசமாகக் கட்டித்தர ஒரு திட்டத்தைஇந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்றுஇந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாட்கோ மூலமாக கட்டப்படுகிற வீடுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் தேங்கிக் கிடக்கிற ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அந்த இடங்களிலே, அந்த 8,000 இலவச வீடுகளைக் கட்டிக் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிம்சன் தொழிலாளர் பிரச்சினையிலே வேலை நிறுத்தத்திலே அனைத்துத் தொழிற் சங்கங்களின் தலைவர்களையும் அழைத்து முதல்வர் அவர்கள் பேச்சு நடத்தியிருக்கிறார்கள். அந்தப் பேச்சிலே ஒரு நல்ல முடிவு ஏற்பட வேண்டுமென்று இந்த இயக்கத்தின் சார்பாக நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றும், எத்தனையோ வேலைநிறுத்தங்கள் நடைபெற்றும், எத்தனையோ ஊர்வலங்கள் நடைபெற்றும், இந்த முறை சிம்சன் தொழிலாளர்கள் நடத்திய ஊர்வலம் அமைதியாகவும், போராட்டம் அமைதியாகவும் போலீஸ் கெடுபிடி, மற்றவர்கள் எல்லாம் குறை சொல்லமுடியாத அளவிற்கு நடந்திருக்கிறது என்பதை நாடு அறிந்திருக்கிறது. அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினையை, கோரிக்கையை அந்த தொழிற் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி நல்ல ஒரு முடிவு எடுத்து அறிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியமான அக்கறை காட்டுகின்ற அளவிலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. கிராமப்புற மக்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக கடன் உதவி தந்துவிட்டால் மாத்திரம் அது நிறைவேறிவிடுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களுடைய, கூலி விவசாயிகளுடைய



பொருளாதாரம் மேம்பாடு அடையத்தக்க விதத்திலே, நிரந்தரமான வருவாயை அவர்கள் பெறக்கூடிய முறையிலே நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்தாலும்கூட இந்த நிலங்களை அந்த மக்களுக்குப் பிரித்துத் தருகின்ற நிலையை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆளுநர் உரையிலே சிறப்பான ஒரு அம்சத்தை பாராட்டியாகவேண்டும். பல்வேறு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்துராமலிங்கத் தேவர் ஆகிய பல்வேறு பெயர்களை அமைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த அரசின் மேன்மையான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றிற்கு சம்புவராயர் பெயரையும், வேலூரைத் தலைநகராகக் கொண்ட வட ஆற்காடு மாவட்டத்திற்கு, வட ஆற்காடு மாவட்டம் என்றும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. நாங்கள் வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்றும், ஒரு பகுதிக்கு டாக்டர் அம்பேத்கார் பெயரை வைக்கவேண்டுமென்றும் பல ஆண்டுக் காலமாக கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம். வட ஆற்காடு மாவட்டம் மாத்திரமல்ல; பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் அப்படிப்பட்ட கோரிக்கையை அரசுக்கு எழுதியிருக்கின்றார்கள். வட ஆற்காடு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் பெயரை வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வள்ளியம்மை பெயரில் ஒரு மாவட்டம் அமைந்திருக்கிறது. திருவள்ளுவர் பெயரால் ஒரு மாவட்டம் அமைந்திருக்கிறது. இவைகளையெல்லாம் தமிழகம் இன்றைக்குப் பாராட்டிக் கிறது. அதேபோன்று டாக்டர் அம்பேத்கார் பெயரை அந்த மாவட்டத்திற்கு வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்கள் இறந்து போனால் 10 ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய ஒரு சிறப்புத் திட்டத்தை ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறார்கள். ஒரு இடத்திலே மாத்திரம் பதிவு செய்தால் அந்தப் பயன் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. குறிப்பிட்ட மாவட்டங்களின் அளவிலே அரசு அதிகாரிகளை நியமித்து அவர்களைப் பதிவு செய்து, அமைப்பு ரீதியாக கொண்டு வந்து, எங்கு அவர்கள் இறந்தாலும் 10 ஆயிரம் ரூபாய் பெறக் கூடிய முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று என்.ஜி.ஓ.க்களுக்கு ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய திட்டத்தை அரசு அறிவித்து இருக்கிறது. என்.ஜி.ஓ.க்களுக்கு இந்த அரசு மீது ஒரு நம்பிக்கை ஏற்பட்டு இந்தத் திட்டத்தை அறிவித்த அரசை அவர்கள் வாழ்த்தியிருக்கிறார்கள், வரவேற்றிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன்.

[1984 பிப்ரவரி 18

(பிற்பகல் 5-10)

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் தமிழ்நாட்டில் பலத்த மழை பொழிந்ததன் காரணமாக தமிழ்நாட்டின் பொருளாதாரம் பாதிக்கின்ற அளவுக்கு மிகக் கடுமையான சோதனைக் கால கட்டத்தை நாம் இப்போது கடந்து வருகிறோம். தமிழ்நாட்டில் கடும் மழை பொழிந்து, மாவட்டங்களில் பல கடுமையான சேதங்களை ஏற்படுத்தினாலும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மிகக் கடுமையாக பல்வேறு சேதங்களை ஏற்படுத்தி, உற்பத்திப் பொருள்கள் வீணாகி, நாசம் ஆகிவிட்டது என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். குறிப்பாக ரோடுகளாக இருந்தாலும் ஏரிகளாக இருந்தாலும் அரசாங்கத்தின் சொத்துக்கள், பல்வேறு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு அதனால் போக்குவரத்து ஸ்தம்பிக்கிற அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன. இதன் காரணமாக தஞ்சையில் இருக்கின்ற விவசாய உற்பத்தியை செய்கிறவர்கள் கடுமையான நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏறத்தாழ தஞ்சை மாவட்டத்தில் 12 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட நெல், கரும்பு, வாழை, கடலை, எள் போன்றவைகள் இப்போது பொழிந்த மழையின் காரணமாக நாசம் அடைந்து இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாயப்பெருங்குடி மக்கள் இந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக மானிய உதவியாக இந்த அரசு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏறத்தாழ ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள், குடிசைகளில் உள்ள மக்கள் சமீபகாலத்தில் பொழிந்த மழையின் காரணமாக பெரும் சேதத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்த இடங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று பார்த்துவிட்டு ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்தக் கருத்து என்னவென்றால், உங்களுக்கு அரசு ஒரு உயர்ந்த மேடான இடத்தில் வீடு கட்டிக் கொடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அரசு அதைச் செய்யவில்லை. அதற்கு மாறாக எப்போதும் கொடுக்கப்படுகிற அந்த 200 ரூபாயை தான் இன்றைக்கு இந்த அரசு கொடுத்து இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் சொல்லிய பிரகாரம் இந்த ஏழை எளிய விவசாய மக்களுக்கு குடிசைகளுக்கு பதிலாக நல்ல ஒரு வீட்டை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் அமைந்து இருக்கிற வெண்ணாறு, அதிகமாக மழை பொழிந்ததன் காரணமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. அங்கே இரண்டு வடிகால்கள் இருக்கின்றன. ஒன்று மதுரன் முத்து வாரி திட்டம். அடுத்தது



சோழன்பட்டி வாரி திட்டம். இந்த 2 திட்டத்திலும் வெண்ணாறில் சராசரியாக 5 ஆயிரம் அல்லது 6 ஆயிரம் க்யுசெக்ஸ் தண்ணீர் வரும். ஆனால் இப்போது அதில் 35 ஆயிரம் க்யுசெக்ஸ் தண்ணீர் வந்திருக்கிறது. ஆகவே இந்த திட்டத்தை வெள்ள நிவாரணத் திட்டத்தின் அடிப்படையாக வைத்து அந்த நோக்கத்தில் இந்த மதுரன் முத்து வாரி திட்டத்தையும், சோழன்பட்டி வாரி திட்டத்தையும் அதில் சேர்த்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக இப்போது சமீபத்தில் பொழிந்த மழையின் காரணமாக இன்னும் இருக்கின்ற நெல்லும், உளுந்து, பயிர்கள் போன்றவைகள் எல்லாம் படுநாசம் ஆகிவிட்டது. குறிப்பாக 30,000 ஏக்கர்களில் கடலை சாகுபடி படுநாசமாகிவிட்டது 20,000 ஏக்கர்களில் உளுந்து போன்ற பயிர்கள் நாசமாகிவிட்டன. 10,000 ஏக்கர்களில் வாழைகள் படுநாசமாகிவிட்டது. ஆகவே, இப்பொழுது உற்பத்தி செய்யும் விவசாயம்கூட முடக்கப்பட்டிருக்கிற செய்தி அரசாங்கத்திற்குத் தெரியும். கடுமையான இந்த நேரத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகை கொடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது உற்பத்தி செய்த நெல்லை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தஞ்சையிலே கொள்முதல் செய்யும் ஏகபோக உரிமையோடு இருக்கிறது. அந்தக் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்கிறபோது ஈரப்பசை 18 சதவீதம் என்று சொல்லப்படுகிறது. இந்த 18 சதவீதத்தை, நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன், அதை 25 சதவீதமாக உயர்த்தி, இருக்கின்ற ஈரப்பசை உள்ள நெல்லை வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குவிண்டாலுக்கு 35 ரூபாய் போனசாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. முப்பதாம் தேதி வரையில் இந்தத் திட்டம் நடைபெற இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதை இன்னும் ஓராண்டுக் காலம் நிலைத்து நிற்கின்ற வகையில் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் 35 ரூபாயை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத்தில் முக்கியமான பிரச்னையாக இருப்பது கரும்பு. அகில இந்திய ரீதியில் மற்ற மாநிலங்களைப் பார்த்தால் எல்லாயிடங்களிலும் அதிகமாக விலை கொடுக்கப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் 210 ரூபாய், குஜராத்தில் 205 ரூபாய், ஆந்திரத்தில் 210 ரூபாய், கர்நாடகத்தில் 205 ரூபாய் என்று இப்படியாக எல்லா மாநிலங்களிலேயும் கரும்புக்கு ஒரு டன்னுக்கு 200 ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான் கரும்புக்கு ஒரு டன்னுக்கு 165 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்த விலை மிகமிகக் குறைவு. வருங்காலத்திலேயும் இதே திட்டம் இருந்தால் அது கரும்பு உற்பத்தியை மிகமிகப் பாதிக்கும். எனவே, ஒரு டன்னுக்கு 210 ரூபாய், 220 ரூபாய்க்குக் குறையாமல் இந்த அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு.ந.சிவஞானம்] [1984 பிப்ரவரி 18

அடுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மழைத் தண்ணீர் கடலில் வீணாகிறது. அதிலும் குறிப்பாக ஏறக்குறைய 150 டி.எம்.சி. தண்ணீர் கடலில் சென்று வீணாகிறது. எனவே, வீணாகின்ற மழைத் தண்ணீரைத் தேக்கி வைக்கின்ற திட்டத்தை வெள்ள நிவாரணப் பணியில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வறட்சியால் பாதிக்கப்படும் மதுரை, இராம நாதபுரம், புதுக்கோட்டை போன்ற அதிகமாக மழை இல்லாத பகுதிகளிலே, தண்ணீரை நல்ல முறையிலே கொடுக்கின்ற திட்டத்தைப்பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு செய்து, மழைத் தண்ணீர் கடலில் அதிகமாகப் போவதைத் தடுத்து, வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டங்களான புதுக் கோட்டை, இராமநாதபுரம், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள் கிறேன்.

உலகத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு நம்முடைய தமிழகத்திலே தஞ்சை மாவட்டத்திலேதான் வேளாண்மையைப் பொறுத்தவரையில் டெல்டாப் பகுதியிருக்கிறது. கல்லணையைக் கரிகால் சோழன் கட்டினான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கல்லணையைக் கட்டினான். தமிழகம் இன்று அந்தக் கல்லணையை வைத்துக்கொண்டுதான் தஞ்சை டெல்டாப் பகுதியைப் பராமரித்து வருகிறது. ஆகவே, தமிழக அரசுக்கு நான் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். மேட்டூருக்கும் கல்லணைக்கும் நடுவில் ஒரு பெரிய அணையைக் கட்ட வேண்டும். வடகிழக்குப் பருவமழையின் பொழுது பெய்கின்ற மழைத் தண்ணீர் வீணாகக் கடலில் செல்வதைத் தடுத்து நிறுத்தி, அந்த அணையில் தேக்கி வைக்கின்ற திட்டத்தைச் செய்ய வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ பல ஆண்டுகளாகக் குடி மராமத்து வேலைகள் நடைபெறவில்லை. அங்கே மூன்று வகையான வாய்க்கால்கள், அதாவது 'ஏ' வாய்க்கால், 'பி' வாய்க் கால், 'சி' வாய்க்கால் என்று உண்டு. அங்கே செய்ய வேண்டிய குடி மராமத்து வேலைகள் செய்யப்படாமல் இருப்பதன் காரணமாக, பிரத்தியேகமாக வருங்காலத்திலாவது வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்ப அளிக்கும் திட்டத்தில் இதை எடுத்துக் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியைப் பெருக்கும் அளவிற்குச் செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20.)

அடுத்து தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம். என்.ஆர்.இ.பி. திட்டம். இந்தத் திட்டத்தினைப் பொறுத்தவரையில் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்தி வருகின்றது. எனவே இத்திட்டத்தின் மூலம் தஞ்சை மாவட்டத்திலே ஆறுகளோ, குளங்களோ அமைப்பதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.



1984 பிப்ரவரி 18] [திரு.ந.சிவஞானம்]

என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 10 ஆயிரம் வீடுகளைக் கட்டப் போவதாக சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒரு வீடு கட்டுவதற்கு ஏறத்தாழ 6 ஆயிரம் ரூபாய்தான் அனுமதிக்கப் படுகின்றது. இது போதாது. வெறும் ஓட்டு வீடுகளைத்தான் கட்டிக் கொடுக்கிறார்கள். அவற்றை மாற்றி நல்ல வீடுகளாக, ஒழுகாத வீடுகளாக, பக்கத்திலே இருக்கின்ற நல்ல வீடுகளைப் போல் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு கட்டவேண்டும் என்றால் 10 ஆயிரம் ரூபாய் ஒரு வீட்டிற்கு என்று இந்த என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஃபில்ட்டர் பாயின்ட் என்பதைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்திலே மயிலாடுதுறை பகுதியிலே ஆயிரம் ஃபில்ட்டர் பாயின்ட் போட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதே மாதிரி தஞ்சை மாவட்டம் முழுவதும் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 400 அடி, 500 அடி ஆழத்திலே இது போடப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. அதேமாதிரி தஞ்சை மாவட்டத்திலே பேராவூரணி, பட்டுக்கோட்டை, ஒரத்த நாடு ஆகிய இடங்களிலும் அமைக்கப்படவேண்டும். அந்த திட்டத்தை நல்ல முறையில் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பயிர் இன்சூரன்ஸ் திட்டம். அது மிக நல்ல திட்டம். மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே அது சொல்லப்பட்டிருக் கின்றது. தஞ்சை மாவட்டம் முழுவதும் இந்தத் திட்டத்தினை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பல இடங்களில் குடிநீர் ஆழ்துளைக் கிணறுகள் போடப்படுகின்றன. அதனை கீழ்மட்டத்திலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற தனி அதிகாரிகள் நல்ல முறையிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

அடுத்து தஞ்சை மாவட்டத்திலே இப்போது ஒரு வேளாண்மை கல்லூரியினை ஏற்படுத்தவேண்டும் என்ற கருத்தை ஆழமாக அரசுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் ஒரு பெரிய மாவட்டம். ஆகவே அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். அடுத்து தஞ்சையிலே இருந்து பல இடங்களுக்கு நகரப் பேருந்துகளை விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தும் இதுவரையில் விடவில்லை. தஞ்சை யிலிருந்து சுக்கரைகோட்டை வரை 33 ஆம் நம்பர் பேருந்தினை விடவேண்டும். தஞ்சையிலிருந்து 20 ஆம் நம்பர் பேருந்தை சோழபுரம் வரை நீட்டித்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையினை வைத்து, அதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

[திரு.ந.சிவஞானம்] [1984 பிப்ரவரி 18

அடுத்து என்னுடைய தொகுதியில் வல்லவாரியில் ஒரு பெரிய
அணை கட்டவேண்டும். தஞ்சை மாவட்டமும், புதுக்கோட்டை
மாவட்டமும் இணைகின்ற பகுதியாக இது இருப்பதால் அங்கே
பின்தங்கிய சமுதாய மக்கள் இருப்பதால் இந்தத் திட்டத்தை
நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் சமீபத்திலே
ரேடியோவிலே பேசினார்கள். அப்போது பொருளாதாரத்தின்
நலிவுற்ற மக்களுக்கு அரிசி ஒருகிலோ ஒரு ரூபாய் 85 பைசாவிற்கும்,
கோதுமை ஒரு கிலோ ஒரு ரூபாய் 50 காசுக்கும் கொடுக்க
வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழக அரசு
அதன்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுத்து, திருமதி இந்திரா
காந்தி அவர்களின் கட்டளையை நிறைவேற்றவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. இ. கணேசன்: தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர்
அவர்கள் பேருரைக்கு நன்றி தெரிவித்துப் பேசக்கூடிய வாய்ப்பை
அளித்தமைக்காக மனதார, உளமார நன்றி சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள
அனைத்து மாநிலங்களிலும் மேலவையும், பேரவையும் கூடுகின்ற
போது அந்தந்த மாநிலத்தின் ஆளுநர்கள், அந்தந்த மாநிலங்
களின் கொள்கைகளையும், எண்ணங்களையும் எடுத்து
வைப்பது என்பது அரசியல் சட்டப்படி நடைமுறைப்படுத்தப்
பட்டுள்ள ஒரு சம்பிரதாயமாக இருந்து வந்தது. அதேபோன்று
தான் இந்த ஆண்டு பல்வேறு மாநிலங்களில் அந்தந்த மாநிலங்
களில், அந்தந்த மாநிலங்களின் ஆளுநர்கள் அந்தந்த மாநிலங்களின்
கொள்கைகளையும், போடப்படுகின்ற திட்டங்களையும் எடுத்துச்
சொல்லி வந்தார்கள். ஆனால் தமிழகத்திலே நம்முடைய
ஆளுநர் அவர்கள் மிகச்சிறப்பாக, அழகாக, அற்புதமாக பல
புதிய புரட்சிகரமான திட்டங்களை அறிவித்தார்கள். எனவே
இந்த உரையின் மூலமாக தமிழ் மக்களின் சார்பாக நான் மனப்
பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். இது ஆளுநர் அவர்களின் உரையிலே மட்டுமல்ல,
புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணத்திலே மலர்ந்த அற்புத
மான வரலாற்று சாசனம் ஆகும். இந்த அளவுக்கு மக்களுக்குப்
பல்வேறு சலுகைகளையும், திட்டங்களையும் அறிவித்த ஆளுநர்
அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள வேறு எந்த
ஆளுநரும் வழங்காத ஒரு அற்புதமான உரையைத் தமிழகத்திலே
வழங்கி இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலும் ஆளுநர்கள்
இருக்கிறார்கள். முதலமைச்சர்கள் இருக்கிறார்கள். மற்ற
அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். நிர்வாகிகள் இருக்
கிறார்கள். இருந்தாலும் எந்த மாநிலத்திலும் செய்யாத சாதனை
களைப் புரட்சிகரமான சாதனைகளை தமிழ்நாட்டில் மட்டும்
செய்திருக்கிறார்கள். தமிழகத்தில்தான் புரட்சித்தலைவர் அவர்
கள் இருக்கிறார்கள். எனவே தமிழகம் சாதனையின் விளை
நிலமாக ஆக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள்
அடுக்கடுக்காக வழங்கப்பட்டு வருகின்றன. பாமர மக்களிலே



1984 பிப்ரவரி 18] [திரு. இ. கணேசன்]

இருந்து உயர்மட்டத்திலே இருக்கின்ற மக்கள் வரை அனைவரும்
பாராட்டக்கூடிய திட்டங்களை வகுத்து புரட்சித் தலைவர்
அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே புரட்சித்தலைவர்
அவர்களின் ஆட்சி தமிழகத்திலே ஒரு பொற்காலமாக உரு
வெடுத்து வருகின்றது என்பதை மனப்பூர்வமாகச் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக பருவமழை தவறியதன் காரணத்
தால் கடுமையான வறட்சி காரணமாக மக்களும், கால்நடை
களும் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டது. இன்னல்களை
அனுபவித்தவர்கள், அப்போர்ப்பட்ட நிலைமையை, கடுமையான
வறட்சியை எப்படிச் சமாளிப்போம் என்று எண்ணிக்
கொண்டிருக்கக்கூடிய நேரத்திலேதான் நமது புரட்சித் தலைவர்,
அரசு இயந்திரங்களை நல்லமுறையிலே முடுக்கி விட்டார். எந்த
எந்தப் பணிகளை, எங்கெங்கு செய்யவேண்டும். எந்தெந்தப்
பகுதியிலே எப்படிக் குடி நீர் கொண்டு செல்ல வேண்டுமென்று
திட்டங்களை வகுத்து, செயல் வடிவம் தீட்டி இந்த வறட்சியைப்
புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையில் தடுத்தார்கள்.
புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக நல்லமுறையில்
காப்பாற்றுவார்கள் என்று ஏழை எளிய மக்கள் எண்ணக்கூடிய
வ கயில் வறட்சியைத் தடுத்தார்கள். இந்த ஆண்டு கடும்
வறட்சிக்குப் பிறகு அடை மழை பெய்தது. நாடு பூராவும்
வெள்ளம், பயிர்கள் நாசம், உயிர்ச் சேதம், உடமைகள் இழப்பு,
பாதைகள் பாழாயின, பாலங்கள் உடைந்தன, பல்வேறு துன்பங்
களும் மக்களுக்கு ஏற்பட்டன. சோதனை மேல் சோதனை
போதுமடா சாமி என்பது போல் எவ்வளவு தொல்லைகள் அனு
பவிக்க முடியுமோ அவ்வளவு தொல்லைகளை வெள்ளத்தினால்
அனுபவித்தார்கள். அப்படி இருந்தபோதிலும் நம்முடைய இதய
தெய்வம் புரட்சித் தலைவர் வெள்ளம் ஏற்பட்ட பகுதிக்கு
உடனடியாகச் சென்று, அங்கே இருக்கக்கூடிய அரசு அதிகாரி
களை முடுக்கி விட்டு, சுறுசுறுப்பாகச் செயல்களில் இறங்கி,
இந்தத் துன்பத்திலிருந்தெல்லாம் மக்களுக்கு நிவாரணத்தை
ஏற்படுத்த வேண்டும், என்று உதவியவர்.

மாவட்டங்களைப் பிரிப்பதைப் பற்றி இங்கு அனைத்து உறுப்
பினர்களும் மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். திட்டப்
பணிகளும், மற்ற மற்ற பணிகளும் மேன்மேலும் பெருகி வருவ
தால் மாவட்ட நிர்வாகத்தை எதிர்பார்த்த அளவில் சிறப்பான
முறையில் நிறைவேற்ற முடியவில்லை என்ற காரணத்திற்காக
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நிர்வாகத்தை சீர்
திருத்தம் செய்ய நல்ல விதத்தில் புதிய வேகத்தை ஏற்படுத்த
மாவட்டங்களைப் பிரித்தார்கள். இதன்மூலம் 8 மாவட்டங்களை
பிரித்தார்கள். மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற
நேரத்திலே ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்றும்,
பெருந்தலைவர் காமராஜர் மாவட்டம் என்றும், செக்கிழுத்த
சிதம்பரனார் மாவட்டம் என்றும், சம்புவராயம் மாவட்டம்
என்றும், பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்றும், தில்லையாடி

வள்ளியம்மை மாவட்டம் என்றும், வள்ளலார் மாவட்டம் என்றும் உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் மாவட்டம் என்றும் பெயர் சூட்டினார்கள். மாவட்டங்களுக்கு மதிப்பிற்குரிய மக்கள் தலைவர்களின், தியாகிகள், தேச விடுதலைக்குப் பாடுபட்டவர் களின் பெயர்களை நினைக்கக்கூடிய விதத்தில், அத்தகைய தலை வர்களின் பெயர்களைச் சூட்டினார்கள். அந்த அறிவிப்பைக் கேட்டு கட்சி வேறுபாடற்று, மதம், இனம், மொழி வேறு பாடற்று, மக்கள் அந்தச் செயலை உயர்ந்த நல்லெண்ணத்தோடு பாராட்டினார்கள். போற்றினார்கள், இந்தப் புரட்சித் தலைவரு டைய சிறந்த அரசியல் ராஜதந்திரத்தை புகழ்ந்தார்கள். இதைக் கூட சிலரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை ஏற்றுக்கொள்ளமுடிய வில்லை, அழுக்காறு கொண்டவர்கள் அழுகிய மனம் படைத்தவர் கள், எதிலும் குற்றம் காண வேண்டும், குறை காண வேண்டு மென்பதையே நோக்கமாகக் கொண்டவர்கள், குறை கூறுவதில் குள்ள நெறித்தனமாக கூறுகிறார்கள். திண்டுக்கல் மாவட்டத் திற்கு ஏன் அண்ணாவின் பெயரை சூட்ட வேண்டும்? திருமலை நாயக்கர் பெயரை அல்லது ராணி மங்கம்மா பெயரை அல்லவா சூட்ட வேண்டுமென்று கேட்கிறார்கள். திருவள்ளுவர் பெயரை ஏன் வைக்க வேண்டும். ஏன் சூட்ட வேண்டும், கரிகாலன் பெயரை அல்லவா சூட்ட வேண்டுமென்று கேட்கிறார்கள். வள்ளலார் பெயரை வைத்தால் போதுமா நந்தனார் பெயரை வைக்கக்கூடாதா என்று கேட்கிறார்கள். அம்பேத்கார், காயிதே மில்லத், ராஜாஜி, திரு.வி.க. இவர்கள் எல்லாம் நினைவில் இல்லாமல் போய்விட்டதா என்று கேட்டார்கள் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு நல்லவேளையாக அஞ்சுகம் பெயர் நினைவில் இல்லையோ என்றுதான் கேட்கத் தோன்றுகிறது . . .

திரு. துரைமுருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். அவர் கருத்துக் களை சொல்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஒரு அரசு தமிழ் நாட்டிலே பல்வேறு மாவட்டங்களுக்குப் பெயர் இடுகிறபொழுது மறைந்த தலைவர்கள் பெயர்களை, சிலஇடங்களுக்கு வைத்திருக் கிறார்கள். அப்படித்தான் இராஜாஜி அவர்களுடைய பெயரும் காயிதே மில்லத் அவர்களுடைய பெயரும் நந்தனார் அவர்களுடைய பெயரும் வைக்கக்கூடாதா என்று கேட்பதில் எந்தவிதமான தவறும் இருக்க முடியாது. அதற்காக வேண்டு மென்றே திரித்தும் இட்டுக் கட்டியும் அஞ்சுகம் பெயரை ஏன் வைக்கவில்லை என்று கேட்காமல் இருக்கிறார்கள் என்று திரு. கணேசன் கேட்கிறார். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, நாங்கள் கேட்கவில்லை. நீங்கள் வேண்டுமானால் சத்தியா பெயரிலே ஒரு மாவட்டத்திற்குப் பெயர் வையுங்கள், வைப்பீர் கள், அதை நான் ஆட்சேபிக்கவில்லை.

(பிற்பகல் 5-30)

திரு. இ. கணேசன்: இந்தப் பெயர்கள் எல்லாம் இப்போது தான் இவர்களுக்கு நினைவிற்கு வந்ததா? பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர், அண்ணாவின் இதயக்கனி சாதனை செய்த பின்னால் தான் இவர்கள் பெயர்களை வைக்கவில்லை, அவர்கள் பெயர்களை வைக்கவில்லை என்று கேட்கிறார்கள். அந்தந்த தலைவர்களிடம் அன்பும், பாசமும் உள்ள மக்களை உசுப்பி



விட்டு வருகிறார்கள். தமிழ் சமுதாயத்திற்கு பாடுபட்டவர் களை புரட்சித் தலைவர் அவர்கள் மாவட்டங்களுக்கு பெயர் சூட்டி பாராட்டினார்கள். இதைக் கூட மக்கள் மறந்து விடு வார்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களை கனிவோடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் தர்மபுரி மாவட்டத் திற்கு இராஜாஜி மாவட்டம் என்று பெயர் சூட்ட இருந்ததை யாராவது தடுத்தார்களா? அதுமட்டுமல்லாமல் புதியதாக பிரிந்த புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தமிழ் பெயரைக் கொண்டு, தலைவர்கள் பெயரைக் கொண்டு அழைக்கக்கூடாது என்று யாராவது தடுத்தார்களா என்பதை அறிய ஆசைப்படுகிறேன். இந்த பச்சைத் தமிழர்களுக்கு அப்போது இந்தத் தமிழ் உணர்வு கள் ஏற்படவில்லை.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, மறைந்து போன தலைவர்களுக்கோ, தியாகிகளுக்கோ பெருமை செய்ய வேண்டு மென்று கருதுகிற எந்த ஒருவரும் அவர்களுடைய பெயரை மாவட்டங்களுக்குத் தான் வைக்க வேண்டுமென்ற நியதி இல்லை. சிலைகள் வைக்கலாம், படங்கள் திறக்கலாம், கோட்டங்கள் கட்ட லாம் இப்படி பல்வேறு முறைகளிலே செய்வது ஒரு வழக்கம். இருக்கிறபோது பிரிந்த மாவட்டங்களுக்குத் தான் மறைந்த அப்படி தலைவர்கள் பெயரையும், புலவர்கள் பெயரையும் வைக்க வேண்டுமென்ற நியதி இல்லை, ஏற்கெனவே இருந்த ஆட்சிக் காலத்திலேகூட—கணேசன் அவர்கள் பேசுகிறாரே அவர்கள் பெருமையைப் பற்றி அவர்களே அறிவார்கள்—கலைஞர் ஆட்சி யிலும், காங்கிரஸ் ஆட்சியிலும் வெவ்வேறு வழிகளிலே செய் திருக்கிறார்கள், நாவலர் அவர்களுக்கு கூட தெரியும். ஆகவே பிரிந்த மாவட்டங்களுக்குத் தான் இந்த பெயரை வைக்க வேண்டு மென்ற நியதி கிடையாது. பெரம்பலூர் மாவட்டத்திற்கு திரு வள்ளுவர் மாவட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் மறைந்த புலவர்கள், தலைவர்கள் பெயரை வைக்கிற நேரத்தில் ஓரளவிற்காவது அது தொடர்பு கொண்ட பெயராக இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்வது எந்தவகையிலே தவறு என்று தெரியவில்லை.

திரு. ஆர். மனிமாறன்: திண்டுக்கல் பகுதியை பிரித்து அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்திருப்பது அண்ணா அவர்களுக்கு பொருந்தாதா? அவருக்கு அது பொருந்தி வருவதாக இல்லையா?

திரு. ஜே. எஸ். இராசு: பொருந்தாது என்று யாரும் சொல்ல வில்லை. ஈரோட்டிற்குப் பெரியார் அவர்களின் பெயரை வைத்திருக்கிறீர்கள்,

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வே. இரா. ஜெயராமன்): இதைப் பிரச்னையாக்க வேண்டாம். திரு. கணேசன் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் எட்டு மாவட்டங்களைப் பிரித்தார்கள். அவற்றிற்குத் தமிழர்கள் பெயரையும் தமிழ் அறிஞர்கள் பெயரையும் வைத்தார்கள். இவர்கள் இதை வைக்கவில்லை, அதை வைக்கவில்லை என்று கேட்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது என்னுடைய சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் என்று பிரிந்தபோது இராஜாஜி பெயரை ஏன் வைக்கவில்லை? அதை யார் தடுத்தார்கள் என்று கேட்டேன். அதற்காக கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தபோதிலும் நம்முடைய தலைவர்கள் தமிழ்நாட்டில் சேவை செய்கிறார்கள். அதற்கு மதிப்பளித்து பல தலைவர்கள் பெயரை வைத்தது பாராட்டப்பட வேண்டியதாகும்.

மாவட்டங்களைப் பிரித்தது மட்டுமல்லாமல் ஊழியர்கள் ஒவ்வொருமாவட்டத்திலும் சிறப்பாக பணியாற்ற வேண்டுமென்று நிர்வாகம் செம்மையாக நடத்தப்பட வேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்தி, மனநிறைவோடு பணியாற்ற 4-வது சம்பள கமிஷனை அமைத்தார்கள். ஓய்வு பெறுகிற அரசு ஊழியர்கள் சுமார் 8 லட்சம் பேர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று புரட்சித்தலைவர் வள்ளல் குணத்தோடு சொன்னார்கள், அதை தமிழகத்திலே இருக்கிற எட்டு லட்சம் என்.ஜி.ஒக்களும் மன நிறைவோடு பாராட்டுகிறார்கள். என்.ஜி.ஓ..க்கள் தலைவர் சிவ இளங்கோவிலிருந்து அனைவரும் பாராட்டி வருகிறார்கள், ஆனால் பத்திரிக்கையாளர்கள் முன்பு எதிர்க்கட்சித்தலைவராக இருந்த என்னுடைய அருமை பாசத்திற்குரிய தலைவரை அழைத்து விளக்கம் கேட்கிற நேரத்திலே, தமிழக அரசு எங்கே 10 ஆயிரம் தருகிறது, 5 ஆயிரம் தானே தருகிறது என்று சொல்கிறார்கள். இந்த தமிழக அரசினுடைய ஊழியர்கள் 8 இலட்சம் பேர்களும் அரசாங்கம் 5,000 ரூபாய் கொடுத்தால் நாங்கள் கொடுக்கக்கூடிய பணத்தையும் சேர்த்து பின்னால் 10,000 ரூபாய் பெற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அந்த 8 இலட்சம் என்.ஜி.ஒக்களும் கேட்டதால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே கூறுகின்றவர்களைப் பார்த்தால் இவர்கள் ஏதோ வாரி வாரி கொடுத்ததைப்போலவும் புரட்சித்தலைவர் வேண்டாம்வேண்டாம் என்று தடுத்ததைப் போலவும் அல்லவா இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, கட்டிடத் தொழிலாளர்களுக்கு இது வரையில் எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் இருந்தது. அந்த கட்டிடத் தொழிலாளர் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வாரி வழங்குகிறேன் என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அறிவித்ததை பற்றி அவர்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, நம்முடைய நண்பர்கள் அனைவரும் கட்டிடத் தொழிலாளர் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்கும் இந்த நல்ல திட்டத்தை உளமார, மனமார பாராட்டுவார்கள்





என்று நான் நினைத்தேன். ஆனால் இதைக்கூட பாராட்ட எதிர் கட்சி நண்பர்களுக்கு மனம் வரவில்லை என்பதைத் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஏழைகளை சிரிக்க வைக்க வேண்டும், ஏழைகள் மகிழ்ந்து இருக்க வேண்டும் என்பதற்காகவே மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள்.

உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை என்று இப்படிப்பட்ட அடிப்படைத் தேவைகளை இந்த நாட்டு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு உணவளிக்கிறார்கள். வீட்டுமனைப் பட்டா வழங்கி அங்கே வீடுகள் கட்டினார்கள். அந்த வீடுகளுக்கு ஒளியேற்ற, வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தமிழ் மக்கள், ஏழை எளிய மக்கள் மானத்தோடும் மரியாதையோடும் வாழ வேண்டும் என்பதற்காக ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு சேலைகளும் வேட்டிகளும் வழங்கினார்கள். இப்படி எல்லாம் வாரி, வாரி வழங்கி, எத்தனை கோடி, கோடியாகக் கொடுத்தாலும் அதை எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு கனவு கண்ட நல்லதம்பியாக இந்த நாட்டிலே நடந்து கொண்டு வருகிறது என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சனை இந்த மன்றத்திலே பேசிய பிரச்சனை. தமிழ் மக்கள் ஆவலோடு இருக்கக்கூடிய பிரச்சனை, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசியல் ரீதியாக சிறந்த சேவைகளை அவர்களுக்கு செய்கிறார்கள். எந்த மாநிலத்திலும் செய்ய முடியாத நல்ல சாதனைகளை ஏற்படுத்தி புதிய வரலாற்றைப் படைக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை வந்தபோது, அதை ஐ.நா. மன்றத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும், உலக மக்கள் கவனத்தை இலங்கைத் தமிழர்கள் பக்கம் திருப்ப வேண்டும் என்ற ஒரு சிறந்த இராஜதந்திர உணர்வோடு செயல்பட்டார்கள். பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களை அணுகி, அவர்களோடு பேசினார்கள். அவர்களோடு பேசியதன் மூலமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த, தமிழ் மக்களிலே ஒருவரான நம்முடைய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டியார் அவர்களை ஐ.நா. மன்றத்திற்கு அனுப்பி, அங்கே பேச வைத்தது ஒரு சாதாரண காரியமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த 36 ஆண்டு காலவரலாற்றிலே ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அல்லாமல் வேறு யாரையாவது இப்படி அனுப்பியிருக்கிறார்களா என்றால் இதுவரையில் இல்லை.

128-270—19

மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள் புரட்சித் தலைவரின் தம்பியாக, தமிழ் மக்களில் ஒருவராக ஐ.நா. சபை யில் பேசுகிறார் என்றால் அது நமக்கு பெருமை இல்லையா? ஆனால் இந்த மன்றத்திலே சொன்னவர்கள் பலர் (மணியடிக்கப் பட்டது) ஏதோ இலங்கைத் தமிழர்களுக்கு இந்த அரசு ஒன்றும் செய்யாததைப்போலவும் அவர்கள்தான் செய்வதைப்போலவும் குறிப்பிட்டார்கள். உலக அரங்கில் இந்திய நாட்டின் சார்பிலே இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை சுட்டிக்காட்டி, உலக நாடுகள் மத்தியிலே இலங்கையில் நடைபெற்ற இனப் படு கொலையையும் தமிழர்களுக்கு ஏற்படுத்திய கொடுமைகளையும் எடுத்துக்கூறி, அவர்கள் கவனத்தை இலங்கை தமிழ் மக்கள் பக்கம் திருப்பியது எப்பேர்ப்பட்ட சாதனை? அது தமிழர்கள் அனைவரும் பாராட்டக்கூடிய ஒன்று அல்லவா? தலைவரவர்களே இதைத்தான் நான் உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் நம்முடைய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக அழகாக, தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். பண்ருட்டி இராமச்சந்திரன் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்து இருக்கிறார். பொது சபையிலே பேசவில்லை; இலங்கைத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்று தமிழ் மக்கள் தலைவர் பேசுகிறார் என்றால் இது அவருடைய தாழ்ந்த மனப்பான்மையைத்தான் காட்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சனையை உலக நாடுகள் அனைத்தும் அறிய வேண்டும் என்று விரும்பினார்கள். ஐ.நா. மன்றத்திலே இந்தப் பிரச்சனையை எழுப்ப வேண்டு மென்று கருதினார்கள். அதனால் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையாரோடு பேசி, அதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள் ஐ.நா. சபையில் இலங்கைப் பிரச்சனைப் பற்றி பேச முடிந்தது. ஆனால் இது வரை இவர்கள் யாரை அனுப்பினார்கள் என்பதை மட்டுமே இந்த நேரத்தில் மனம் திறந்து சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 5-40)

இங்கே என்னுடைய அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களையும் அல்லது ராஜு அவர்களையும் ஐ.நா. மன்றத்திற்கு அனுப்புவார்களா என்று தயவு செய்து ஒரு கணம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவருடைய மருமகன்களையும், மகன்களையும் தானே அனுப்பியிருப்பார்கள், என்பதை உணர்ந்து தமிழர் ஒருவரை நல்ல திறமை உள்ள ஒருவரை புரட்சித்தலைவர் அரசு மிக அழகாக எடுத்துரைத்த அண்ணன் பண்ருட்டி அவர்களை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.





அதற்காக தமிழக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து· ஆளுநர் அவர்கள் சிறப்பான முறையிலே உரையாற்றியதற்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. துரைமுருகன்: நண்பர் கணேசன் அவர்கள் பேசும்போது இடைமறிக்கக் கூடாது என்றுதான் இருந்தேன். னால் அவர் எழுதி வந்ததை முதல் வரியிலிருந்து கடைசி வரி வரை படிக்க வேண்டுமென்றிருக்கிறார். அப்படிப் படிக்காமல் இருப்பதற்கு அவருக்கு மனம் வராது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை தங்களுக்குப் பின்னாலே தங்களுடைய குடும்பமே இருக்கவேண் மென்ற நோக்கத்தோடு இருக்கக்கூடியதாய் அல்ல. அதற்கு பிறகு மருமகனை அனுப்பியிருக்கிறார் என்று கூட சொல்லியிரு கிறார்கள். ஒன்றை மட்டும் சொல்கிறேன். முரசொலி மாறன் அவருடைய மருமகன் தான். ஆனால் எதிர்க்கட்சியில் இருப் பவர்கள் கூட, அவருடைய திறமையையும், அனுபவத்தையும், ஆற்றலையும் குறைத்து மதிப்பிட முடியாது. தேர்ந்தெடுக்கப் பட்டு பாராளுமன்றத்திலே இருக்கிறார். செயற்குழு உறுப்பின ராக இருக்கிறார். சமீபத்திலே ஸ்ரீநகரிலே நடைபெற்ற மாநாட்டிற்குச் செல்கிறபோது கூட சி.டி. தண்டபாணி அவர் களை அனுப்பியிருக்கிறார்கள். எனவே அந்தந்த கட்சியிலே யாரை அனுப்புவது என்பது அந்தந்த கட்சியே முடிவு எடுக்க வேண்டிய விவகாரம். அப்படிப் பார்க்கப்போனால் இதிலே நீங்கள் ஏன் பண்ருட்டி அவர்களை அனுப்பியிருக்கிறீர்கள்? அவரை அனுப்பியதில் எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து அல்ல. அது அவருக்கே கூட தெரியும், அதிலே கூட சொல்ல லாம். நாவலர் அவர்கள் பெரியவர்கள், அண்ணாவிடத்திலே பயின்றவர், பெரியார் இடத்திலே மிகவும் மதிப்பு பெற்றவர். எனவே இப்படிப்பட்ட பர்சனல் விஷயங்களை பற்றி பேசக் கூடாது.

*திரு. ஏ, சாகுல் ஹமீது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுவோர் தயாரித்து மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட்ட, ஆற்றிய உரையின் மீது இந்திய யூனியன் முஸ்லீம் கட்சியின் சார்பாக என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு 2, 3, நாட்களாக நடைபெறுகின்ற விவாதத்திலே என்னுடைய இயக்கத்தின் சார்பாக நான் இங்கே பேச முன் வந்திருக்கிறேன். இங்கே மாவட்டங்களைப் பிரித்து நிர்வாகம் சீராக நடைபெற வேண்டும் என்று பிரித்திருக்கிறீர்கள். பெரிய மாவட்டங்களை சீராகவும், செம்மையாகவும் நிர்வாகம் நடை பெறவேண்டுமென்று பிரிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற் கிறேன். அதே நேரத்திலே அந்த மாவட்டங்களைப் பிரிக்கும் போது மாவட்டத்தில் சமுதாய தலைவர்கள், அரசியல்

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1984 பிப்ரவரி 18

தலைவர்கள் பெயரைச் சூட்டுகின்ற நேரத்திலே, கண்ணியம் மிக்க
காயிதே மில்லத் அவர்களின் பெயரை நெல்லை மாவட்டத்
திற்குச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச்
செய்தால் அந்த சமுதாயத்திற்கு பெருமை அளிக்கக் கூடியதாய்
இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே சட்ட மேதையான அம்பேத்கார் அரிஜன
சமுதாயத்தின் தலைவராக புகழ் பெற்றிருந்த காரணத்தாலே
அவருடைய பெயரையும் ஒரு மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இன்றைக்கு முன்பே
கடந்த சட்டமன்றத்திலே பேசுகின்ற போது கூட சொல்லியருக்
கிறேன். அதாவது என்னுடைய தொகுதியிலே கடையநல்லூரை
தனித் தாலுகாவாக பிரிக்கவேண்டும். தனியாக கருவூலம் முதலில்
அமைத்துத் தரவேண்டும் என்று சொல்லியிருந்தும், இதுவரை
அது கவனிக்கப்படவில்லை. அதை உடனடியாக நிறைவேற்றித்
தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. என்னுடைய தொகுதியிலே அடைவிநயனார்
கோவில் அணைக்கட்டுத் திட்டமும், வறட்டாறு அணைக்கட்டுத்
திட்டம் என்ற திட்டமும் நீண்டகாலமாகவே நிறைவேற்றப்
படாமல் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, திராவிட
முன்னேற்றக்கழக ஆட்சியிலும் சரி, அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியிலும் சரி, அது அப்படியே பரிசீலிக்கப்
படாமல் இருந்து வருகிறது. ஆகவே என் தொகுதியிலே
இருக்கும் இந்த அடைவிநயனார் கோவில் வறட்டாறு
திட்டங்களை அமைச்சரவர்கள் இந்த சட்டசபைக் காலத்திலேயே
நிறைவேற்ற அதற்குரிய நிதி ஒதுக்கீடுகளை இந்த நிதியாண்டி
லேயே ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியான கடையநல்லூரில்
உள்ள இடைக்கால் என்ற பகுதியிலே வறட்டாறு என்ற
அணைக்கட்டு இருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. அந்த
வறட்டாறு ஆய்வுத் திட்டத்தை சீக்கிரமாக ஆய்வை முடித்து,
அந்த அணைக்கட்டை உருவாக்கித் தரவேண்டும் என்று நான்
இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு இந்த ஆளுநர் உரையை
நான் படித்துப் பார்க்கின்ற நேரத்திலே இதிலே பிற்பட்டவர்
களுடைய நலன்களைப் பற்றியும், சிறுபான்மையோரின்
நலன்களைப் பற்றியும், ஹரிஜன சமுதாயத்தைப் பற்றியும்,
அவர்களுடைய நலன்களைப் பற்றியும் எதுவும் சொல்லப்
படவில்லை. சட்டம்—ஒழுங்கு பற்றி எதுவும் சொல்லப்பட
வில்லை. இந்த ஆளுநர் உரையைப் பார்க்கிறபோது இது
குறைப்பிரசவமாக இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, பினாமி நிலம் ஒழிப்பைப் பொறுத்த
வரையில் பினாமி ஒழிப்பு இந்த ஆட்சியிலே நிச்சயாக
வரமுடியாது. ஏன் என்றால் இந்த ஆட்சி அப்படி இருக்கிறது.
எனவே எப்படி பினாமி ஒழிப்பு வரும் என்று சொல்லமுடியாது.



1984 பிப்ரவரி 18] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

அது மட்டுமல்ல, ஹரிஜன சமுதாயப் பிரச்சனையைப்
பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியிலே சில குறைகள்
இருக்கின்றன. அதையும் நிவர்த்தி செய்து தரவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மூன்று வாய்க்கால்
என்ற இடத்தில் ஹரிஜன சமுதாய மக்கள் 2 ஆயிரம் பேர்கள்
வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியிலே ஒரு பால் பண்ணை
சொசைட்டி அமைக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள்.
அப்படிக் கேட்கிற நேரத்திலே அந்த பால் பண்ணை சொசைட்டி
அமைத்துத் தருவதாக முடிவு செய்யப்பட்டது. ஆனால் ஏதோ
சிலரின் குறுக்கீடுகளின் காரணமாக அந்தப் பால் பண்ணை
சொசைட்டி அங்கே அமைக்கப்படவில்லை. எனவே அந்தப் பால்
பண்ணை சொசைட்டியை அமைத்துத் தரவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நெல்லை மாவட்டத்தில் 3 விசைத் தறி
யூனிட்டுகளுக்கு திட்டம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த மூன்றிலே
ஒன்றை என்னுடைய தொகுதியான போகநல்லூர் என்ற
கிராமத்திலே, அரிஜன மக்களின் கோரிக்கையையேற்று
அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே
அங்கே அந்த விசைத்தறியை உருவாக்கித் தரவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், முஸ்லீம் மக்கள்,
சிறுபான்மை மக்கள் வாழ்கின்ற மேலப்பாளையத்திலே ஒரு
விசைத்தறி யூனிட்டை உருவாக்கித் தரவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியிலே ஹரிஜன
மக்கள் பல கோரிக்கைகளை கேட்டு மனு கொடுத்திருக்
கிறார்கள். அவைகளையேற்று நிறைவேற்றித் தரவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் என்னுடைய
தொகுதியில் உள்ள கம்மாபச்சேரி என்ற கிராமத்தில் ஹரிஜன
மக்களுக்கும் மற்றொரு சமுதாயத்திற்கும் கடந்த 2 ஆண்டுகளுக்கு
முன்பாக ஒரு கோஷ்டி கலவரம் நடந்தது. அந்தக் கலவரத்திலே
2 பேராரும் காயம்பட்டு போலிஸ் கேஸ்கள் நடந்தன. அது
இப்போது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. வழக்கு ஹரிஜன
சமுதாயத்தைச் சேர்ந்த 36 பேர்கள் மேல்தான் போட்டிருக்
கிறார்கள். கோஷ்டி சண்டை. அந்தச் சண்டையிலே இரு
சாராரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற
நேரத்திலே வழக்கு ஒரு சாரார்மீது, அரிஜன மக்கள்மீது மட்டும்
போடப்பட்டிருக்கிறது. அந்த ஹரிஜன மக்கள் கடந்த
2 ஆண்டுக்காலமாக கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்
கிறார்கள். இதுவரையில் விசாரணை இல்லை. அவர்கள்
மனம் மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள். இந்தக் கோஷ்டி
சண்டையிலே ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுடைய
நிலங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அவர்களுடைய
வைக்கோல் போர்கள் எல்லாம் கொளுத்தப்பட்டன. ஒரு
பையனுடைய மண்டையில் காயம்பட்டு அவன் கிணற்றில்
தள்ளப்பட்டான். புகார் கொடுக்கப்பட்டும், இதுவரையில்
நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. வழக்கு 2 ஆண்டுக்

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1984 பிப்ரவரி 18

காலமாக அரிஜன மக்கள்மீது மட்டும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. எனவே அந்த வழக்கை தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு மைனாரிட்டி சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்த ஆட்சி வந்த பிறகு இன்றைக்கு எந்த மாவட்டத்திலேயும் ஒரு கலெக்டர்கூட ஏறக்குறைய 20 மாவட்டங்கள் இருக்கின்ற நிலையில் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த முஸ்லீம் கலெக்டர்கூட— இல்லை. அதேபோல் காவல் துறையை எடுத்துக்கொண்டாலும், மைனாரிட்டியைச் சேர்ந்த முஸ்லீம், டி.எஸ்.பி.யாகவோ, டி.ஐ.ஜி.யாகவோ அல்லது எஸ்.பி.யாகவோ இல்லை ஆகவே சிறுபான்மையோரின் நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு உன்னிப்பாக கவனித்து இந்தக் குறையை நீக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லீம்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். இந்த சமுதாயத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. முஸ்லீம் சமுதாயம் புறக்கணிக்கப்படுகிறது என்ற எண்ணம் அவர்கள் மனதிலே ஏற்பட்டிருக்கிறது. அந்த எண்ணத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கடந்த நவம்பர் மாதத்திலே தூத்துக்குடியிலே விரும்பத்தகாத ஒரு சம்பவம் நடந்தது. தூத்துக்குடியிலே. ஏ.டி.எஸ்.பி.யாக இருப்பவர், திடீரென்று ஒரு நாள் இரவு முஸ்லீம் சமுதாய மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிக்குச் சென்று, கதவுகளை தட்டி, அவர் இருக்கிறாரா? இவர் இருக்கிறாரா? என்று சோதனை போட்டு பெண்கள் வாழும் பகுதியில் தொல்லைகள் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றி ஏற்கனவே முறையீடுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், தூத்துக்குடியில் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்த பிறகு, அந்த மையத்தை பள்ளி வாசலுக்கு எடுத்துச்சென்று அடக்கம் செய்துவிட்டு வருகின்ற நேரத்திலே, அங்கே போலிசாரால் அவர்கள் விரட்டப்பட்டு இருக்கிறார்கள், அடிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி காவல் துறையால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் காரணமாக முஸ்லீம் சமுதாயத்தினுடைய அதிருப்தியை இந்த அரசு வீணாக சம்பாதித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

கடந்த 8-2-1984-லே கன்னியாகுமரி மாவட்டம் குளைச்சல் பகுதியிலே மொய்தீன் பள்ளி வாசலுக்கு முன்பு காவடி எடுத்துக் கொண்டு சென்றவர்களால் சில விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்பு



1984 பிப்ரவரி 18] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

கிறேன். அது மட்டும் அல்ல, இராமநாதபுரத்திலே கடந்த நவம்பர் மாதம், மதம் மாறினார்கள் என்பதற்காக, அங்கே சில சம்பவங்கள் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டது. அதைப் பற்றி அறிய நானும், இங்கேயிருக்கிற வேறு கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தோம். அங்கே மதம் மாறியதினால் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் கிடையாது. மதம் மாறியவர்களும், மற்ற சமுதாயத்தார்களும் அங்கே ஒற்றுமையாகவேதான் இருக்கிறார்கள். ஆனால் காவல் துறையினர் தான் அங்கே புகுந்து, ஜமாதிக்குள் எல்லாம் புகுந்து மக்களைக் கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள். அங்கேயிருந்தவர்களை கைது செய்திருக்கிறார்கள். ஜமாத்க்குள் இரவில் புகுந்து கைது செய்திருக்கிறார்கள். குண்டர் சட்டத்தில் மூவரை போட்டிருக்கிறார்கள், அன்றைக்கு போயிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இதை அறிந்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்துள்ளார்கள்.

இது போன்று இஸ்லாமிய சமுதாயத்தினர் தாக்கப்படுவதையும் இப்படிப்பட்ட குறைபாடுகள் அவர்களுக்கு அடிக்கடி நேர்வதையும், இனிமேல் வராமல் தடுக்க இந்த ஆட்சி தனது கவனத்தில் வைத்து செயல்பட்டால், அந்த சமுதாயத்தினுடைய நல்லெண்ணம், இந்த ஆட்சியினிடத்தில் வரும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, இன்று இஸ்லாமிய சமுதாயத்தினரைப் பற்றி பல்வேறு பல்வேறு பத்திரிகைகளிலும் பல்வேறு இழிந்த கருத்துக்கள், வருகின்றன. எங்களுடைய ஆத்மீகத் தலைவர், விதமாக வருகின்றன. அண்ணல் பெருமானார் முகமது நபி (ஸல்) அவர்களைப் பற்றி, அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியெல்லாம் மிகக் கேவலமாக எழுதுகிறார்கள். அவற்றை வெளியிடுகின்ற பத்திரிகைகளும் தமிழகத்தில் இருக்கின்றன. கடந்த 1-1-1984 அன்று விருந்து என்ற பத்திரிகையில் எங்கள் நபிகள் பெருமானுடைய பிறப்பைப் பற்றி, எங்கள் அண்ணல் பெருமானுடைய வாழ்க்கையைப் பற்றி...... (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தப் பத்திரிகையில்?

திரு. ஏ. சாகுல் ஹமீது: விருந்து என்று பெயர் அந்தப் பத்திரிகைக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை எல்லாம் வெளி வருகின்றனவோ இல்லையோ, அவைகளுக்கு ஏன் விளம்பரம் தருகிறீர்கள்?

திரு. ஏ. சாகுல் ஹமீது: இதை ஏன் குறிப்பிட்டேன் என்றால், எங்களுடைய இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றி தவறான செய்திகள் பல இதழ்களில் வருகின்றன. இஸ்லாமியரின் மனதைப் புண்படுத்துகின்ற அளவிற்கு அந்த செய்திகள் வெளி யாகின்றன. அதை இந்த அரசு கவனித்து, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாநில அரசே ஹஜ் யாத்திரை செல்பவர்களுக்கு சென்னையில் தங்குவதற்காக இல்லம் கட்டிக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தது. ஆனால் அதற்கான கட்டிடம் இதுவரையில் கட்டப்படவேயில்லை. திருச்செந்தூர் இடைத்தேர்தலின் போதுகூட அதைப் பிரமாதமாக விளம்பரம் செய்தார்கள். ஹஜ் யாத்திரிகர்களுக்கு தங்கும் விடுதி கட்டப்படும் என்று. ஆனால் என்ன நடந்தது?

மாண்புமிகு திரு, யா. சை. மு. யூசுப்: அப்படி ஒரு விளம்பரம் தரப்படவே இல்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது: ஞாபகம் வைத்திருக்கிறேன். யாத்திரிகர்களுக்கு கட்டிடம் கட்டி கொடுப்பதாக இந்த அரசு சொன்னபோது, இஸ்லாமிய சமுதாயத்தினர் பெருமை அடைந்தனர். ஆனால் இதுவரையில் கட்டிடம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கட்டிடத்தினால் இஸ்லாமிய சமுதாயமே பாதிக்கப்பட்டு விடாது. உங்களுக்கு ஏற்கனவே அதிக நேரம் அனுமதித்தாகிவிட்டது. போதும் உட்காருங்கள். திரு. பழனியப்பன்.

* திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை, மேலவை கூட்டுக் கூட்டத்தில் தமிழக ஆளுநர் அவர்கள் அளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பாக சில கருத்துக்களை தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே நிலையான பொருளாதார திட்டத்தை கோடிட்டுக் காட்டியிருப்பதாக சொல்லப் பட்டிருந்தாலும்கூட, என்னைப் பொறுத்தவரையில், இதை முழுவதுமாகப் படித்துப் பார்த்த பிறகு பழையபடி திருத்தணி சாக்கரை ஆலையும், திருச்சி பக்கத்திலே காகித ஆலையும் தவிர, வேறு முழுமையான திட்டங்கள் என்று வேறு எதுவும், இந்த நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை என்பதை நான் முதலிலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த ஆட்சியின் நிலை என்ன? அவல நிலையில் இருக்கிறது என்று சொன்னால் வேலை யில்லாத் திண்டாட்டம் ஒருபுறம், விலைவாசி நாள்தோறும் உயர்கின்ற காட்சி, விவசாயிகளின் கடன் தொல்லை, ஜப்தி கொடுமை, மின் வினியோகத்தில் முறைகேடு. மின் துண்டிப்பு, தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், மாணவர்கள் மீது அராஜகம், நீதிமன்றத் தீர்ப்பு புறக்கணிப்பு, பஸ் முதலாளிகளுக்கு கைலாகு, எப்போதும் சாராய சாம்ராஜ்ய அதிபதிகளுக்கு வழி காட்டுதல், ஊராட்சி, நகராட்சிகளில் ஊதாரித்தனம், தண்ணிறைவுத் திட்டக் கொள்ளை, வறட்சி நிவாரணப் பணியில் ஆளும் கட்சிக்கு சலுகை, வெள்ள நிவாரணப் பணிகளிலும் இதே நிலை, ஆலய நகைகள், சிலைகள் கொள்ளை, மற்றும் கொலை





இவைகள் தான் இன்று இந்த அரசாங்கத்தினுடைய போக்காக இருந்து கொண்டிருக்கின்றது. நாட்டு மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சனைகளை இந்த அரசு உணர்ந்து கொண்டிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை.

மாவட்டங்களுடைய பெயர்களை மாற்றி விடுகிறோம் என்று பெரிய அறிவிப்பாக செய்திருக்கிறார்கள். மக்களுடைய அடிப்படைத் தேவைகளை, அடிப்படைப் பிரச்சனைகளை எல்லாம் திசை திருப்பும் ஒரே நோக்கத்திற்காகத் தான் இப்படிச் செய்யப்படுகிறதே தவிர வேறென்ன?

விழுப்புரத்தை தென் ஆற்காட்டில் ஏற்படும் புதிய வள்ளலார் மாவட்டத்தின் தலைநகராக அறிவித்திருப்பது உண்மையிலேயே அமுலுக்கு வருமானால் அன்றைக்கு நான் மகிழ்ச்சி அடைவேன்.

விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவது பற்றி ஆளுநர் உரையில் குறிப்பாக எதுவும் இல்லை. ஆளும் கட்சித் தரப்பிலே யிருந்து பேசிய பல உறுப்பினர்கள், நண்பர்கள், சொல்கிறார்கள், விலைவாசி நியாயமாக இருக்கிறது, சீராக இருக்கிறது என்றெல்லாம். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் இந்த அரசாங்கம் முறையாக செயல்படவில்லை என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

வேறு ஒரு நண்பர் பேசுகிறபோது, இன்றைக்கு ஏராளமான பேர்களுக்கு குடும்ப கார்டுகள் வழங்கியிருக்கிறோம் என்று சொன்னார், மார் தட்டிக் கொண்டார். ஒரு குடும்ப கார்டுக்கு 20 கிலோ அரிசி தருகிறோம் என்று சொல்லி குடும்ப அட்டையை அச்சடித்துக் கொடுத்துவிட்டு, 2 கிலோ, 3 கிலோ அரிசிகூட கிடைக்காத அவல நிலைதான் இருக்கிறது. அப்படி இருக்கையில் ஆயிரக்கணக்கான குடும்ப அட்டைகளை அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம் என்று மார் தட்டினால் என்ன பயன்?

தொழிலாளர்களுக்கு எதிராக பல்வேறு சூழ்நிலைகள் உண்டாகியிருக்கின்றன. நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை, பி. அண்ட் சி. மில், சிம்சன் கம்பெனி போன்ற நிறுவனங்களில் இருக்கும் தொழிலாளர்கள் எல்லாம் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்று இந்த அரசாங்கத்திற்கு உணர்த்த விரும்புகிறேன். இதற்கு அரசாங்கம் என்ன திட்டம் வைத்திருக்கிறது?

அரசு ஊழியர்கள் போனஸ் கேட்டார்கள், அது கொடுக்கப் படவில்லை. அதுகூட பரவாயில்லை. ஆனால் வழக்கமாக கொடுக்கப்பட வேண்டிய வேலை உயர்வு கொடுப்பதிலே கூட ஏன் தாமதம்? அதற்குரிய கோப்புகள் எல்லாம்கூட அரசாங்கத் திலே தூங்கிக் கொண்டிருப்பதாகவும், அதனால் பல ஊழியர்கள் தாங்கள் வகித்து வந்த பழைய பதவியிலேயே ஓய்வு பெற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அறிகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு ரூ. 10,000/- தருவதாக ஒரு அபாரமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இது ஒரு உருப்படியான திட்டமாக இல்லாமல் ஒரு வெற்றி விளம்பர திட்டமாகத் தான் அமைந்திருக்கிறது.

தாலிக்குத் தங்கம் தருகிறோம் என்று சொல்லிக் கொண்டும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவித் தொகை தருகிறோம் என்று சொல்லிக் கொண்டும் அறிவித்த திட்டங்களைப் போல், இதுவும் ஒரு விளம்பரத் திட்டமாகத்தான் இருக்கிறது.

ரூ. 10,000/- ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்குத் தருகிறோம் என்று சொல்வது ஒரு விளம்பரம்தான். அரசாங்கம் கொடுப்பது ரூ. 5,000/— தான். மீதி பணம் ரூ. 5,000/- அரசு ஊழியர்களிடம் இருந்துதான் பிடித்தம் செய்து கொள்ளப் படுகிறது. 10, 12 ஆண்டு காலம் வேலை பார்க்கும் ஒரு ஊழியர் தன்னுடைய பணத்திலிருந்து ரூ. 5,000/— கட்டிய பிறகு மேலும் 10 ஆண்டுக் காலம் பணியில் இருந்தால், அந்த ரூ. 5,000/-க்கு கிடைக்கும் வட்டியுடன் சேர்த்து மொத்தத் தொகை ரூ.15,0 0/- ஆகுமே? அந்தப் பணத்தை அரசாங்கம் சாப்பிடப்போகிறதா? அல்லது அதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு உருப்படியான திட்டம் வைத்திருக்கிறதா? அதைவிட அரசாங்கம் எல்லா அரசு ஊழியர்களுக்கும் ரூ. 5,000/— தருவதாக அறிவிக்கலாமே?

சுமார் 8 லட்சம் அரசு ஊழியர்களிடம் இருந்து மாதம் ரூ. 20/— வீதம் பிடிக்கப்படும் தொகை கிட்டத்தட்ட ரூ. 19 கோடி வருமே? அதற்குக் கிடைக்கும் வட்டித் தொகையை இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் ஏதோ தங்களுடைய சொந்த நிதியில் இருந்து அரசாங்க ஊழியர்களுக்கு கொடுப்பதாக எண்ணிக்கொள்ளக் கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைவிட ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு ரூ. 5000/— தருகிறோம் என்று சொல்லி இருக்கலாமே?

வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்த வரையில் பணிகள் மிகவும் தாமதமாக நடந்துகொண்டிருக்கின்றன. தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் பயிர்கள் எல்லாம் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு விட்டன. நிலங்கள் எல்லாம் 3 அடி, 4 அடி மண் மேடிட்டு விட்ட பிறகு அந்த நிலங்களை திரும்பவும், பயிரிடுவதற்கு இலாயக்கான நிலமாக மாற்ற, சமன் படுத்த, ஏக்கருக்கு ரூ. 20,000/—, ரூ. 30,000/— செலவழிக்க வேண்டியிருக்கிறது. சில இடங்களில் இது நிலத்தின் கிரயத்தைவிட அதிகமாக ஆகிவிடும் போல இருக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு இதையெல்லாம் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி இல்லை. இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் இத்தகைய வேலைகளை தங்களுடைய செலவில் செய்திருக்கின்றன. விழுப்புரம் பகுதியிலே அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர், நேரில் வந்து புல்டோசர் வைத்து நிலங்களை மேடிட்டுக் கொடுத்த காட்சி இன்னும் எங்களுடைய நினைவில் ருக்கின்றது.



அதைப்போலவே இந்த அரசாங்கமும், முதலமைச்சரே நேரில் வரவேண்டும் என்பதல்ல, இந்த அரசாங்கம் எப்படியாவது நிலங்களைச் சீர்படுத்தி மக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-00)

சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், விழுப்புரம் போன்ற இடங்களில் வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதற்கு அடிப் படைக் காரணம் ஆறு மற்றும் ஆற்று வாய்க்கால்கள், கிளை வாய்க்கால்களில் ஏற்கெனவே இருந்த கரைகளைப் பலப் படுத்தாது விட்டுவிட்ட காரணத்தினால் கரைகள் உடைந்து அந்தப் பகுதிகளிலே வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் கவனத்திற்கு எடுத்துக்கொண்டால் காலாகாலத்தில் கரைகளைப் பேணி பலப்படுத்தியிருந்தால் இவ்வளவு வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்காது. இது அரசாங்கத்தின் குற்றம்தானே தவிர இயற்கையின் சீற்றம் ஓரளவுக்கு இருந்தாலும், அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இல்லை என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே நீர்நிலைகளுக்கு எல்லாம் நிலையான நீர்ப் பாசனம் உத்திரவாதம் தருகிறோம் என்று ஆண்டுக்காண்டு 60 கோடி 70 கோடி ரூபாய் செலவிடுகிறார்கள்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் பெண்ணையாறு அளவு கடந்த வகையில் எந்த வகையிலேயும் கரைகளைப் பலப்படுத்தாத காரணத்தினாலே தன் போக்கிலே போய் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய் அளவுக்கு பயிர் சேதம், நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆற்றுப் போக்கைக் கட்டுப்படுத்து வதற்கும் அந்த ஆற்றுக் கரைகளைப் பலப்படுத்துவதற்கும் அதிலிருந்து செல்கிற கிளை வாய்க்கால்கள் பிரிந்து செல்வதாலும் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் என்னுடைய பகுதியிலே கோலியனூரான் வாய்க்கால், விழுப்புரம் வாய்க்கால், கண்டம்பாக்கம் வாய்க்கால் முதலியன சீராக்கப்படாத காரணத் தினால் அங்கே "அஷ்யூர்டு சப்ளை ஆப் வாட்டர்" இல்லாத நிலை இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் கிராமங்களிலே ஊற்று இல்லாமல் நிலத்தடி நீர் இல்லாத நிலை இருக்கிறது. இதில் அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

விழுப்புரத்திலே மழை பெய்த காரணத்தினால் சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. அது ஏதோ விழுப்புரத்திலே மாத்திரம் இருக்கிறது என்று சொல்வதில் பலனில்லை, தமிழ்நாட்டிலே எல்லா பகுதிகளிலும் அப்படித் தான் இருக்கிறது. இங்கே அரசாங்கம் நடக்கிறது.

ஆங்காங்கே ''லோக்கல் பாடிஸ்'' என்று சொல்லப்படுகிற உள்ளாட்சி மன்றங்கள் இல்லாத காரணத்தினால் நகராட்சிகள் தனி அதிகாரிகளின் கீழ் செயல்படுவதால் தன்னிச்சையாக அவர்கள் காரியங்களைச் செய்வதாலே இந்த நிலைமை. மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் குறைகளைச் சொல்லி சீர்செய்ய முடியும். மக்களுக்கு நல்லவற்றைச் செய்து கொள்ளமுடியும்.

சாலை வசதிகள் இல்லை, பேருந்து நிலைய வசதிகள் இல்லை. எனக்கு அரசாங்கத்திலிருந்து பதில் வந்திருக்கிறது. விழுப்புரம் வழியாக வருகின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும் அங்கே திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்து நிலையம் எப்படி மோசமாக இருக்கிறது என்று, இறங்கி ஏறுவதற்குகூட லாயக்கு இல்லாத நிலை இருக்கிறது. ஆனால் எழுத்து மூலமாக எனக்கு பதில், விழுப்புரத்திலே பேருந்து நிலையம் தேவையில்லை உங்கள் அடுத்த கேள்விக்கு இடம் இல்லை என்று பதில் வருகிறது. இப்படி ஒரு பதில் அளிக்கிறார்கள் என்றால் உணர்ந்துதான் சொல்கிறார்களா அல்லது வேண்டுமென்றே சொல்கிறார்களா. எதிர்க்கட்சி உறுப்பினர் தொகுதியாக இருப்பதால் அந்த மக்கள் புறக்கணிக்கப் படுகிறார்களா என்று தெரியவில்லை.

அதைப்போலவே கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளிலே குடிநீர் வசதியில்லாமல் வறட்சிப் பணிகள் தொடர்ந்து செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

முடிவிலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணாவின் பெயரைச் சொல்கிறீர்கள், அண்ணாவின் பெயரை மாத்திரம் சொல்லி ஆட்சி செய்கிறீர்கள். அடிக்கடி அண்ணாவின் கொள்கைகளிலே ஏன் கடுமையாக தடுமாற்றம் கொள்கிறீர்கள், என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். மாநில சுயாட்சிபற்றி இந்த ஆளுநர் உரையிலே தேடித் தேடிப் பார்த்தேன், காணோம். பஸ் தேசியமயக் கொள்கையில் பின்னங்கால் பிடரியில் படுகின்ற அளவுக்கு ஏன் ஓடுகிறீர்கள் என்று தெரியவில்லை. இப்படி கொள்கை தடுமாற்றங்களை-மொழிப்போர் தியாகிகளுக்கு உதவி தரவேண்டுமென்ற பல்வேறு கோரிக்கைகளை இந்த ஆளுநர் உரையிலே காட்டவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நான் சார்ந்து இருக்கின்ற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாக எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி இந்த ஆளுநர் உரையில் சொல்லப்பட்டுள்ளது, பல்வேறு வகையில் ஏழை மக்களுக்கு நலன்கள் செய்ததாகவும், இன்னும் பல நல்ல திட்டங்கள் செய்ததாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. மேலும் வறட்சிப் பணிகள் மிகவும் தீவிரமாகவும் செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில்



குடிநீர் இல்லாத நிலையில் அதிக பற்றாக்குறையோடு இருந்து வந்தது. அந்த நேரத்தில் இரண்டு மூன்று கிராமங்களை ஒருங்கிணைத்து ஒரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக் கட்டி அதிலே ஒரு மோட்டார் இணைத்து அந்த கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கியிருந்தால் அந்த பாதிப்பு நீங்கி இருக்கும். அதற்கு பதிலாக ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு மூன்று ஆழ்குழாய் கிணறுகள் போட்டு அதிலே அடி பம்பு மூலமாக அந்த கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி குடிநீர்வசதி செய்ததன் மூலம் அந்த அடி பம்புகள் நல்ல முறையில் இயங்குவதற்கு வாய்ப்பாக இருக்காது. ஆகவே இப்படி அடி பம்பு 4-5களை போட்டு கொடுப்ப தால் ஒவ்வொன்றுக்கும் 15 ஆயிரம் வீதம் 5-பம்புக்கு சுமார் 1 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. அந்த ஒரு லட்சம் ரூபாய் செலவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்து கொடுத்து இருந்தால் அதனால் மூன்று நான்கு கிராமங்கள் தண்ணீர் வசதி பெற்று இருக்கும், என்பதை சொல்லிக்கொள்வதற்கு நான் ஆசைப்படுகிறேன்.

மேலும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கடந்த 2 நாட்களுக்கு முன்பாக சொல்லும்போது தமிழகத்தில் 48 லட்சம் பேர்களுக்கு சேலை, வேஷ்டி கொடுத்ததாக அறிவித்தார்கள். அப்படி சேலை, வேஷ்டி பெற்றவர்கள் நடுத்தர மக்களாக இருந்தாலும் சரி அல்லது முதியோர் பென்ஷன் வாங்குபவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருந்தாலும் சரி அது நன்றாக இருந்து இருக்கும். ஆனால் இப்போது சேலை, வேஷ்டி பெற்றவர்கள் யார் என்று சொன்னால் ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் யாருக்கு கொடுக்கச் சொல் கிறார்களோ அவர்களுக்குத் தான் அங்கே சேலை, வேஷ்டி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

குறிப்பாக ஆழ்வார் திருநகரியில் இதுபோன்ற நிலை நடந்து நான் நேரிடையாக பார்த்துத் தான் இங்கே சொல்கிறேன்.

மேலும் கிராமங்களில் நடந்து வரும் மருந்தகங்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான மருந்துகளும் அங்கே இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலை வேஷ்டி கொடுப்பதிலே, அ. இ. அ. தி. மு. க. வைச் சார்ந்த 24 லட்சம் பேர்களுக்கு கொடுத்ததாக சொன்னார்கள். அப்படி ஆனால் தமிழகத்தில் உள்ள 24 லட்சம் குடும்பங்களில் உள்ள அத்தனை பேரும் அ. இ. அ. தி. மு. க. வைச் சார்ந்தவர்களாக நிச்சயமாக இருக்க முடியாது. நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன், நான் முதலில் தெரிவித்தபடி எங்காவது தவறு நடந்தால் அதை மொத்த போக்கில் சொன்னால் நான் அவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும். இந்த மாதிரி தவறு நடக்கக்கூடாது என்று மனதார நினைத்தால் உண்மையான அந்த ஊர்களின் பெயர்களையும், சேலை, வேஷ்டி வாங்கியவர்

களின் பெயர்களையும் சொன்னால் அந்த சேலை, வேஷ்டியை வாங்கியவர்கள் அ.இ.அ.தி.மு.க. காரர்கள் சொல்லி வாங்கியிருந்தால் அவர்கள் தகுதி உடையவர்களா இல்லையா என்பதைப் பார்த்து அவர்களுக்கு தகுதி இல்லை என்று தெரிந்தால் கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியபடி நான் அவரிடத்தில் யார் யார் அப்படி பெற்றியிருக்கிறார்கள் என்ற விவரத்தை நேரடியாக தர தயாராக இருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறேன், நேரடியாக என்னிடத்தில் சொல்வதை விட அவையில் சொன்னால் வாங்கியவர்கள் தகுதி இல்லாதவர்கள் என்பது அவையில் உள்ள எல்லோருக்கும் தெரியும். அதேபோல் தகுதி உள்ளவர்கள் என்பதும் அவையில் உள்ள எல்லோருக்கும் தெரியும். தவறு செய்கிறார்கள் என்று நானும் அவரும் பேசி முடித்துக்கொண்டால் அது நாட்டுக்குத் தெரியாது தவறு செய்வதை நாட்டுக்கு தெரிவிக்காவிட்டால் அது தவறு செய்யாமல் இருப்பதற்கு நாம் எடுத்துக்கொள்ளுகிற முயற்சி ஆகாது. ஆகவே நான் இதை சொல்வதற்கு காரணம் தவறு நடக்கக்கூடாது என்பதில் இந்த அரசு கண்டிப்பாக எண்ணிக்கொண்டு இருப்பதால், எங்கே தவறு நடந்தாலும் அது எந்த தவறு ஆனாலும் பெயரையும், ஊரையும் என்னிடத்தில் கொடுத்தால் நடவடிக்கை எடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியா? இல்லையா என்பதை அவையின் முன் சொல்கிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் தவறு செய்தவர்கள் பெயர்களை அவையில் சொல்லவேண்டும் என்று சொல்கிறார். வெளியில் இருப்பவர்கள் பெயர்களை அவையில் சொல்லக்கூடாது என்று இருக்கிறது. அப்படி இருக்கும் போது எப்படி பெயர்களை சொல்லமுடியும்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல் நான் அவரிடத்தில் எழுதி கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவருடைய பெயரை சொல்லுங்கள். தவறாக கொடுக்கப்பட்டவர்கள் பெயரைச் சொல்லுங்கள் நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் கிராமங்களைப் பொறுத்தவரை சாலைகளை அபிவிருத்தி செய்ததாகச் சொல்லப்பட்டு உள்ளது. அந்த





கிராம சாலைகளில் தார் ரோடுகள் போடப்பட்டு சுமார் 10 ஆண்டுக் காலம் 15 ஆண்டுக் காலம் ஆகியும் இப்போது அவைகள் உடைப்பட்டு சரியான முறையில் செப்பனிப் படாமல் தார் போட முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. கிராமங்களில் பல பகுதிகளில் தார் ரோடுகள் மிகவும் பழுதடைந்துள்ளது இந்த ரோடுகளிலே அதிகமான பஸ்கள் ஓடிக்கொண்டிருப்பதால் இது போன்ற சாலைகளை உடனடியாகச் சரி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(இரவு 6-10)

மின்சார உற்பத்தியை அதிகரித்துத் தருவதாக இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்திற்கு 210 கோடி ரூபாய் செலவிலே மூன்று யூனிட்டுகளை நிறுவியும், இன்னும் அந்த மூன்று யூனிட்டுகளிலிருந்து சரியான முறையில் மின்சாரம் வெளியே கொண்டுவர இயலாத நிலை இருக்கிறது. அது சரியாக இயங்குமேயானால் அந்தப் பகுதியில் மின்சாரப் பற்றாக் குறையை நீக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

மேலும், நான் இருக்கின்ற குறும்பூர் பகுதியில் ஜே. இ., ஆபீஸ் இருக்கிறது. அங்கே ஜே, இ. ஓராண்டுக் காலமாக இல்லாத காரணத்தால் மின்சார பில்களை வசூலிக்க இயலாத நிலை இருக்கிறது; புது மின்சார இணைப்புக்கு சர்வீஸ் கொடுக்க முடியாமல் இருக்கிறது. இதுபோன்ற நிலைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்,

நீர்ப்பாசன வசதியில்லா மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதி செய்வதாகச் சொல்லப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக மலைகள் இருந்தாலும் மணிமுத்தாறு அணையானது முப்பதாண்டுகளுக்கு முன்னால் அந்தப் பகுதி விவசாய மக்களிடத்திலே வசூல் செய்து அந்த அணை நிறுவப்பட்டது. அது நான்காகப் பிரிக்கப்பட்டு இரண்டு ரீச் என்னுடைய தொகுதிக்கு வருகிறது. மூன்றாவது ரீச், நான்காவது ரீச் வாய்க்கால்களாக இருந்தாலும், அது பாயக் கூடிய குளங்கள் 80 ஆக இருந்தாலும், இவ்வளவு அதிக தண்ணீர் இருந்தாலும் அந்தக் குளங்களை நிரப்ப முடியாத நிலை இருக்கிறது. இதற்கு காரணம் ஆரம்பத்திலேயே அந்த வாய்க்காலை எடுத்தவர்கள் சின்ன வாய்க்கால்களாக எடுத்ததால் அந்த வாய்க்கால்களிலே விடப்படுகின்ற தண்ணீர் 445 கியூசெக்ஸ் தண்ணீர் கீழே உள்ள குளங்களுக்கு வர வேண்டும். ஆனால் அது மூலக்கரைப்பட்டி வரை வந்து, அதற்குக் கிழக்கே உள்ள குளங்களுக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அந்த வாய்க்கால்களை விரிவு செய்து சிமெண்ட் கான்கிரிட் போட்டுக் கொடுத்தால் மூன்றாவது ரீசில் ஒழுங்காகப் பாயும்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1984 பிப்ரவரி 18

நான்காவது ரீச்சில் கருமேனி ஆற்றின் வழியாக சில குளங்களுக்கு தண்ணீர் செல்வதால் அந்த நான்காவது ரீச் சம்பந்தப்பட்ட குளங்களுக்கு தண்ணீர் நிரம்ப வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்தக் கருமேனி ஆற்றின் அந்தப் புறத்தில் ஒரு வாய்க்காலையும், இந்தப் புறத்தில் ஒரு வாய்க்காலையும் ஏற்பாடு செய்தால் அந்த மீதி உள்ள குளங்களுக்குப் பாசன வசதி செய்து தர முடியும். அந்தப் பகுதி மக்கள் இதனால் பாசன வசதியைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும்.

3-4வது ரீச்சைப் பொறுத்தவரையில் 12 குளங்கள் ஸ்பெசல் ரிசர்வு குளமாக இருந்தாலும், 115 ஏக்கர் ஒரு குளத்தில் விளைய முடியாத நிலை இருக்கிறது. அந்த 12 குளங்களில் 4 குளங்கள் ரிசர்வ் குளங்களாகவும் இருக்கின்றன. மீதியுள்ள 8 குளம் ஸ்பெசல் குளமாகவும் இருக்கிறது. 12 குளங்களையும் ரெகுலர் குளங்களாக உடன் ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளை உடனடியாகச் செய்து தந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு பாசனத்திற்கு வசதியாக இருக்கும்.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்தால் கிராம மக்கள் எல்லா நலன்களையும் பெற வாய்ப்பாக முடியும். இப்பொழுது 14 ஆண்டுகள் ஆகிவிட்டன. பஞ்சாயத்துத் தேர்தல் பற்றி இந்த உரையிலே சொல்லப் பட்டிருக்கிறது. இதில் அறிவித்தபடி இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்களை வைப்பதன் மூலம் கிராம மக்கள் எல்லா நலன்களையும் பெற வாய்ப்பாக அமையும்.

கட்டிடத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 10,000 வழங்குவதற் குரிய முறையில் அரசு சொல்லி இருக்கின்றது. எங்கள் பகுதியிலே பனை ஏறும் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதன் காரணத்தால் பனை மரத்திலிருந்து விழுகின்றவர்களுக்கும் இதுபோன்று 10,000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதன் காரணத்தால் அங்கே ஒரு ஐ.டி.ஐ, ஸ்கூல் ஓப்பன் பண்ணித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இரவு நேரங்களில் திருவள்ளுவர் பஸ் அதிகமாக ஓடுவதன் காரணத்தால் இரவு 12 மணியிலிருந்து 3 மணி வரை லாரிப் போக்குவரத்தினை நிறுத்தி வைத்தால் அக்சிடென்ட் அதிகமாக வராது, (மணியடிக்கப்பெற்றது.)



1984 பிப்ரவரி 18]

திரு. க, பாரமலை: தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சமீபத்திலே பெய்த மழை காரணமாக தமிழகம் எங்கும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் எங்களுடைய மாவட்டம் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட மானாமதுரை, பரமக்குடி, இளையான்குடி போன்ற பகுதிகளில் உள்ள ஏறக்குறைய 50,60 கண்மாய்களில் அதாவது கிட்டத் தட்ட 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலத்திற்கு பாசனம் தருகின்ற கண்மாய்களில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்றது. நான் சட்டமன்றத்திற்கு வந்தவுடனே நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து தண்ணீர் விடவேண்டும் என்றும் மதுரையிலேயிருந்து அதாவது வைகையிலேயிருந்து தண்ணீர் விடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். ஆனால் அதற்குப் பிறகு மழை காரணமாக அதுபற்றி வற்புறுத்தாமல் இருக்கிறோம், எனவே இன்னும் 45 நாட்களுக்கு தண்ணீர் தேவை. ஆகவே அந்தத் தேவையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பெரியாறு கிரெடிட்டிலே இருந்தாவது தண்ணீர் கொடுத்து கிட்டத்தட்ட 30 ஆயிரம் ஏக்கர் நெற்பயிரைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆளுநர் அவர்களுடைய உரையிலே சில நல்ல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, குறிப்பாக அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும்போது அவர்களுக்கு அரசு சார்பிலே 5,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதேமாதிரி இந்த வருஷமே அரசு ஊழியர்களுக்கான சம்பள கமிஷன் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது, அதேபோன்று கட்டுமானப் பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களின் குடும்பத்தினருக்கு 10 ஆயிரம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட் டிருக்கின்றது. இப்படிப்பட்ட பல நல்ல திட்டங்கள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரம் சுகர் நிறுவனத்தை அரசாங்கம் எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன் அங்கே பல்வேறு ஊழல்கள் நடந்திருக்கின்றன. விவசாயிகளுடைய பணத்திற்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமையும், அவர்களுக்குச் சரியான விலை கிடைக்காத நிலைமையும், அவர்கள் சப்ளை செய்த கரும்பிற்குச் சரியான பணம் கிடைக்கவில்லை என்ற நிலைமையும் இருந்து இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகள் பல ஆண்டுகளாக இருந்து வந்த காரணத்தால் கடுமையான பாதிப்புக்கு ஆளான விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று இருக்கின்றது அரசு. இப்படி தனியார் சுகர் மில்களைப் பொறுத்த வரையில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதன் காரணத்தால் தனியார் மில்கள் தோல்வி அடைகின்ற நிலைமை தான் இருக்கின்றது, எனவே இனிமேல் வருகின்ற சர்க்கரை ஆலைகளைத் தனியாருக்குக் கொடுக்காமல் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. க. பாரமலை] [1984 பிப்ரவரி 18

அடுத்து மானாமதுரையிலே ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கின்ற திட்டம் இருக்கின்றது. அதற்காகத் தனியார் ஒருவருக்கு லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். மதுரை சுகர்ஸ் ஆலையிலே சம்பந்தப்பட்ட நபர்களின் சொந்தக்காரர்களுக்கு அது வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது, ஏற்கெனவே தனியார் சர்க்கரை ஆலை இருந்து, அது தோல்வி அடைந்து அதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே வர ருக்கின்ற இந்த ஆலையினை கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாம்பன் பால வேலை மறுபடியும் ஆரம்பிக்கப்படும் என்ற செய்தி மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது. எனவே அதனை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கொள்முதல் விலைக்கு அலவன்ஸாக 35 ரூபாயைத் தமிழக அரசு கொடுக்கின்றது. ஆனால் அது 29.2 1984 அன்று வரை அதாவது இம்மாதப் கடைசி வரைதான் கொடுக்கப்படும் என்றும், அதற்குப் பிறகு கொடுக்கப்பட மாட்டாது என்றும், நீட்டிக்கப்பட மாட்டாது என்றும் அறிக்க வந்திருக்கின்றது. தொடர்ந்து அந்த கொள்முதல் விலைக்கான அலவன்ஸ் தொகையினைக் கொடுப்ட தற்குரிய வகையில் நீட்டிக்கவேண்டும் என்று இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தி லுள்ள மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் முழு மயாகப் பயன்படுத்தபட்டுவிட்டது. ஆகவே நீர்ப்பாசன பணிகளை விஸ்தரிப்பதாகச் சொல்லப்படுகின்றது. பாசனத் திட்டங்களுக்கு நீர்வழங்கும் ஏற்பாடுகளை நவீனப்படுத்துகின்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். அந்த வகையில் மீதப்படுகின்ற நீரை ஏற்கெனவே பாசனம் பெறுகின்ற பகுதிகளுக்கு, அந்தப் பகுதிகளுக்கு முழுமையாகப் பாசனவசதி அளிக்கின்ற அளவுக்கு விஸ்தரித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-20)

எங்களுடைய பகுதியில் உலக வங்கி நிதி உதவியுடன் பெரிய நீர்ப்பாசன குளங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் அடிப்படையில் கட்டிக்குளம் என்ற பெரிய கண்மாய் வேலை நடைபெற்றது. ஆனால் அந்த வேலை இப்பொழுது இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. ஆனால் சாதாரணமாக அரசாங்க சார்பிலே அந்த வேலைகள் நடைபெறவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தை நம்முடைய தமிழக அரசு தன்னுடைய பொறுப்பிலே எடுத்து அந்தக் குளத்தைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---



1984 பிப்ரவரி 18] [திரு. க. பாரமலை]

இரண்டு வருடங்களாக நீர்ப்பாசனத்திற்கு நம்முடைய அரசு பெரும் பகுதி பணத்தை ஒதுக்கியிருக்கிறது. இருந்தாலும் நமக்கு இருக்கிற நீர் வளங்கள் எல்லாம் பூரணமாகப் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் இன்றைக்கு மேற்கு நோக்கி ஓடுகிற, கேரளாவுக்கு ஓடுகிற ஆறுகளை திருப்பி விடுவதைத் தவிர, தமிழகத்தில் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு வேறு கதியே இல்லையென்று தெரிவித்துக் கொண்டு அதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் இராஜாமுகமது அவர்கள் இதுபற்றி கேரள அரசிடம் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது; அது சுமுகமாக இருக்கிறது, ஓரளவுக்கு வெற்றிகரமாக நடக்க வாய்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு இந்த ஆளுநர் உரையிலே அதுபற்றி குறிப்பில்லை; எந்த நிலையில் இருக்கிறது என்று கூட தெரியவில்லை, ஆகவே, அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்குத்இதைத்தவிர வேறு வழியேகிடையாது. ஒவ்வொரு வருஷமும் தண்ணீர்ப் பற்றாக்குறையினால் பலாயிரக்கணக்கான, ஏக்கர் நிலங்கள் தரிசாகக் காய்ந்து கிடக்கின்ற காரணத்தால், விரைவாகப் பேச்சு வார்த்தை நடத்தி, தண்ணீர் கிடைக்க விரைவாக ஒப்பந்தம் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருபுவனத்திலே ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது. ஒரு மாவட்ட மருத்துவ மனை கட்டக்கூடிய அளவுக்கு இடமும் தண்ணீர் வசதியும் இருக்கிறது. அங்கே 14 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை கட்டவேண்டுமென்று கடந்த 3 ஆண்டு களாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதுவரையில் சாதகமான பதில் வரவில்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது 2,000 ஆண்டில் அனைவருக்கும் சுகாதார வசதி என்ற அடிப்படையிலே திட்டம் போட்டு செயல்படுத்துகிற அரசாங்கம் ஏற்கனவே இருக்கிற மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்ட ரூ. 4,000 வழங்கப்படுகிறது. அதை ரூ. 6,000 ஆக உயர்த்த இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இந்த அறிவிப்பு வந்ததற்குப் பிறகு ரூ. 6,000 என்று மாற்ற இருப்பதை தயவுசெய்து மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரூ. 4,000 என்பது போதாத தொகை, ஆகவே, ரூ. 4,000 கொண்டு கட்ட ஆரம்பித்த வீட்டை முடிக்க முடியாமல் பாதியில் நிறுத்தியிருக்கிறார்கள். அங்கே எல்லாம் ஸ்பில் ஓவர் ஒர்க்ஸ் என்ற வகையில் கொடுப்பது போல, முடிக்காமல் இருக்கும் வீடுகளுக்கெல்லாம் ரூ. 6,000 அளித்து பூர்த்தி செய்துகொள்ள வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. பாரமலை] [1984 பிப்ரவரி 18

நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக புதிய கண்மாய்
களை அமைத்தல், புதிய கால்வாய்களைத் தோண்டுதல், போன்ற
முயற்சிகளிலே இந்த அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக அறிவித்தி
ருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சிமைக்கால், நாட்டாண்டி
ஓடை ஆகிய ஓடைகளை சீர்திருத்தம் செய்ய வேண்டுமாய்ப்
பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பொறுத்தவரை என்னுடைய
ஊரிலே ஒரு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் இடிந்து பல
மாணவர்கள் இறந்தும் பல பேர் இறந்ததும் எல்லோருக்கும்
தெரிந்த விஷயம். அதேபோல் எங்கள் ஊரில் இருக்கிற பெண்கள்
உயர்நிலைப் பள்ளிக் கூடம் பள்ளிக்கட்டிடம் நடத்த இலாயக்
கற்றது என்று பொதுப் பணித்துறை அறிவித்துள்ளது.
இருந்தாலும் அதே கட்டிடத்திலே அந்த பள்ளிக்கூடம்
இப்பொழுது நடந்து வருகிறது. அப்படிப்பட்ட மோசமான
பள்ளிக் கட்டிடங்களை விரைவாகக் கட்டித் தர அரசு முயற்சிக்க
வேண்டு மென்றுக்கேட்டுக் கொள்கிறேன். தேசிய வேலை
வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகிற தொகையினைக்
கொண்டு நிலையான கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கித் தர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பு பொறுத்தவரை,
இன்றைக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்,
எல்லா துறைகளிலும் அந்த 18 சதவீதம் கிடைக்கவில்லை.
அப்படி ஒரு குறைபாடு இருக்கிற நேரத்தில், அரிசனங்களுக்கு
ஒதுக்கப்படுகிற வேலைகளை, அரிசனங்கள் என்று சொல்லி
மற்றவர்கள் தட்டிச் செல்கின்ற அபாயகரமான நிலை
இன்றைக்கு எற்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் சுட்டிக்
காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக மலைவாழ்
மக்கள், அரிசனங்கள் ஒவ்வொருக்கும் 18 சதவீதம் என்று
இருக்கும் நிலையில், இன்றைக்கு மலைவாழ் மக்கள் சாதி என்று
வேறு சாதியினர் சொல்லி, தமிழகம் எங்கும் ஒரு மோசடியான
நிலை நடந்துகொண்டிருக்கிறது. என்ஜினியரிங் கல்லூரி
மருத்துவக் கல்லூரி போன்ற இந்த கல்லூரிகளிலே அரிசனங்
களுக்கு ஒதுக்கப்படுகிற இடங்களுக்கு இன்றைக்கு மற்ற ஜாதிக்
காரர்கள் தவறான ஜாதியைச்சொல்லி வருகிற சூழ்நிலை
இருந்தது போக, இப்போதுஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற
உத்தியோகங்களிலும் அரிசன ஜாதி என்று சொல்லி
மற்றவர்கள் அதிகாரிகளாக வருகிறார்கள் என்ற நிலை
இருக்கிறது. அதை தடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலே பத்து ரோடுகள்
சீர் செய்யப்படாமல் இருக்கின்றன. திருப்புவனம்—முக்குளம்,
திருப்புவனம்-பூவந்தி, திருப்பச்சேத்தி-கட்டனூர், உச்சநேந்தல்-
கட்டனூர், உச்சநேந்தல்-பெரிய கோட்டை, மானாமதுரை-சிவ
கங்கையிலிருந்து வேப்பத்தூர் வழியாக பச்சை செல்கிற
சாலை. திருப்பாசேத்தி-வடமாத்தூர் ஆகிய சாலைகள் மிகவும்



[1984 பிப்ரவரி 18 [திரு. க. பாரமலை]

பழுதடைந்து போக்குவரத்திற்கு லாயக்கு இல்லாமல்
இருக்கின்றன. வெகுநாட்களாக அந்த வேலைகள் மேற்
கொள்ளப்படவில்லை. ஆகவே சம்பந்தப்பட்ட துறையினர்
விரைவிலே இந்த வேலைகளை செய்வதற்கு முயற்சி எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என்
உரையை முடித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

விதி 106-ன் கீழ் மின்துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்துறை
அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 106-ன் கீழ் அறிக்கை
ஒன்றை அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

அறிக்கை

தூத்துக்குடி அனல் மின்நிலையம் தொடர்ந்து திறம்பட
செயல் பட்டு வருவதாலும் அண்மையில் பெய்துள்ள மழையின்
காரணமாகவும், தற்பொழுது அமுலிலுள்ள மின்வெட்டு
20-2-84 முதல் கீழ்க்கண்டவாறு தளர்த்தப்படுகிறது.

1. விவசாயத்திற்கு தற்பொழுது மூன்று பிரிவுகளாக
பிரிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படுகிறது. இனி
விவசாய மின் இணைப்புகள் இரு பிரிவுகளாகப் பிரிக்
கப்பட்டு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி
நேரமும் ஆக மொத்தம் 14 மணி நேரம் ஒவ்வொரு
பிரிவுக்கும் மின்சாரம் வழங்கப்படும்.

2. உயர் அழுத்த மின்சக்தியை பயன்படுத்தும் இன்றியமை
யாத மின் இணைப்புகளுக்கும் வீட்டு உபயோகத்திற்கான
மின் இணைப்புகளுக்கும் தற்பொழுது 15 சதவீத மின்
வெட்டு அமுலில் உள்ளது, இனி, இவைகளுக்கு மின்
வெட்டு கிடையாது.

3. உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் வணிக மின்
இணைப்புகளுக்கும் தற்பொழுது மின் உச்சத் தேவை
யிலும் மின் சக்தியிலும் 30 சதவீத வெட்டு அமுலில்
உள்ளது. இனி, மின்சக்தியில் வெட்டு இராது. மின்
உச்சத் தேவையில் மட்டும் 15 சதவீத வெட்டு உண்டு.

4. மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்தும் தொழில்
களுக்கு மின்சக்தியிலும் மின் உச்சத் தேவையிலும் தற்
பொழுது உள்ள 50 சதவீத மின்வெட்டுக்குப் பதிலாக
இனி 30 சதவீத மின்வெட்டு மட்டுமே அமுல் படுத்தப்
படும்.

மேற்கண்ட அரசின் முடிவுகளை மாண்புமிகு பேரவை
உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

(இரவு 6.30)

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும்தீர்மானம் விவாதம்–
(தொடர்ச்சி)

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தலைவர் வர்களே, ஆளுநர்
உரையின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்
களைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட பிரிவினை
சம்பந்தமாக சொல்லும்போது 16 மாவட்டங்கள் என்று
இருந்ததை 24 மாவட்டங்களாக இன்றைக்கு பிரிக்கப்பட்டு
அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டிய
விஷயம் தான். மாவட்ட பிரிவினை என்று வருகிறபோது
கமிஷன் அமைக்கப்பட்டு அதன்மூலம் ஒரு நிரந்தரமான
முடிவிற்கு கொண்டுவர வேண்டுமென்று சொல்லப்படுகிறது.
நான் இங்கே குறிப்பாக சொல்ல விரும்புவது மாவட்ட
பிரிவினை குறித்து இங்கே சட்டசபயிலே அறிவித்தாகி
விட்டது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரும் இன்னென்ன
மாவட்டங்களுக்கு இன்னென்ன தாலுக்காக்கள் தான் இருக்க
வேண்டுமென்று ரெக்கமன்டேஷன்ஸ் செய்திருக்கிறார்கள்.
அந்த அடிப்படையிலே இன்றைக்கு டி. டி. சி. ஆரம்பிக்கப்படுமா
என்று அறிய விரும்புகிறேன் ஏனென்றால் இராமநாதபுரம்
மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரே மாவட்டமாக
இருந்தாலும் அங்கே கடந்த 10, 12 வருடங்களாக இரண்டு
டி. டி. சி. மீட்டிங் நடந்து கொண்டிருக்கிறது. காலையிலே
ஈஸ்ட் ராம்னாட்' மாலையிலே வெஸ்ட் ராம்னாட் மீட்டிங்
என்ற முறையிலே நடந்து கொண்டு வருகிறது. ஆனால்
இன்றைக்கு நீங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப்
பிரிப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். உண்மையிலேயே மாவட்டப்
பிரிவினை உங்களுடைய நோக்கமாக இருந்தால் இனி மேல் ஒரே
நாளில் இரண்டு கூட்டங்கள் என்று இல்லாமல் தனித்தனியாக
மூன்று டி. டி. சி மீட்டிங் நடைபெறுவதற்கு உத்தரவாதம்
கொடுக்க முடியுமா? அப்படி உத்தரவாதம் செய்யப்படுமானால்
தான் நீங்கள் மாவட்டங்களைபிரிக்கும் எண்ணம் உடையவர்கள்.
அந்த எண்ணத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பதிலே
எங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இல்லை என்றால் எங்களுக்கு
நம்பிக்கை ஏற்படாது. ஏனென்றால் பல தடவைகளில்
ஆளுநர் உரையிலேயும் மற்ற வகையிலேயும் வாக்குறுதிகளை
கொடுத்துவிட்டு, பின்னால் அமுலாக்குகின்ற நிலையிலே
முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல் பற்றி அறிவித்திருக்கிறீர்கள்.
பஞ்சாயத்துத் தேர்தல் நடக்குமா நடக்காதா என்று பல
உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் தொடர்ந்து பல
வருஷங்களாகப் பார்த்து வருகிறேன் பஞ்சாயத்துத் தேர்தல்
அண்ணா தி. மு. க. ஆட்சிக்கு வந்து ஏழு ஆண்டுகள் ஆகியும்



நடத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகி
றேன். ஆனால் தேர்தலுக்கு தேதி குறிப்பிட்டாகிவிட்டது
தேதி குறிப்பிட்டாலும் இன்னும் சந்தேகம் இருக்கக்கூடிய
நிலையிலேதான் இருக்கிறது. நீங்கள் எத்தனையோ தடவை
தேர்தல் வரும், வரும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள்
தேர்தல் மட்டுமல்லாமல் வேறு எத்தனையோ விஷயங்களையும்
அறிவித்திருக்கிறீர்கள். அறிவிப்போடு சரி, எதுவும் நடை
பெறவில்லை, இப்படி காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறீர்கள்
ஆகவேதான் தேதி குறித்தாலும் தேர்தல்நடக்குமா நடக்காதா
என்பது எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல,
பொள்ளாச்சியார் அமைச்சராக இருக்கும் வரையில்உள்ளாட்சித்
தேர்தல் இல்லை என்ற எண்ணத்திற்கு நாங்கள் வந்துவிட்டோம்.
ஏனென்றால் அவர்கள் பல தடவை வாக்குறுதி கொடுத்தார்கள்
மன்றத்திலே அறிவித்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை.
உள்ளாட்சித் தேர்தல் வரும் என்று தொடர்ந்து சொல்லிக்
கொண்டே வருவதும் தொடர்ந்து அதை தள்ளிக்கொண்டே
வருவதும், பொள்ளாச்சியாருக்கு பழக்கமாகி விட்டது
என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் ஒருசில கருத்துக்
களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த
வரையில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் அதிகம் இல்லை.
இருப்பவைகளில் செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம்.
முடிந்துவிட்டன கிழக்கு நோக்கிப் பாயும் நதிகள் ஒன்றிரண்
டில் வேலைகள் செய்யலாம். இருந்தாலும் அந்த நதிகளிலே
தண்ணீர் போதுமான அளவுக்கு இல்லை. காரணம் ஒரு
வருஷம் மழை பெய்கிறது; இரண்டு வருஷம் மழை பெய்வ
தில்லை, வறட்சி; மூன்றாவது ஆண்டு சுமாரான மழை
பெய்கிறது. இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து இருந்து கொண்
டிருக்கிறது. ஆகவே, அதற்குத்தக்கபடி நாம் திட்டமிடுவதில்
தவறியிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகி
றேன்.

வைகை பாசனத்தை மொத்தமாகப் பார்த்தால்
மானாமதுரை பகுதியில் கிட்டத்தட்ட 30, 000 ஏக்கர் விளைய
வில்லை என்று எம். எல். ஏ. சொன்னார்கள். என்னுடைய
தொகுதியிலே எல். எம். சி., ஆர். எம். சி.இரண்டும் சேர்ந்து
கிட்டத்தட்ட 75,000 ஏக்கர் விளைவுக்கு வராத நிலை. அது
மட்டுமல்ல. வைகைப் பாசனத்தை முழுமையாக நம்பியிருக்கிற
இராமநாதபுரம் மாவட்டத்தில் பல பகுதிகளில் தண்ணீர்
இல்லாத நிலைமை இருக்கிறது. தண்ணீர் வரக்கூடிய காலத்தில்
தண்ணீரை சரியான முறையிலே தேக்கி வைக்க முடிய
வில்லை. பெரும்பாலும் மழை இல்லாத காரணத்தால்
தண்ணீர் இல்லாத நிலை தான் இருக்கிறது, வைகை எங்கே
ஆரம்பமாகிறது என்றால் வருஷநாடு, ஆண்டிப்பட்டியில்
ஆரம்பித்து, மதுரைக்கு வந்து இராமநாதபுரத்தில் முடிகிறது.
வருஷநாடு பகுதியில் மழை இல்லை என்றால் வைகையில்
தண்ணீர் வராது. இந்த ஆண்டு முழுவதும் வைகையில் ஒரு

சொட்டு தண்ணீர்கூட வரவில்லை. கடந்த வாரம்கூட மழை பெய்திருக்கிறது. ஆனால் வைகையில் தண்ணீர் வரவில்லை. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் வைகைப் பாசனம் முழுவதும் காய்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையைபோக்க என்ன செய்யவேண்டுமென்றால் வைகை தேக்கத்திலிருந்து தண்ணீர் விட வேண்டும். அடுத்து எதிர்காலத்திலே மிக உன்னிப்பாக இருந்து, திட்டமிட்டு, தண்ணீர் வரக் கூடிய காலத்தில் தண்ணீரை தேக்கிவைக்க எற்பாடு செய்ய வேண்டும். அதைத்தான் நாங்கள் தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டு வருகிறோம். குளங்களை ஆழப்படுத்த வேண்டும். மழை பெய்து தண்ணீர் வரும்போது வீணாக டவிடு போய் சேருகிறது.

வைகை நதி மதுரை ஜில்லாவுக்கு ஒரு வடிகாலாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பாசன வசதி அளிக்க வேண்டிய வைகை நதி மதுரை ஜில்லாவுக்கு வடிகாலாக இருக்கிறது. மழை பெய்து தண்ணீர் அதிகமாக வரும் போது அந்த தண்ணீர் வீணாகிறது. மழை இல்லை என்றால் வைகையில் தண்ணீர்இல்லை, ஆகவே, வரக்கூடிய தண்ணீரை தேக்கி வைக்க குளம் குட்டைகளை ஆழப்படுத்த வேண்டும். கரைகளைப் பலப்படுத்த வேண்டும் அப்படியானால் இரண்டு மூன்று மாதங்களுக்கு தண்ணீரை தேக்கிவைத்து பயன்படுத்த முடியும். அதனால் நிச்சயமாக நல்ல விளைவு ஏற்படும் என்று கூறிக்கொள்ளஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல இன்றைக்கு ஆளுநர் உரையிலே கழிவு நீர் குட்டைகள் அமைப்பதற்கு என்று தொகை ஒதுக்கப்பட்டிருக் கிறது. இது இன்று நேற்று அல்ல. நமது முன்னோர் காலத் திலிருந்தே இதைச் செய்து வந்திருக்கிறார்கள் கிட்டத்தட்ட 39,000 கண்மாய்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவை எல்லாம் நம் முன்னோர்கள் தேடி வைத்த அசெட்ஸ் அந்த 39,000 கண்மாய்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 7356 கண்மாய்கள் இருக்கின்றன. இதில் ஒழுங்காக உத்தர வாதம் செய்து தண்ணீர் நிரம்ப ஏற்பாடு செய்தால் இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சம் வரக்கூடிய சந்தர்ப்பமே இருக்காது. அப்படிப்பட்ட நிலைமைகளை உண்டாக்குவதற்கு; அந்த கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆதற்காக நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால், உலக வங்கியிடமிருந்து நாங்கள் கடன் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. அந்தக் கடன் தொகையை உலக வங்கி கொடுத்தார் களா என்ற சந்தேகத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது உலகவங்கி நீர்ப்பாசனத்திட்டத்திற்கு அனைத்தும் நிறுத்தி வைத்துள்ளது என்ற சந்தேகம் இருக்கிறது. உதாரண மாக மின்சாரத்தை எடுத்துக் கொண்டால், சட்டசபையிலே அறிவிக்கப்பட்டு பத்திரிகைகளிலே அறிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் மின்சாரத்திற்கு ஒதுக்கப்



ரூ. 100 கோடிகட் செய்யப்பட்டது. பட்டதிலே கிட்டத்தட்ட அது உங்களுக்குத் தெரியும். அப்படி கட் செய்யப்பட்ட தால் தான் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டது. அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலைமை நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் காரணமாக மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 3 பிளாண்டுகள் இருந்தாலும் 15 நாட்கள் கூட ஏக காலத்தில் வேலை செய்வதில்லை. அந்த நிலைமை தொடர்ந்திருக்கிறது. இரண்டு ஓடினால் இரண்டு நின்றுவிடும். அல்லது ஒன்று ஓடினால்ஒன்று நின்றுவிடும். அல்லது ஒரே நேரத்தில் மூன்றும் நின்றுவிடும். தொடர்ச்சியாக இப்படி இருக்கிறது. அதற்குக் காரணம் நிலக்கரி வருவதில் தாமதம் தான். இன்றைக்கு குறி வந்துவிட்டது என்று அமெண்மெண்ட்ஸ் செய்திருக் கிறார்கள். மழை இல்லாவிட்டால் மின்சாரம் இல்லை. மழை வந்தால்தான் நமக்கு மின்சாரம் கிடைக்கும். இங்கே கரி வருவதற்கு உத்தரவாதம் இல்லாததால் தமிழ்நாட்டில் மின்சாரம் கிடைக்கவில்லை. தொடர்ச்சியாக நமமுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் மட்டுமல்ல பல லட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படுவதோடு தொழிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 11-ஆவது இடத்தில் தமிழ்நாடு இருக்கின்ற அளவிற்கு தொழிற்துறையில், பின்தங்கியிருக்கிறது. காரணம், நம் மின்சாரத்தில் சரியான கவனம் செலுத்தவில்லை. அதன் காரணமாக நமக்குள்ள சாத்தியக்கூறுகளை அதிகரிக்க வேண்டுமென்று நாம் செயல் பட்டாலும், மத்திய அரசாங்கம் காலாகாலத்தில் உதவி செய்யாததன் காரணத்தினாலே மின்சாரத் தட்டுப்பாடு தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த நிலைமையை எடுத்துக் காட்டுவதற்கு தயாராக இல்லை. தொடர்ச்சியாக காவிரி நீர்ப் பிரச்சினை. மாநில சுயாட்சிப் பிரச்சினை இருக்கிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நிலக்கரி கொடுக்காத பிரச்சினை இருக்கிறது: சேதுசமுத்திர திட்டத்திற்கு மத்திய அரசு குறுக்கே நிற்கிறது. இவைகளில் எதுவும் ஆளுநர் உரையில்குறிப்பிடப்படவில்லை. அந்த அளவிற்குமத்திய அரசோடு உறவு இருப்பதால் சொல்லவில்லையா? சொன்னால் கோபித்துக் கொள்வார்கள் என்று சொல்லவில்லையா? உண்மையை சொல்வதில் சங்கடம் என்ன? எதற்காக மறைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது? இது தமிழகத்திற்கு எப்படிப்பட்ட பாதகமான சூழ்நிலையை உண்டாக்கும்? எனவே நீங்கள் உண்மையை மறைக்க வேண்டாம். இருக்கின்ற சங்கடங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஓரளவிற்காவது தமிழ்நாட்டிற்கு இன்றைக்கு தொழில் வளர்ச்சி வரவேண்டுமென்றால், நிச்சயமாக மின்சாரம் அதிகமாக கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு அணு மின்நிலையங்களைத் துவக்க நாம் முன் நிற்க வேண்டும். அணு மின் நிலையங்கள் இல்லாவிட்டால் நிச்சயமாக தமிழகம் முன்னேறுவதில் தடங்கல் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

[திரு. செ. சிவசாமி] [1984 பிப்ரவரி 18

கரி வருவதற்கு எவ்வளவுதான் நீங்கள் முயற்சித்தாலும் எவ்வளவு கப்பல்கள் வாங்கினாலும், தூத்துக்குடி ஓரத்திலே கரியை இறக்கி அது ஒழுங்கான நேரத்திலே போய்ச் சேராது. 3 யூனிட்டுகளும் ஒரே நேரத்தில் வேலை செய்யாது. எனவே தமிழகத்தில் ஒன்றிரண்டு அணு மின் நிலையங்களுக்காவது ஏற்பாடுகள் நீங்கள் அவசியமாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பாக வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

வறுமைக்கோடு என்று சொல்லப்படுவது தமிழகத்திலே தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பார்த்தால், 48—லிருந்து 57.2 ஆக ஏறியிருக்கிறது. எத்தனை திட்டங்கள் போடப்பட்டது. எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? எத்தனை அரசாங்கங்கள் வந்துவிட்டன. நீங்களும் ஆட்சிக்கு வந்து 7 ஆண்டுகள் ஆகிவிட்டன. வறுமைக் கோட்டின் அளவு இன்னும் குறையவில்லை. ஏன் என்று சொன்னால் நாம் போடுகின்ற திட்டங்கள் அப்படியிருக்கின்றன. நாம் தான் திட்டங்கள் போட்டாலும் கூட அது எந்தப் பொது ஜனங்களுக்குப் போய்ச் சேரவேண்டுமோ, அந்த ஜனங்களுக்குப் போய்ச் சேராததின் காரணமாக வறுமைக்கோடு இன்றைக்கு வளர்ந்துகொண்டே போகிறது. வறுமைக் கோட்டைப்பற்றி அன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள்? அந்தப்பற்றி மத்திய அரசாங்கத்தை போய்க் கேளுங்கள் என்று என்து கேள்விக்கு பதில் சொன்னார்கள். அவருக்கு ஞாபகம் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு வறுமைக்கோடு வளர்ந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம்? இதற்கு யார் தடங்கலாக இருக்கிறார்கள்? அதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு உங்களுக்கு என்ன தடை இருக்கிறது? என்பதைத்தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், வறுமைக்கோட்டிற்காக, அதை குறைக்க வேண்டும் என்பதற்காக எத்தனை சட்டங்கள் போட்டாலும், அந்த சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால், அது குறையாது; இந்தத் தமிழகம்முன்னேறுவதிலே மிகப் பெரிய சிக்கலாக இருக்கும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20.2.1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6—41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

(79) 1979-80 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகளின் தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (அ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]



1984 பிப்ரவரி 18]

(80) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்)] 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

(81) 1982—83 ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் பதினோறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்—

எதுவுமில்லை.

136214 ... 008.